பாண்டியன் தமிழ்க் கட்டுரை

முதற் பாகம்

(முதல் மூன்று பாரங்கட்கு)

ஆசிரியர்:
வித்வான் மா. இராசமாணிக்கம், B.O.L.
தமிழாசிரியர்,
முத்யாலுப்பேட்டை உயர்கலாசாலை, சென்னை.

எடுகேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,
தியாகராயநகர் :: சென்னை
பதிப்புரிமை] 1941 [விலை அணா 12

First edition—1941

The Jupiter Press, Madras.

அறிவிப்பு

'பாண்டியன் தமிழ்க் கட்டுரை' என்னும் பெயர்கொண்டு வெளிவரும் இந் நூல் வரிசை, தமிழகத்திற்கே புதியதாகும். இன்று பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களால் கால-தேச-வர்த்தமானங்கட்கு ஏற்றபடி கொடுக்கப்படும் கட்டுரைகளே இந் நூல் வரிசையில் இடம் பெற்றுள்ளன. அந்தந்த வகுப்புகளில் கட்டுரைப் பாடங்களைப் பல ஆண்டுகளாக நடத்திவரும் பண்பட்ட ஆசிரியர்களைக் கலந்தே இக் கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பெற்றன. 'முதல் பாரம் முதல் மூன்றும் பாரம் முடிய ஒரு நூல் இருத்தல் வேண்டும்' என்று அன்னர் கூறியபடியே இந் நூல் வரிசை எழுதப்பட்டது. இந் நூலினல் மாணவர் 69 கட்டுரைச் செய்திகளை அறிந்து உலக அறிவு திறம்படப் பெறுவர்; கட்டுரை எழுதும் முறையும் நன்கு அமையப்பெறுவர். முதல் பாரம் முதல் ஆறும் பாரம் வரை கட்டுரைகளை எழுதச் செய்துவரும் எனது அனுபவத்தைக் கொண்டும், பண்பட்ட பல ஆசிரியர்களின் சிறந்த கருத்துகளைக் கொண்டும் வெளிவரும் இந் நூல்கள் - பல சிறப்பியல்புகளைத் தம் அகத்தே கொண்டவை என்பதைத் துணிந்து கூறலாம். எல்லாப் பாடங்களும் தாய்மொழியிற் போதிக்கப்படும் இக்காலத்தில், தமிழ் உரைநடை சிறிதளவு பண்பட்டதாகவும் மிடுக்குடையதாகவும் இருத்தல் நலம் ஆதலின், இந் நூல் வரிசையில் தமிழ்நடை சிறிது உயர்ந்து காணப்படும். மாணவர் இதயத்திருந்து எழுதப்பெற்ற இச் சிறு நூல்கள், மாணவர் அறிவு உலகிற்கு நல்விருந்தாகும் என்னுந் துணிபுடையேன்.

இளங்கோ இல்லம்,
சென்னை.

மா. இராசமாணிக்கம்

உள்ளுறை

கற்பவர்க்கு :

கட்டுரையைத் தொடங்குமுன் அதன் தலைப்பு, அப் பொருள்பற்றிய குறிப்புகள் இவற்றை எழுதுதல் வேண்டும்; குறிப்புகட்கு அடியில் கட்டுரை என்பதை எழுதி, ஒவ்வொரு குறிப்புப் பற்றி ஒரு 'பாரா' எழுதுதல் வேண்டும்; அங்ஙனம் எழுதும்பொழுது சொல்லுக்குச் சொல் இடம்விட்டு, அச்சடித்தாற்போல எழுத்துக்களை எழுதுதல் வேண்டும். கட்டுரை எழுதும்பொழுது நோட்டுப் புத்தகத்தின் எதிர் எதிர் பக்கங்களில் இடது கைப் பக்கத்தில் பாதி அளவிட்டுக் கோடு போடுக; அப்படியே வலது கைப் பக்கத்தில் பாதி அளவிட்டுக் கோடு போடுக. இவ் விரண்டு கோடுகட்கும் இடைப்பட்ட இடத்தில் 'கட்டுரை' எழுதுதல் வேண்டும். இடக் கைப் பக்கத்துப் பாதித் தாளில் பயிற்சி எண்ணும் கட்டுரை எழுதும் தேதியும் குறித்திடுக. வலது கைப் பக்கத்துப் பாதியில் கட்டுரையில் உள்ள பிழைகளை ஆசிரியர் குறிப்பர். அப் பிழைகளைத் திருத்த அப் பாதிப் பக்கத்தைப் பயன்படுத்துக. ஒவ்வொரு கட்டுரை எழுதும் பொழுதும் இம் முறைப்படியே செய்க. வலக்கைப் பக்கத்துக் கோட்டண்டை ஒரு வார்த்தை பிரிய நேரின், சிறு கோடு போட்டு அடுத்த வரிமுதல் எழுதிச் செல்க. கட்டுரை எழுதி முடித்ததும், நான்கு முறையேனும் அதனைப் படித்துப் பார்த்தல் வேண்டும். முதல்முறை கட்டுரைப் பொருளையும், இரண்டாம் முறை வாக்கிய முடிபுகளையும், மூன்றும் முறை எழுத்துப் பிழை - இலக்கணப் பிழைகளையும், நான்காம் முறை கட்டுரை ஒழுங்கையும் கவனித்துத் திருத்துதல் வேண்டும். இம் முறை பின்பற்றி எழுதப்படும் கட்டுரை சிறப்புறும்; பிழைகள் மலிந்திரா.

கட்டுரை எழுதுகையில் இடத்திற்கு ஏற்ப இரட்டைக் கிளவி, அடுக்குத் தொடர், உவமையணி, உருவக அணி, உபமான-உபமேயங்கள், வருணனைப் பகுதிகள், பழமொழிகள், பெரியோர் பொன் மொழிகள், புலவர் பாடல்கள் முதலியவற்றை உட்புகுத்திக் கட்டுரையை அழகு செய்தல் வேண்டும். இவ் வழகுகள் இல்லாக் கட்டுரை ஆடையற்ற மனிதன்போலக் காட்சி அளிக்கும்.

கீழ்வரும் சந்தி விதிகளை மனப் பாடம் செய்துகொள்க. இவற்றைப் பின்பற்றின், கட்டுரையில் உண்டாகும் பெரும்பாலான பிழைகளை நீக்கலாம்:

சந்தி விதிகள்:

1. இரண்டாம் வேற்றுமை உருபுக்கு (ஐ) முன் வரும் க, ச, த, ப மிகும்.

அவனை+கண்டேன் = அவனைக் கண்டேன்
அவனை+சந்தித்தேன் = அவனைச் சந்தித்தேன்
அவனை+தாங்கினேன் = அவனைத் தாங்கினேன்
அவனை+பார் = அவனைப் பார்

2. இங்ஙனமே 4-ஆம் வேற்றுமை உருபுக்கு முன் வரும் க, ச, த, ப மிகும்.

அவனுக்கு+கொடு = அவனுக்குக் கொடு
அவனுக்கு+செலவு = அவனுக்குச் செலவு
அவனுக்கு+தா = அவனுக்குத் தா
அவனுக்கு+புத்தகம் = அவனுக்குப் புத்தகம்

3. அந்த, இந்த, எந்த / அங்கு, இங்கு, எங்கு } இவற்றின் முன் க, ச, த, ப மிகும்.

அந்த+பையன்=அந்தப் பையன்
அங்கு+பார் =அங்குப் பார்

4. ஆக, ஆகி, ஆய், வித, எல்லா, வகை, பற்றி, } இவற்றின் முன்வரும் க, ச, த, ப மிகும்.

நல்லவனாக	+ பேசினான்	= நல்லவனாகப் பேசினான்
பலவித	+ பொருள்கள்	= பலவிதப் பொருள்கள்
எல்லா	+ பைகள்	= எல்லாப் பைகளும்
பலவகை	+ பறவைகள்	= பலவகைப் பறவைகள்
அதைப்பற்றி	+ பேசு	= அதைப்பற்றிப் பேசு

5. வன்றொடர்க் குற்றியல் உகரத்தின் முன்வரும் க, ச, த, ப மிகும்.

பட்டு	+ பை	= பட்டுப்பை
பத்து	+ பைகள்	= பத்துப்பைகள்

II. பிழையும் திருத்தமும்

எண்	பிழை		திருத்தம்
1.	ஆத்துக்கு	...	அகத்துக்கு
2.	ஆம்படையாள்	...	அகமுடையாள்
3.	இமையமலே	...	இமயமலே
4.	உத்திரவு	...	உத்தரவு
5.	எண்ணே	...	எண்ணெய்
6.	எலிமிச்சம்பழம்	...	எலுமிச்சம்பழம்
7.	எழவு	...	இழவு
8.	என்னமோ	...	என்னவோ
9.	ஏழரைநாட்டுச்சனி	...	ஏழரையாட்டைச்சனி
10.	ஒண்டியாய்	...	ஒன்றியாய்
11.	ஒத்தடம்	...	ஒற்றடம்
12.	கடப்பாறை	...	கடப்பாரை
13.	கிடாரங்காய்	...	கடாரங்காய்
14.	கத்திரிக்கோல்	...	கத்தரிக்கோல்
15.	கத்திரிக்காய்	...	கத்தரிக்காய்
16.	கம்பிளி	...	கம்பளி
17.	கருவப்பிலே	...	கருவேப்பிலே
18.	கவுளி	...	கவளி
19.	கறடுமுறடு	...	காடுமுரடு
20.	காக்கா	...	காக்கை
21.	காக்ஷி	...	காட்சி
22.	குடக்கூலி	...	குடிக்கூலி
23.	கெடிகாரம்	...	கடிகாரம்
24.	சீக்காய்	...	சிகைக்காய்
25.	சுந்திரம்	...	சுந்தரம்
26.	சுவற்றில்	...	சுவரில்
27.	தலகாணி	...	தலேயணே
28.	தாப்பாள்	...	தாழ்ப்பாள்
29.	தாவாரம்	...	தாழ்வாரம்
30.	திராசு	...	தராசு
31.	திருவாணி	...	திருகாணி
32.	தீவாளி	...	தீபாவலி
33.	துடப்பம்	...	துடைப்பம்

34.	தொந்தரவு	...	தொந்திரவு
35.	தொவக்கம்	...	துவக்கம்
36.	நஞ்சை	...	நன்செய்
37.	நாத்தம்	...	நாற்றம்
38.	நேத்து	...	நேற்று
39.	நொங்கு	...	நுங்கு
40.	நோம்பு	...	நோன்பு
41.	பசும்பால்	...	பசுப்பால்
42.	பசுங்கன்று	...	பசுக்கன்று
43.	பயிறு	...	பயறு
44.	பாவக்காய்	...	பாகற்காய்
45.	புஞ்சை	...	புன்செய்
46.	புடவை	...	புடைவை
47.	புட்டு	...	பிட்டு
48.	புண்ணாக்கு	...	பிண்ணாக்கு
49.	புழக்கடை	...	புழைக்கடை
50.	போறும்	...	போதும்
51.	மாத்தினன்	...	மாற்றினன்
52.	முழிக்கிறது	...	விழிக்கிறது
53.	மொழகடி	...	மகிழடி
54.	ரொம்ப	...	நிரம்ப
55.	வடவம்	...	வடகம்
56.	வாக்கப்பட்டு	...	வாழ்க்கைப்பட்டு
57.	விசிரி	...	விசிறி
58.	விரால்	...	வரால்
59.	விரை	...	விதை
60.	வெக்கம்	...	வெட்கம்
61.	வெங்கலம்	...	வெண்கலம்
62.	வெண்ணே	...	வெண்ணெய்
63.	வெய்யல்	...	வெயில்
64.	வென்னீர்	...	வெந்நீர்
65.	வேணும்	...	வேண்டும்
66.	வேண்டாம்	...	வேண்டா

III. ஆண்பால்—பெண்பால் பெயர்கள்

	ஆண்பால்	பெண்பால்
1.	ஆசிரியன்	ஆசிரியை
2.	இடையன்	இடைச்சி
3.	உபாத்தியாயன்	உபாத்தியாயினி
4.	உழவன்	உழத்தி
5.	ஒருவன்	ஒருத்தி
6.	கணவன்	மனைவி
7.	சிறுவன்	சிறுமி
8.	சீமான்	சீமாட்டி
9.	செல்வன்	செல்வி
10.	திருவாளன்	திருவாட்டி
11.	நம்பி	நங்கை
12.	பண்டிதன்	பண்டிதை
13.	பார்ப்பனன்	பார்ப்பனி
14.	பிரான்	பிராட்டி
15.	புலையன்	புலைச்சி
16.	பொன்னன்	பொன்னி
17.	மாணவன்	மாணவி
18.	வீரன்	வீரி

IV. சொற்களின் வேறுபாடுகள்

(1) ரகர, றகரச் சொற்களின் வேறுபாடுகள்

எ.

1. அரம் - ஒரு கருவி.
   அறம் - தருமம், ஈகை.
2. அரு - அரிய, அருமையான.
   அறு - துண்டி, வெட்டு.
3. அரை - பாதி, இடை.
   அறை - (வீட்டின்) அறை, கன்னத்தில் (அறை), சொல்.
4. அலரி - ஒருவகைப் பூ.
   அலறி - கதறி.

5. இரா (இரப்பு) - வேண்டு, பிச்சை யெடு.
இற (இறப்பு) - கட, சா.

6. இரங்கு - மனமிரங்கு, அருள் கூர்.
இறங்கு - கீழிறங்கு.

7. இரு - உட்கார்.
இறு - அறு, வடி(நீர்).

8. இரை - விலங்குணவு, தீனி, ஒலி.
இறை - சிதறு, வரி, அரசன், கடவுள், (தண்ணீர்) இறை.

9. உரி - கழற்று, தோலுரி, மரப்பட்டை, அரைப்படி.
உறி - தூக்கு.

10. உரு - வடிவம்.
உறு - பொருந்து, மிகுதி.

11. உரை - சொல், தேய்.
உறை - இறுகு, மூடி, இடம், (தலையணை உறை).

12. எரி - தீ, நெருப்பு, எரிதல்.
எறி - வீசு, வீசியெறி.

13. ஏரி - பெரிய குளம், நீர் நிலை.
ஏறி - மேலே ஏறி.

14. கரா - ஒளிந்துகொள்.
கற - பால் கற.

15. கரி - யானை, அடுப்புக்கரி.
கறி - கடி, (காய்) கறி, மிளகு.

16. கருப்பு - பஞ்சம்.
கறுப்பு - கருமை நிறம்.

17. கரை - ஓரம், குளக்கரை.
கறை - களங்கம், மாசு, குற்றம்.

18. கீரி - ஒருவகைப் பிராணி.
கீறி - கிழித்து, எழுதி.

19. குரவன் - பெரியோன், ஆசான்.
குறவன் - ஒரு குலத்தான்.

20. கூரிய - கூர்மையான.
கூறிய - சொல்லிய.

21. கூரை - முகடு, வீட்டின் மேற்புறம்.
கூறை - துணி, புடவை.

22. செரித்தல் - சீரணமாகுதல்.
செறித்தல் - திணித்தல், அடக்குதல்.

23. சொரி - பொழி, கொடு.
சொறி - தினவு நோய் (சொறி சிரங்கு).

24. திரை - அலை, திரைச்சீலை.
திறை - கப்பம், அரசிறை.

25. துரவு - பெரிய கிணறு.
துறவு - துறத்தல், ஆசையை ஒழித்தல்.

26. நிரை - வரிசை, மங்கை, ஓர் ஆசை.
நிறை - நிறைவு, மனவடக்கம், கற்பு.

27. பரவை - கடல்.
பறவை - பட்சி, புள்.

28. பரி - குதிரை, இரங்கு, விரும்பு.
பறி - பிடுங்கு, தோண்டு, அபகரி.

29. புரம் - பட்டணம், நகர், காப்பு.
புறம் - பக்கம், முதுகு, பின்பு, வெளி

30. மர - கடினமாகு, உணர்ச்சியறு.
மற - மறந்துபோதல்.

31. மரம் - விருட்சம்.
மறம் - வீரம், பாவம், கொலை.

32. மரு - வாசனை.
மறு - குற்றம், களங்கம், மற்ற.

33. மாரி - மழை.
மாறி - வேறுபட்டு.

34. விரகு - தந்திரம்.
விறகு - எரிக்குங் கட்டை.

35. விரல் - கை விரல்.
விறல் - வெற்றி, வலிமை.

36. வெரு - பயம், அச்சம்.
வெறு - பகை மிகுதல், வெறுப்புக்கொள்.

(2) ளகர, ழகரச் சொற்களின் வேறுபாடுகள்

1. அளி - வண்டு, அருள்.
அழி - கெடு.
2. ஒளி - மறை, வெளிச்சம்.
ஒழி - அழி, நீக்கு.
3. களி - மகிழ்ச்சி.
கழி - நீக்கு, கோல், மிகுந்த.
4. கிளவி - சொல்.
கிழவி - உரியவள், முதியாள்.
5. குளவி - தேனீ, வண்டு.
குழவி - குழந்தை.
6. சுளி - முகங்கோணு, கோபி.
சுழி - வளை, வட்டமிடு, நீர்ச்சுழி.
7. சூள் - ஆணை.
சூழ் - ஆராய், முற்றுகை இடு.
8. தளை - கட்டு, விலக்கு.
தழை - இலை, தழைத்தோங்கு.
9. தாள் - கால், முயற்சி, செடி முதலியவற்றின் அடித்தண்டு.
தாழ் - கீழாகு, கதவடைகோல், பணி.
10. தோளன் - தோளையுடையவன்.
தோழன் - நண்பன்.
11. பளு - கனம்.
பழு - முதிர், கனி.
12. முளை - தோன்று, விதை முளை.
முழை - குகை.
13. வளி - காற்று.
வழி - பாதை, நிரம்பி விழு.
14. வாளை - ஒரு மீன்.
வாழை - ஒரு மரம்.
15. வாள் - ஒளி, ஒரு கருவி.
வாழ் - உயிரோடிரு.
16. விளி - கூப்பிடு.
விழி - கண் திற, பார்.

V. மரபுத் தொடர்கள்

(Idioms & Phrases)

1 அடங்காப்பிடாரி
2 அரைகுறை
3 அல்லும் பகலும்
4 அளவளாவுதல்
5 ஆடைக்கும் கோடைக்கும்
6 ஆணித்தரம்
7 இரண்டுங் கெட்டான்
8 இருதலைக்கொள்ளி
9 இலைமறை காய்
10 ஏற இறங்கப்பார்த்தல்
11 ஏற்றத் தாழ்வு
12 ஒருவழிப் படுதல்
13 கங்குகரை யில்லாமை
14 கடைவிரித்தல்
15 கட்டுரைத்தல்
16 கண்கொள்ளாக் காட்சி
17 கல்லில் நாருரித்தல்
18 கிள்ளுக்கீரை
19 குரங்குப்பிடி
20 குருட்டுப் பாடம்
21 குறை குடம்
22 கைச்சரக்கு
23 கையுங் களவும்
24 கையைக் கடித்தல்
25 கொழுகொம்பு
26 கோமாளிக் கூத்து
27 சரமாரியாய்
28 சிறப்புச் செய்தல்
29 சின்ன பின்னம்
30 தலைகீழாய் நிற்றல்
31 தலைதெறிக்க (ஓடுதல்)
32 தலையெடுத்தல்
33 தாறுமாறாய்ப் பேசுதல்
34 தொடை தட்டுதல்
35 தோள் கொடுத்தல்
36 நெல்லிக்காய் மூட்டை
37 நோட்டம் பார்த்தல்
38 பஞ்சாய்ப் பறத்தல்
39 பம்பரமாட்டுதல்
40 பாட்டு வாங்குதல்
41 பிஞ்சிற் பழுத்தல்
42 பிரியா விடை
43 புலம் விசாரித்தல்
44 பையப்பைய
45 பொடி வைத்தல்
46 மட்டந் தட்டுதல்
47 மனப்பால் குடித்தல்
48 மனம்போன போக்கு
49 வகை செய்தல்
50 வயிற்றிலடித்தல்
51 வரலாற்று முறைமை
52 வல்லாள கண்டன்
53 வாய்ப்பூட்டு
54 வாலாட்டுதல்
55 வாழையடி வாழை
56 விருப்பு வெறுப்பு
57 விழலுக் கிறைத்தல்
58 விளக்கேற்றி வைத்தல்
59 வீடும் விளக்குமாய் வைத்
60 ஏற இறங்க தல்

VI. இரட்டைச் சொற்கள்

1 கட கட
2 கடு கடு
3 கண கண
4 கத கத
5 கப கப
6 கம கம
7 கர கர
8 கல கல
9 கன்னங் கரேல்
10 கிணு கிணு
11 கிறு குறு
12 கீர் கீர்
13 குப் குப்
14 சட சட
15 சல சல
16 சிடு சிடு
17 சள சள
18 செக்கச் செவேல்
19 தக தக
20 தட தட
21 தப தப
22 திடு திடு
23 தொண தொண
24 நச நச
25 நற நற
26 பக பக
27 பச பச
28 பட பட
29 பர பர
30 பள பள
31 மட மட
32 மழ மழ
33 மினுக்கு மினுக்கு
34 முர முர
35 வழ வழ
36 விறு விறு
37 வீர் வீர்
38 வெடு வெடு
39 வெல வெல
40 வெள்ளை வெளேர்

VII. உவமைகள்

1. அடியற்ற மரம் போல.
2. அணை கடந்த வெள்ளம் போல.
3. அத்தி பூத்தாற் போல.
4. அம்பு பட்ட மயில் போல.
5. அழுகுக் கழுகு செய்வது போல.
6. ஆண்டிகள் கூடி மடங்கட்டினது போல.
7. ஆப்பதனைப் பிடுங்கிவிட்ட பேய்க்குரங்கு போல.
8. ஆலையில் அகப்பட்ட கரும்பு போல.
9. ஆற்றங் கரையின் மரம் போல.
10. ஆற்றில் கரைத்த புளி போல.
11. இடியோசை கேட்ட பாம்பு போல.
12. இலவு காத்த கிளி போல.
13. இலை மறை காய் போல.
14. இழந்த பொருள் எதிர்வரப் பெற்றவர் போல.
15. உடுக்கை இழந்தவன் கை போல.
16. உயிரும் உடலும் போல.
17. உயிரைப் பிரிந்த உடலைப் போல.
18. உலைப்படு மெழுகு போல.
19. உள்ளங் கை நெல்லிக் கனி போல.
20. எமன் கையில் அகப்பட்ட உயிர் போல.
21. எலியும் பூனையும் போல.
22. எள்ளுக்குள் எண்ணெய் போல.
23. ஏறவிட்டு ஏணியை வாங்கினது போல.
24. ஓராவிற்கு இரு கோடு தோன்றினாற் போல.
25. கடன் பட்டார் நெஞ்சம் போல.
26. கட்டுக் கடங்காக் காளை போல.
27. கண்ணினைக் காக்கும் இமை போல.
28. கருடனைக் கண்ட பாம்பு போல.
29. கரை காணாத கப்பலைப் போல.
30. கலங்கரை விளக்கம் போல.
31. கனி இருக்கக் காயை விரும்புவது போல.
32. கல்மேற் செதுக்கிய எழுத்துப் போல.

33. கன்றினைக் கண்ட பசுப் போல.
34. காற்றுடன் நெருப்புக் கூடினாற் போல.
35. கிளியை வளர்த்துப் பூனை கையில் கொடுப்பது போல.
36. குடத்துள் விளக்குப் போல.
37. கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது போல.
38. குன்று முட்டிய குருவி போல.
39. சித்திரப் பதுமை போல.
40. சீதேவியுடன் மூதேவி பிறந்தாற் போல.
41. சேற்றிலே முளைத்த செந்தாமரை போல.
42. நீர் மேல் எழுத்துப் போல.
43. நெய்யில்லா உண்டி போல.
44. பழம் நழுவிப் பாலில் விழுந்தாற் போல.
45. பாம்பின் வாய்த் தேரை போல.
46. புண்ணிலே கோல் இட்டது போல.
47. பூவும் மணமும் போல.
48. மதின்மேல் நிற்கும் பூனை போல.
49. யானைக்கு முன் பூனை போல.
50. வலையிற் சிக்கிக்கொண்ட மான் போல.
51. விழலுக் கிறைத்த நீரே போல.
52. வெள்ளிடை மலை போல.

VIII. பழமொழிகள்

1. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
2. அச்சமில்லாதவன் அம்பலம் ஏறுவான்.
3. அஞ்சிலே வளையாதது ஐம்பதிலே வளையுமா?
4. அடாது செய்தவன் படாது படுவான்.
5. அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்.
6. அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
7. அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்.
8. அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை, பொருளில் லார்க்கு இவ்வுலகமில்லை.
9. அலை எப்பொழுது ஒழியும், தலை எப்பொழுது முழுகுகிறது?
10. அவசரக்காரனுக்கு (ஆத்திரக்காரனுக்கு)ப் புத்தி மட்டு.
11. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
12. அளவுக்கு மிஞ்சினல் அமுதமும் நஞ்சு.
13. அற்ப சகவாசம் பிராண சங்கடம்.
14. அன்னம் இட்டவர் வீட்டில் கன்னம் இடலாமா?
15. ஆசை வெட்கம் அறியாது.
16. ஆடை இல்லாதவன் அரை மனிதன்.
17. ஆபத்துக்குப் பாவமில்லை.
18. ஆயிரம் காக்கைக்கு ஒரு கல்.
19. ஊரால் கேடு, வாயால் கேடு.
20. ஆரியக் கூத்தாடினும் காரியத்திற் கண்ணுயிரு.
21. ஆழமறியாமல் காலை இடாதே.
22. ஆறின கஞ்சி பழங் கஞ்சி.
23. ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம்.
24. ஆனைக்கும் அடி சறுக்கும்.
25. ஆனை படுத்தால் ஆள் மட்டம்.
26. ஆனை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே.
27. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை.
28. இல்லாது பிறவாது, அள்ளாது குறையாது.

29. இளங்கன்று பயமறியாது.
30. இன்றைக்கு இலை அறுத்தவன் நாளைக்குக் குலை அறுப்பான்.
31. உட்கார்ந்தல்லவோ படுக்க வேண்டும்.
32. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
33. உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாமா?
34. உரலில் அகப்பட்டது உலக்கைக்குத் தப்புமா?
35. உள்ளங்கைப் புண்ணுக்குக் கண்ணாடி ஏன்?
36. கையிலே வெண்ணெய் இருக்க நெய்க்கு அலைவானேன்?
37. ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லாதே.
38. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்.
39. ஊர் வாயை மூட உலைமூடி இல்லை.
40. எங்கே புகையுண்டோ அங்கே நெருப்பு உண்டு.
41. எய்தவன் இருக்க அம்பை நோவானேன்.
42. எருது நோய் காக்கைக்குத் தெரியுமா?
43. எலி அழுதால பூனை விடுமா?
44. எலி வளையானாலும் தனி வளை வேண்டும்.
45. எல்லாருக்கும் ஒவ்வொன்றெளிது.
46. ஏழைப் பேச்சு அம்பலம் ஏறாது.
47. ஒரு நாள் கூத்துக்கு மீசையைச் சிரைக்கவா!
48. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
49. கடுகு சிறுத்தாலும் காரம்போகுமா?
50. கரும்பு தின்னக் கூலியா?
51. கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாமா?
52. கழுதை தேய்ந்து கட்டெறும்பாயிற்று.
53. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாஞ் சிறப்பு.
54. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
55. காரியம் பெரிதோ வீரியம் பெரிதோ?
56. குரங்கின் கைப் பூமாலை.
57. குறைகுடம் தளும்பும், நிறைகுடம் தளும்பாது.
58. குற்றம் பார்க்கிற் சுற்றம் இல்லை.

59. கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை.
60. பனங்காட்டு நரி சலசலப்புக்கு அஞ்சுமா?
61. சித்திரமும் கைப்பழக்கம், செந்தமிழும் நாப் பழக்கம்.
62. சிறு துரும்பும் பல்குத்த உதவும்.
63. இளமையிற் கல்வி சிலைமேல் எழுத்து.
64. சுண்டைக்காய் காற்பணம், சுமைகூலி முக்காற் பணம்.
65. செய்வன திருந்தச் செய்.
66. தனக்கு என்று இருந்தால் சமயத்துக்கு உதவும்.
67. தன் வினை தன்னைச் சுடும்.
68. தன் வீட்டு விளக்கென்று முத்தம் இடலாமா?
69. தான் ஆடாது போனாலும் தன் சதை ஆடும்.
70. திரைகடல் ஓடியுந் திரவியந் தேடு.
71. துஷ்டனைக் கண்டால் தூர விலகு.
72. துணை போனாலும் பிணை போகாதே.
73. துறவிக்கு வேந்தன் துரும்பு.
74. தென்றல் முற்றிப் பெருங் காற்றாகும்.
75. நகத்தாலே கிள்ளுகிறதைக் கோடரி கொண்டு வெட்டுகிறான்.
76. நண்டு கொழுத்தால் வளையில் இராது.
77. நத்தையின் வயிற்றிலும் முத்துப் பிறக்கும்.
78. நாம் ஒன்று நினைக்கத் தெய்வம் ஒன்று நினைக்கும்.
79. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
80. பழகப் பழகப் பாலும் புளிக்கும்.
81. பாடில்லாமற் பயனில்லை.
82. பேராசை பெரு நட்டம்.
83. மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்கலாமா?
84. முயற்சி யுடையார் இகழ்ச்சி யடையார்.
85. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
86. வருந்தினால் வாராதது இல்லை.
87. விளையும் பயிர் முளையிலே தெரியும்.

பாண்டியன் தமிழ்க் கட்டுரை

1. குடும்பம்

குறிப்புகள் :—1. குடும்பம் என்பது யாது ?
2. தாயார் செய்யும் நன்மை
3. தந்தையார் செய்யும் நன்மை
4. மற்றவர் செய்யும் நன்மை
5. நமது கடமை
6. முடிவு

கட்டுரை

குடும்பம் என்பது யாது ?

1. ஒரு வீட்டில் உள்ள தாயார், தகப்பனார், பிள்ளைகள், பாட்டன், பாட்டி இவர்களது சமூகம் 'குடும்பம்' எனப்படும்.

தாயார் செய்யும் நன்மை

2. தாயார் நம்மைப் பெற்றவர்; நமக்கு நோய் வராமற் பாதுகாப்பவர்; நமது நன்மையில் இன்பமும் நமது தீமையில் துன்பமும் அடைபவர்; கண்களை இமைகள் காப்பது போல நம்மைக் காத்துவருபவர்; பாலும் சோறும் பரிந்து ஊட்டுபவர்; கட்டிலிலும் தொட்டிலிலும் மார்மீதும் தோள்மீதும் நம்மை வைத்துத் தாலாட்டி வளர்த்தவர்; தம் இரண்டு கைகளிலும் கனிவோடு நம்மை ஏந்தி, இன்னிசையால் நம்மைத் தாலாட்டிக் கண்வளரச் செய்தவர்;

'கண்ணே, கண்மணியே,' என்று உள்ளம் கனிய முகம் மலரக் கொஞ்சிக் கனிவாய் முத்தம் அளித்தவர். நம்மைக் காணும்போ தெல்லாம் அவர் முகம் மலரும்; அகம் மல ரும்; அன்பு வெளித்தோன்றும். இவ்வரிய தன்மை வேறு எவரிடமும் காணுதல் இயலாது! இயலாது!! இதனாலன்றோ பெரியோர்களும், 'மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டா' என்றும், 'தாயிற் சிறந்ததொரு கோயி லும் இல்லை' என்றும் பலவாறு தாயைப் போற்றி யுள்ளார்கள்.

தந்தையார் செய்யும் நன்மை

3. தந்தையார் பொருள் சம்பாதிப்பவர்; குடும் பத்தை நடத்தும் ஆற்றல் உடையவர்; நமக்கு வேண்டும் ஆடை அணிகளையும் பள்ளிக்கூடச் சம்பளத்தையும் புத்த கங்களையும் வாங்கித் தருபவர்; குடும்பத் தலைவர்; நமது நன்மையில் நாட்டம் கொண்டவர்; நமது அறிவையும் ஒழுக் கத்தையும் வளர்ப்பதில் கவலை கொண்டவர்; நமது முன் னேற்றத்தில் பெருங்கவலை உடையவர்; நாம் உயர்வு அடை வதில் மனம் மகிழ்பவர்; நாம் இழிவு பெறுதலில் மனம் வருந்துபவர்; பள்ளிக்கூடத்திற்கு அவ்வப்போது சென்று, ஆசிரியரிடம் நம்மைப்பற்றி விசாரித்து நம்மை அணைக்கவும் அடிக்கவும் உரிமை உடையவர்; நம்மைக் காணும்போதெல் லாம், 'இவர்கள் நம்போல் நன்னிலையில் வாழ்தல் வேண்டும்' என்று மனமார விரும்புபவர். இங்ஙனம் நமது நன்மையில் நாட்டம் உடையவர் இவ் வகன்ட உலகில் நம் தாயாரும் தந்தையாருமே ஆவர்.

மற்றவர் செய்யும் நன்மை

4. பாட்டனார், பாட்டியார், அண்ணன்மார், அக்கை மார் ஆகிய பெரியவர்களும் நமது முன்னேற்றத்துக்கு

உதவி செய்பவர்களே ஆவர்; நமக்கு இனிய கதைகள் கூறுவர்; நீதிகளைப் புகட்டுவர்; கற்பனைகளைக் கழறுவர்; நமக்கு வேண்டும் உதவிகளைச் செய்வர்.

நமது கடமை

5. இங்ஙனம் நமக்கு உயிராக விளங்கும் இப் பெரியவர்களிடம் நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டும்? நாம், அவர்கள் மனம் மகிழும்படி நடந்துகொள்ளுதல் வேண்டும்; அவர்கள் குறிப்பறிந்து நடத்தல் வேண்டும்; அடக்கம், அன்பு உடையவர்களாய், அவர்கள் இடும் பணிகளைப் பெரு விருப்புடன் செய்தல் வேண்டும்; கடைக்குப் போதல், இட்டதை உண்ணல், நம் வேலைகளை நாமே செய்தல், வீட்டிலும் பள்ளியிலும் 'நல்லவர்' என்று பாராட்டிப் பேசும்படி நற்பெயர் எடுத்தல் முதலிய நல்லியல்புகளை உடையவராய் இருத்தல் வேண்டும். நாம் கல்வியிலும் ஒழுக்கத்திலும் உயர்வடைதலே நமக்கும் அவர்க்கும் நாம் செய்யும் தொண்டாகும். இவ்வுயர்வால் உலகத்தார் நம்மையும் நம் பெற்றோரையும் பாராட்டுவர்.

முடிவு

6. இதுகாறும் கூறியவற்றை நன்கு மனத்திற் பதித்து ஒவ்வொருவரும் நடப்பாராயின், அவரால் அவர் குடும்பம் நற்பெயர் பெறும்.

2. பசு

குறிப்புகள் :—1. பசு
2. பால்
3. தயிரும் மோரும்
4. வெண்ணெயும் நெய்யும்
5. முடிவு

கட்டுரை

பசு

1. பசு எல்லா விலங்குகளிலும் சாதுவானது. அஃது இரண்டு நீண்ட கொம்புகளை உடையது. ஆயினும், அஃது அவற்றைத் தன் பகைவர்மீதே பயன்படுத்தும். பசுவுக்குச் சிறந்த உணவு புல்லே ஆகும். புல் நிறைந்த வெளிகளில் மேயும் பசு நல்ல பால் சுரக்கும். அத்துடன், பிண்ணாக்கு முதலிய சத்துள்ள பொருள்களையும் உண்ணுமாயின், பசு மிகுதியாகப் பால் தரும். பசு தன் கன்றை நாவால் தேய்த்துச் சுத்தப்படுத்தும். அது கன்றின்மீது மிகுந்த அன்புடையது. பசு 'அம்மா' எனக் கன்றை அழைப்பதும் கன்று தன் வாலை நீட்டிக்கொண்டு துள்ளித் துள்ளி 'அம்மா' எனக் கூவி ஓடுதலும் காண்பவர் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும். கன்றைக் காணாத போது தாய்ப்பசு படும்பாடும், தாயைக் காணாத பொழுது கன்று கதறுதலும் உள்ளத்தை உருக்கும் காட்சியாகும்.

பால்

2. பால் உணவுப் பொருள்கள் எல்லாவற்றிலும் தலை சிறந்தது. ஆங்கிலேயர் ஆராய்ந்து கண்டறிந்த சத்துப் பொருள்கள் அனைத்தும் பாலில் உள்ளன. குளிர்ச்சி, வன்மை முதலிய பல நலங்களையும் ஒருங்கே

அளிக்கும் பண்பு பாலுக்கு உண்டு. நோயாளிகளுக்கும் பச்சிளங் குழந்தைகட்கும் பால் ஆருயிர் மருந்தாக இருப்பதை எவரே அறியாதவர்! இஃதொன்றே அதன் ஏற்றத்தை வலியுறுத்தப் போதுமன்றோ? எலும்பையும் உடலையும் பிற கருவிகளையும் வளர்க்கும் சக்தி பாலினிடம் உண்டு. 'முப்பழ மொடுபால் அன்னம்' என்பதைக் கொண்டும் பாலின் உயர்வை உணரலாம். பால் அன்னம் மிகுந்த நன்மையைத் தருவது.

தயிரும் மோரும்

3. பசு பால் தருகிறது. அவ் விலங்கு தூய்மை உடையது ஆதலால், அதன் நீரும் சாணமும் மக்களால் பயன்படுத்தப்படுகின்றன. பால் சத்துள்ள உணவாகும். அதனைக் காய்ச்சிப் பிரை குத்தித் தயிர் ஆக்கப்படுகிறது. பசுவின் தயிர் உடம்புக்கு நல்லது. தயிரைக் கடைந்தால் மோர் ஆகும். மோர், உடம்பில் உள்ள விஷக்·கிருமிகளைக் கொல்லும் வன்மை உடையது; இரத்தத்தைத் தூய்மைப் படுத்த வல்லது; உடம்பிற்குக் குளிர்ச்சியைத் தருவது; ஜீரணச் சக்தியை வலுப்படுத்துவது. 'இந்தியர் மோர் குடிப்பதால் நீண்ட ஆயுளைப் பெறுகின்றனர்' என்று ரஷிய மருத்துவ நிபுணர் ஒருவர் கூறியுள்ளார். 'மோரில் சத்துள்ள உணவுப் பொருள் இருக்கிறது' என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகிறார்கள்.

வெண்ணெயும் நெய்யும்

4. மோரைக் கடையும்பொழுது வெண்ணெய் திரளும். வெண்ணெய் காய்ச்சப்படின் நெய் ஆகும். வெண்ணெய், மிகுந்த சத்துள்ள உணவுப் பொருள் ஆகும். அதனை உண்ணுத மேல் நாட்டார் இல்லை! இல்லை!! அவர்கள் அதனை

ரொட்டிகளில் தடவி உண்ணுகிறார்கள். வெண்ணெய் மருந்துக்குச் சிறந்த உதவி புரியும் பொருளாகும். நோயாளிகள் மருந்தை வெண்ணெயில் குழைத்து உட்கொள்வர். குளிர்ச்சி, சுறுசுறுப்பு, இரத்த ஓட்டம் இவற்றை அளிப்பதில் வெண்ணெய் பெயர் பெற்றது. வெண்ணெய் திரட்டி அயல்நாடுகட்கு அனுப்புவதையே முக்கிய தொழிலாகக் கொண்டுள்ளவை பெல்ஜியம், ஹாலண்ட், டேன்மார்க் என்னும் ஐரோப்பிய நாடுகள். அந் நாடுகள் இவ்வாணிபத்தால் சிறப்பாக உள்ளன எனின், வெண்ணெயின் அவசியத்தை உலக மக்கள் எந்த அளவு உணர்ந்துள்ளனர் என்பது விளங்குகிறது அன்றோ? வெண்ணெய்க்கு உள்ள உயர்வு அனைத்தும் நெய்க்கும் உண்டு. 'நெய்யில்லா உண்டி பாழ்' என்னும் பழமொழி ஒன்றே, உணவிற்கு உயிர்நாடி நெய் என்பதை நன்கு விளக்குகிறது அன்றோ? 'நெய்யை உருக்கி ஊற்றிக் கொள்ளவேண்டும்,' என்று தேரையர் என்னும் தமிழ் மருத்துவப் பெரியார் கூறியுள்ளார்.

முடிவு

5. பசு நீர், பசுவின் சாணம் இவை இரண்டும் விஷப் பூச்சிகளைக் கொல்ல வல்லவை. ஆகவே, நம்மவர், வீட்டைச் சுத்தம் செய்ய இவற்றை உபயோகிக்கின்றனர். இங்ஙனம், தன் எல்லாப் பொருள்களாலும் நமக்கு நன்மையையே செய்துவரும் பசுவை, நம்மவர் பேரன்போடு பூசிப்பதில் தவறு உண்டா?

3. வீடு

குறிப்புகள் :—1. நமது வீட்டு அமைப்பு
2. வீட்டுப் பொருள்கள்
3. வீட்டுத் தோட்டம்
4. கூரை - தரை - அறைகள்
5. காற்றும் வெளிச்சமும்
6. முடிவு

கட்டுரை

நமது வீட்டு அமைப்பு

1. சில வீடுகள் நாற்புறமும் தோட்டம் உடையனவாக இருக்கும். சில முன்புறம் தோட்டம் உடையனவாக இருக்கும். வேறு சில பின்புறம் தோட்டம் உடையனவாக இருக்கும். சில வீடுகள் மாடி வீடுகளாக இருக்கும். சில கீற்று வீடுகளாக இருக்கும். சில ஓட்டு வீடுகளாக இருக்கும். பல அறைகள் கொண்ட வீடுகள் சில. சில அறைகளைக் கொண்ட வீடுகள் பல. பெரும்பாலும் எல்லா வீடுகளிலும் சுண்ணும்பு பூசப்பெற்றிருக்கும்.

வீட்டுப் பொருள்கள்

2. வீடுகளில் குடித்தனத்திற்கு அவசியமான பொருள்கள் எல்லாம் அவரவர் தகுதிக்கு ஏற்றபடி நிறைந்திருக்கும். பணக்காரர் வீடுகளில் கட்டில், மெத்தை, மேசை, நாற்காலி, பீரோ முதலிய ஆடம்பரப் பொருள்கள் இருக்கும். இவை நடுத்தர மக்கள் வீடுகளிலும் இருக்கும். இவை சாதாரண மக்கள் வீடுகளில் இரா ; இவை ஒழிந்த ஏனைய பொருள்கள் இருக்கும்.

வீட்டுத் தோட்டம்

3. நாம் வசிக்கும் இடம் சிறியதாயினும் பெரியதாயினும் அதுவே நமது நலத்துக்கு ஏற்றது. ஆதலால்,

அதனைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுதல் நமது கடமை ஆகும். தோட்டம் உள்ள வீடாயின், அத் தோட்டத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டும்; பூச்சி புழுக்கள் அணுகாதபடி பார்த்துக்கொள்ளல் வேண்டும்; மலர்ச் செடிகளையும் வாழை, மா, பலா ஆகிய மரங்களையும் வைத்துப் பயிராக்கல் வேண்டும்; அவ்வப்போது அவற்றிற்கு நீர்விட்டுப் பாதுகாத்தல் வேண்டும்; சத்துள்ள எருப் போட்டுக் களை எடுத்தல் வேண்டும்; தண்ணீர் பாயச் சிறு கால்கள் அமைத்தல் வேண்டும். வீட்டுக் கிணறு சுத்தமாக இருத்தல் வேண்டும். அதன் அருகில் கெட்ட பொருள்கள் சேராதபடி பார்த்துக்கொள்ளுதல் வேண்டும்.

கூரை - தரை - அறைகள்

4. வீட்டிற்குள் ஒவ்வோர் அறையும் தூய்மையாக இருத்தல் வேண்டும். அந்தந்த அறையில் இருக்கத் தக்க பொருள்களைத் தவிரப் பிற பொருள்களைச் சேர்த்து அடைத்தல் ஆகாது. பொருள்களைக் குறிப்பிட்ட இடங்களிற்றான் வைத்தல் வேண்டும்; அவற்றைக் கண்ட இடங்களில் கண்டவாறு போட்டு வைத்தல் தவறு. தரை எப்போதும் அழுக்குப்படாமல் இருத்தல் வேண்டும். அதனை ஒரு நாளைக்கு இரு முறையேனும் சுத்தப்படுத்தல் அவசியமாகும். சுவர்களைச் சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். சுவர்கள்மீது கிறுக்குதல் ஆகாது. வீட்டுக் கூரையை அடிக்கடி ஒட்டடை அடித்தல் நலம். மூலைகளில் எந்தப் பொருளையும் சேர்த்து வைத்தல் பூச்சிபுழுக்கள் தங்குதற்கு இடந்தருதல் போலாம். பரண்களில் அழுக்குச் சேராதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். ஜன்னல்கள் எப்பொழுதும் திறந்து இருத்தல் நலம்.

காற்றும வெளிச்சமும்

5. வீட்டினுள் காற்றும் வெளிச்சமும் பட்டுக் கொண்டே இருத்தல் வேண்டும். வெளிச்சம் இல்லாத இடங்கள் விஷக்கிருமிகளை வளர்க்கும் இடங்கள் ஆகும். இருட்டு அறைகளிற்றும் தேள் முதலிய விஷப்பூச்சிகள் அதிகம். ஆதலால் சமையல் அறை, சாமான் அறை ஆகிய இரண்டும் நல்ல வெளிச்சமும் காற்று ஓட்டமும் உடையன வாக இருத்தல் வேண்டும். நம்மவருள் பெரும்பாலர் சமை யல் அறையை ஆபாசமாக வைத்திருப்பர். அவர், அவ் வறையில் சமைக்கப்படும் பொருள்களே தம்மை வளர்ப் பவை என்பதை நன்கு உணராதவர் ஆவர். படுக்கை அறை யில் கட்டில், மெத்தை, பாய், தலையணை முதலிய பொருள் கள் தவிரப் பிற பொருள் இருத்தல் நலமன்று. அவ்வறை நல்ல காற்றும் வெளிச்சமும் உடையதாக இருத்தல் மிக்க அவசியமாகும். சுருங்கக் கூறின், நாம் வாழும் வீடு மெய்யாகவே வீடு (மோக்ஷம்) ஆக இருத்தல் வேண்டும். இன்றேல், நாம் இவ்வுலகத்தில் பெறும் இன்பந்தான் யாது? இதனை அனைவரும் நன்கு கவனித்து நடப்பின், வீடு—'வீடு' (மோக்ஷம்) ஆகும்.

முடிவு

6. ஆதலால், ஒவ்வொருவரும் தாம் வாழும் இடம் மாடமாயினும் - மாளிகை ஆயினும் - குடிசை ஆயினும் - அது தாம் வாழும் இடம் என்பதை மனத்தில் எண்ணி, அதனைத் தூய்மையாக வைத்துக்கொள்வதில் மிகுந்த கவனம் செலுத்தல் வேண்டும். வீடு—வீடாக மாற்றும் வல்லமை நம்மிடம் உண்டு அன்றோ?

---

4. நகரம்

குறிப்புகள் :—1. நகர அமைப்பு
2. நகர சபையும் நகர சுகாதாரமும்
3. நகர வாழ்வில் நமது கடமை
4. முடிவு

கட்டுரை

நகர அமைப்பு

1. பல வீடுகளைக் கொண்டது ஒரு கிராமம். பல கிராமங்களைப் போலப் பெரிய நிலப்பரப்பில் பல தெருக்களையும் ஆயிரக் கணக்கான ஜனத்தொகையையும் பல உத்யோக நிலையங்களையும் பெரிய கடைத்தெருக்களையும் பல பள்ளிக்கூடங்களையும் போக்குவரவு சாதனங்களையும் உடையது நகரம் எனப்படும்.

நகரத்தில் அகன்ற தெருக்கள் உண்டு; குறுகிய தெருக்களும் உண்டு. பெரிய மாடமாளிகைகள் உண்டு; குடிசை வீடுகளும் உண்டு. செல்வர் முதல் வறியர்வரை உள்ள பல திறப்பட்ட மக்கள் வசிப்பர். உத்யோகஸ்தர் முதல் கூலியாள்வரை பலவகைப்பட்ட வாழ்க்கை உடையவர் இருப்பர். அவருள் படித்தவர் சிலர்; படியாதவர் பலர் ஆவர்.

நகர சபையும் நகர சுகாதாரமும்

2. நகரத்தில் உள்ள வீடுகளையும் தெருக்களையும் நகர சம்பந்தமான பல வேலைகளையும் கவனிக்க நகரசபை ஒன்று உண்டு. ஒவ்வொரு நகரமும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். ஒவ்வொரு பிரிவினரும் ஒருவரைத் தம் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத்து நகரசபைக்கு அனுப்புவர். இப் பிரதிநிதிகள் தமக்குள் ஒருவரைத் தலைவராகவும்

மற்றொருவரை உப தலைவராகவும் தேர்ந்தெடுப்பர். இவர்கள் அனைவரும் நகர அமைப்பு வேலை, சுகாதாரம், விளக்கிடுதல், தண்ணீர் விடுதல் முதலியவற்றைக் கவனிப்பர். தெருக்களை நாளும் இருமுறைச் சுத்தம் செய்யக் கூலிகள் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்கள் காலை-மாலைகளில் வந்து ஒவ்வொரு தெருவையும் சுத்தப்படுத்துகின்றனர். அவர்கள் வேலையை மேற்பார்ப்பவர் ஒருவர் ஒவ்வொரு நகரப் பிரிவிலும் (Division) உண்டு. வீடுகள் இன்ன முறையில் கட்டப்படல் சுகாதார முறைக்கு ஏற்றது என்று அறிவுறுத்தும் உத்யோகஸ்தரும் நகரசபையில் உண்டு. அவர் அநுமதி பெற்ற பிறகே வீட்டைக் கட்டுதல் வேண்டும். சுருங்கக் கூறின், நகரசபை பொதுமக்கள் வாழ்க்கையைச் செம்மைப் படுத்த அமைந்த சாதனமாகும்.

நகர வாழ்வில் நமது கடமை

3. நகரசபை நமது வாழ்க்கையில் எடுத்துக்கொள்ளும் கவலையை நாம் நன்கு கவனித்து, அதனுடன் ஒத்துழைத்தல் வேண்டும்; ஒவ்வொருவரும் அவ்வப்போது அம்மை குத்திக்கொள்ளல் வேண்டும்; அம்மை குத்துதல் அம்மைநோய் வராமல் தடுக்கும் சாதனமாகும். அம்மை குத்துபவர் வரும்பொழுது, பெற்றோர் பலர் தம் குழந்தைகளை ஒளித்துவைத்தல் தவறாகும். அச் செயல், தானாக வரும் சீதேவியைக் காலால் உதைத்தல் போலாகும். இதனைப் பெற்றோர் நன்கு கவனித்தல் வேண்டும். சிறு பிள்ளைகள் தெருவில் மலங்கழிக்கும் கொடிய பழக்கம் நிறுத்தப்படல் வேண்டும். பெற்றோர் இதுபற்றித் தம் பிள்ளைகட்கு அறிவுறுத்தக் கடமைப்பட் டிருக்கின்றனர். அவர்கள் அறிவீனத்தால் பிள்ளைகளின் சுகாதாரத்தைப்பற்றி அறியாது, தமக்கும் தெருவில் உள்ளவர்க்கும் கேடு சூழ்கின்றனர். ஒவ்

வொரு வீட்டிலும் மலங்கழிக்க இடம் உண்டு. அந்த இடத்திற்கே பிள்ளைகளை அனுப்புதல் வேண்டும். 'தெரு' என்பது மக்கள் நடமாடும் இடமாகும். அது மலங்கழிக்க உண்டான இடம் அன்று என்பதை நினைவிற் கோடல் வேண்டும். நாம் தெருவில் எச்சில் உமிழ்தல், மலங் கழித்தல் முதலிய அசுத்தங்களைச் செய்தல் மன்னிக்க முடியாத குற்றமாகும். சாலை ஓரங்கள், மூலை முடுக்குகள் ஆகிய இடங்களில் ஒன்றுக்கு இருத்தலும் தவறு. சாலையில் வழிநடக்கையில் இடதுகைப் பக்கமாகப் போதல் வேண்டும். பலர் இதை அறியாமல் நடுத்தெருவில் நடந்து மோட்டாரிலும், சைக்கிளிலும் அகப்பட்டு அவதிப்படுவர். நாம் வசிக்கும் வீட்டையும் தெருவையும் நகரத்தையும் சுத்தமாக வைத்துக்கொள்ளவும் சாலையில் ஒழுங்காக நடக்கவும் அறியாதவரை, நாம் 'அறிவுடைய மனிதர்கள்' என்று பெருமை அடைவதில் அர்த்தம் உண்டா? யோசித்துப் பாருங்கள்!

முடிவு

4. ஆகவே, 'நமது வீடு, நமது தெரு, நமது நகரம்,' என்பதை நினைவிற்கொண்டு, 'அதன் சுகாதாரமே நமது சுகாதாரம்' என்று எண்ணி நடப்பவரே பொறுப்புள்ள ஜன சமூகத்தவர் ஆவர்; நாகரிக நோக்கங் கொண்ட நன்மக்கள் ஆவர். நாம் அங்ஙனம் நடத்தலே ஏற்றதாகும். இன்றேல், விலங்கிற்கும் மனிதற்கும் வேறுபாடுதான் யாதுளது?

---

5. எனது பள்ளிக்கூடம்

குறிப்புகள் :—1. பள்ளிக்கூடமும் தோட்டமும்
2. வகுப்புகளும் ஆசிரியரும்
3. எங்கள் வேலை
4. முடிவு

கட்டுரை

பள்ளிக்கூடமும் தோட்டமும்

1. என் பள்ளிக்கூடம் நகரசபையார் ஆட்சிக்கு உட்பட்டது. அது நான்கு பக்கங்களிலும் தோட்டத்தை உடையது; சுற்றிலும் மதிற்சுவரை உடையது; முன்பக்கம் அழகிய பூஞ்செடிகள் தரையிலும் தொட்டிகளிலும் வைத்துப் பயிராக்கப்பட்டு உள்ளன. வலது பக்கம் விளையாடும் மைதானம் சுத்தமாக வைக்கப்பட்டு இருக்கிறது. இடது பக்கம் வாழைத் தோட்டமும் பின்புறம் பள்ளிக்கூடத் தோட்டமும் உள. அரைக்கீரை - முளைக்கீரைப் பாத்திகள் இருக்கின்றன. கத்திரிக்காய், வெண்டைக்காய்ச் செடிகள் இருக்கின்றன. அவரை, புடலை முதலிய கொடி வகைகள் பந்தல்களில் பயிராகின்றன. தோட்டத்தில் பெரிய கிணறு இருக்கிறது. அதைச் சுற்றிலும் நான்கு கால்வாய்கள் பாத்திகட்கும் வாழை மரங்கட்கும் செல்கின்றன. பள்ளிக்கூடம் எட்டுப் பெரிய அறைகளை உடையது; மூன்று சிறிய அறைகளை உடையது; ஒரு பெரிய கூடத்தை உடையது. அது நானூறு பேரைக் கொள்ளக்கூடியது.

வகுப்புகளும் ஆசிரியரும்

2. எட்டுப் பெரிய அறைகளிலும் எட்டு வகுப்புகள் இருக்கின்றன. சிறிய அறைகள் மூன்றில் தலைமை ஆசிரியர்

அறை ஒன்று; ஏனைய ஆசிரியர் அறை ஒன்று; பள்ளிக்கூடப் பொருள்களை வைக்கும் அறை ஒன்றாகும். இந்த மூன்றும் அறையில் பூகோள பாட சம்பந்தமான படங்களும் பொருள்களும், சரித்திர பாட சம்பந்தமான படங்களும் பொருள்களும், இயற்கைப் பொருட் பாட சம்பந்தமான படங்களும் பொருள்களும் பிறவும் நிறைந்து இருக்கின்றன. என் பள்ளிக்கூடத்தில் எட்டு ஆசிரியர் உள்ளனர். எட்டாம் வகுப்பு ஆசிரியரே தலைமை ஆசிரியர். எங்கள் ஆசிரியர்கள் மிகுந்த கவலை எடுத்துக்கொண்டு பாடம் கற்பிப்பவர்கள்; தலைமை ஆசிரியர் ஒவ்வொரு நாளும் வந்து எல்லா வகுப்புகளையும் பார்வை இடுவார். ஆசிரியர்கள் மலர்ந்த முகத்துடன் பாடம் கற்பிப்பார்கள்; எல்லாப் பிள்ளைகளுக்கும் எளிதில் விளங்கும்படி பேசுவார்கள்; விளங்காத பகுதிகளைப் பிள்ளைகள் மறுமுறை கேட்டால், கோபங் கொள்ளாமல் விளக்கமாகச் சொல்லுவார்கள்; மாணவர் கேட்கும் விளங்காத பகுதிகளை விளக்குவார்கள்; வினுக்கட்கு விடை அளிப்பார்கள்; மாலை நேரங்களில் எங்களோடு தோட்ட வேலை செய்வார்கள்; பந்து விளையாடுவார்கள்; ஓடுவார்கள்; ஆடுவார்கள்; பாடுவார்கள். சுருங்கக் கூறின், எங்கட்கு வீட்டிற்குப் போகவேண்டும் என்னும் எண்ணமே உண்டாவதில்லை. நாங்கள் எங்கள் ஆசிரியர்களோடு எப்பொழுதும் பள்ளிக்கூடத்தில் இருப்பதையே விரும்புகிறோம்.

எங்கள் வேலை

3. பள்ளிக்கூடம் காலை 10 மணிக்குத் தொடங்கும். நாங்கள் எல்லோரும் பெரிய கூடத்தில் கூடுவோம். ஆசிரியரும் இருப்பர். கடவுள் வணக்கம் நடைபெறும். இரண்டு மாணவர் தோத்திரப் பாடல்களைப் பாடுவர்.

பின்னர், பிள்ளைகள் அவரவர் இடங்கட்குச் செல்வர். வகுப்புகள் ஒழுங்காக நடைபெறும். மாலை 4 மணிக்கு மேல் நாங்கள் தோட்ட வேலைக்குப் போவோம். ஆசிரியரும் எங்களோடு வருவார். இரண்டு வகுப்புப் பிள்ளைகள் விளை யாடுவார்கள். அங்கு இரண்டு ஆசிரியர்கள் இருப்பார்கள். பிள்ளைகளுட் சிலர் நீர் இறைப்பார்கள்; சிலர் தண்ணீர் பாய்ச் சுவார்கள்; சிலர் களை எடுப்பார்கள்; சிலர் தோட்டத்தைச் சுத்தம் செய்வார்கள். விளையாட்டில் ஈடுபட்ட பிள்ளைகள் ஓடுதல், நொண்டுதல், தாண்டுதல், குதிரை ஆட்டம், பந் தாடுதல் முதலிய பலவகை ஆட்டங்களை ஆடுவார்கள். ஆசிரியர்களும் பிள்ளைகளுடன் தோட்ட வேலை, விளையாட்டு இவற்றில் கலந்துகொள்வார்கள். சில நாட்களில் பள்ளிக் கூட மைதானத்தில் உள்ள ஆலமர நிழலில் 'சன்மார்க்க போதனை வகுப்பு' நடைபெறும். அப்போது எங்கள் தலைமை ஆசிரியர் நாயன்மார், ஆழ்வார்கள் முதலிய பக்திமான்க ளுடைய சரித்திரங்களையும் மேல்நாட்டுப் பெரியோர்க ளுடைய போதனைகளையும் எடுத்துக் கூறுவார். அந்த வகுப் பில் எல்லாப் பிள்ளைகளும் கவலைகொள்வார்கள்; அமைதி யாக இருந்து கவனத்துடன் கேட்பார்கள்.

முடிவு

4. எங்கள் பள்ளிக்கூடம் எங்கள் சுவர்க்க லோகம். அதனை நாங்கள் பெரிதும் விரும்புகிறோம். நாங்கள், எங்கள் ஆசிரியரோடு வாழ்தலையும் அவர்கள் அன்பில் வளர்தலையும் விரும்புகிறோம். ஏன்? எங்கள் எதிர்கால முன்னேற்றம் எங்கள் ஆசிரியர் போதனையைப் பொருத்தது அன்றோ?

---

6. மாணவரும் சுகாதாரமும்

குறிப்புகள் :—1. மாணவர் யாவர் !
2. சுகாதாரம் - யாது !
3. இன்றைய மாணவர் நிலைமை
4. செய்ய வேண்டுவன
5. முடிவு

கட்டுரை

மாணவர் யாவர் ?

1. பள்ளிக்கூடத்தில் வாசிப்பவர் - ஓர் ஆசிரியரிடம் பாடம் கேட்பவர் மாணவர் எனப்படுவர். "மாண்புடைமை (பெருமை)யை அறிந்து ஒழுகும் கல்வி கற்றலால், 'பெருமையுடையவர்' என்னும் பொருள்பட 'மாணவர்' எனக் கல்வி கற்பவர் அழைக்கப்படுவர்" என்று பெரியோர் கூறுவர்.

சுகாதாரம் யாது ?

2. 'சுகாதாரம்' என்பது 'சுகத்துக்குரிய அடிப்படை' எனப் பொருள்படும். நாம் சுகமாக வாழ்தற்கு உரிய வழிகள் இன்னவை என அறிவிப்பது 'சுகாதார போதனை' எனப்படும். நோயின்றி வாழ வகுக்கும் முறையே சுகாதார முறை ஆகும்.

இன்றைய மாணவர் நிலைமை

3. பள்ளியில் சுகாதார பாடம் கற்பிக்கப்படுகிறது. ஆசிரியரும் கவலையோடு சுகாதார விதிகளைப் போதிக்கிறார். நகரசபையாரும் சுகாதார முறையைச் செயலில் செய்து காட்டுகின்றனர். மாணவரும் ஓயாமல் சுகாதார பாடங்களைப் படித்து வருகின்றனர். ஆயினும், நம் நகரங்களில் சுகாதாரம் சரியாக இல்லை. காரணம் என்ன ? 'படிப்பது

இராமாயணம் - இடிப்பது பெருமாள் கோவில்' என்றாற் போல மாணவரே சுகாதார விதிகளின்படி நடப்பதில்லை. படிப்பவரே கவனிப்பதில்லை - நடப்பதில்லை எனின், படியாத மக்களைக் குறை கூறுவதில் பயன் உண்டா? மாணவரே, தம் தம்பியரையும் தங்கையரையும் தெருவில் வீட்டு ஓரங்களில் அசுத்தம் செய்ய விடுகின்றனர்; அவர்களோடு தாமும் அச்செயலில் பங்கு கொள்கின்றனர்; தாம் படிக்கும் பள்ளிக்கூடத்தின் நாற்புறமும் அசுத்தம் செய்யத் தவறுவதே இல்லை; 'வைகறைத் துயில் எழு' என்னும் வாக்கியத்தைப் படித்தனரே தவிர, ஒரு நாளிலேனும் அதிகாலையில் எழுந்திருப்பதில்லை. இங்ஙனம் மாணவர் சிறு பருவத்திலேயே சுகாதார விதிகட்கு நேர்மாறான முறையில் நடப்பதால், படித்தவரும் படியாதவரும் ஒரே நிலையில் சுகாதாரத்தை மறந்து நடக்கின்றனர். இச்செயலால், பல தொத்து நோய்களும் கொள்ளை நோய்களும் மிகுதிப்பட்டு, நாளடைவில் அகால மரணம் அதிகமாகிச் சமூகம் வன்மை இழந்து விடும்.

செய்ய வேண்டுவன

4. மாணவரே எதிர்கால சமூகத்தின் உயிர்நாடி ஆவர். ஆதலால், நமது சமூகம் நல்ல நிலையில் இருப்பதற்கு அவர்கள் நல்ல நிலையில் இருத்தல் இன்றியமையாதது. அவர்கள் சுகாதார விதிகளை இளமை முதலே பழக்கத்தில் கொள்ளுதல் நலம். காலையில் துயிலினின்றும் எழுந்து நடத்தலோ, ஓடுதலோ, உடற்பயிற்சி செய்தலோ நல்லது; பின்னர்க் குளிர்ந்த நீரில் நீராடல் வேண்டும். 'கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு' என்றபடி, தினந்தோறும் தம் ஆடைகளைத் துவைத்தல் நல்லது. 'கூழானாலும் குளித்துக் குடி' என்பது பழைய மொழி. ஆதலால், மாணவர் நீராடுதலை நாள்

தோறும் சிறந்த கடமையாகக் கைக்கொள்ளல் வேண்டும். மாணவர் தாம் வசிக்கும் வீட்டையும் தெருவையும் சுத்தமாக வைத்திருத்தல் அவசியமாகும்; தம்மளவில் உடைகளைத் தூய்மையாகப் பாதுகாத்தல் வேண்டும்; ஆறிய அல்லது உலர்ந்த அல்லது கெட்டுப்போன பொருள்களைத் தின்னல் பெருந்தவறு; பழுக்காத பழங்கள் - ஊசிப்போன உணவுப் பண்டங்கள்-குறைந்த விலைக்கு விற்கப்படும் தின்பண்டங்கள் முதலியவற்றைக் கண்மூடித்தனமாக உட்கொள்ளல் ஆகாது. வாரத்திற்கு ஒருமுறையோ - இருமுறையோ எண்ணெய் தேய்த்துக் குளித்தல் அவசியம்; தினமும் உண்டியில் மோரைச் சேர்த்துக்கொள்ளுதல் நலம். மாணவர், மாலை வேளைகளில் காற்றோட்டம் உள்ள இடங்களில் ஓடி ஆடுதல் நலம்; கை, கால், இடுப்பு, மார்பு, கழுத்து முதலிய உறுப்பு களுக்கு வன்மை தரத்தக்க உடற்பயிற்சிகளைச் செய்தல் நல்லது; இரவில் அதிக நேரம் விழித்திருத்தல் தவறு; குறித்த நேரத்தில் படுத்து வைகறையில் எழுதல் உடம்புக் குச் சுறுசுறுப்பை உண்டாக்கும்; இரவில் படுக்கும் பொழு தும் காலையில் எழுந்தவுடனும் குளிர்ந்த நீரில் முகத்தைக் கழுவுதல்—சிறப்பாகக் கண்களைச் சுத்தம் செய்தல் மிகவும் நல்லது; சூடு உள்ளதும் சத்து உள்ளதும் ஆகிய உணவையே குறித்த வேளைகளில் உண்ணல் நலம்.

முடிவு

5. இந்த விதிகளை நன்கு கவனித்து நடப்பவர் நோய் அடையார்; நெடுங்காலம் சுகமாக வாழ்வர்; உடல் உழைக் கத் தகுதி வாய்ந்ததாகும். 'நோயற்ற வாழ்வே குறை வற்ற செல்வம்' அன்றோ?

7. மாணவரும் பொதுநலச் சேவையும்

குறிப்புகள் :—1. பொதுநலச் சேவை - யாது ?
2. வழியில் தொண்டு
3. கூட்டங்களில் தொண்டு
4. பிறவகைத் தொண்டுகள்
5. முடிவு.

கட்டுரை

பொதுநலச் சேவை—யாது ?

1. உற்றார் உறவினர் அல்லாத எல்லா மக்கட்கும் நம்மால் இயன்ற தொண்டு (உதவி) செய்தலே பொது நலச் சேவை என்பது. உற்றார் உறவினர்க்குச் செய்யும் உதவி அன்பை அடிப்படையாகக் கொண்டது. ஆனால், பொது மக்கட்குச் செய்யும் உதவி அருளை அடிப்படையாகக் கொண்டது. அருள் என்பது ஜாதி மத பேதங்களைக் கடந்தது; நிற வேறுபாடுகளைக் கடந்தது; நாட்டு வேறுபாடுகளையும் கடந்தது. அஃது எல்லாம் கடந்த கடவுள் நிலையில் இருப்பது. அந்நிலையை அடைதல் ஒவ்வொருவர்தம் நீங்காக் கடமையாகும். 'அருளை உடையவனே ஆண்டவனை அடைவான்' என்று ஞானிகள் கூறிச் சென்றனர். 'எறும்பும் நம் சகோதரனே' என்ற விவேகானந்தர் அருள் உரையைக் கவனியுங்கள் :

" மண்ணுல கதனில் உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன் "

என்ற இராமலிங்க அடிகளின் அருள் உரையை நோக்குக. இத்தகைய மனநிலை வாய்க்கப் பெற்றவரே அருள் உள்ளம்

உடைய பெரியார் ஆவர். அந்நிலையை அடையப் பொது நலத் தொண்டு பேருதவி செய்யும்.

வழியில் தொண்டு

2. மாணவர் எவ்வழிகளில் பொதுநலத் தொண்டு செய்தல் கூடும்? ஒரு மாணவன் பள்ளிக்கு வரும் வழியில், நாற்சந்தியில் வண்டிகள் வரும் பொழுது முதியவர் அகப் பட்டுத் தவித்தல் உண்டு. மாணவன் அவ்வாபத்தான நிலையில் சரேரெனப் பாய்ந்து, அம்முதியவரைத் தெரு ஓரம் அழைத்துவரல் தொண்டாகும். வழி அறியாமல் தவறித் துன்பப்படுபவர் பலர் ஆவர். அத்தகையோர்க்கு வழி கூறிக் கூடுமாயின், அழைத்துச் சென்று அவர் விரும்பிய இடத்தை அடைவித்தல் தொண்டு ஆகும். சாலைகளில் கிடக்கும் கண்ணாடித் துண்டுகள், வாழைப் பழத்தோல் முதலியவற்றால் நடப்பவர் வழுக்குண்டு பெரிதும் துன்பப்படல் உண்டு. ஆதலால், அவை வழியில் கிடத்தலைக் காணும் போதெல்லாம் நீக்கிவிடல் தொண்டு ஆகும். சைக்கிள், மோட்டார் முதலிய வாகனங்களால் தாக்குண்டு கிடப்பவர்க்கு மூர்ச்சை தெளிவித்தல், அவர்களை வைத்திய சாலைகட்கு அழைத்துச் செல்லல் முதலியன பொதுநலச் சேவை ஆகும். வழி தவறி வந்து அழும் இளம்பிள்ளைகளை நன்கு விசாரித்து உரியாரிடம் சேர்த்தல் சேவையாகும்; இன்றேல், அப்பிள்ளைகளை அருகில் உள்ள போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைத்தல் சிறந்த பணி ஆகும்.

கூட்டங்களில் தொண்டு

3. திருவிழா முதலியவற்றால் ஜனக்கூட்டமுடைய இடங்களில் மாணவர் செய்யத்தக்க சேவை பெரிதாகும்; குழந்தைகள் பெற்றோரைப் பிரிந்து அழும்; குழந்தைகளைப் பிரிந்து பெற்றோர் புலம்புவர்; வழி அறியாமல் தவிப்பவர்

பலர். அயோக்கியரால் கூட்டத்துள் தாக்குண்பவர் பலர்; நகைகளை இழப்பவர் பலர்; நசுக்கப்படுபவர் பலர். ஆதலால், வலிவுள்ள பெரிய மாணவர் பலர் அவ்விடங்களில் கூடி நின்று, களவு நடவாமல் பார்த்துக் கொள்ளலாம்; பெண்கள் ஒரு புறமும் ஆடவர் ஒரு புறமுமாகக் கோவிலுக்குள் போகவும் வரவும் ஏற்பாடு செய்யலாம்; குழந்தைகளைப் பெற்றோரிடமும் பெற்றோரைக் குழந்தைகளிடமும் சேர்க்கலாம்; சிறுவரும் பெண்களும் கூட்டத்தில் தாக்கப்படா வண்ணம் குறுக்கே நின்று உதவி புரியலாம்; கள்வரையும் கயவரையும் கண்டறிவதில் போலீசார்க்கு உதவி செய்யலாம்.

பிறவகைத் தோண்டுகள்

4. தாகத்தால் வருந்துவோர்க்குத் தாகவிடாய் தீர்த்தலும் தொண்டுதான். பசியால் வாடும் ஏழை மக்களின் பசி நோயைப் பரிந்து நீக்கலும் அருளுடைய செயலே ஆகும். துஷ்டர்களிடம் அகப்பட்டு அவதிப்படும் பொதுமக்களை அத்துஷ்டரிடமிருந்து விலக்கல் சிறந்ததொரு தொண்டாகும்.

முடிவு

5. இங்ஙனம் மாணவர் செய்யத்தகும் பொது நலப் பணிகள் பலவாகும். இப்பணி புரியும் மாணவர் உற்ற வயதில் நல்ல ஒழுக்கமும் அஞ்சா நெஞ்சமும் பெற்றுச் சமூகத்துச் சிரோமணிகளாக விளங்குவார்கள். அவர்களுக்குப் பரந்த சிந்தையும் விரிந்த நோக்கமும் உண்டாகும். அவர்களால் மனித சமூகம் மேனிலையை அடையும்.

---

8. கல்வி கற்றல்

குறிப்புகள் :—1. கல்வி என்பது யாது ?
2. கல்விக்கும் செல்வத்திற்கும் உள்ள வேறுபாடு
3. கல்வி கற்றல்
4. முடிவு

கட்டுரை

கல்வி என்பது யாது ?

1. கல்வி என்பது 'கல்லுதல்—தோண்டி எடுத்தல்' என்னும் பொருளை உடையது. அஃதாவது, 'அறிவைத் தோண்டுதல்—படித்தறிதல்' என்பதாகும். அக் கல்வி பல வகைப்படும்: உலக வாழ்விற்கு உரிய உத்யோகக் கல்வி, தொழிற் கல்வி என்பனவும்; என்றும் உறுதுணை செய்யும் ஒழுக்கக் கல்வி என்பதும் ஆகும். இம் மூன்றும் உடையவரே மேலான மனிதர் ஆவர். உத்யோகக் கல்வி கற்றவர் பலர்; தொழிற் கல்வி கற்றவர் தொழிலாளர்; ஒழுக்கக் கல்வி கற்றவர் சான்றோர் ஆவர். உத்தியோகஸ்தரும் தொழிலாளரும் ஒழுக்கக் கல்வி கற்பாராயின், பொன் மலர் மணம் பெற்றவாறு ஆவர். உயிரை வளர்ப்பதும் உலகில் நற்பெயர் எடுக்க உதவுவதும் ஒழுக்கக் கல்வியே ஆகும். பெரியோர் வரலாறுகள், போதனைகள், மத உண்மைகள், மெய்யான கொள்கைகள் இவற்றை அறிவிப்பதே ஒழுக்கக் கல்வி. அக் கல்வியைக் கற்று அதன்படி நல்ல ஒழுக்கத்தில் இருப்பவரே அடக்கம் உடைய பெரு மக்கள் ஆவர். இம் மூன்றையும் 'கல்வி' எனக்கொண்டே இங்குப் பேசுவோம்:

கல்விக்கும் செல்வத்திற்கும் உள்ள வேறுபாடு

2. கல்வி என்பது ஒருவனது உள்ளத்தில்—மெய்யுணர்வில் நிலைத்து நிற்பது. அஃது எவர் கண்ணிற்கும் புலப்படாதது; செயலிற்றான் வெளிப்படுவது. எனவே, அது செல்வம் போல எந்த இடத்திலும் வைக்கத்தக்கதன்று; நினைத்த போது, இடம் விட்டு இடம் மாற்றத் தக்கதும் அன்று. கல்வி, செல்வம் போல நெருப்பில் வேகாதது; வெள்ளத்தால் கொண்டு செல்லப்படாதது; வேந்தராலும் அபகரிக்க முடியாதது; கொடுத்தாலும் குறைபடாதது; தோண்டத் தோண்ட ஊறும் மணற் கேணியைப் போல எடுக்க எடுக்க (போதிக்கப் போதிக்க)க் குறைவுபடாமல் வளர்ச்சியுறுவது; கள்வரால் களவாடப்படாதது. செல்வத்தை உடையவன் தன் ஊரில் மட்டுமே சிறப்புப் பெறுவான்; வெளியூரில் சிறப்படையான். ஆனால், கற்றவன் செல்லும் இடம் எல்லாம் சிறப்பு அடைவான்.

"மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கில்,
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன்—மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை; கற்றோர்க்குச்
சென்றஇடம் எல்லாம் சிறப்பு."

என்னும் பெரியோர் பொன்மொழியைக் காண்க. இதுவரை கூறியவற்றால், 'கல்வி-செல்வத்தைவிட மேலானது' என்பது எளிதில் விளங்கும் அன்றோ?

கல்வி கற்றல்

3. 'இளமையிற் கல்' என்றும், 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்து' என்றும் பெரியோர் பகர்ந்துள்ளன எல்லாம், கல்வி கற்க இளமைப் பருவமே ஏற்றது என்பதை வலியுறுத்தவாம். இளமையில் நமது மனம் மாசற்று இருக்கும். உலக விவகாரங்களில் நமது கவனம் செல்லாத

பருவம் அதுவே. அப்பொழுது படிக்கும் படிப்புப் 'பசு மரத்து ஆணி போல்' நன்றாக மனத்திற் பதியும். நாம் அப்பருவத்தில் பள்ளிக்கூடத்திற் சேர்ந்து பயின்று, ஆண்டுதோறும் மேல் வகுப்புக்குப் போதல் வேண்டும். இங்ஙனம் உத்யோகக் கல்வி கற்று, வேலையில் அமர்ந்த பின்—குடும்ப நிலையை ஏற்ற பின்பு ஒழுக்கக் கல்விக்கு உரிய நூல்களை விடாமற் கற்றல் வேண்டும். 'ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்' ஆதலால், உயிரினும் உயர்ந்ததாகிய ஒழுக்கத்தை அறிவுறுத்தும் உயரிய நூல்களைப் படித்தலே நமது சிறந்த கடமையாகும். நாம் அவ்வாறு கற்று, கற்ற வழியிலேயே நிற்க முயலல் வேண்டும்.

> "கற்க கசடறக் கற்பவை ; கற்றபின்
> நிற்க அதற்குத் தக."

என்ற திருவள்ளுவர் திருவாக்கை உணர்க. கற்ற வழியிலே நின்று, முடிவற்ற ஞானமுடைய இறைவனை எப்பொழுதும் எண்ணி எண்ணி, மனம் கசிந்து கசிந்து ஆன்ம வளர்ச்சி பெற்று, அன்புமயமான ஆண்டவனை அடைய முயலல் வேண்டும்.

> "கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅர் எனின் !"

என்னும் வள்ளுவர் வாக்குச் சிந்திக்கத் தக்கது.

முடிவு

4. இங்ஙனம், மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் கல்விக்கும் செல்வத்துக்கும் உள்ள ஏற்றத்தாழ்வை உணர்ந்து, மெய்க் கல்வி கற்று, கற்றவழி நின்று கடமை ஆற்றி, இறைவன் மனம் மகிழ வாழ்ந்து ஈறிலா இன்பம் அடைதலே சிறப்பாகும்.

9. கிராமமும் நகரமும்

குறிப்புகள் :—1. கிராம அமைப்பு
2. நகர அமைப்பு
3. இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள்
4. முடிவு

கட்டுரை

கிராம அமைப்பு

1. கிராமம் என்பது நாற்புறமும் வயல்களால் சூழப்பட்ட சிற்றூர் ஆகும். அதில் நான்கைந்து தெருக்களே இருக்கும். பல தெருக்களை உடையது பெரிய கிராமம் எனப் படும். ஒவ்வொரு கிராமத்திலும் சிறிய குளம் இருக்கும். சிறிய கோவில் ஒன்று அல்லது இரண்டு இருக்கும். கிராமச் சாவடி இருக்கும். கிராமத்தில் மணியக்காரர், கணக்கப் பிள்ளை, வெட்டியான், தலையாரி என்னும் உத்யோகஸ்தர் இருப்பர். கிராமத்தில் வாழைத் தோட்டங்கள் இருக்கும்; தென்னந் தோப்புகள் இருக்கும். கிராமத்தில் கொல்லன், தச்சன், வண்ணான், நாவிதன், செக்கான், குயவன், சேணியன் முதலிய தொழிலாளர் வசிப்பர். வயலை உழுது பயிர் வேலை செய்யும் உழவரே மிகுதியாக இருப்பர். கிராமத்தில் ஆரம்பப் பள்ளிக்கூடம் ஒன்று இருக்கும். பெரிய கிராமமாயின்; சிறிய வைத்தியசாலை ஒன்றும் இருக்கும்; பஞ்சாயத்துச் சபையும் இருக்கும்.

நகர அமைப்பு

2. நகரம் என்பது பல கிராமங்களின் பரப்பை உடையது; பல ஆயிரக் கணக்கான வீடுகளை உடையது; நூற்றுக் கணக்கான தெருக்களை உடையது; பெரிய கடைத்

தெருவுடையது; பல உத்யோக நிலையங்களை உடையது; பல பள்ளிக்கூடங்களை உடையது; காணத்தக்க காட்சிகள் பல கொண்டது; பல கோவில்களைக் கொண்டது. சில நகரங்கள் ஆற்றோரமாக அமைந்திருக்கும். சில ஆறு இல்லாத இடங்களில் அமைந்திருக்கும். சில நகரங்களில் குளங்கள் பல இருக்கும். சிலவற்றில் சில இருக்கும். மாலை வேளைகளில் நகரத்தார் காற்று வாங்கச் சில பூம்பொழில்கள் இருக்கும். இக் காலத்தில் அவ்விடங்களில் 'ரேடியோ' என்னும் ஒலி பெருக்கும் கருவி அமைக்கப்பட்டுள்ளது. சென்னை, திருச்சி முதலிய இடங்களில் இருந்து பாடுவோர் பாடல்களும், பேசுவோர் பேச்சுகளும் அந்த அந்த இடங்களில் உள்ளார் இவ் வொலி பெருக்கியால் கேட்கலாம். பல வகைத் திருவிழாக்கள் ஆண்டுதோறும் நடந்தவண்ணமாகவே இருக்கும். நகரத்தில் பல மதத்தார் கோவில்கள் நிறைந்திருக்கும்.

இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள்

3. கிராமத்தில் அமைதி குடிகொண்டிருக்கும்; நகரத்தில் ஜன நெருக்கம் அதிகம் ஆதலால், அமைதியைக் காணல் அரிது. கிராமத்தில் நாற்புறமும் தோட்டங்களும் வயல்களும் இருத்தலால் தூய காற்று வீசும்; நகரத்தில் அத் தூய காற்றை நுகர முடியாது. கிராமத்தில் ஏரி, குளம், ஆறு, கிணறு முதலிய நீர்நிலைகளிலிருந்து வேண்டும் அளவு நீரைப் பயன்படுத்தலாம்; நகரங்களில் குழாய் மூலமே வீடுகட்குத் தண்ணீர் விடப்படுகிறது. அதனால் நகரவாசிகள் குறிப்பிட்ட நேரத்திற்குள்ளேயே தம் நீர்த் தேவையைப் பூர்த்தி செய்துகொள்ளல் வேண்டும். கிராமத்தில் நல்ல தயிர், பால், நெய் முதலியன கிடைக்கும். நகரத்தில் அவை அவ்வாறு கிடைக்கா. கிராமத்தில் நினைத்தபோதெல்லாம்

பச்சைப் பசேரென்று காய்கறிகள் கிடைக்கும். நகரத்தில் அவை அங்ஙனம் கிடைக்கா. கிராமத்தில் சூரியன்தோற்றம், சூரியன் மறைவு இவற்றைக் கண்டு களிக்கலாம்; நகரத்தில் வீடுகள் உயரமாக இருத்தலால் இவற்றைக் காணல் இயலாது. நகரத்தில் நெல் அறைக்கும் இயந்திரம், மா அறைக்கும் இயந்திரம், தொழிற்சாலைகள் முதலியன இருத்தலால் எப்பொழுதும் ஓசை மிகுதியாக இருக்கும். கிராமத்தில் இவ்வோசை இராது; எங்கும் அமைதியே குடிகொண்டு இருக்கும். உண்டு உறங்கும் நேரம் போக, எஞ்சிய நேரத்தை அமைதியாகக் கழிக்க விரும்புபவர்க்குக் கிராம வாழ்க்கை இன்பமானது. ஆனால், சுறுசுறுப்பும் தொழிலும் உடைய மக்கட்கு நகர வாழ்க்கையே ஏற்றது.

முடிவு

4. சுருங்கக் கூறின், நல்ல உணவு, நல்ல காற்று, நல்ல தண்ணீர் இவற்றுக்குக் கிராம வாழ்க்கையே சிறந்தது. கிராமத்தார் நெல் குற்றி அரிசி உண்பர்; எல்லாப் பொருள்களையும் தாமே அம்மியில் அறைத்தும் உரலில் இடித்தும் பயன்படுத்துவர். ஆனால், நகரத்தார் இயந்திரத்தில் இட்டுத் தூளாக்கிக் கொள்வர்; நெல்லையும் இயந்திரத்தில் இட்டு அரிசியாக்கி அதன் சத்தை இழந்துள்ளனர். சத்துள்ள அரிசி கிராமத்திற்றான் உண்டு. சமையல் மணமாகவும் சுவையாகவும் இருக்கும். நகரத்தில் சமையல் சத்துள்ளதன்று. எனவே, வாழ்க்கையை இன்பமாகக் கழிக்க விரும்புபவர் கிராமத்தில் இருத்தலே நலமாகும்.

10. கிராமக் கைத்தொழில்கள்

குறிப்புகள் :—1. கைத்தொழில் - யாது ?
2. கிராமக் கைத்தொழில்கள்
3. அவற்றால் வரும் பயன்
4. முடிவு

கட்டுரை

கைத்தொழில்—யாது ?

1. கையால் செய்யப்படும் தொழில் கைத்தொழில் எனப்படும். அஃதாவது, பிழைப்புக்காகக் கையால் செய்யப் படுந் தொழில் எனப் பொருள்படும். கூடை முடைதல், பின்னல் வேலை, தையல் வேலை, ஆடை நெய்தல், பொத் தான் செய்தல், இரும்புச் சாமான்கள் செய்தல், மரச் சாமான்கள் செய்தல் முதலியன கைத்தொழில்கள் எனப் படும்.

கிராமக் கைத்தொழில்கள்

2. கிராமத்தில் செய்யப்படும் கைத்தொழில்கள் யாவை? அவை ஆடை நெய்தல், தச்சு வேலை, கொல்ல வேலை, கன்னார வேலை, தட்டார வேலை, தென்னைமர வேலை, பனைமர வேலை, பால் பண்ணை வைத்தல், கோழிப் பண்ணை வைத்தல், தேனீ வளர்த்துத் தேன் சேகரித்தல் முதலிய பல வகையாம். தென்னை மரங்களைக் கொண்டு நல்ல தொழில் நடத்தலாம் ; தென்னை மரத்தின் எல்லாப் பாகங் களும் விலையாவன. தேங்காய் ஓடுகளைக் கொண்டு அகப்பை செய்யலாம். தேங்காய்ப் பருப்பைக் காயவைத்துச் செக்கில் இட்டு ஆட்டித் தேங்காய் எண்ணெய் தயாரிக்கலாம். தேங் காய் எண்ணெயில் சிறிது வாசனை கலந்து, கூந்தல் தைல

மாக்கிப் புட்டிகளில் நிறைத்து விற்பனை செய்யலாம்; இள நீர் விற்கலாம். தேங்காய் மட்டைகளைப் பிளந்து பிய்த்துக் கயிறு பின்னலாம். தென்னை ஓலைகளைப் பின்னி நூறு ஒரு ரூபாய்க்கு மேலும் விற்கலாம். தென்னை ஓலை வீடுகளே கிராமங்களில் மிகுதி. தென்னைமரம் ஆற்றின் குறுக்கே பாலமாகவும், வீடுகளுக்கு விட்டங்களாகவும் தூண்களாகவும் பயன்படுத்த உதவும்.

பனைமரத்தைக் கொண்டும் பல தொழில்கள் செய்யலாம். பனஞ்சாறு உடம்புக்கு நல்லது. பனஞ்சாற்றைக் காய்ச்சிப் பனைவெல்லம், பனங்கற்கண்டு செய்யலாம். பனை ஓலைகள் கூரை போட உதவும்; விசிறி செய்ய உதவும். நுங்கு வியாபாரம் செய்யலாம். பனைமரமும் தென்னை மரம் போலப் பாலமாகவும் விட்டங்களாகவும் தூண்களாகவும் பயன்படும். பனை ஓலைகளால் கூடைகள், திருமண் பெட்டிகள் முதலியன செய்யலாம். தென்னைமரத் தோப்பாலும் பனங்காட்டாலும் பலர் பிழைக்கின்றனர்; பலர் தொழில் செய்து பிழைக்கின்றனர். கரும்புக் காடுகளைப் பயிராக்கிக் கரும்பாலைகளை வைத்துச் சர்க்கரை, வெல்லம் முதலியன உண்டாக்கலாம். கரும்பு வியாபாரம் மிகுந்த இலாபம் தரத்தக்கது.

களிமண்ணைக்கொண்டு விதவிதமான பொம்மைகள் செய்யலாம்; அவற்றுக்கு வேண்டும் வர்ணங்களை அடித்து விற்பனைசெய்யலாம். குயவர் பற்பல விதமான சட்டி பானைகள் செய்து பிழைக்கிறார்கள். சட்டி பானை இல்லாத வீடு உண்டா? ஆகவே, குயவர்கள் தொழில் எவ்வளவு ஊதியம் தரத் தக்கது! மரச்சாமான் இல்லாத வீடு உண்டா? மரப் பெட்டி, பீரோ, கட்டில், நாற்காலி, மேசை, தொட்டில், சாய்வு நாற்காலி, ஊஞ்சல் பலகை, மணை, தட்டு, அரிவாள் மணை முதலிய பலவகைப் பொருள்களைச் செய்யும் தச்சன்

நல்ல ஊதியம் பெறுகின்றவன் அல்லனோ? இங்ஙனமே இரும்புத் தொழிலும் ஆகும். உளி, சுத்தி, அரிவாள், கடப்பாரை, மண்வெட்டி, ஏர் முதலியவற்றில் உள்ள இரும்புப் பொருளைச் செய்பவன் கருமான் அல்லனோ? அவன் தொழிலும் சிறந்ததாகும். மக்கள் விருப்பத்திற்கு ஏற்பப் புதிய வேட்டிகளையும் புடவைகளையும் நெய்து தரும் சேணியன் செய்தொழில் பயனுடையதன்றோ? சுருங்கக் கூறின், ஒவ்வொரு கிராமக் கைத்தொழிலும் பயனுடையதாகும்; கிராம வாசிகள் பிழைப்புக்கு ஏற்றதாகும்.

அவற்றால் வரும் பயன்

3. வயலில் ஆறுமாதம் உழைத்து, மற்ற ஆறுமாதம் வேலை இல்லாமல் உள்ள குடியானவர் பால் பண்ணை, கோழிப் பண்ணை, தேன் சேர்த்தல், நூல் நூற்றல் முதலிய கைத்தொழில்களைச் செய்து பிழைக்கலாம். அவரவர் செய்யும் பொருள்களைக் கொடுத்துத் தேவையான பொருள்களை ஈடாக வாங்கிக்கொள்ளலாம். இந்த முறைக்குப் 'பண்டமாற்று' என்பது பெயர்.

முடிவு

4. சுருங்கக் கூறின், கிராமக் கைத்தொழில்களே நாட்டுப் பொருளாதார நிலையை நன்னிலைக்குக் கொண்டு வருவன. ஆதலால், அரசாங்கத்தாரும் செல்வரும் பிறரும் அவற்றில் ஊக்கம் காட்டிக் கிராமவாசிகட்குப் பொருள் உதவி செய்து, கிராமக் கைத்தொழில்களை விருத்தி செய்யப் பாடுபடல் வேண்டும். எல்லோரும் முயற்சி செய்தால்தான், கிராமக் கைத் தொழில்கள் முன்னேற்றம் அடையும்.

11. நன்றி மறவாமை

குறிப்புகள் :—1. நன்றி மறவாமை-யாது ?
2. உதாரணம்
3. முடிவு

கட்டுரை

நன்றி மறவாமை-யாது ?

1. நன்றி மறவாமை என்பது ஒருவர் செய்த உதவியை மறவாதிருத்தல் எனப் பொருள்படும். அஃதாவது, ஒருவர் செய்த உதவியை மறவாதிருந்து, சமயம் வாய்க்கும் பொழுது அவர்க்குப் பதில் உதவி செய்தல் ஆகும்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு."

என்னும் திருவள்ளுவர் திருவாக்கு நோக்குக. 'வேறு எந்த உதவியை மறப்பினும் மறக்கலாம் (அதுவுந் தவறே); ஆனால், செய்த நன்றியை மறந்த பாபிகட்குப் பிராயச்சித்தமே இல்லை' என்பது இதன் பொருள். இதனால், செய்ந்நன்றியின் அவசியம் வற்புறுத்தப்படுதல் காண்க.

உதாரணம்

2. கன்னன் பாண்டவர்க்கு மூத்தவன். பாண்டவர் தாயான குந்திதேவியே கன்னனைப் பெற்றவள். அவள் மணமாகாததற்கு முன்னர்ச் சூரியனுக்குக் கன்னனைப் பெற்றாள் ; ஆதலால், உலகப் பழிக்கு அஞ்சி, பட்டாடை ஒன்றில் குழந்தையைச் சுற்றிப் பெட்டி ஒன்றில் வைத்து மூடிக் கங்கை ஆற்றில் விட்டுவிட்டாள். அப் பெட்டி மிதந்து கொண்டே அஸ்தினபுரக் கரையை அடைந்தது. அப் பொழுது திருதராஷ்டிரனது தேர்ப்பாகன் அப் பெட்டியைப்

பார்த்தான்; பேரழகோடு விளங்கிய ஆண் குழந்தையைக் கண்டு வியப்புற்றான்; அதனை வீடு கொண்டு சென்று வளர்க்கலானான். கன்னன் அன்று முதல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தான்; பரசுராமனை அடைந்து, வில்வித்தைகளில் வல்லவன் ஆனான். இவனுடைய கட்டழகையும் வில் வீரத்தையும் கண்ட துரியோதனன் இவனுக்கு நண்பனானான். இருவரும் உயிர் நண்பர் ஆயினர். துரியோதனன் அரசகுமாரன்; இளவரசுப் பட்டத்துக்கு உரியவன். கன்னனோ 'தேர்ப்பாகன் பிள்ளை' என்று அனைவராலும் அழைக்கப்பட்டவன். அப்படி இருந்தும் துரியோதனன், கன்னனை இழிவாகக் கருதாமல், தன் உயிர்த் தோழனாகக் கருதினான். இருவரும் ஒன்றாக உண்டு வந்தனர்; கன்னன் எச்சிலைத் துரியோதனன் உண்டான். அதிகம் அறைவதேன்? இருவரும் உயிரும் உடலும் போல உற்ற நண்பர் ஆயினர்.

பாண்டவர்க்கும் துரியோதனாதியர்க்கும் போர் நடக்க இருந்தது. அப் போரில் கன்னனைக் கொல்வதாக அர்ச்சுனன் சபதம் செய்திருந்தான். கன்னன் அர்ச்சுனனைக் கொல்ல அரவம் ஒன்றை வளர்த்துவந்தான். கன்னன் மஹா பலவான் ஆதலால், அவனை நகுல-சஹாதேவரோடு கடுமையாகப் போர்செய்ய விடலாகா தென்று கண்ணன் நினைத்தான். அதனால் அவன் குந்தியம்மையிடம் சென்று, கன்னன் அவள் முதலில் பெற்ற மைந்தன் என்பதைக் கூறி, 'அவனைப் பாண்டவர் பக்கம் சேர்க்க முயல்; தவறினால், அவனிடம் இரண்டு வரங்களைப் பெற்று மீள்க' என்று கூறிக் குந்திதேவியைக் கன்னனிடம் அனுப்பினான்.

குந்தி அம்மையைக் கண்ட கன்னன் மனமகிழ்ந்து இனிய முகத்தோடு வரவேற்று உபசரித்தான். அவ்வம்மை தன் வரலாற்றைக் கூறித், தான் அவன் அன்னை என்

பதை மெய்ப்பித்தாள். மஹா வீரராகிய பாண்டவர்க்குத் தான் தமையன் என்பதை அறிந்த கன்னன், அளவிலா மகிழ்ச்சி அடைந்தான்; தன் தாய் தன்னிடம் வந்த காரணம் யாதென வினவினன். அவள், "மகனே, நீ பாண்டவர் பக்கம் சேர்ந்துகொள். அவர்கள் உனக்கு முடிசூட்டி, உன் ஏவற்படி நடப்பர். இது கூறவே யான் வந்தேன்" என்றாள்.

அது கேட்டுக் கன்னன் நகைத்து, "அம்மா, தாங்கள் என்னைப் பெற்ற அன்றே ஆற்றில் விட்டுவிட்டீர்கள். என்னை அன்று முதல் இன்றளவும் வளர்த்துப் பெருமைப் படுத்தியது துரியோதனன் குடும்பமாகும். அவன் என்னைத் தன் உயிர்த் துணைவனாகக் கருதி உள்ளான்; என்னை அங்க நாட்டுக்கு அரசன் ஆக்கினன்; தன் பெருமை எல்லாம் எனக்கே அளித்தான். நான், ஒருநாள் அந்தப்புரத்தில் பெருந் திருவாளுடன் சொக்கட்டான் ஆடினேன். அப்பொழுது துரியோதனன் என் பின்புறம் வந்தானாதலால் நான் பார்க்க வில்லை. அவன் வருகையைக் கண்ட அரசி எழுந்தாள். அவள் எழுந்த காரணம் உணராத யான், அவளை உட்காரச் செய்ய, அவளது முத்துவடத்தைப் பற்றினேன். அவ்வளவில் அஃது இற்று விழுந்து முத்துகள் சிதறிவிட்டன. அவ்வேளையில் துரியோதனன் என் முன் நின்றான். நான் திடுக்கிட்டேன். என்னை? அவன் இல்லாதபோது அவன் மனைவியுடன் ஆடியது குற்றம்; அவள் வடத்தைப் பிடித்தது மறு குற்றம் ஆதலால் என்க. ஆனால், துரியோதனன் புன்னகை பூத்த முகத்துடன், 'அண்ணா, சிந்திக்கிடக்கும் இம்முத்துகளை எடுக்கவோ? கோக்கவோ?' என்று கேட்டான். இங்ஙனம் என்மீது பெருநம்பிக்கை கொண்ட அப்பேரரசனைப், போர் நடக்கப்போவதை அறிந்தும், நான் கைவிட்டு, இப்பொழுது தான் என் உடன் பிறந்தார் என்று கூறப்படும் பாண்டவரோடு சேர்தல் என்பது பெரும் பாவமாகும்; நான் நன்றி

கொன்ற பாவத்துக்கு ஆளாவேன். நான் ஒருபோதும் அங்ஙனம் செய்யேன். இனி நடக்கப்போகும் போரில் துரியோதனனுக்காகப் போரிட்டு எனது செஞ்சோற்றுக் கடன் கழிப்பேன். அதுவே நன்றி மறவாமை. அதுவே எனக்குப் புகழும் கருமமும் தருமமும் ஆகும். ஆதலால், என்னை அது சம்பந்தமாக மேலும் வற்புறுத்த வேண்டா" என்று உறுதியாகக் கூறினான்.

முடிவில் குந்தி, கண்ணன் கூறிய இரண்டு வரங்களையும் (அர்ச்சுனன்மீது ஒரு முறைக்குமேல் மறுமுறை நாகக் கணையை விடலாகாது; இளையவர்மீது கடுமையாகப் போர் புரியலாகாது என்பவற்றைக்) கேட்டு மீண்டாள். கன்னன் துரியோதனன் பக்கமே போரிட்டு மாண்டான்.

முடிவு

3. இவ் வுதாரணத்தால், நன்றி மறவாமையின் மேன்மையை நன்கறியலாம். நன்றி மறவாமைக்குக் கன்னனே சிறந்த சான்று ஆவன். அவனைப் போல ஒவ்வொருவரும், பிறர் தமக்குச் செய்த உதவியை மறவாது, பதில் உதவி செய்தல் வேண்டும்.

12. மாணவர் தமிழ்க் கழகம்

குறிப்புகள் :—1. மாணவர் தமிழ்க் கழகம்—யாது ?
2, அதன் நடைமுறை
3. அதன் பயன்
4. முடிவு

கட்டுரை

மாணவர் தமிழ்க் கழகம் யாது ?

1. தமிழ் படிக்கும் மாணவர் தங்களுக்குள் ஒரு கழகத்தை அமைத்துக்கொள்வர்; அதன் சார்பில் நடக்கும் கூட்டங்களில் பேசிப் பழகவும், பெரியோர் பலரை வரவழைத்துப் பேசச்செய்து நல்லனவற்றை அறியவும் அதனை உபயோகப்படுத்திக்கொள்வர். இக் கழகம் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் உண்டு. பிள்ளைகளே தங்களுக்குள் ஒரு செயலாளனைத் தேர்ந்தெடுப்பர். அக் காரியதரிசி குறித்த நாட்களில் மாணவர்களைக் கூட்டி, சில மாணவரை ஏதேனும் ஒரு பொருள்பற்றிப் பேசச் செய்வான். ஒரு மாணவன் கூட்டத்திற்குத் தலைமை வகிப்பான். இது 'மாணவர் கூட்டம்' எனப்படும். இக் கழகத்தால் மாணவர் மிகுந்த நன்மை அடைவர்.

அதன் நடை முறை

2. இத்தகைய தமிழ்க் கழகம் எங்கள் பள்ளிக்கூடத்திலும் உண்டு. அதன் ஆரம்ப கூட்டத்தைத் தலைமை ஆசிரியரே நடத்தினர். அவர் 'மாணவர் கடமை' என்னும் பொருள் பற்றிப் பேசினர்; மாணவர் எவ்வெவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்கிப் பேசினர். பின்னர் அடுத்துப் போடப்பட்ட கூட்டங்களுக்கு மற்ற ஆசிரியர்கள்

தலைமை வகித்தார்கள். இரண்டாம் கூட்டத்தில் இரண்டு மாணவர் போட்டிப் பேச்சுப் பேசினர். ஒருவன், 'கிராம வாழ்க்கை நல்லது' என்று பேசினான். மற்றவன், 'நகர வாழ்க்கை நல்லது' என்பதுபற்றிச் சொற்பொழிவு ஆற்றினான். இருவர் பேச்சும் இன்பமாக இருந்தது. அவ்விருவரையும் பின்பற்றி ஆறு மாணவர் பேசினர். ஆசிரியர் முடிவில், மாணவர் கருத்தை அறிய வாக்கெடுத்தார். கிராம வாழ்க்கையை ஆதரித்துப் பெரும்பாலான மாணவர் வாக்களித்தனர். மூன்றாம் கூட்டத்தில் 'மாணவரும் குடும்பமும்' என்பதுபற்றி நான் பேசினேன். என்னைப் பின் பற்றிப் பலர் பேசினர். ஆசிரியர் நான் பேசினதைப் பாராட்டிப் பேசி, என்னைப் போல மற்ற மாணவரும் வந்து அஞ்சாது பேச வேண்டும் என்பதை வற்புறுத்திப் பேசினார்.

நான்காம் கூட்டத்தில், 'மாணவர் செய்யத் தகும் பொதுநலச் சேவை' என்பதைப்பற்றி ஆறும் வகுப்பு மாணவன் கோபாலன் பேசினான். அவனைப் பின் பற்றிப் பலர் பேசினர். அக் கூட்டத்திற்கு நகர சபைத் தலைவர் தலைமை வகித்தார். அவர், பிள்ளைகள் பண்படப் பேசியதைப் பாராட்டிப் பள்ளிக்கூட ஆசிரியர்களையும் பாராட்டிச் சென்றார். ஐந்தாம் கூட்டத்திற்கு நகரசபை டாக்டர் தலைமை வகித்தார். அப்போது ஆறும் வகுப்பு மாணவன் கோவிந்தன் என்பவன் 'மாணவரும் சுகாதாரமும்' என்பதுபற்றிப் பேசினன். டாக்டர் அவனை வியந்து பாராட்டினர். அவனைப் பின்பற்றிய பல மாணவர், 'டாக்டர் நமது நகர சுகாதாரத்தைச் செவ்வைப்படுத்த முயற்சி செய்துவருவதை இம் மாணவர் கழகம் பாராட்டுகிறது' என்று பேசி முடித்தனர். டாக்டர் தமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு கூட்டத்தை முடித்தார்.

இங்ஙனம் நாங்கள் நகரில் உள்ள பல துறை அறிஞரை வரவழைத்துப் பல விஷயங்களைப் பற்றிப் பேசிப் பழகுகிறோம்.

அதன் பயன்

3. இக்கூட்டங்களால் நாங்கள் பெறும் பயன் என்ன? ஒரே விஷயம் பற்றிப் பலர் பேச நேருவதால், அப் பலரும் அந்த ஒரு விஷயம் பற்றிப் பல நூல்களைப் படித்தும் நினைத்தும் குறிப்புகளைத் தயாரித்துக்கொண்டு வந்து பேசுகின்றனர். அப் பேச்சுகளில் காணப்படும் புதிய விஷயங்களை மற்றப் பிள்ளைகள் தத்தம் குறிப்புப் புத்தகத்தில் குறித்துக்கொள்கின்றனர்; வெளியாரும் ஆசிரியரும் பேசுகையில் கூறும் பல புதிய விஷயங்களைக் குறித்துக் கொள்கின்றனர். போட்டிப் பேச்சுகளிலும் பல புதிய விஷயங்கள் கிடைக்கின்றன. பல பொருள்பற்றிய விஷயங்களைப் பேசுங்கால், மாணவர் பல திறப்பட்ட செய்திகளைப் புதிது புதிதாக அறிந்துகொள்ள வசதி ஏற்படுகிறது. பலருக்கு முன் நின்று பேசிப் பழகுவதால் மாணவர் நல்ல பேச்சாளர் ஆகின்றனர்; மாணவரே எதிர்கால உலகில் பொதுநலச் சேவை செய்யும் நாட்டு மக்களாக இருத்தலால், அவர்கள் இளமையில் இத்தகைய பயிற்சி பெறுதல் மிக்க அவசியமாகும். இக் கழகக் கூட்டங்கள் அதிகப்பட அதிகப்பட, மாணவர் தம் பொது அறிவும் பேசும் ஆற்றலும் அதிகப்படுகின்றன. பேச்சு இலக்கண வரம்பு உடையதாக அமைகிறது. இக் கூட்டங்களில் பேசப்படும் விஷயங்கள் கட்டுரை எழுதப் பேருதவி புரிகின்றன.

முடிவு

4. சுருங்கக் கூறின், மாணவர் தமிழ்க் கழகம்—மாணவர்க்குப் பெரு நன்மை செய்யும் சங்கம் ஆகும்.

13. எங்கள் தமிழ்க் கழக ஆண்டு விழா

குறிப்புகள் :—1. ஆண்டு விழா அழைப்பிதழ்
2. எங்கள் அறிக்கை
3. ஆண்டு விழாச் சொற்பொழிவுகள்
4. பரிசு வழங்கல்
5. முடிவு

கட்டுரை

ஆண்டு விழா அழைப்பிதழ்

1. எங்கள் பள்ளிக்கூடத் தமிழ்க் கழக ஆண்டுவிழா எப்ரல் மாதம் 20-ஆந் தேதி நடைபெற்றது. அப்போது நாங்கள் வெளியிட்ட அழைப்பு இதழ் பின்வருமாறு :—

சென்னை, வண்ணாரப்பேட்டை
ஸர். தியாகராய செட்டியார் நடுத்தரக் கலாசாலை

மாணவர் தமிழ்க் கழக ஆண்டுவிழா

அன்புடையீர்,

நிகழும் 1940-ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 20-ஆந் தேதி மாலை 4 மணிக்கு மேற்படி பள்ளிக்கூட மண்டபத்தில் ஆண்டுவிழாக் கூட்டம் நடைபெறும். அப்போது,

திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள்
தலைமை வகிப்பார்.

வித்வான் E. K. நடேச சர்மா அவர்கள் 'மாணவர் தமிழ்க் கழகம்' என்பது பற்றிப் பேசுவார். தமிழ் அறிஞர் அனைவரும் வருக!

இங்ஙனம் :

பு. சாமிநாத ஐயர்,
(தலைமை ஆசிரியர்)
தலைவர்.

மா. இளங்கோ,
(எட்டாம் வகுப்பு மாணவன்)
செயலாளன்.

எங்கள் அறிக்கை

2. குறித்த நாளில் கூட்டம் அதிகமாக இருந்தது. நகரப் பெரியார் பலரும் பிற பள்ளிக்கூடத் தமிழ் மாணவர் பலரும் வந்திருந்தனர். எங்கள் பள்ளிக்கூட மாணவர்களின் பெற்றோர் பலரும் வந்தனர். குறித்த நேரத்தில் கடவுள் வாழ்த்துப் பாடப்பட்டது. செயலாளன் கழக அறிக்கையை வாசித்தான். ஓர் ஆண்டு முழுவதும் பன்னிரண்டு பொதுக் கூட்டங்களும், மாணவர் கூட்டங்கள் பன்னிரண்டும் நடந்தன என்பதும்; மதம், கல்வி, ஆராய்ச்சி, அநுபவம் முதலியவை சம்பந்தமாக மாணவர் பலர் பேசினர் என்பதும்; இப் பிரசங்கங்கள் மாணவர் பொது அறிவையும் கட்டுரை எழுதும் வன்மையையும் அதிகப்படுத்தின என்பதும் அவ் வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தன. இறுதியில், 'எங்கள் கூட்டங்கட்கு வந்து சிறந்த பொருள்களைப் பற்றிப் பேசி எங்கள் அறிவைப் பெருக்கிய அறிஞர் பலர்க்கும் மாணவரது நன்றியறிதல் உரியதாகும்' என்பதும் குறிக்கப்பட்டிருந்தது. தலைவர் எங்கள் அறிக்கையைப் பற்றிப் பெருமையாகப் பேசி, மாணவர் அறிக்கை தயாரித்திருத்தலைப் பாராட்டிப் பேசினார்.

ஆண்டு விழாச் சொற்பொழிவுகள்

3. பின்னர்ச் சொற்பொழிவாளர் எழுந்து, தாம் எடுத்துக்கொண்ட பொருள்பற்றி அழகாகவும் தெளிவாகவும் சுருக்கமாகவும் அரைமணிநேரம் பேசி முடித்தார்; 'இப் பள்ளிக்கூட மாணவரின் தமிழ்க் கழக வேலை வியந்து பாராட்டத்தக்கது; இம் மாணவர்கள் கழகத்தின் அவசியத்தை உணர்ந்து பயன்படுத்தலைக் காண நான் மகிழ்ச்சி அடைந்தேன். இவர்கள் இம் முறையைப் பின்பற்றி மேலும்

நன்னிலையை அடைய அருள்புரியுமாறு இறைவனை வேண்டு கிறேன்' என்று முடிவாகப் பேசி அமர்ந்தார்.

பரிசு வழங்கல்

4. பிறகு தலைவர் நிகழ்ச்சிக் குறிப்பிற் கண்டிருந்த படி, 'பரிசு வழங்கலை' மேற்கொண்டார்: 'தமிழ் வளர்ச் சிக்கு மாணவர் யாது செய்தல் வேண்டும்?' என்பது பற்றி நடந்த கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற மாணவன் கழ கச் செயலாளன். அவன் திருக்குறள் என்னும் தமிழ்ப் பெருநூல் பரிசாகத் தரப்பெற்றான். தமிழ்ச் செய்யுட்களை நடிப்புடன் திறம்பட ஒப்புவித்த ஏழாம் வகுப்பு மாணவன் விஜயராகவன் நாலடியார் என்னும் தமிழ் நீதி நூலைப் பரிசாகப் பெற்றான். பேச்சுப் போட்டியில் 'மாணவர் கடமை' என்பதுபற்றிப் பேசி, முதற்பரிசு பெற்றவன் ஆறாம் வகுப்பு மாணவன் வரதராஜன். அவன் திருவாசகம் என்னும் தீந்தமிழ் நூலைப் பரிசாகப் பெற்றான்.

முடிவு

5. இறுதியாகத் தலைவர் எழுந்து முடிவுரை நிகழ்த்தி னார்; 'இக் கலாசாலை மாணவர் இளைஞராக இருந்தும், தம் தாய்மொழியில் மிக்க ஆர்வம் கொண்டு, கூட்டங்களைக் கூட் டித் தங்கள் முன்னேற்றத்துக்குத் தாமே முயற்சி எடுத்துக் கொண்டு வருதல் பாராட்டத் தக்கது. இத்தகைய தமிழ் மாணவர் கழகத்தை யான் யாண்டும் கண்டதே இல்லை' என்று பலத்த கரகோஷத்துக்கு இடையே பேசி முடித் தார். செயலாளன் எழுந்து, வந்திருந்து மாணவரைப் பெருமைப்படுத்தி நல்வழிப்படுத்திய அறிஞர் அனைவர்க் கும் மாணவர் சார்பாக நன்றி யறிதலைத் தெரிவித்தான். இறுதியில் மங்கலப் பாடலுடன் ஆண்டுவிழாக் கூட்டம் இனிது முடிந்தது.

14. உண்மை உடைமை

குறிப்புகள் :—1. 'உண்மை உடைமை'—யாது ?
2. அதன் அவசியம்
3. உதாரணம்
4. முடிவு

கட்டுரை

உண்மை உடைமை—யாது ?

1. 'உண்மையை உடையராதல்' என்பதே 'உண்மை உடைமை' என்பதன் பொருள். 'உண்மையே மதம்; உண்மையே ஒழுக்கம்; உண்மையே கடவுள்' என்று மஹான்கள் கூறியுள்ளனர். உலகில் உள்ள எல்லா மதங்களும் 'உண்மையே உயிர் நாடி' என்று உரைத்துள்ளன. எனவே, உண்மை உடைமை என்பது ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத சிறந்த அணி என்பது தெளிவாம்.

அதன் அவசியம்

2. உண்மை உடைமை இராவிடில் உலகில் எக் காரியமும் நடைபெறாது; குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகாது; ஒருவரை ஒருவர் நம்பார்; உயர்ந்த நோக்கங்கள், எண்ணங்கள், ஒழுக்கம் இவை இறந்துபடும்; முதலாளி தொழிலாளியை நம்பமுடியாது; கணவன் மனைவியை நம்ப முடியாது; தந்தை தனயனை நம்ப இயலாது; அரசன் அமைச்சனை நம்புதல் இயலாது. குடிகளும் வேந்தனை நம்ப முடியாது. ஆதலால், உலகம் ஒழுங்காக நடைபெற உண்மை உடைமை அவசியம் ஆகின்றது.

உதாரணம்

3. ஒருநாள் இடைச் சிறுவன் ஒருவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு இருந்தான். அப்போது அந் நாட்டு அரசன் குதிரைமீது சவாரி செய்துகொண்டு அங்கு வந்தான். அவன் தாகத்தால் தவித்தான்; சிறுவனைப் பார்த்து, "தம்பீ, தண்ணீர் இங்குக் கிடைக்குமா?" என்றான். சிறுவன், "ஐயா, நீர் சிறிது தூரம் கிழக்கே சென்றால் ஒரு குளம் இருக்கக் காண்பீர். அங்கு உமது நீர் வேட்கையைத் தணித்துக்கொள்ளலாம்" என்றான். அரசன், "தம்பீ, நான் இவ்விடத்துக்குப் புதியவன். நான் உன் ஆடுகளைப் பார்த்துக்கொள்கிறேன். நீ சென்று தண்ணீர் கொண்டு வந்து உதவு" என்றான். சிறுவன் நகைத்து, "ஐயா, நல்ல வார்த்தை சொன்னீர்! நீரோ புதிய மனிதர். நான் உம்மை நம்பி ஆடுகளை விட்டுப் போகலாமா? ஓநாய் வந்து ஆட்டை அடித்துக்கொண்டு போகுமே! நான் போகக் கூடாது" என்றான். அரசன், "அப்பனே, நீ கவலைப்பட வேண்டா. நான் மிக்க கவலையோடு உன் ஆடுகளைப் பார்த்துக்கொள்கிறேன். நீ எனக்கு உதவி செய்" என்றான். சிறுவன், "ஐயா, நான் புதிய மனிதராகிய உம்மை எப்படி நம்ப முடியும்? என் எசமானர் என்னை நம்பி ஆடுகளை ஒப்புவித்துள்ளார். அவருக்கு நான் உண்மை உள்ளவனாக இருக்க வேண்டும் அல்லவா? நான் உம்மை நம்பி விட்டுச் செல்ல, நீர் இன்னொருவனை நம்பி விட்டுச் செல்வீர் அல்லவா? அப்பொழுது இவ்வாடுகளின் கதி யாதாகும்? அவற்றிற்கு ஆபத்துநேரின், அதனால் உண்டாகும் கஷ்ட-நஷ்டங்களை ஏற்பவர் யாவர்? உமக்கு நான் மெய்யாகவே உதவி புரிய விரும்புகிறேன். எனினும், இப்போது முடியாது", என்று உறுதியாக உரைத்தான்.

அரசன் சிறுவனது அருங்குணத்துக்கு உள்ளே வியந்தான். ஆயினும், அவனை மேலும் சோதிக்க விரும்பிக் கோபங் கொண்டவனைப் போல நடித்து, "அடா, பையா, நான் யாரென்று நினைத்தனை? நான் இந்த நாட்டு அரசன். நீ என் பேச்சைக் கேட்கமாட்டாய் போலும்!" என்று அதட்டிப் பேசினான். சிறுவன் நகைத்து, "அரசே, நான் உங்களுக்கு உரிய மரியாதையைச் செலுத்துகிறேன். ஆயினும், என் கடமையிலிருந்து தவறேன்; உண்மை தவறி ஒருபோதும் நடவேன்" என்று அழுத்தமாக அறைந்தான். அரசன் உடனே கீழிறங்கிச் சென்று, சிறுவனைத் தழுவிக் கொண்டான்; மறுநாள் முதல் அச் சிறுவன் அரண்மனையில் அரசனது உண்மையுள்ள சேவகனாக அமர்த்தப்பட்டான்.

முடிவு

4. இவ் வுதாரணக் கதையால், உண்மை உடைமை எவ்வளவு சிறந்தது என்பது நன்கு விளங்குகிறதன்றோ?

---

15. பள்ளிக்கூட நாடகம்

குறிப்புகள் :—1. எங்கள் பள்ளிக்கூட நாடகம் (கதை)
2. மாணவர் நடிப்பு
3. முடிவு

கட்டுரை

எங்கள் பள்ளிக்கூட நாடகம் (கதை)

1. எங்கள் பள்ளிக்கூட நாடகம் சென்ற ஆண்டு முடிவில் ஏப்ரல் மாதம் 23-ஆம் தேதி நடைபெற்றது. எங்கள் பள்ளிக்கூடம் எட்டாம் வகுப்பு வரை உள்ளது. நாடகத்தில் ஆறு - ஏழு - எட்டு வகுப்பு மாணவரே கலந்துகொண்டனர். நாடகம் மிகவும் சுவையுடையது. அதன் பெயர் 'கோமுட்டி சாக்ஷி' என்பது.

அதன் கதைச் சுருக்கமாவது :—கோமுட்டியின் வீட்டு எதிரில் அடுத்தடுத்துக் குடியானவன் ஒருவனும் முஸ்லிம் ஒருவனும் வாழ்ந்திருந்தனர். குடியானவன் ஒரு குதிரையை வளர்த்து வந்தான். அக் 'குதிரை பார்க்க அழகானது. அதனை எங்ஙனமேனும் தனதாக்கிக்கொள்ள முஸ்லிம் விரும்பினான். சமயம் வாய்க்கவில்லை. ஒருமுறை அவன் மகனுக்குத் திருமணம் வந்தது. திருமணம் அயலூரில் நடந்தது. அவன் குதிரையை மூன்று நாளைக்கு இரவல் கேட்டான். குடியானவன் சம்மதித்துக்கொடுத்தான். மூன்று நாட்கள் ஆயின. திருமணம் சிறப்பாக நடந்தேறியது. முஸ்லிமின் குடும்பத்தார் வீடு திரும்பினர். ஆனால் குதிரை திரும்பவில்லை. குடியானவன் முஸ்லிமை விசாரித்தான். முஸ்லிம், "என்ன விளையாடுகிறாய்? நான் உன் குதிரையை முன்பே உன்னிடம் ஒப்படைத்துவிட்டேனே!" என்றான். பாவம்! குடியானவன் என்ன செய்வான்! முஸ்லிமைக் கெஞ்சினான்; மன்றாடினான். சாஹிப், "நான் உன்னி

டம் குதிரையை ஒப்புவித்த பிறகு புதிதாக ஒன்றை வாங்கினேன். அஃது என்னுடையது" என்று சாதித்துவிட்டான். குடியானவன் வேறு வழியின்றி நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தான். வழக்கு நீதிபதி முன் விசாரணைக்கு வந்தது. வாதியாகிய குடியானவனும் பிரதிவாதியாகிய சாஹிபும் எதிர் வீட்டுக் கோமுட்டியையே சாக்ஷியாகப் போட்டனர்.

பாவம்! கோமுட்டி மிகவும் சாதுவானவன். அவன் எந்த விஷயத்திலும் தலையிடாதவன். அவன் இப்பொழுது தரும சங்கடத்தில் அகப்பட்டுக்கொண்டான். அவனுக்கு நடந்த தெல்லாம் தெரியும். உண்மையை உரைத்தால் சாஹிபுக்குக் கோபம் வரும்; பொய் சொன்னால் குடியானவனுக்குக் கோபம் வரும். இருவரும் தன் எதிர் வீட்டுக்காரர்கள். 'இருவர் மனமும் நோகாமல் இருக்க வழி என்ன?' என்பதைப்பற்றிக் கோமுட்டி யோசித்து ஒரு முடிவுக்கு வந்தான்; நீதிபதி முன் தோன்றினன். நீதிபதி உண்மையை உரைக்கச் சொன்னார். கோமுட்டி, "ஐயா, குதிரை இங்கு இருப்பின், அதைப் பார்த்துத்தான் சொல்லக் கூடும்" என்றான். குதிரை கொண்டுவரப்பட்டது. கோமுட்டி குதிரையை நெருங்கினன்; அதன் முகத்தை உற்றுப் பார்த்தான்; பின்னர் அதன் பின்புறம் சென்று கூர்ந்து கவனித்தான். நீதிபதிக்குச் சிரிப்பு அதிகம் தோன்றியது. அப்பொழுது கோமுட்டி, "துரையவர்களே, உண்மையைச் சொல்லுகிறேன். என்னை அதிகமாகத் துன்பப்படுத்த வேண்டா. இக் குதிரை—முன்புறத்தைக் கவனிக்கும்போது குடியானவருடையதாகத் தெரிகிறது; ஆனல் பின்புறத்தைக் கவனிக்கும்போது சாஹிப் குதிரையாகத் தெரிகிறது" என்று கூறி முடித்தான்.

நீதிபதி சிறந்த அறிஞர். அவர் உடனே, "விஷயம் விளங்கி விட்டது. என் சாண் உடம்பிற்குத் தலை சிறந்தது. தலையிற் சிறந்தது முகம். அது குடியானவனுடையது எனக் கோமுட்டி உரைத்ததால், குதிரை குடியானவனுடையதே ஆகும். மேலும், கோமுட்டியின் கூற்றால், குதிரை முதலில் குடியானவற்கு உரியதாக இருந்து பிறகு சாஹிபுக்கு உரிமையானது என்பதும் விளங்குகிறது," எனத் தீர்ப்புக் கூறினார். சாஹிபுக்கு நீதிபதிமீது கோபம்வந்ததே தவிரக் கோமுட்டிமீது வரவில்லை. எனவே, கோமுட்டி மிக்க மகிழ்ச்சி அடைந்தான்.

மாணவர் நடிப்பு

2. இந்த விநோத நாடகத்தில் கோமுட்டியாக நடித்த மாணவன் 'அசல் கோமுட்டி' யாகவே காணப்பட்டான்; தெலுங்கிலும் தமிழிலும் கலந்து, பார்ப்பவர் மனம் மகிழப் பேசிச் சாமார்த்தியமாக நடித்தான். குடியானவனது நடிப்பும் பொருத்தமாகவே இருந்தது. சாஹிப் வேடம் பூண்ட மாணவன் 'அசல் முஸ்லிம்' போலவே நடித்தான். பலர் 'இவன் முஸ்லிம் சிறுவனோ?' என்று கேட்டு ஐயந் தெளிந்தனர். அவனது பேச்சு, நடை, உடை அனைத்தும் மிக்க பொருத்தமாகவே இருந்தன. இந் நாடகத்தைக் காணவந்த முஸ்லிம் கனவான் ஒருவர், அந்தப் பையனுக்குப் பத்து ரூபாய் பரிசாகக் கொடுத்தார். வேறு பலர் அவனது நடிப்புத் திறமையைப் பாராட்டிப் பேசினர்.

முடிவு

3. பொதுவாக எங்கள் பள்ளிக்கூட மாணவர் நாடகம் மிகவும் சிறப்பாக இருந்தது. நாங்கள் இந்த நாடகத்தை எங்கள் ஆயுள் உள்ளவரை மறவோம்.

16. பந்தய விளையாட்டுகள்

குறிப்புகள் :—1. 'பந்தய விளையாட்டு' — யாது ?
2. விளையாட்டு மைதானம்
3. பள்ளியில் நடந்த விளையாட்டுகள்
4. முடிவு

கட்டுரை

'பந்தய விளையாட்டு'—யாது ?

1. பந்தய விளையாட்டு ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் ஆண்டு முடிவில் நடைபெறும். பள்ளிக்கூட மாணவருள் விளையாட்டுகளில் பண்பட்டவரே அதனிற் சேர்வர். நீளத்தில் தாண்டுதல், உயரத்தில் தாண்டுதல், கயிற்றை இழுத்தல், மைதானத்தைச் சுற்றி ஒரு மைல் தூர அளவு - அரை மைல் தூர அளவு-கால் மைல் தூர அளவு ஓடி வருதல், கோணிப்பைகளில் கால்களை விட்டுக்கொண்டு ஓடுதல், எலுமிச்சம்பழத்தைக் கரண்டியில் ஏந்திப் பிடித்துக்கொண்டு அது கீழே விழாதபடி ஓடுதல், கணக்கைப் பலகையில் போட்டு முடித்து, ஓரிடத்திலிருந்து மற்ருேர் இடத்திற்கு ஓடுதல் முதலியன பந்தய விளையாட்டுகளாம்.

விளையாட்டு மைதானம்

2. எங்கள் பள்ளிக்கூட மைதானம் பந்தய விளையாட்டு அன்று சுத்தமாக்கப்பட்டது; எங்கள் மைதானம் ஒரு 'பர்லாங்' சதுரமானது. அந்த அளவைச் சுற்றிச் சுண்ணும்புத் தூள் அடையாளமாகத் தூவப்பட்டது. சுற்றிலும் மூங்கில்கள் நடப்பட்டன; வேலி போலக் கயிறுகள் கட்டப்பட்டன. நாற்புறங்களிலும் அமைத்த வேலிக்கு அப்புறம், 'முதல் வகுப்புப் பிள்ளைகள் உட்காரும் இடம்'... என்று ஒவ்வொரு வகுப்பையும் குறித்து எழுதப்பட்ட

எட்டு அட்டைகள் தொங்க விடப்பட்டன. மாலை மூன்று மணி இருக்கும். அந்தந்த அட்டைகள் இருந்த இடங்களில் அந்தந்த வகுப்புப் பிள்ளைகள் வரிசை வரிசையாக அமர்ந் திருந்தனர். அவர்களைச் சாரணச் சிறுவர் கவனித்து வந் தனர். வேறு பல சாரணச் சிறுவர் கயிற்று வேலியைச் சுற்றியும் 25 கெஜத்துக்கு ஒருவராக நின்றுகொண்டிருந் தனர். அவர்கள், மற்றப் பிள்ளைகள் கயிற்றைத் தாண்டிக் கொண்டு மைதானத்திற்குள் வராதபடி பார்த்துக்கொண் டிருந்தனர். ஒவ்வொரு பக்கத்தில் உள்ள பிள்ளைகளையும் சாரணச் சிறுவரையும் மேற்பார்க்க ஆசிரியர் ஒருவர் இருந் தனர். தலைமை ஆசிரியர் உட்பட ஏனைய நான்கு ஆசிரியரும் மைதானத்திற்குள் பந்தய விளையாட்டுகளை நடத்தலாயினர்.

பள்ளியில் நடந்த விளையாட்டுகள்

3. மணி நான்கு அடித்தது. பெரிய பிள்ளைகள் எண்மர் உயரத்தில் தாண்டும் விளையாட்டை நடத்தினர். அதில் இரண்டு பேர் வெற்றி பெற்றனர். அடுத்தபடி நீளத் தில் தாண்டுதலை எண்மர் நடத்தினர். அதனில் இருவர் வெற்றி பெற்றனர். பிறகு பன்னிரண்டு பேர் கால் மைல் ஓட்டம் ஓடினர். முதலிற் சென்ற இருவர் பரிசுக்கு உரியவர் ஆயினர். ஆறுபேர் ஒருபக்கம் வீதம் இரண்டு கட்சியார் கயிறு இழுக்கும் வேலையில் ஈடுபட்டனர். இரண்டு முறை சோதனை நடத்தப்பட்டது. இரண்டு முறையும் நான் சேர்ந்த கட்சியே வெற்றி பெற்றது. கோணிப்பை விளையாட்டு ஆரம்பமானது. இருபது மாணவர் அதிற் கலந்துகொண் டனர். அவர்கள் கோணிப்பைகளில் கால்களை விட்டுக் கொண்டு ஓடினர். பாவம்! பலர் நடக்க முடியாமல் விழுந் தனர். அவ்விளையாட்டில் இருவரே குறித்த இடத்தைப் போய்ச் சேர்ந்தனர்.

முதல் மூன்று வகுப்புப் பிள்ளைகட்கு எலுமிச்சம் பழ விளையாட்டு நடந்தது. அதனில் என் தம்பியே முதலில் ஓடினன். அவனுக்குப்பின் இரண்டாவதாக வேறொரு இரண்டாம் வகுப்பு மாணவன் குறித்த இடத்தை அடைந்தான். கணக்குகள் போட்டு முடித்து ஓடும் விளையாட்டும் அந்த மூன்று வகுப்புப் பிள்ளைகட்கே நடந்தது. அதனில் இரண்டு மாணவர் வெற்றி பெற்றனர். 'பக்கோடா ஓட்டம்' என்பது ஒன்று. புறப்படும் இடத்தில் தரப்படும் பக்கோடாப் பொட்லத்தை அவிழ்த்துப் பக்கோடாவைத் தின்றுவிட்டு ஓடிக் குறித்த இடத்தை அடைய வேண்டும். அவ்விளையாட்டில் என் தம்பி முன் வந்தான். அவன் பக்கோடா சாப்பிடுவதில் தீரன்; வெகு விரைவில் பொட்டலத்தைக் காலி செய்துவிட்டு ஓடிவிட்டான். எல்லோரும் அவனைத் தட்டிக்கொடுத்தனர். இறுதியாக எட்டு உபாத்தியாயர்களும் பக்கத்துக்கு நால்வராகக் கயிற்றை இழுக்கும் வேலையில் ஈடுபட்டனர். தலைமை ஆசிரியர் இருந்த பக்கம் வெற்றி பெற்றது. ஆசிரியர் விளையாட்டே எங்கட்கு இன்பத்தைக் கொடுத்தது.

முடிவு

4. விளையாட்டுகள் மாலை ஆறு மணிக்கு முடிவடைந்தன. நகரசபைத் தலைவர் வந்து, வெற்றி பெற்ற மாணவர்க்குப் பரிசுகள் வழங்கினர். அவர் தமது பிரசங்கத்தில், உடற்பயிற்சியின் அவசியத்தையும் இத்தகைய விளையாட்டுகளின் அவசியத்தையும் நன்றாய் வற்புறுத்திப் பேசினர். பின்னர், தலைமையாசிரியர் பரிசு பெற்ற மாணவர்க்கு வாழ்த்துக் கூறித் தோற்ற மாணவர்க்கு ஊக்கத்தை உண்டாக்கி, நகரசபைத் தலைவர்க்கு நன்றியைத் தெரிவித்தார். கூட்டம் மிக்க ஆரவாரத்துக்கு இடையே கலைந்தது.

17. சாரணர் இயக்கம்

குறிப்புகள் :—1. 'சாரணர் இயக்கம்'—யாது ?
2. அதன் விதிகள் யாவை ?
3. சாரண உத்தியோகஸ்தர்கள்
4. சாரணர்க்கு உரிய வேலைகள்
5. இயக்கத்தால் உண்டாகும் நன்மை
6. முடிவு

கட்டுரை

'சாரணர் இயக்கம்'—யாது ?

1. சாரணர் இயக்கம் என்பது பொதுஜன நன்மைக்காக—பொது மக்கட்கு உதவி செய்வதற்காக ஏற்பட்ட இளைஞர் இயக்கமாகும். இது பெரும்பாலும் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இருந்து வருகிறது. இன்று இந்த இயக்கம் உலகமெல்லாம் பரவி இருக்கின்றது. இதனை லார்டு ராபர்ட் பேடன் பவல் என்பவர் 1918-ல் ஏற்படுத்தினார்.

அதன் விதிகள் யாவை ?

2. ஒவ்வொரு சாரணச் சிறுவனும் இவ்வியக்கத்தில் சேரும் பொழுது, '(1) கடவுளுக்கும் அரசனுக்கும் நாட்டுக்கும் என்னால் இயலும் கடமைகளைச் செய்வேன் ; (2) எப்பொழுதும் பிறர்க்கு உதவி செய்வேன் ; (3) சாரணர் சட்டங்கட்குக் கீழ்ப்படிந்து நடப்பேன்' என்று உறுதி கூறுதல் வேண்டும். அவன் சத்தியம் செய்யும் பொழுது 'என் கௌரவமே சாக்ஷியாகச் சத்தியம் செய்கின்றேன்' என்று சொல்ல வேண்டும். மேற் கூறப்பட்ட உறுதிமொழிகள் மூன்று பிரிவுகளாக இருப்பதற்கு அடையாளமாக, வலக் கரத்தின் நடுவில் உள்ள மூன்று விரல்களை நீட்டிச் சுண்டு

விரலை மடித்து, அதன் நகத்தின்மேல் பெருவிரலை வைத்துக் கொண்டு, நெற்றி அருகிற் சேர்த்துச் சலாம் செய்ய வேண்டும். பன்னிரண்டு வயது முதல் பதினெட்டு வயது வரையுள்ள இளைஞரே சாரணர் இயக்கத்தில் சேரத்தக்கவர். அவர்கள் காக்கி உடை உடுத்தல் வேண்டும்; எல்லோரும் ஒரேவித முறைப்படி உடை உடுத்துதல் வேண்டும்.

சாரண உத்தியோகஸ்தர்கள்

3. சாரணச் சிறுவர் பலர் கொண்டது 'படை' எனப் படும். ஒவ்வொரு படைக்கும் சாரண ஆசிரியர் ஒருவரும் உதவிச் சாரண ஆசிரியர் ஒருவரும் இருப்பர். ஒரு ஜில்லா வில் உள்ள பல படைகட்கு அதிகாரியாக 'ஜில்லா—சாரணக் கமிஷனர்' ஒருவர் இருக்கிறார். அவருக்கு உதவியாக ஒரு சபையும் உண்டு. அவருக்கு மேல் 'மாகாணக் கமிஷனர்' ஒருவர் உண்டு. அவருக்கும் மேற்பட்டவராகத் 'தேசக் கமிஷனர்' ஒருவர் இருக்கிறார். இவர்கள் எல்லோருக்கும் மேலாக இருப்பவரே இவ்வியக்கத்தை ஏற்படுத்திய பேடன் பவல் துரை ஆவர்.

சாரணர்க்கு உரிய வேலைகள்

4. அவர்கள், எல்லோரிடமும் அன்பாகவும் மரியாதை யாகவும் நடந்துகொள்ள வேண்டும்; சாதி வேறுபாடுகளைக் கவனித்தல் கூடாது; ஏழை—பணக்காரன் என்னும் வேறு பாட்டையும் கவனிக்கக் கூடாது; பிறர்க்கு உதவி செய்பவ ராக இருத்தல் வேண்டும்; எல்லா உயிர்களிடத்தும் அன் புடன் நடந்துகொள்ளல் வேண்டும்; பெற்றோர், பெரியோர், ஆசிரியர் முதலியோரிடம் அடக்கமும் அன்பும் கொண்டிருத் தல் வேண்டும். துன்பம் வந்தபோதும் மனத்தளர்ச்சி இன்றிப் புன்முறுவலோடு இருத்தல் வேண்டும்; எண்ணத்

திலும் செயலிலும் பேச்சிலும் சுத்தமாக இருத்தல் வேண்டும்.

இயக்கத்தால் உண்டாகும் நன்மை

5. இந்தச் சாரணர் இயக்கத்தால் பல நன்மைகள் உண்டு: இளைஞர்க்குப் பரோபகார சிந்தனை உண்டாகும்; கல்வியில் ஆர்வம் உண்டாகும்; சுறுசுறுப்பு உண்டாகும்; குற்றமற்ற—கள்ளங்கபடற்ற பல சாதி மாணவர் ஒன்றாகப் பழகுதல்—பேசுதல்—உண்ணுதல்—உறங்குதல் முதலிய பழக்கங்களால் நாளடைவில் நம்மை வேறுபடுத்தி நிற்கும் பாழான சாதிகள் ஒழியும்; நாட்டுப்பற்றும் இராஜ பக்தியும் வளரும்; எல்லா மனிதரையும் 'ஒரு தந்தையின் பிள்ளைகள்' என்று கருதும் விரிந்த மனப்பான்மை வேரூன்றும்; சாதிச் சண்டைகள் மதச் சண்டைகள் ஒழியும். பொறுமைக் குணமும் ஜீவகாருண்யமும் ஓங்கும். உழைப்பு, ஊக்கம் முதலிய உயர்குணங்கள் உரம் பெறும். சாரணச் சிறுவரால் பொது மக்கட்கு மிக்க நன்மை உண்டாகும். திருவிழாக் காலங்களில் திருட்டு முதலியன நடவாமலும் கூட்டத்தில் நெருக்கடி ஏற்படாமலும் வேறு பல தீங்குகள் நிகழாமலும் இச் சிறுவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

முடிவு

6. சுருங்கக் கூறின், சாரணச் சிறுவர் இயக்கம் மனித சமூகத்திற்கு உயிர்நாடி போன்றதாகும். ஆதலால், கல்வி கற்போர் அனைவரும் இவ்வியக்கத்தில் சேர்ந்து, பொது நலப் பணிபுரிதல் சிறந்ததாகும்.

18. நவராத்திரி விழா

குறிப்புகள் :—1. நாம் கொண்டாடும் விழாக்கள்
2. நவராத்திரி விழா - யாது ?
3. அதைப் பற்றிய கதை
4. அதனைக் கொண்டாடும் முறை
5. முடிவு

கட்டுரை

நாம் கொண்டாடும் விழாக்கள்

1. இந்துக்கள் ஆண்டுதோறும் கொண்டாடும் விழாக்கள் பல உண்டு. அவற்றுள் நவராத்திரி விழா, தீபாவளிப் பண்டிகை, கார்த்திகை விழா, பொங்கல் விழா என்பன சிறப்புடையன. புரட்டாசி மாதத்தில் நவராத்திரி விழா வரும்; ஐப்பசித் திங்களில் தீபாவளி வரும்; கார்த்திகை மாதத்தில் கார்த்திகை விழா நடைபெறும்; தைமாதத்தில் பொங்கல் பெருவிழாக் கொண்டாடப்படும்.

நவராத்திரி விழா—யாது ?

2. நவராத்திரி விழா ஒன்பது (நவம் - ஒன்பது) இரவுகளில் கொண்டாடப்படுவது. வட நாட்டார் இதனைப் பத்து நாட்கள் கொண்டாடுகின்றனர். அதனால் இது 'தசராத்திரி' (பத்து) எனவும் 'தசரா' எனவும் கூறப்படும். இது புரட்டாசி மாதம் அமாவாசைக்கு அடுத்த நாள் முதல் ஒன்பது நாட்கள் தொடர்ந்து நடைபெறும். முதல் மூன்று நாள் இலக்குமி பூசையும், அடுத்த மூன்றுநாள் கலைமகள் பூசையும், கடைசி மூன்றுநாள் காளி பூசையும் நடைபெறும். இவற்றுள் முதல் இரண்டு பூசைகள் வீட்டில் செய்யப்படுவன. கடைசிப் பூசை காளி கோவிலில் செய்யப்படுவது.

அதைப்பற்றிய கதை

3. இந்தத் திருவிழாவுக்கு ஒரு கதை உண்டு: 'மகிடாசுரன்' என்பவன் ஓர் அசுரன். அவன் மிகக் கொடியவன். அவன் எல்லாத் தேவர்களையும் மனிதரையும் துன்புறுத்தினான். அதனால் எல்லோரும் அவனது அழிவை வேண்டினர். இறுதியில் நாரதர் ஒரு தந்திரம் செய்தார்: அவர் அவனிடம் சென்று ஒரு மலையைக் குறிப்பிட்டு, 'அம் மலையண்டை அழகிய மடமயில் போன்ற மங்கை ஒருத்தி இருக்கிறாள். அவள் அழகு சொல்லுந்தரமன்று. அவளை மணந்து வாழத் தக்கவன் நீயே. நீ உடனே சென்று அவளை உன் வசப்படுத்து' என்றார். அசுரன் நாவில் தண்ணீர் ஊறியது. அவன் உடனே நாரதர் குறிப்பிட்ட மலையை அடைந்தான்; மாந்தளிர் போன்ற மேனியும் மயில் போன்ற சாயலும் கொண்ட மங்கை ஒருத்தியை மலை அடிவாரத்தில் கண்டான். ஆ! அவ் வழகிய அணங்கு யார்? அவளே காளிதேவி. அவள் அசுரனைக் கொல்லவே அழகிய நங்கையாக வந்து நின்றிருந்தாள். அவ் வுண்மையை அறியாத அசுரன் அவளைத் தன் வசப்படுத்த விரும்பினான். அவள் இசையவில்லை. இருவருக்கும் கடும்போர் நடந்தது. அப் போர் ஒன்பது நாட்கள் தொடர்ந்து நடந்தன. அசுரன் பத்தாம் நாள் இறந்தான். காளிதேவி விஜயம் (வெற்றி) அடைந்தாள். அதனாற்றான் பத்தாம்நாள் (தசமி) 'விஜய தசமி' (வெற்றிக்கு உரிய பத்தாம் நாள்) எனப் பெயர் பெற்றதாம்.

அதனைக் கொண்டாடும் முறை

4. நவராத்திரி விழா வீடுகளிலும் கோவில்களிலும் கொண்டாடப்படும். பொம்மைகள் அடுக்கடுக்காக அலங்கரிக்கப்பட்டிருக்கும். பொம்மைக் கொலு வைப்பவர் ஒவ்

வோர் இரவும் கொலுவிடத்தில் ஆடல்பாடல்களை நிகழ்த்த ஏற்பாடு செய்வார்கள்; வந்து பார்ப்பவர்க்குப் பழம், வெற்றிலை, பாக்கு முதலியன கொடுப்பார்கள். ஒன்பதாம் நாள் 'சரஸ்வதி பூஜை' நடக்கும். அதுவே 'ஆயுத பூஜை' என்றும் அழைக்கப்படும். அன்று தொழிலாளர் தங்கள் தொழிலுக்குப் பயன்படும் ஆயுதங்களைச் சுத்தம் செய்து பூஜை செய்வார்கள். நம் முன்னோர் பண்டைக் காலத்தில் தங்கள் புத்தகங்களாகிய பனையோலைக் கட்டுகளை அடுக்கி வைத்துப் பூசை செய்துவந்தார்கள். இந்தத் திருவிழா— தமிழ் நாட்டில் கொண்டாடப்படுவதைவிடத் திருவாங்கூர், புதுக்கோட்டை, மைசூர் முதலிய சமஸ்தானங்களில் சிறப்பாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகிறது. விஜய தசமி அன்றே நம்மவர் தம் பிள்ளைகளை முதன்முதல் கல்வி கற்க விடுதல் வழக்கம்.

முடிவு

5. இத்தகைய விழாக்களின் உண்மைப் பொருளை உணர்ந்து, நல்லதெனப் படின் கைக்கொண்டு, பயனற்றதெனப்படின் உதறிவிடலே நன்மக்கள் கடனாகும்.

19. பிரயாண சாதனங்கள்

குறிப்புகள் :—1. முகவுரை
2. நிலத்தில் உள்ள சாதனங்கள்
3. நீரில் உள்ள சாதனங்கள்
4. வானில் உள்ள சாதனங்கள்
5. முடிவு

கட்டுரை

முகவுரை

1. நிலம், நீர், வான் இம் மூன்றிலும் பிரயாணம் செய்தற்குரிய சாதனங்கள் எவையோ, அவையே பிரயாண சாதனங்கள் எனப்படும். சாதனம் என்பதற்கு 'வழி' என்பது பொருள். நிலத்திற் பிரயாணம் செய்வதற்கு உரிய வழிகள்—மாட்டு வண்டி, குதிரை வண்டி, சைக்கிள் வண்டி, மோட்டார் வண்டி, புகை வண்டி முதலியன. நீரிற் பிரயாணம் செய்வதற்குரிய சாதனங்கள—படகு, கப்பல் முதலியன. வானிற் பிரயாணம் செய்தற்குரிய சாதனங்கள்—ஆகாய விமானமே யாகும்.

நிலத்தில் உள்ள சாதனங்கள்

2. மிகப் பழைய காலத்தில் மனிதன் பெரும்பாலும் நடந்து சென்றான். அக் காலத்தில் வண்டிகள் இல்லை. ஒருவன் தன் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குத் தன் சரக்குகளை எடுத்துச் சென்று விற்பதற்கு ஒரு பலகைமீது சாமான்களை வைத்து இழுத்துச் சென்றான்; பின்னர் அப் பலகையில் உருளைகளைப் பொருத்தி இழுத்துப் போனான்; அதன் பிறகு அறிவும் சிந்தனையும் வளர வளர, தான் வண்டியை இழுப்பதை விட்டு மாடு, குதிரை, கழுதை, மான்

முதலிய விலங்குகளைப் பழக்கி, வண்டியை இழுத்துச் செல்லும்படி ஏற்பாடு செய்தான். இத்தகையனவே இன்றும் கிராமங்களில் காணப்படும் மொட்டை வண்டிகள். நாளடைவில் பலகைக்குமேல் கூண்டு அமைக்கப்பட்டது. கிராமங்களிலும் நகரங்களிலும் காணப்படும் மாட்டு வண்டிகளும் குதிரை வண்டிகளும் இத்தகையனவே ஆகும்.

மேல்நாட்டில் 17-ஆம் நூற்றாண்டிற்றான் சைக்கிள் வண்டிகள் தோன்றின. 19-ஆம் நூற்றாண்டில் மோட்டார் வண்டிகள் தோன்றின. சைக்கிளில் ஒருவர்தாம் செல்லக் கூடும். மோட்டாரில் நால்வர் செல்லலாம். மோட்டார் பஸ்ஸில் பலர் செல்லலாம். மோட்டார் லாரியில் சாமான்கள் பிரயாணம் செய்கின்றன. புகை வண்டியோ நூற்றுக் கணக்கானவரை ஏற்றிச் செல்லும் வண்டி. சாமான்களைப் பேரளவு கொண்டு செல்வதும் அதுவே யாகும். இந்தியாவில் ஒரு பாகத்தில் உள்ள மனிதரையும் பொருள்களையும் மற்றொரு பாகத்திற்குக் கொண்டுபோகும் வன்மை புகை வண்டிக்கே உரியது. இப்பொழுது உள்நாடுகளில் நடைபெறும் வியாபாரம், தபால் போக்கு வரவு ஆகிய எல்லாம் புகைவண்டியாற்றான் நடைபெறுகின்றன. கரியும் புகையும் இல்லாமல் மின்சார வேகத்தாலேயே வண்டிகள் இப்பொழுது ஓடுமாறு செய்யப்பட்டுள்ளன. அவை மின்சார ரயில் வண்டிகள் எனப்படும். நாட்கள் செல்லச் செல்ல, இச் சாதனங்கள் முன்னேற்றம் பெறும் என்பது உறுதி.

நீரில் உள்ள சாதனங்கள்

3. மனிதன் முதலில் மரத்துண்டை ஆற்றில் போட்டு, அதனைச் செலுத்திக்கொண்டே சென்று குறித்த இடத்தை அடைந்தான்; பிறகு பல மரத் துண்டுகளைச் சேர்த்துக் கட்டி, அக் கட்டுமரத்தின்மீது தன் பொருள்களை

வைத்துத் தானும் அமர்ந்து, குறித்த இடங்களை அடைந்து மீண்டான்; அறிவு முதிர்ச்சி ஏற்பட, காற்றின் வேகத்தால் படகை நடத்துதல் கூடும் என்பதை உணர்ந்து, பாய்மரக் கப்பலைச் செய்து பயன்படுத்தினான். ஆனால், நீராவியின் வன்மை உணரப்பட்ட பின், இன்றைய நீராவிக் கப்பல்கள் தோன்றின. இன்று கடல் கடந்துள்ள நாடுகளை ஒன்று படுத்தி, உலக மக்களை ஒரே இடத்தில் காண வசதி அளித்த பெருமை இக் கப்பல்களுக்கே உண்டு. ஆதலால், நீராவியின் சக்தியைக் கண்டறிந்த ஜேம்ஸ் வாட்டிற்கும் பிறர்க்கும் நமது நன்றி உரியதாகுக!

வானில் உள்ள சாதனங்கள்

4. பழைய மனிதன், பறவைகள் வானிற் பறப்பதைக் கண்டு, தானும் பறக்க முயன்றான்; இறக்கைகளைக் கட்டிக் கொண்டு பறந்து விழுந்து மாண்டான்; பலர் பலவகை ஆராய்ச்சிகளில் ஈடுபட்டனர். இறுதியில் பிரஞ்சுக்காரர் இருவர் இன்றுள்ள வான ஊர்தியைக் கண்டறிந்தனர். அது ஒற்றைச் சிறகு விமானம், இரட்டைச் சிறகு விமானம், முச்சிறகு விமானம் என மூவகைப்படும். இவையன்றிக் கௌன்ட் ஜெப்ளின் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்ட ஜெப்ளின் விமானமும் வான உலகில் பெருந் தொண்டாற்று கிறது. அதிற்றான் பலர் பொருள்களோடு பிரயாணம் செய்யலாம். சுருங்கிய நேரத்தில் குறித்த இடத்தை அடையவும், தபால்களை எடுத்துச் செல்லவும் அந்த விமானங் கள் பயன்படுகின்றன.

முடிவு

5. இவை எல்லாம் மனிதர் அறிவும் ஆராய்ச்சியும் பெருகப் பெருகப் பின்னும் பல மாறுதல்களை அடையலாம். நாளை என்ன நடைபெறும் என்பதை யாரே அறிவர்?

20. நான் கண்ட காட்சிகள் (Excursion)

குறிப்புகள் :—1. எங்கள் பிரயாணம்
2. திருக்கழுக்குன்றம்
3. மஹாபலிபுரம்
4. நான் அறிந்தவை

கட்டுரை

எங்கள் பிரயாணம்

1. இந்த ஆண்டுத் தசரா விடுமுறை வந்ததும், ஆரும் வகுப்புப் பிள்ளைகளாகிய நாங்கள் எங்கள் ஆசிரியரோடு உல்லாசப் பிரயாணம் செய்யப் புறப்பட்டோம்: நாங்கள் சென்னையைவிட்டுப் புறப்பட்டுப் புகைவண்டி வழியே செங்கற்பட்டை அடைந்தோம்; அங்கு இருந்து நேரே மோட்டார் பஸ் அமர்த்திக்கொண்டு, திருக்கழுக்குன்றம் சென்றோம்; அங்கு ஒரு நாள் இருந்து மறுநாள் மஹாபலிபுரம் சென்றோம்; அங்கு ஒருநாள் இருந்து செங்கற்பட்டு வந்து, அங்கிருந்து சென்னை மீண்டோம்.

திருக்கழுக் குன்றம்

2. திருக்கழுக் குன்றம் பாடல் பெற்ற ஸ்தலமாகும். மலைமீது முருகக் கடவுள் கோவில் இருக்கிறது. அதில் நடுப்பகல் பூசை முடிந்ததும், அர்ச்சகர் பிரசாதத்தை ஒரு பாறைமீது வைத்துக்கொண்டு இருக்கிறார். அப்பொழுது இரண்டு கழுகுகள் அங்கே வருகின்றன; பிரசாதத்தை உண்கின்றன. அவை நாள்தோறும் அந்த நேரத்தில் அங்குக் காட்சி அளிக்கின்றன. அவை தெய்வத் தன்மை வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன. அவை உண்ட பின், எஞ்சிய பிரசாதத்தைப் பல பிரயாணிகள் பெருஞ் செல்வம் ஈந்து பெற்று உண்ணுகின்றனர். இங்ஙனம் கழுகுகளால் விசே

டம் பெற்ற மலை யாதலின் அம் மலை 'கழுக் குன்றம்' என்றும், 'கழுகாசலம்' என்றும் கூறப்படுகிறது. மலையடிவாரத்தில் சிறிய கிராமம் இருக்கிறது. அதுவும் 'திருக்கழுக் குன்றம்' என்றே பெயர் பெறும். ஊரில் பெரிய 'முருகன் கோயில்' ஒன்று இருக்கிறது; பெரிய திருக்குளம் ஒன்றும் இருக்கிறது. அந்த நீரில் நீராடல் உடம்புக்கு நல்லதென்று கூறப்படுகிறது. அவ்வூரில் பல சத்திரங்கள் இருக்கின்றன; அவை கோவில் தரிசனத்துக்கு வரும் பிரயாணிகள் தங்கியிருக்கத் தரும குணப் பெருமக்கள் கட்டி வைத்தவை ஆகும். மலையைச் சுற்றிக் காலையிலும் மாலையிலும் நடத்தல் உடம்புக்கு நல்லது. என்னை? மலைமீது நல்ல மூலிகைகள் பல இருக்கின்றன. அவற்றின்மீது பட்டுவரும் காற்றை மலையைச் சுற்றுவோர் நுகர்வது நோய்களைக் குணப்படுத்தும் என்று கூறப்படுகிறது. நாங்கள் அந்த மலையைச் சுற்றி வந்தோம். நல்ல காற்று எங்கள்மீது வீசியது. அப்போது நாங்கள் மிக்க இன்பத்தை அடைந்தோம்.

மஹாபலிபுரம்

3. பிறகு நாங்கள் மஹாபலிபுரத்தை அடைந்தோம். ஆ! என்ன அற்புதமான காக்ஷி! நம் முன்னோர் பாறைகளைக் கோவில்களாக மாற்றியுள்ளனர்! அவை 'பாண்டவர் இரதங்கள்' என்று சொல்லப்படுகின்றன. ஒவ்வோர் இரதமும் சிறந்த வேலைப்பாடு அமைந்ததாகும்; பல உருவங்கள் செதுக்கப் பெற்றதாகும். பழங்காலத்தில் உபயோகப்படுத்தப்பட்ட கலங்கரை விளக்கம் ஒன்று இருக்கின்றது. அதுவும் ஒரு பாறையே. அதன் உச்சியில் நாங்கள் அனைவரும் அமர்ந்தோம். எதிரே நீலத் திரைக்கடல் காட்சி அளித்தது. பல்லவ ராஜாக்கள் காலத்தில் புகழ்பெற்ற துறைமுகப் பட்டினமாக மஹாபலிபுரம் விளங்கியபோது, அந்த

விளக்குத் தூண் உயர்வுபெற்று இருந்தது போலும்! இப்பொழுது வேறொரு விளக்குத் தூண் நம் அரசாங்கத்தால் கட்டப்பட்டு இருக்கிறது. காளியம்மன் மஹிடாசுரனோடு போர் செய்ததும் வென்றதும், அர்ச்சுனன் தவம் செய்ததும் பிறவும் குறிக்கும் வேலைப்பாடுகள் பாறைகளில் செதுக்கப்பட்டுள்ளன. அவை பார்ப்பவர் உள்ளத்தையும் பார்வையையும் ஒருங்கே கவர்வனவாகும். கடல் ஓரமாகக் கற்கோவில் ஒன்று இருக்கின்றது. அது போன்ற சில கோவில்கள் கடலுள் மூழ்கிவிட்டன என்று அவ்வூரார் கூறினர். பாடல் பெற்ற பெருமாள் கோவில் ஒன்றும் அவ்வூரில் இருக்கின்றது. பல பாறைகள் வேலைப்பாடுகள் முடிவுறாத நிலையில் இருக்கின்றன.

நான் அறிந்தவை

4. இப் பிரயாணத்திலிருந்து நான் அறிந்தவை யாவை? 'நம் முன்னோர் பக்தியில் தலை சிறந்தவர்; மலைமீது கோவில் அமைக்கும் ஆற்றல் பெற்றவர்; பாறைகளைக் குடைந்து கோவில் ஆக்கும் திறம் பெற்றவர்; திரைகடலோடியும் திரவியம் தேடியவர்; நாகரிகத்தில் தலை சிறந்து விளங்கினவர்; சிற்பத்திலும் ஓவியந் தீட்டலிலும் இயற்கைப் பொருள்களை இன்பப் பொருள்கள் ஆக்குதலிலும் வன்மையுற்றவர்; அவற்றால் உலகில் அழியாப்புகழ் படைத்தவர்; அப் பெரியோர் வழி வழி வந்த நாம் பாமரராய்—விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொல்லப் பான்மை கெட்டுப் பெயரளவில் தமிழராக இருத்தல் நாணமுடையது. நாம் சுறுசுறுப்புடன் புகழ் பெறத்தக்க நற்காரியங்களைச் செய்தலில் முனைதல் வேண்டும்' என்பனவே நான் அறிந்துகொண்ட நற்செய்திகள் ஆகும்.

21. முயற்சி

குறிப்புகள் :—1. முயற்சி - யாது ?
2. மேற் கோள்கள்
3. முடிவு

கட்டுரை

முயற்சி—யாது ?

1. எடுத்த காரியத்தை முடிக்கும் அளவும் ஓயாது உழைத்தல் முயற்சி எனப்படும். இவ்வருங் குணம் உடையவர் சிலரே ஆவர். பலர் முயன்று பார்த்து, மேலும் முயற்சி செய்ய மனம் அற்றவராய் வலியிழந்து சோம்பித் தாம் எடுத்ததை விட்டுவிடுவர். தளரா ஊக்கம் உடையவரே எடுத்த காரியத்தில் கருத்தாக நின்று, எத்தகைய இடையூறுகளையும் பொறுத்து, முயன்று இறுதியில் வெற்றி பெறுவர்.

" மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் — செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்,"

என்ற பெரியோர் வாக்குப்படி நடப்பவரே மெய்யான முயற்சி உடையவர் ஆவர்.

மேற் கோள்கள்

2. இங்ஙனம் முயற்சி உடையவராகி இடைவிடா உழைப்பினால் உயர்ந்தவரே உலகிற் சிறந்து விளங்கும் உலகத்துப் பெரிய வியாபாரிகளும் விஞ்ஞானிகளும் நாட்டின் தலைவர்களும் பிறரும் ஆவர். அமெரிக்காவின் குடியரசுத் தலைவராக வந்த ஏப்ரஹாம் லிங்கன் ஆதியில் பரம ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர்; கரி தள்ளும் இரும்புத் தகட்டில்

கணக்குகள் போட்டுப் படித்தவர்; அடுப்பு வெளிச்சத்தில் படித்து முன்னுக்கு வந்தவர். அவர் விறகு வெட்டினார்; படகை ஓட்டினார்; கசாப்புக் கடை வைத்தார்; கிராமத்தில் சிறிய பல சரக்குக் கடை வைத்தார்; கிராமத் தபால் ஆபீஸில் வேலை பார்த்தார்; இந்த இழிந்த வேலைகள் செய்யும் பொழுதும், ஓய்வு நேரங்களில் இடைவிடாமற் படித்தார்; அரசியலைப் பற்றிய சிதறுண்ட நூல்களைக் கிடைக்கும் போதெல்லாம் படித்துக்கொண் டிருந்தார்; தம் நண்பர்களோடும் கிராமத்தாரோடும் அடிக்கடி அரசியல் செய்திகளைப் பற்றிப் பேசினார்.

அவருடைய சிறந்த ஒழுக்கமும் ஏழ்மை நிலையும் அடக்கமும் சுற்றுப்புற கிராமத்தார் கவனத்தை ஈர்த்தன. எல்லோரும் அவரை மதிக்கத் தலைப்பட்டனர்; அவர் இருந்த இடத்திலிருந்து அவரது மாகாணச் சட்ட சபைக்கு ஒருவரைத் தேர்ந்தெடுத்து அனுப்பும் சந்தர்ப்பம் வந்தது. அப்பொழுது கிராமத்தார் ஏப்ரஹாம் லிங்கனையே தேர்ந் தெடுத் தனுப்பினர். அவர் மாகாண சட்ட சபையில் 'பெரிய பேச்சாளர்' எனப் பெயர் பெற்றார். நாளடைவில் அவர் அமெரிக்க ஐக்கிய மாகாணச் சட்ட சபையாகிய செனேட்டிற்கு அவரது மாகாணச் சட்டசபையிலிருந்து பிரதிநிதியாக அனுப்பப்பட்டார்.

பல மாகாணங்களின் பிரதிநிதிகள் அடங்கிய அப் பெரிய அரசியல் அவையில் ஏப்ரஹாம் லிங்கன் ஏழ்மை நிலையிற் காட்சி அளித்தார். அவரைக் கண்டவர் உள் ளுக்குள் எள்ளி நகையாடினர். பலர் அவரை அல கூஷியப்படுத்தினர். ஆனால், அவர் சட்டசபையில் எழுந்து பேசியதும் மற்ற உறுப்பினர் அயர்ந்து நின்றனர். அவரது கடினமான குரலும், இடைவிடாது பேசிய பேச்சும், சொல் லும் பொருளும் பருந்தும் நிழலும் போலப் பிணைந்து

சென்ற நிலேயும், காரண காரியங்கள் விளங்கப் பேசியதும் மற்றவர் மனத்தைக் கவர்ந்தன. சில மாதங்கட்குள் அவர் 'சிறந்த அரசியல் வாதி' எனப் பெயர் பெற்றூர். அவரது பெயர் அமெரிக்கா முழுவதும் பரவத் தொடங்கியது.

பின்னர் அமெரிக்கக் குடியரசுத் தலேவர் தேர்தல் வந்தது. அக்காலத்தில் 'அரசியல் நிலேமை' என்பதைப்பற்றி ஏப்ர ஹாம் லிங்கன் 'நியூயார்க்' நகர மண்டபத்தில் சொற்பொழிவு ஆற்றினர். அச்சொற் பொழிவைக் கேட்ட செல்வரும் வறி யரும் 'இவரே குடியரசுத் தலேவர் ஆதற்கு உரியவர்' என் னும் ஒரே கருத்துக் கொண்டனர். அவரது கட்சியும் அவரையே தலேவர் பதவிக்கு நிறுத்தியது. அவருக்குப் போட்டியாக வேருெரு கட்சியினர் ஒரு சிறந்த பேச்சாளர் ஒருவரை நிறுத்தினர். அவர் பெரும் பணக்காரர். லிங்கனே பரம ஏழை. ஆயினும், அவர் ஒவ்வோர் மாகாணத்துக்கும் சென்று சொற்பொழிவாற்றினர். அதிகம் அறைவதேன்? குடிசையிற் பிறந்த ஏப்ரஹாம் லிங்கன் - தம் நல்லொழுக்கத் தாலும், தளரா முயற்சியாலும், சிறந்த அரசியல் அறிவினு லும், நிதான புத்தியாலும் குபேர நாடாகிய அமெரிக்க நாட் டின் குடியரசுத் தலேவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மறு முறையும் அவரே தலேவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரது பேச்சு இன்னும் உலகில் நிலேத்துள்ளது. நீக்ரோ வர் அடிமைத் தனத்தை ஒழித்த அண்ணல் அவரே. அத் திருப்பணியிற்ருன் அவர் ஆவியும் நீத்தார்.

முடிவு

3. இங்ஙனம் முயற்சியை அணிகலனுகக் கொண்டு உழைப்பவரே உலகில் உயர் நிலேயைப் பெறுவர். 'உழைப் பின் வாரா உறுதிகள் உளவோ?' என்னும் பட்டினத்தடிகள் கூற்று மெய்யே அன்ருே?

22. பத்திரிகை வாசித்தல்

குறிப்புகள் :—1. முகவுரை
2. பத்திரிகைச் செய்திகள்
3. பத்திரிகையின் அவசியம்
4. நம் நாட்டுப் பத்திரிகைகள்
5. முடிவு

கட்டுரை

முகவுரை

1. ஒரு நாடு பல வழிகளிலும் முன்னேற்றம் பெறுதற்குப் பத்திரிகைகள் மிகவும் இன்றியமையாதவை. நாகரிக முன்னேற்றத்திலும் பல்கலை அறிவிலும் நாள்தோறும் வளர்பிறைபோலப் பெருகிவரும் அமெரிக்கா, ஜப்பான் முதலிய நாடுகள் பத்திரிகையின் பயனை நன்கறிந்து அனுபவித்து வருவதாற்றான் மேல் நிலையை அடைந்துள்ளன. அங்குப் பொருள் மிகுந்த செல்வர் முதல் அன்றாடம் வயிற்றுச் சோற்றுக்கு வருந்தி உழைக்கும் ஏழைத் தொழிலாளர் ஈறாக அனைவருமே பத்திரிகை படிக்கின்றனர்; தம் ஒரு நாளைய வேலைகள் பலவற்றுள் பத்திரிகை வாசித்தலையும் ஒன்றாகக் கருதுகின்றனர். இதனால் பத்திரிகையின் பயனை அவர்கள் எந்த அளவு அறிந்திருக்கின்றனர் என்பது நன்கு விளங்கும்.

பத்திரிகைச் செய்திகள்

2. பத்திரிகையில் வெளிவரும் செய்திகள் யாவை? கல்வி, கைத்தொழில், வாணிகம், விவசாயம் முதலியவை உலகில் உள்ள பல நாடுகளிலும் எவ்வெவ்வாறு உயர்ந்தும் தாழ்ந்தும் இருக்கின்றன; எவ்வெவ்வகையில் உழைத்தால்

இவற்றில் முற்போக்கு அடையலாம் என்பன போன்ற செய்திகளும், அந்தந்த நாட்டு அரசியல் செய்திகளும், நாட்டு முன்னேற்றத்துக்கு உரிய வேறு பல செய்திகளும், நீதிகளைப் புகட்டும் அன்றாடம் நடைபெறும் உலக நிகழ்ச்சிகளும், உலகத்து விநோதச் செய்திகளும், ஆராய்ச்சிக் கட்டுரைகளும், பூகோள சாத்திரச் செய்திகளும் பிற கலைகளைப் பற்றிய பழையனவும் புதியனவும் ஆகிய செய்திகளும், உலகப் பெருமக்களின் நல்ல உபதேசங்களும், போர்ச் செய்திகளும் பிறவும் ஒவ்வொரு நாளும் பத்திரிகைகளில் பெரும்பான்மை வெளியாகின்றன.

பத்திரிகையின் அவசியம்

3. இச் செய்திகளை உணர்த்தும் பத்திரிகைகளை வாசிப்பதால் விளையும் நன்மை என்ன? ஒரு நாடு முன்னேற்றம் அடைந்து வரும் விதத்தை, மற்றொரு நாடு அறிந்து முன்னேறுதற்கு வழி உண்டாகிறது; இங்ஙனமே கைத்தொழில், விவசாயம், வாணிகம் இவற்றைப் பெருக்கிக் கொள்ளவும் அஃது உதவுகிறது. புதிய புதிய இயந்திரங்களைக் கண்டறியவும் புதிய புதிய சீர்த்திருத்தங்கள், சட்டங்கள், மாறுதல்கள் முதலியவற்றை ஆராய்ச்சியிலோ, அரசியலிலோ—ஏன்? ஒவ்வொரு துறையிலேயும் செய்யப் பத்திரிகைச் செய்திகள் பேருதவி புரிகின்றன. மாணவர்க்கும் இப் பத்திரிகைகள் உதவி புரிகின்றன. சிறு கதைகள், பிற நாட்டு மாணவர் கல்வி முறை, விளையாட்டுகள், கூட்டுறவு, வாழ்க்கை, கைத்தொழிற் பயிற்சி இன்ன பிறவும் நாள் பத்திரிகைகளிலும் வாரத் தாள்களிலும் மாத இதழ்களிலும் வருகின்றன. அவற்றைப் படிப்பதால் மாணவர், தமது வாழ்க்கையோடு மேனாட்டு மாணவர் வாழ்க்கையை ஒப்பிட்டுப் பார்த்துத் தம்மை முன்னேற்றிக்கொள்ள இடமுண்டா

கிறது. உலகத்தைச் சுற்றிப் பாராமலே உலகச் செய்திகளை எல்லாம்—ஒவ்வொரு நாளிலும் நடைபெறும் முக்கிய நிகழ்ச்சிகளை எல்லாம் இருந்த இடத்தில் இருந்துகொண்டே அறியும் வழியில் பத்திரிகைகள் பயன்படுகின்றன எனின், ஆ! மனித சமுதாயத்தின் ஞான ஒளியாக விளங்கும் இப் பத்திரிகைகளின் அவசியத்தை வற்புறுத்தவும் வேண்டுமோ? இந்திய மாணவர் அனைவரும் பத்திரிகை படித்தலை அன்றாடக் கடமையாகக் கொள்ளுதல் வேண்டும் என்று வற்புறுத்துதல் தவறாகாது.

நம் நாட்டுப் பத்திரிகைகள்

4. நம் தமிழ் நாட்டில் தினசரி—வார—மாதப் பத்திரிகைகள் உள்ளன. அவை பண்பற்ற தமிழில் வெளிவரினும், வேறு வழியில்லாததால், நாம் அவற்றை வாங்கிப் படிக்கவேண்டுபவராக இருக்கிறோம். நாள் ஆக ஆக, அவை நற்றமிழில் நலமுறத் திகழலாம். அன்று அவை மொழியை வளர்க்கும் பத்திரிகைகளாகவும் விளங்குதல் கூடும்.

முடிவு

5. மனித நாகரிகத்திற்குப் பத்திரிகைகள் உயிர்நாடி ஆதலின், அவற்றைப் படிப்பது ஒவ்வொரு மனிதனின் நீங்காக் கடமையாகும். 'படை வீரர் வாளினும் பத்திரிகாசிரியன் எழுதுகோல் வன்மை உடையது' என்னும் ஆங்கிலப் பழமொழியால் பத்திரிகையின் உயர்வை அறிக.

23. உரையாடல்—போட்டி

'கிராம வாழ்க்கை—நகர வாழ்க்கை' என்பது பற்றிப் போட்டி உரையாடல் நடப்பதாக எழுதுக.

கண்ணன்—'கிராம வாழ்க்கையே சிறந்தது' என்று பேசுபவன்.

முருகன்—'நகர வாழ்க்கையே சிறந்தது' என்று பேசுபவன்.

கண்ணன் :—கிராமம் அமைதிக்கு இருப்பிடமானது; வயல்கள் நாற்புறத்தும் பெற்றது; நற்காற்று வீசப் பெறுவது. உடற்பயிற்சி கிராமத்தார்க்குத் தேவை இல்லை. அவர்கள் வயல் உழவு, கைத்தொழில் இவற்றால் போதிய உடற்பயிற்சி செய்கின்றனர். கிராமப் பெண்கள் வீட்டு வேலைகளிலும் வயல் வேலைகளிலும் உடற்பயிற்சி பெறுகின்றனர். அவர்கள் போதிய உடற் பயிற்சி இயல்பாகச் செய்துவருவதாலும் இயல்பான உணவுப் பொருள்களைக் கொள்வதாலும் நோயின்றி உடற் கட்டுடன் இருக்கின்றார்கள். அவர்களுட் பலர் ஏழைகளாக இருக்கலாம். எனினும், அவர்கள் நகரவாசிகளைவிடச் சுகவாழ்வில் இருப்பவர்களே ஆவார்கள்.

நகரங்களில் நற்காற்று அரிது; தெருக்கள் குறுகியவை; உயர்ந்த மாடமாளிகைகளைக் கொண்டவை. ஒரு வீட்டில் பல குடும்பங்கள் இருக்கும். வீடுகளில் போதிய காற்று வசதிக்குரிய சாதனங்கள் இல்லை. பல வீடுகளில் கிணறுகள் இரா. குழாய் நீரைப் பல குடும்பங்களும் பங்கிடும்போது, அவரவர் நாள்தோறும் நீராடத் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்படுவதும் உண்டு. ஆடைகளைத் துவைத்துக் காயவைக்கப் பல வீடுகளில் வெயில் படத்தக்க இடங்களே இல்லை. தெருக்களில் பிள்ளைகள் அசுத்தம் செய்து நற்காற்று வீடுகளிற் புகாதபடி செய்கின்றனர். மழை நன்றாகப் பெய்யுமாயின், பல இடங்

களில் சாலைகளில் தண்ணீர் தேங்கி, மக்கட்குப் பலவித நோய்களை உண்டாக்குகின்றன. நகரங்களில் கொசுக்கடி அதிகம். ஜன நெருக்கமும் சுகாதாரக் குறையும் அசுத்த மான காற்றும் 'காலரா' முதலிய கொடிய நோய்களை உண் டாக்குகின்றன. கிராமங்களில் பெரும்பாலும் இக் குறை பாடுகள் இல்லை. நகரங்களில் பலவகைத் தொழிற் கூடங்கள் இருப்பதால் ஜன நெருக்கம் அதிகம்.

கிராமங்களில் மக்கட் பெருக்கமோ நெருக்கமோ இல்லை. குளங்களிலும் ஏரிகளிலும் ஆறுகளிலும் கிணறு களிலும் உள்ள நீர் மக்கட்குத் தாராளமாக உதவு கிறது; தண்ணீர்ப் பஞ்சம் இல்லை. கால் நடைகள் வயல்களில் மேய்ந்து வருதலால் சத்துள்ளதும் நோயற் றதுமாகிய பால் தருகின்றன. கிராமங்களில் தூய தயிர், மோர், பால், நெய், வெண்ணெய் கிடைக்கின்றன. அன்றாடம் புதிதாகப் பறிக்கும் காய்கறிகளைச் சமைத்து உண்ணலாம். நகரங்களில் இரண்டொருநாள் காய்ந்து உலர்ந்த காய்கறிகளும் உணவாகின்றன. இவை சுகாதாரத் துக்கு ஏற்றவை அல்ல. சுருங்கக் கூறின், மனிதன் சுகா தார முறைப்படி தூய பால் முதலியவற்றையும் தூய கறி காய்களையும் உண்ணவேண்டுமாயின், கிராமங்களே மனித வாழ்க்கைக்கு ஏற்றவை ஆகும். இன்ன பிற காரணங்களால், நகர வாழ்க்கையைவிடக் கிராம வாழ்க்கையே மிகச் சிறந்த தாகும் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

முருகன் :—கண்ணன் கூறியவற்றுள் பெரும் பகுதியை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் நகர வாழ்க்கையில் உள்ள நலன்களையும் நாம் கவனிக்க வேண்டும். மனிதன் கேவலம் உணவுக்காக மட்டும் படைக்கப்பட்டிலன். எல்லாப் பிறவிகளிலும் உயர்ந்தது மனிதப் பிறவி. அவ் வுயர்வு அறி வால் அமைந்ததாகும். மனிதன் அவ் வறிவைப் பெருக்க

நகர வாழ்க்கையே ஏற்றது. இன்று நம் நாடுள்ள நிலையில், நகரத்திற்றான் படித்தவர்கள் இருக்கிறார்கள்; சாத்திர நிபுணர்கள், கல்வி கேள்விகளிற் சிறந்தவர்கள், அரசியல் தலைவர்கள், அரசாங்க உத்தியோகஸ்தர்கள்—அனைவருமே நகரங்களிற்றாம் வாழ்கிறார்கள். மனிதனுக்கு அறிவு புகட்டும் பெரிய கலைக்கூடங்கள் எல்லாம் நகரங்களிலேயே இருக்கின்றன. அவனுக்குப் பொது அறிவையும் உலக அறிவையும் மிகச் சிறந்த முறையில் ஊட்ட உதவி புரியும் நூல் நிலையங்கள் யாவும் நகரங்களிற்றாம் அமைந்துள்ளன. கற்றறிந்த மேலோர் கூட்டங்கள் கூட்டிப் பேசலும் நகரங்களிற்றான் மிகுதி. இந்தியா, தொழிலிலும் ஆராய்ச்சியிலும் முற்போக்கு அடைய நகரங்களே சிறந்த இடங்கள் ஆகும்.

பல கிராமங்கள் இரயில் பாதைக்கு அருகில் இல்லை. அதனால் கிராமங்களில் தொழிற்கூடங்களோ பிற அறிவுக் கலைக்கூடங்களோ வளரவோ—ஏற்படுத்தவோ வசதி இல்லை. நகரங்களில் இயற்கையும் செயற்கையும் கலந்து பிணைப்புண்டு கிடக்கின்றன. ஆனால், கிராமத்தில் இயற்கை வாழ்வே உண்டு. இவை அனைத்தினும் மேலாகக் கருதத்தக்கது ஒன்றுண்டு. கிராமத்தாரே நம் நாட்டில் கல்வி வசதியற்றவர். அவர்கட்கு நாட்டு விஷயங்களோ—உலகச் செய்திகளோ அறிய வழியில்லை; ஊக்கமும் இல்லை. அவர்களுட் பெரும்பாலார் பாரதியார் பகர்ந்தாற் போலப் "பாமரராய்—விலங்குகளாய் — ஊமையராய் — செவிடர்களாய்—குருடர்களாய்" வாழ்கின்றார்கள். அறிவு வளர்ச்சிக்கு வழியற்ற கிராம வாழ்க்கை, இன்றுள்ள நிலையில் எவ்வாற்றானும் நகர வாழ்க்கையைவிடச் சிறந்ததாகாது என்பதே எனது தாழ்மையான கருத்தாகும்.

இவ் விருவர் வாதங்களில், 'எது பொருத்தமானது?' என்பதை நீங்களே தெளிதல் வேண்டும்.

24. மாணவர் கடமை

குறிப்புகள் :—1. இளமைப் பருவத்தின் சிறப்பு
2. இருக்கவேண்டும் பண்புகள்
3. செய்ய வேண்டுவன
4. முடிவு

கட்டுரை

இளமைப் பருவத்தின் சிறப்பு

1. இளமைப் பருவம் துன்பம் நெருங்காத பருவம்; கள்ளம், கபடு அறியாத பருவம்; வீரமும் தைரியமும் விளங்கும் பருவம்; அன்பும் அருளும் அரும்பும் பருவம்; சூடுள்ள இரத்தம் ஓடும் பருவம். இப் பருவத்தில் கொள்ளும் பழக்க வழக்கங்களே ஆயுள் முழுவதும் நீடித்து நிற்கும். 'தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும்' என்பதை நோக்குக. ஆதலின், இளமைப் பருவத்தினராய மாணவர் நற்குண நற்செயல்களை உடையவராக இருத்தல் மிக்க அவசியம் ஆகும்.

இருக்கவேண்டும் பண்புகள்

2. மாணவர் எப்பொழுதும் சுறுசுறுப்பு உடையவர்களாக இருத்தல் வேண்டும்; ஒரு நிமிட நேரமும் சோம்பி இருத்தல் ஆகாது; கலங்காத உள்ளம் உடையவராக இருத்தல் வேண்டும்; எதற்கும் அஞ்சாத பேராற்றல் பெற்ற இளஞ் சிங்கங்களாக இருத்தல் வேண்டும்; மாணவரிடம் உண்மை, ஒழுக்கம், பொறுமை, ஊக்கம், உழைப்பு முதலிய சிறந்த குணங்கள் உயர்ந்து காணப்படல் வேண்டும். 'எக்காரியத்தையும் செய்து முடிப்போம்' என்னும் உறுதிப்பாடு மாணவர்க்கு மிகுதியும் இருத்தல் வேண்டும். 'முடியாது'

என்னும் சொல்லைப் பொருளற்றதாக ஆக்குதல் மாணவர் கடமைகளுள் ஒன்று. 'முடியாது என்பது சோம்பேறி களின் சொல்' என்ற நெப்போலியன் கூற்று மாணவர் உள்ளத்தில் பதிந்திருத்தல் வேண்டும். எதனையும் செய்து முடிக்கத்தகும் வலிமையை மாணவர் பெருக்குதல் வேண்டும். அந் நிலையிற்றான் மாணவர்க்கு 'அச்சம்' என்பது தோன்றாது.

செய்ய வேண்டுவன

3. மாணவர் உடலையும் அறிவையும் வளர்த்தற்கு ஏற்ற பருவமும் இளமைப் பருவமே ஆகும். ஆதலின், மாணவர் உடலை உரம்பெறச் செய்யும் உடற்பயிற்சியைத் தினந்தோறும் செய்தல் வேண்டும்; ஒவ்வொரு நாளும் ஒழுங்காகக் கல்வி கற்றல் வேண்டும்; நம் தாய் மொழியாகிய தமிழைப் பிழையறப் பயிலல் வேண்டும்; நம் முன்னோரின் சரித்திரங்களையும், வீரம் செறிந்த வரலாறுகளையும், பிற நாட்டுப் பெரியோர்—வீர மக்கள்—அரசர் முதலியோரின் வரலாறுகளையும் படித்தறிந்து, நல்லியல்புகளை முயன்று பெறுதல் வேண்டும். தாய்நாட்டு முன்னேற்றம் பற்றிய செய்திகளையும் மாணவர் அறிந்திருத்தல் அவசியம் ஆகும்; கைத்தொழில், விவசாயம், வாணிபம் இவைபற்றிய நூல்களை மிகுதியும் படித்து, மேனாட்டு முறைகளையும் நம் நாட்டு முறைகளையும் ஒப்பிட்டுப் பார்த்துப் பெரியவர்களாயபின், இம் மூன்றையும் உயர்த்தக் கூடிய முறைகளைக் கையாளுதல் வேண்டும். சுருங்கக் கூறின், நம் நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் கண்ணும் கருத்துமாக இருத்தல் வேண்டும். எதிர்காலத்தில் நாட்டைப் பாதுகாப்பதற்கு உரியவர் மாணவரே. நாட்டை அழகுபடுத்தும் புலவர்களாகவும், வீரர்களாகவும், அறிஞர்களாகவும் விளங்க வேண்டுபவர் மாணவரே

ஆவர். ஆதலின், இளமை முதற்கொண்டே மாணவர் தமது வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக்கொள்ளல் வேண்டும்.

தாய்மொழி முன்னேற்றத்தில் மாணவர் விசேட கவனம் செலுத்தல் வேண்டும் ; ‘ தமிழைப் புறக்கணிப்பவன் தமிழன் ஆகான் ’ என்பதை நினைவிற் கொள்ளுதல் வேண்டும். தமிழிலேயே பிறருடன் பேசல், தமிழிலேயே எதனையும் எழுதுதல், தமிழ்ப் பணியே புரிதல் என்பன போன்ற தமிழுக்கு ஆக்கந்தரும் செயல்களில் ஈடுபடல் வேண்டும். ‘ தன் தாய் மொழியை முன்னேற்றுதவன் தன் நாட்டையும் முன்னேற விடான் ’ என்னும் ஆன்றோர் அமுத வாக்கை மாணவர் மறந்துவிடல் ஆகாது ; எத்தகைய இடறு வரினும், உண்மையினின்றும் வழுவுதல் ஆகாது ; எக்காரியத்தையும், அதன் பலாபலன்களை நன்கு ஆராய்ந்த பின்னரே செய்ய முற்படல் வேண்டும். ‘ பேசுவதற்கு முன் நினை ’ என்னும் ஆங்கிலப் பழமொழியை நினைவிற் கோடல் வேண்டும் ; பிறர்க்குப் புண்படும் விதமாகவோ இரு பொருட்படும் விதமாகவோ பேசுதல் பெருந்தவறு. சுருங்கக் கூறின், மாணவர் சன்மார்க்க நெறிபற்றி வாழும் நன்மக்கள் ஆதற்குப் பழகுதல் வேண்டும்.

முடிவு

4. இதுகாறும் கூறப்பட்ட நன்மொழிகளின்படி நடப்பவர், தம் உற்ற பருவத்தில் சன்மார்க்க சீலர்களாய் வாழ்ந்து, ‘ நன்மக்கள் ’ என்னும் நற்பெயர் பெற்று அழியாப் புகழ் எய்துவர்.

25. கடிதம் எழுதுதல்

குறிப்பு :—(1) கடிதத்தின் வலக்கை ஓரத்தில் எழுதுபவர் விலாசமும் தேதியும் இருத்தல் வேண்டும்.

(2) கடிதத்தின் தொடக்கத்தில் வணக்கமோ ஆசீர்வாதமோ அவரவர் தகுதிக்கேற்ப எழுதுதல் வேண்டும்.

(3) கடிதச் செய்திகள்

(4) எழுதுபவர் கையெழுத்துக் கடிதத்தின் முடிவில் வலக்கைப் பக்கம் எழுதுதல் வேண்டும்.

(5) இடக்கைப் பக்கம் கீழே எழுதப்படுபவர் விலாசம் இருத்தல் வேண்டும்.

(6) விலாசம் எழுதுகையில் வீட்டு எண், தெருப் பெயர், ஊர்ப்பெயர் இவற்றை அடுத்தடுத்துக் 'காமா' இடல் வேண்டும்.

(7)i. கடிதத்தின் அடியில் உறவினர்க்கும் மிக நெருங்கிய நண்பர்க்கும் 'உங்கள் அன்புக்குரிய' என்று எழுத வேண்டும்.

ii. ஆசிரியர்க்கும் அதிகாரிகட்கும் 'உங்கள் கீழ்ப்படிதல் உள்ள' என்று எழுத வேண்டும்.

iii. பெற்றோர்க்கு 'உங்கள் அன்புள்ள' என்று எழுத வேண்டும்.

மாதிரிக் கடிதங்கள்

(1) பெற்றோர்க்கு எழுதும் கடிதம்

120, தங்கசாலை வீதி,
சென்னை; 15—11—'40.

அன்புள்ள அப்பா அவர்கட்கு வணக்கம்.

இங்கு எல்லோரும் நலம். அங்கு அம்மையார், தங்கை முதலியோர் நலத்தை அறிய அவா. நான் உங்கள் புத்திமதி

யின்படி நன்முக வாசித்துவருகிறேன். நான் பந்தய விளையாட்டில் மூன்று பரிசுகள் பெற்றேன். நீங்கள் இதைக் கேட்க மகிழ்ச்சி அடைவீர்கள் என்று கருதுகிறேன். நான் நவராத்திரி விழாவின்போது அங்கு வருவேன். பிற பின்.

இங்ஙனம் :
உங்கள் அன்புள்ள மகன்,
இ. இளங்கோ.

திருவாளர்
மா. இராசமாணிக்கம் பிள்ளை அவர்கள்,
10. கீழ ராஜ வீதி,
தஞ்சாவூர்.

(2) ஆசிரியர்க்குக் கடிதம்

10. தம்புசெட்டி தெரு,
சென்னை, 10-12-'40.

ஆசிரியர் அவர்கட்கு,

வணக்கம். நான் என் அக்காள் திருமணத்தை முன்னிட்டு மூன்று நாள் பள்ளிக்கூடம் வரக்கூடாதவனாக இருக்கிறேன். ஆதலால், தாங்கள் அன்பு கூர்ந்து எனக்கு அம்மூன்று நாளும் விடுமுறை அளிக்குமாறு வேண்டுகிறேன்.

இங்ஙனம் :
தங்கள் கீழ்ப்படிதல் உள்ள
மாணவன்,
சொ. முருகேசன்.

திருவாளர்,
க. மயில்வாகனர் அவர்கள்,
6-ஆம் வகுப்பு ஆசிரியர்,
நகராண்மைப் பாடசாலை,
மண்ணடி, சென்னை.

(3) அழைப்பு இதழ்

15, பிராட்வே, சென்னை,
15-11-'40.

அன்புள்ள கண்ணு,

நலம். நீ நாளை என் வீட்டில் நடைபெற இருக்கும் திருமண விருந்தில் கலந்துகொள்ள வேண்டுகிறேன். நீ வரத் தவறாதே. உன்னை எதிர்நோக்கி இருப்பேன்.

இங்ஙனம்:
உன் அன்புள்ள நண்பன்,
க. இராமன்.

திருவாளர்
மு. கண்ணன் அவர்கள்,
15, பாண்டி பஜார் ரோட்,
தியாகராய நகர், சென்னை.

பயிற்சி

1. உன் தம்பி, தங்கையரின் காது குத்தலைக் குறிப்பிட்டு விடுமுறை வேண்டி ஆசிரியர்க்கொரு கடிதம் எழுது.
2. உன் கிரகப்பிரவேசத்தைக் குறிப்பிட்டு உன் நண்பனுக்கு அழைப்புக் கடிதம் எழுது.
3. உன் ஒரு நாளைய வேலைகளைக் குறிப்பிட்டு உன் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுது.

26. காலத்தின் அருமை

குறிப்புகள் :—1. நமது வாழ்க்கை
2. நமது கடமை
3. சான்றுகள்
4. முடிவு

கட்டுரை

நமது வாழ்க்கை

1. நம் வாழ்நாட்கள் சில. அவற்றுள் பல நாட்கள் பிணியால் கழிகின்றன. சோம்பலால் கழியும் நாட்கள் சில. தூக்கத்தில் ஒழியும் நாட்கள் சில. இந் நிலையில் நாம் நமது வாழ்க்கையில் என்ன பயனுடைய வேலையைச் செய்தல் கூடும்? நாம் படிப்பதற்குரிய நூல்கள் பல; செய்ய வேண்டும் வேலைகளோ பல. ஆதலால், நாம் இயற்கையாக அமைந்த தூக்கத்துக்கு உரிய பாதி வாழ்நாட்களைக் கழித்து விடல் வேண்டும். எஞ்சிய நாட்களில் சோம்பலுக்கும் நோய்க்கும் இடந்தராமல் உடம்பை ஜாக்கிரதையாகப் பாது காத்தல் வேண்டும்; அந் நாட்களில் பயன் தரத்தக்க நூல்களைப் படித்து, நல்ல முறையில் வாழ்வை நடத்த முயலுதல் வேண்டும். இங்ஙனம் நமது வாணாட்களைப் பகுத்துப் பார்த்தாற்றான், நாம் 'காலத்தின் அருமை'யை உள்ளபடி உணர்ந்தவர் ஆவோம்; அரிதாகப் பெறும் காலத்தை நன்முறையிற் பயன்படுத்த உணர்ச்சி பெற்றவர் ஆவோம்.

நமது கடமை

2. அரிய வாழ்நாட்களைப் பெற்றுள்ள நாம், நமது காலத்தை வீணாக்குதல் கேட்டை விளைக்கும். நாம்,

இன்றைக்குச் செய்து முடிக்க வேண்டும் வேலை ஒன்றை இன்றே செய்து முடித்தல் வேண்டும் என்னும் உறுதியான எண்ண முடையவராக இருத்தல் அவசியமாகும். இன்று செய்ய வேண்டிய வேலையை 'நாளை செய்வோம்' என்று சோம்பலாக இருந்துவிடின், நாளை வேலையைச் செய்வ தென்று? இப்படிப் பார்ப்பின், ஒருநாள் வேலை தள்ளிக் கொண்டே போகும் அன்றோ? அப்படி இல்லாது, ஒரே நாளில் இரண்டு நாள் வேலைகளை முயன்று முடிப்பினும், அவ் வேலைகள் செவ்வனே முடிவு பெறா; உடம்புக்கும் கெடுதி விளையும். ஆதலின், இவற்றை நன்கு யோசித்து, நாம் நாளும் செய்ய வேண்டும் கடமைகளைத் தவறாது செய்து வாழ்க்கையைச் செவ்வைப்படுத்துதல் வேண்டும். தன் வேலைகளை உரிய வேளைகளில் செய்து முடிப்பவன் மகிழ்ச்சி அடையவோ, உடற் பயிற்சி செய்யவோ, கவலை யின்றித் தூங்கவோ நேரத்தைக் காண்கிறான். அவனது வாழ்க்கை உயர்வடைவது அல்லது தாழ்வடைவது அவனது கால ஒழுங்கைப் பொறுத்துள்ளது. அவன் குறித்த காலத்தில் தன் கடமைகளைச் செய்து முடிப்பதால், படிப் படியாக உயர்நிலையை அடைகிறான். அவன் அந் நிலையில் இன்பம் அடைகிறான். 'நம் கடமையைக் குறித்த காலத்தில் முடித்துவிட்டோம்' என்னும் மகிழ்ச்சிக்குரிய எண்ணம் ஒன்றே, மனிதனுக்கு மட்டற்ற இன்பத்தை உண்டாக்கும்.

சான்றுகள்

3. உலகத்தில் புகழ்பெற்று விளங்கிய அசோகன், அக்பர், ஆல்பிரெட் அரசர் முதலிய பெரியோர்கள் தங்கள் காலத்தின் அருமையை உணர்ந்து நடந்தமையாற்றான், இன் றளவும் மக்கள் நினைவில் இருக்கும் பேறு பெற்றார்கள்.

அசோகன் இரவில் நெடுநேரம் விழித்திருந்து குடிகளது நன்மைக்குரிய காரியங்களைச் செய்வது வழக்கமாம். ஒவ்வோர் இரவும் தன் காரியங்கள் முடிந்தவுடன், அப் பெரு வேந்தன் மட்டற்ற மகிழ்ச்சியோடு படுக்கைக்குச் செல்வானும். பண்டை இந்தியப் பெரியோர்கள் காலா காலத்தில் உடற் பயிற்சி செய்தல், தொழில் செய்தல், உண்ணுதல், உறங்குதல் முதலிய நாட்கடமைகளைக் குறைவறச் செய்து வந்தமையாற்றான், நீண்ட ஆயுளையும் நோயற்ற வாழ்வையும் பெற்று நாட்டிற்குத் தொண்டு செய்தார்கள்.

முடிவு

4. ஆதலின், நாமும் 'பருவத்தே பயிர் செய்' என்னும் மூதுரைப்படி, படிக்க வேண்டும் காலத்தில் படித்தல் வேண்டும்; எழுத வேண்டும் காலத்தில் எழுதுதல் வேண்டும்; இங்ஙனமே ஒவ்வொன்றையும் செய்தற்குரிய காலத்திற் செய்து முடித்து மறுவேலை பார்த்தல் வேண்டும். நாம் இம் முறையைப் பின்பற்றி ஊக்கத்துடன் நடப்போமாயின், நமது வாழ்க்கை நல்வாழ்க்கை ஆகும்.

> 'ஞாலங் கருதினும் கைகூடும் காலம்
> கருதி இடத்தாற் செயின்.'—திருக்குறள்

27. சிக்கனம்

குறிப்புகள் :—1. 'சிக்கனம்'—யாது ?
2. அதன் அவசியம்
3. சான்றுகள்
4. முடிவு

கட்டுரை

'சிக்கனம்'—யாது ?

1. ஒருவன் தன் வருவாய்க்குத் தக்கபடி சுருக்கச் செலவில் வாழ்க்கையை நடத்திக்கொண்டு, ஓரளவு மீதம் பிடித்தல் வேண்டும். இது தவறாது நடைபெற வேண்டுமாயின், அவன் செட்டாக வாழ்தல் வேண்டும். அச்செட்டு முறையே 'சிக்கனம்' எனப்படும். ஐம்பது ரூபாய் சம்பாதிக்கும் ஒருவன், மாதம் ஐந்து ரூபாயேனும் மீதப் படுத்தல் வேண்டும். இன்றேல், அவன் வாழ்வு சிக்கன வாழ்வு ஆகாது.

அதன் அவசியம்

2. ஒருவன் தன் வாழ்வில் வறுமை தலைகாட்டா திருத்தலை விரும்பின், சிக்கனமாக வாழ்வை நடத்துதல் வேண்டும். சிக்கனம் பரம ஏழையையும் செல்வனாக்கும். வருவாய் முழுவதையும் செலவு செய்பவனோ, வருவாய்க்கு அதிகம் செலவு செய்பவனோ தன் குடும்பத்துக்கோ—சமூகத்துக்கோ நன்மை செய்பவன் ஆகான். அவன், பின்னர் நரகவேதனை அடைந்து துன்பப்படல் உண்மை.

" ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை

எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு."

என்னும் பெரியோர் சொற்களைக் கவனித்து, ஒவ்வொருவரும் நல்வழிப்படுதல் அவசியம் ஆகும். நமது நாடு—நமது சமூகம் ஏழ்மை நிலையில் உள்ளவை. இவை இரண்டும் நல்ல நிலையை அடைய வேண்டுமானால், நாம் சிக்கன வாழ்வு நடத்தல் வேண்டும்; ஒவ்வொருவர் கையிலும் ஓரளவு பணம் இருத்தல் நல்லது. வருவாயை அப்படியே செல வழிப்பவர், திடீரென உண்டாகும் இன்ப துன்பச் செயல் களைச் செய்யப் பொருளுக்கு என்ன செய்வர்? அவர்கள் எதிர்கால வாழ்வை நினைவில் வைத்து, 'காற்றுள்ள போதே தூற்றிக்கொள்' என்றபடி, வருவாய் வரும்பொழுதே மீதப்படுத்த முயலல் வேண்டும்; 'இப்பணம் நம்முடையது அன்று' என்ற முடிவுடன் மாதந்தோறும் சிறு தொகையை ஒதுக்கி வைத்த பிறகே, எஞ்சிய தொகையைக் கொண்டு குடும்பத்தைப் பாதுகாத்துவரல் வேண்டும். இங்ஙனம் சிக்கன வாழ்க்கை நடத்துபவர் சீருடன் வாழ்வர்; உற்றார் உறவினரால் மதிக்கப்படுவர். சமூகத்துக்கும் அத்தகையவ ரால் பெரு நன்மை உண்டாகும். அவர்களைப் பார்த்துச் செலவாளிகளும் நல்லறிவைப் பெறலாம் அன்றோ?

சான்றுகள்

3. உலகத்தில் பெருங் கோடீஸ்வரர்களாக இருந்த வரும் இருக்கின்றவரும் சிக்கன வாழ்க்கையால் உயர்ந்தவரே ஆவர். நமது தாய்நாடாகிய இந்தியாவில் ஈடும் எடுப்பும் அற்ற இரும்புத் தொழிற்சாலையைப் பெருந்தொகையைச் செலவிட்டு ஏற்படுத்தி மறைந்த ஜாம்ஷெட்ஜி நசர்வாஞ்சி டாட்டா என்னும் பாரசீகக் கனவான், ஆரம்பத்தில் கண்ணா டிப் பாத்திரங்களை விற்றுவந்த சிறிய கடைக்காரர் ஆவர்.

6

அவர் தமது அறிவுத் திறனால் சிக்கனத்தின் சிறப்பை உணர்ந்து, சிறிது சிறிதாகப் பொருள் சேர்த்தார்; சேர்த்த தொகையைக் கொண்டு சீனரோடு வாணிபம் செய்தார். பெருந்தொகை இலாபம் கிடைத்தது. அதனை முதலாகக் கொண்டு, மேனாட்டுக் கப்பல் வியாபாரத்தில் இறங்கினார்; ஏற்றுமதி இறக்குமதிப் பொருள்களைக் கொண்டு பெரிய வணிகர் ஆனார்; தமது செல்வத்தை நாட்டு முன்னேற்றத் துக்குரிய நற்பணியில் மூலதனமாக வைத்துச் சென்றார். அவர் பெயர் இன்றளவும் இந்திய மக்களால் மறக்கக் கூட வில்லை. அமெரிக்கக் கோடீஸ்வரருள் புகழ்பெற்ற ஜான் டி. இராக்பெல்லர் என்பவர் முதலில் ஒரு குமாஸ்தாவாக இருந் தவர்; சிக்கன வாழ்வின் பயனாகப் படிப்படியாக உயர்ந்து, இறுதியில் 'ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனி' யின் முதலாளி யாக விளங்கும் நிலையை அடைந்தார்; தமது சொத்தி லிருந்து நூற்றறுபத்தைந்து கோடி ரூபாய் தருமம் செய்து குன்றாப் புகழை அடைந்தார்.

முடிவு

4. ஆதலின், நாம் சிறிய செப்புக் காசையும் வீணாகச் செலவிடாமல் பாதுகாத்தல் வேண்டும்; பல காசுகளே ரூபாய் ஆகும். பல ரூபாய்களே சொத்தாகும். 'சிக்கனம் இருந்தால் யாரும் செல்வராக முடியும்' என்பதை மறக்க வேண்டா.

28. நூல் நிலையம்

குறிப்புகள் :—1. நூல் நிலையம்—யாது ?
2. அதன் அவசியம்
3. அதன் முறை
4. முடிவு

கட்டுரை

நூல் நிலையம்—யாது ?

1. நூல்களை நிலையாகக் கொண்டுள்ள இடம் 'நூல் நிலையம்' எனப்படும். நூல் நிலையத்தில் ஆயிரக் கணக்கான நூல்கள் வைக்கப்பெற்று இருக்கும். மக்கள் தேவைக்குத் தக்கபடி ஞான நூல்கள், வைத்திய நூல்கள், பொருளாதார நூல்கள், சரித்திர நூல்கள், பூகோள நூல்கள், கதை நூல்கள், நாடக நூல்கள், செய்யுள் நூல்கள், ஆராய்ச்சி நூல்கள், பெருமக்கள் வரலாற்று நூல்கள், சொற்பொழிவு நூல்கள், மதசம்பந்தமான நூல்கள், சீர்திருத்தம் சம்பந்தமான நூல்கள், அரசியல் நூல்கள் முதலியன வைக்கப்பெற்றுள்ள இடமே உண்மையான நூல் நிலையம் ஆகும். இத்தகைய நூல் நிலையங்கள் நமது நாட்டில் பெரிய நகரங்களில் பல உண்டு. சென்னையில் பல்கலைக் கழகத்து நூல் நிலையம் ஒன்றும், அரசாங்க நூல் நிலையம் ஒன்றும் மிகப் பெரியனவாக இருக்கின்றன.

அதன் அவசியம்

2. மனிதனது அறிவு வளர்ச்சிக்கு நூல்கள் இன்றியமையாதவை. அவரவர் தத்தமக்கு விருப்பமான நூல்களைப் படித்து அறிவைப் பெருக்கி உயர்வடைவர். விவசாய நூல்களைப் படிப்பதால் பிற நாடுகளில் விவசாய வேலை எவ்

வாறு நடைபெறுகிறது என்பதை அறிந்து, நம் நாட்டில் விவசாயத்தை விருத்திசெய்ய யோசனை உண்டாகும். இங்ஙனமே ஒவ்வொரு துறைப்பட்ட நூல்களும் நமக்குப் பயன் படும். கிராம முன்னேற்றமே நமது நாட்டிற்கு அவசியமானது. 'கிராம மக்கள் என்னென்ன கைத்தொழில்களைச் செய்வதால் முன்னேற்றம் அடைவர்; அவர்களது பொருளாதாரத் துறை உயரும்' என்பன போன்ற முக்கியமான செய்திகளை விளக்கும் நூல்களே மிக்க அவசியமானவை. அவற்றைப் படிப்பதால் மேனாட்டுக் கிராமவாசிகளுடைய பலவகைப்பட்ட கைத்தொழில்களை உணர்ந்து, நம் கிராமவாசிகள் முன்னேறலாம். அவர்கள் நடத்தும் கூட்டுறவு முறையில் கிராமத்தார் ஒற்றுமையாக எக்காரியத்தையும் செய்ய வழியுண்டு. கிராமக் கைத்தொழில்கள் பெருகும்; நிலைமை முன்னேற்றம் அடையும்; பொருளாதாரம் சிறப்படையும்.

மனக் கவலையை மாற்றத்தக்க மாண்புறு இடம் நூல் நிலையமே என்பது பெரியோர் கருத்து. தாழ்ந்த நிலையற்ற குணங்கள் நம்மைவிட்டு ஒழியவோ—நம் மனம் அன்புக்கு இடமாகி மலர்ச்சி அடையவோ—அறிவு நூல்கள் நிறைந்துள்ள நூல் நிலையமே ஏற்ற தவப்பள்ளியாகும். 'என் கிழப் பருவத்திலும் நான் தனித்திருக்கும் காலங்களிலும் நூல்களே எனக்கு இன்பம் அளிக்கின்றன. அவை எனது வாழ்க்கையாகிய பிரயாணத்தில் எனக்கு நன்மையைச் செய்யும் கட்டுச்சோறாகப் பயன்படுகின்றன' என மாண்டேய்ன் என்னும் பெரியார் கூறியுள்ளார். இவ்வாறு எல்லா நாட்டுப் பெரியார்களும் நூல்களின் அளவற்ற பயனையும், அவை நிறைந்துள்ள நூல் நிலையத்துச் சிறப்பையும் நன்கு விளக்கிக் கூறியுள்ளார்கள். பலருடைய வரலாறுகளைப் படிப்பதால் — வாழ்க்கைப் போரில் நாம் எவ்வளவு

துணிவுடன் இருந்தல் வேண்டும், எங்ஙனம் நம் வாழ்வை நாமே முன்னேற்றுதல் வேண்டும் என்பனவற்றை அறிந்து, நம் வாழ்க்கையை நாம் செப்பஞ்செய்து நடத்தலாம். மேலும், பல நாட்டு மக்களின் நாகரிகம், மத வளர்ச்சி, பழக்க வழக்கங்கள் முதலியவற்றை அறிவதால் நம் மனம் விரிவடைகின்றது. இவ்வாறு பல வழிகளிலும் உலக அறிவை உண்டாக்கி மனிதனைச் சீர்திருத்தக்காரனாகவும் அறிஞனாகவும் செய்ய வல்லவை நூல் நிலையத்துள் உள்ள நூல்களே ஆகும்.

அதன் முறை

3. இப் பல்வகை நூல்களை முறைப்படுத்திப் பீரோக்களில் வரிசை வரிசையாக அடுக்கிப் பெயர் எழுதித் தூய்மையாக வைத்தல் வேண்டும்; படிப்பவர் விரும்பும் புத்தகத்தைத் தந்து நூற்பெயர், ஆசிரியர் பெயர், கொடுக்கும் தேதி, வந்து சேரவேண்டும் தேதி இவற்றைக் குறித்துக்கொண்டு வாங்குவோர் கையெழுத்தைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். இங்ஙனம் ஒரு நோட்டுப் புத்தகம் வைத்துக்கொண்டு எழுதுவதால் நூல்கள் தவற வழியில்லை.

முடிவு

4. மனிதனுக்கு உற்ற துணையாகவும் உயிரை வளர்ப்பதாகவும் உள்ள நூல்கள் நிறைந்த நூல் நிலையம் நமது நாட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் இருத்தல் வேண்டும்; அவற்றைப் படித்துக் கிராமவாசிகள் தம் தொழிலையும் வாழ்க்கையையும் முன்னேற்றுதல் வேண்டும். இத்தகைய முன்னேற்றமே இன்று நம் நாட்டுக்குத் தேவைப்படுவதாகும்.

29. கிராமச் சீர்திருத்தம்

குறிப்புகள்:—1. கிராமங்களின் அவசியம்
2. இப்போதுள்ள குறைகள்
3. செய்ய வேண்டுவன
4. முடிவு

கட்டுரை

கிராமங்களின் அவசியம்

1. ஒரு நாட்டிற்கு உயிர் நாடியாக இருப்பவை கிராமங்களே ஆகும். கிராமங்களில் வசிப்பவர் பெரும்பாலும் பயிர்த்தொழில் செய்பவராகவே இருப்பர். விவசாய நாடே முன்னேற்றம் பெற்றுள்ள நாடாகும். நமது நாட்டில் பயிர்த்தொழிலாளர் எண்ணிக்கையே அதிகம். கிராமங்களே பல. இந்தியாவில் சுமார் ஐந்து லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. அவற்றில் வசிப்பவர் தொகை ஏறக்குறைய இருபத்தெட்டுக் கோடி ஆகும். இவ் விருபத்தெட்டுக் கோடி மக்களுள் பெரும் பாலார் விவசாயிகளே ஆவர். இவர்களது உழைப்பின் பலனையே ஏனைய மக்கள் அனுபவிக்கின்றனர். இவர்கள் பயிர் செய்யாவிடின், நகர மக்கள் கதி யாதாகும்? சிறிது எண்ணிப் பாருங்கள் :

"வரப்புயர நீர் உயரும்
நீர்உயர நெல் உயரும்
நெல்உயரக் குடி உயரும்
குடிவுயரக் கோன் உயர்வான்."

ஆதலால், நாட்டு மக்கள் நல்வாழ்க்கையும் அரசனது செங்கோற் சிறப்பும் விவசாயிகளிடத்தே அடங்கியுள்ளன. அத்தகைய விவசாயிகளின் நிலைமை, அஃதாவது கிராமங்

களின் நிலைமை உயர்ந்தாற்ருன், நாட்டு நிலைமை உயர் வடையும்.

இப்போதுள்ள குறைகள்

2. நமது நாட்டுக் கிராமங்களில் உள்ள குறைபாடுகள் பல. போதுமான கல்விச் சாலைகள் இல்லை. ஏன்? பல கிரா மங்களில் பள்ளிக்கூடங்களே இல்லை. ஒன்றிரண்டு பள்ளி கள் இருப்பினும் அவை செவ்வையாக நடத்தப்படுவதும் இல்லை; அங்ஙனம் நடத்தப்படினும், விவசாயிகட்கு உரிய முறையில் கல்வி போதிக்கப்படுவதில்லை. இன்று கிராம மக்கள் பெறும் கல்வி, கடன் வாங்கும் பத்திரங்களில் கையெழுத்துப் போட மட்டும் பயன்படுகிறதே யன்றிப் புத்தக அறிவையோ - விவசாய அறிவையோ - தொழில் அறிவையோ - சன்மார்க்க அறிவையோ ஊட்டக் கூடியதாக இல்லை. விவசாயிகளும் படிப்பில் கவலை கொள்ளாது, கிணற்றுத் தவளைகளைப் போல உலகச் செய்திகளை அறிய ஆர்வம் இன்றி, உண்டுண்டு உறங்குவதிலேயே காலங் கழிக் கின்றனர். அவர்கள் கண்மூடிகளாகக் காலை முதல் மாலை வரை வயல்களில் உழைக்கின்றனரே தவிரப் புத்திசாலித் தனமாக மேனுட்டு விவசாயிகளைப் போலப் புதிய துறை களில் வேலை செய்வதில்லை; அங்ஙனம் செய்தற்குரிய வசதி களைத் தேடிக்கொள்ளவும் முயல்வதில்லை. கிராமங்களில் விவசாயப் பள்ளிகள் இல்லை; விவசாயத்தைப் பற்றிய நூல் கள் இல்லை; விவசாய முறைகளை எடுத்து விளக்குவார் போதிய அளவு இல்லை; போதிய அளவு பொருள் உதவி செய்வார் இல்லை. சுருங்கக் கூறின், நம் கிராம மக்கள் வாழ்க்கை இன்றுள்ள நிலையில் பயனற்றதாகவே இருக் கின்றது. அதனால், கிராமங்கள் சீர்கெட்ட நிலையில் இருக் கின்றன. கிராமங்கள் உயராமையால் நாடு உயரக்கூடவில்லை.

செய்ய வேண்டுவன

3. அரசாங்கம் விவசாயிகட்குக் குறைந்த வட்டிக்குப் பணம் கடன் கொடுத்தல் வேண்டும்; ஜில்லாவுக்கொரு விவசாயக் கல்லூரியை வைத்து அத் துறையில் ஆண்டுதோறும் மாணவர் பலரைத் தயார் செய்ய வேண்டும்; அவர்களைக் கிராமங்களில் தொண்டு செய்ய ஏவுதல் வேண்டும்; அவர்கள் துணையைக்கொண்டு விவசாயிகள் சீர்பெறுமாறு செய்தல் வேண்டும்; மேனாட்டு விவசாய முறைகளைப் படங்கள் வாயிலாகவும் பிரசங்க மூலமாகவும் குடியானவர்க்கு விளக்குதல் வேண்டும்; விவசாயம், கைத்தொழில், அரசியல், மதம், பொது அறிவு பற்றிய நூல்களைக்கொண்ட நூல் நிலையங்களைக் கிராமத்தார் பயன் படுத்தச் செய்தல் வேண்டும். சுருக்க விலையில் விவசாயம், கைத்தொழில் பற்றிய செய்திகளை அறிவிக்கும் நூல்களை வெளியிட்டுக் குடியானவரிடைப் பரப்புதல் வேண்டும். பால் பண்ணை, கோழிப் பண்ணை, ஆட்டுப் பண்ணை, தேனீ வளர்த்தல், நூல் நூற்றல், நெசவு முதலிய கைத்தொழில்களை எப்படி வளர்த்தல் வேண்டும் என்பதைப் போதித்துச் செயல் முறையில் செய்து காட்டல் வேண்டும்; கிராம சுகாதாரம் போதித்தல் வேண்டும்; ஆங்காங்குப் போதிய வைத்திய சாலைகளை ஏற்படுத்துதல் வேண்டும்; பத்திரிகைகளைப் படிக்கும் பழக்கம் உண்டாகச் செய்தல் வேண்டும்.

முடிவு

4. இத் துறைகளில் கிராமத்தார் பயிற்சி பெறுவராயின், நம் நாட்டுக் கிராமங்களில் பயிர்த் தொழிலும் கைத்தொழிலும் முன்னேற்றம் பெறும்; பொருளாதார நிலை சீர் பெறும்; கிராம வாசிகள் சுகம் பெறுவர்.

30. இந்திய ஊழியர் சங்கம்

குறிப்புகள் :—1. சங்கத்தின் தோற்றமும் கொள்கையும்
2. வேலை முறை
3. செய்துவரும் சேவை
4. முடிவு

கட்டுரை

சங்கத்தின் தோற்றமும் கொள்கையும்

1. இவ் விருபதாம் நூற்றாண்டில் இந்திய நிலைமையை உணர்ந்து உண்மையான சேவையைச் செய்ய முயன்ற பெரியார் சிலர். அவருள் கோபால கிருஷ்ண கோகலே என்பவர் தலை சிறந்தவர் ஆவர். அவர் நாட்டுக்கு மெய்யாகச் சேவை செய்யும் சங்கம் ஒன்றைப் பூனாவில் ஏற்படுத்தினார். அதுவே இந்திய ஊழியர் சங்கம் என்பது. அஃது 1905-ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. அச் சங்க அங்கத்தினர் தம் சொத்தைச் சங்கத்திற்குக் கொடுத்துவிடல் வேண்டும்; சங்கத்தார் தரும் பணத்தைக் கொண்டே வாழுதல் வேண்டும்; நாட்டுப் பணி ஒன்றையே நன்னோக்கமாகக் கொண்டு வாழவேண்டும். சங்கத்தில் எல்லா மதத்தினரும் சாதியினரும் உறுப்பினர் ஆகலாம். அங்கத்தினர் மக்கட்கு நாட்டுப்பற்றை ஊட்ட வேண்டும்; சமூக வாழ்வைச் சீர்ப்படுத்தல் வேண்டும்; எல்லோரும் சமத்துவம்—சகோதரத்வம் இவற்றுடன் ஒன்றுபட்டு வாழப் பாடுபடல் வேண்டும்; கைத்தொழில், பெண் கல்வி, சாத்திரக் கல்வி, தாழ்த்தப்பட்டார் கல்வி முதலியவற்றை அவ்வவர்க்குக் கற்பித்து மக்களை முன்னேற்றுதல் வேண்டும் என்பனவே இச் சங்கத்தின் கொள்கைகள் ஆகும்.

வேலை முறை

2. சங்க உறுப்பினர் சங்கத்தில் சேர்ந்ததும், முதலில் ஐந்தாண்டுகள் பொறுத் தொண்டு செய்யப் பயிற்சி பெறல் வேண்டும். அவர்கட்குச் சங்கமே மாதந்தோறும் பணம் உதவுகிறது; அவரவர் தியாகத்துக்கு ஏற்றவாறு ஆயுள் வரை மாதந்தோறும் பணவுதவி செய்யப்படுகிறது. இச் சங்கம் பூனுவில் இருந்தபோதிலும் சென்னை, பம்பாய், ஐக்கிய மாகாணம் முதலிய இடங்களில் கிளைகளை ஏற்படுத்தி, வேலைசெய்து வருகின்றது.

செய்துவரும் சேவை

3. இச் சங்கத்தார் பெண் கல்விக்குப் பெரிதும் பாடுபடுகின்றனர்; நூற்றுக் கணக்கான பெண்கட்குக் கல்வி வசதி அளிக்கின்றனர்; சேவா சாதனங்களை ஏற்படுத்தி நடத்திவருகின்றனர்; காட்டு வாசிகட்கும் தாழ்த்தப்பட்ட மக்கட்கும் கல்வியும் கைத்தொழிலும் போதித்து வருகின்றனர்; உறுப்பினர் சிலர் கல்வித் துறையில் உழைத்து வருகின்றனர்; சிலர் அரசியல் துறையில் உழைக்கின்றனர். அவருட் சிறந்தவர் மஹாகனம் விலங்கைமான் சீனிவாச சாஸ்திரியாரே ஆவர். இவர் தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்தியர்க்குப் பெருஞ் சேவை செய்தவர்; சிறந்த அரசியல் நிபுணர்; பெரிய பேச்சாளர். வேறு சிலர் தொழிலாளர்க்கு உழைத்து வருகின்றனர். அவருட் சிறந்தவர் ஜோஷி என்பவர். மதுவிலக்குப் பிரசாரத்தையும் இச் சங்கத்தார் தீவிரமாக நடத்தி வருகின்றனர்.

இவர்கள் ஏழைக் குடியானவர்க்கும் தொழிலாளிகட்கும் குறைந்த வட்டிக்குக் கடன் உதவ ஐக்கிய நாணயச் சங்கங்கள் பலவற்றைப் பல இடங்களில் ஏற்படுத்தி நடத்தி வருகின்றனர்; கூட்டுறவு இயக்க முறையைப்

போதிக்க ஒரு கலாசாலையையும் பத்திரிகையையும் நடத்தி வருகின்றனர்; சுகாதார அறிவை ஊட்டப் பல சங்கங்களை ஆங்காங்கு ஏற்படுத்திப் பெருந்தொண்டு ஆற்றுகின்றனர்; பெருங் கூட்டங்கள் கூடும் இடங்களில் இச் சங்கத்தார் சென்று மக்கட்கு இயன்ற உதவி செய்கின்றனர்; பிளேக், காலரா முதலிய கொள்ளை நோய்களைப் போக்க ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவிட்டுச் சேவை செய்துள்ளனர்; பஞ்சங்கள் உண்டான இடங்களில் இருந்த மக்கட்குப் பொருள் உதவி செய்துள்ளனர்; இன்றும் உதவி செய்து வருகின்றனர்; கலகங்கள், கொள்ளைகள் நடந்த இடங்களில் பொருள் இழந்து தவிக்கும் மக்கட்கு இயன்ற அளவு பொருள் உதவி செய்கின்றனர்; வெள்ளம், தீ இவற்றால் நஷ்டப்பட்ட மக்கட்கு உதவி புரிகின்றனர். சுருங்கக் கூறின், இவர்கள் செய்துவருந் தொண்டுகள் பொது மக்கட்குச் சமய சஞ்சீவி ஆகும். இவர்களால் நலம் பெற்ற மக்கள் இலட்சக் கணக்கானவர்.

முடிவு

4. இச் சங்கம் எளிய இந்தியர் உள்ளத்தில் கோயிலாக இலங்குகிறது. ஏழைகட்கு உதவி செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ள இச் சங்கம் போன்ற சங்கங்கள் மாகாணத்துக் கொன்று தோன்றிச் சேவை செய்யின், இந்தியா விரைவில் நன்னிலையை அடையும்.

31. அடக்கம் உடைமை

குறிப்புகள் :—1. அடக்கம் உடைமை — யாது ?
2. அதனால் உண்டாகும் நன்மை
3. சான்று
4. முடிவு

கட்டுரை

அடக்கம் உடைமை-யாது ?

1. அடக்கம் என்பது, 'மனம், வாக்கு, காயம் என்பவற்றைத் தீய வழியில் விடாமல் அடக்கி ஆளுதல்' எனப் பொருள்படும். இந் நற்குணம், பிறர் குற்றம் போலத் தன் குற்றத்தையும் கண்டு நாணுவோனிடம் இருக்கத்தக்கது. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனிடமும் இக் குணம் இருந்தே தீர்தல் வேண்டும். அஃது அவனை உயர்நிலைக்குக் கொண்டு செல்லும். அடக்கம் இல்லாதவன் பொறுத்தற்கரிய துன்பங்களை அனுபவிப்பான்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் ; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்."

என்னும் திருக்குறளைக் காண்க. எனவே, அடக்கத்தை அணிகலனாகக் கொண்டு ஒவ்வொருவரும் நல்வழியில் அடங்கி நடத்தல் வேண்டும். நாம் மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்பொறிகளையும் அவற்றால் உளதாகும் ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை என்னும் ஐம்புலன்களையும் தத்தம் விருப்பப்படியே செல்லவிடாமல் இயன்றவரை அடக்கி ஆளுதல் வேண்டும்; நாவடக்கம் உடையராதல் வேண்டும்; நாவினால் கெட்டவர் பலராவர்; நாவினால் உண்டாகும் சண்டைகள் பல; துன்பங்கள் பல; கொலைகள் பல. 'பேசுவதற்கு முன் நினைத்துப் பார்' என்

னும் மூதுரையை உளங்கொண்டு எதனையும் பேசு முன், நினைத்துப் பார்த்தல் வேண்டும்.

> " பிறரால் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
> மறவாமே நோற்பதொன் றுண்டு—பிறர்பிறர்
> சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
> யார்யார்க்குந் தாழ்ச்சி சொலல் "

என்பதை உளங்கொண்டு, நாவடக்கம் உடையராய் உலகில் நற்பெயர் எடுக்கப் பாடுபடலே நன்று. நாம் பொறுமை உடையவராக இருத்தல் அடக்கத்திற்குப் பெருந்துணை புரிவதாகும். அவசரப்பட்டு எதனையும் கூறுது — செய்யாது பொறுமையாக இருப்பதால் பல நன்மைகள் உண்டு. பிறரிடம் உளவாகும் குற்றங் குறைகளைப் பொறுக்கும் தன்மை நம்மிடம் வளர்ச்சி பெறல் வேண்டும்; தான் கெடினும் பிறர்க்குக் கேடு செய்யாமலும், உலகமே பெறுவதாயினும் பொய் பேசாமலும் இருத்தல் வேண்டும். இக் குணங்கள் எல்லாம் புலன்களை அடக்குவோர்க்கு உண்டாவனவாம்.

அதனுல் உண்டாகும் நன்மை

2. இவ் வடக்க முடைமையால் நாம் உலகில் நற்பெயர் பெறலாம்; எத்தகைய தீங்கும் நம்மை அணுகாதவாறு பாதுகாத்துக் கொள்ளலாம். நல்லொழுக்கம் நம்மை நாடி வந்து அடையும். பொறிகளையும் புலன்களையும் அடக்குவதால் உள்ளம் ஒரு வழிப்பட்டு நிற்கும்; கடவுள் நினைவும் காட்சியும் நம் கருத்தையும் கண்ணையும் விட்டு அகலா. நாம் இன்ப வாழ்வில் நிலைத்திருக்கலாம். இதுவன்றோ பெறுதற்கரிய வாழ்வு! அடக்கம் இன்ப நிலையை அடையச் செய்யும் என்பதில் ஐயமில்லை.

சான்று

3. கல்விக் கடல் எனப் பெயர் பெற்ற ஈஸ்வர சந்திர வித்தியா சாகரர் என்னும் பெரியவர் ஒரு புகைவண்டி நிலையத்தில் இறங்கினார். அவருடன் இறங்கிய கல்லூரி மாணவன் ஒருவன் தன் கைப் பெட்டியைத் தூக்கிச் செல்ல ஆளைத் தேடினான். ஆள் அகப்படவில்லை. அவன் படுந் துன்பத்தைக் கண்ட பெரியார், தாம் தூக்கி வருவதாகக் கூறி, அவனது பெட்டியைச் சுமந்து சென்றார். அவன் வீடு அடைந்ததும், அவரைக் கூலியாள் என நினைந்து, காசு கொடுக்க வந்தான். அவர் வேண்டா எனக் கூறிச் சென்று விட்டார். அன்று மாலை அப் பெரியவருக்கு மரியாதை செய்யப் பெருங்கூட்டம் அந் நகரிற் கூடியது. மாணவனும் ஆடம்பர உடையுடன் அங்குத் தோன்றினான். அவன் ஈஸ்வர சந்திரர் பெருமையைக் கேள்வியுற்றவன் ஆதலால் அவரைப் பார்க்க விரும்பினான். ஆ! என்ன ஆச்சரியம்! தன் பெட்டியைக் காலையில் எடுத்து வந்தவரே அக் கூட்டத்தினரால் மரியாதை செய்யப்படுவதைக் கண்டான்; திடுக்கிட்டான்; அவன் உடனே அவரிடம் ஓடிக் கால்களில் வீழ்ந்தான்; தன் தவற்றை மன்னிக்கும்படி வேண்டினான். அப் பெரியவர் நகைத்து, 'தம்பீ, அடக்கம் அமரருள் உய்க்கும்' என்றார். அவன் அன்று முதல் அடக்கம் உடையவனாக வாழ்ந்து வந்தான்.

முடிவு

4. அடக்கம் ஒன்றே மனிதரைத் தேவராக்குவது; விலங்கு நிலையை அடையச் செய்யாதது. ஆதலால், அதனைப் பெற முயல்வதே மனிதர் கடனாகும்.

32. உரையாடல்—போட்டி

'நாட்டுக்கு நன்மை விளைப்பவன் செலவாளியா? சிக்கனக்காரனு?' என்பதைப்பற்றிப் போட்டி உரையாடல் வரைக.

கோபாலன்—செலவாளியின் சார்பாகப் பேசுபவன்.

அப்துல்லா—சிக்கனக்காரன் சார்பாகப் பேசுபவன்.

கோபாலன் :—செலவாளி வள்ளல் குணம் படைத்தவன் என்று கூறலாம். அவன் சிக்கனக்காரனைப் போலப் பிறர்க்கு உதவாமல் இருப்பதில்லை. அவன் வண்டிகளில் போகிறுன்; அதனுல் வண்டிக்காரர் வாழ்க்கை நடத்த உதவி செய்கிறுன்; அவன் சிற்றுண்டிக் கடைகளில் சிற்றுண்டி கொள்கிறுன்; அதனுல் கடைக்காரனும் கடையில் உள்ள வேலையாட்கள் பலரும் பிழைக்கின்றனர். அவன் நாடகம், படக்காட்சி, நாட்டியம், இசைவிருந்து இவற்றுக்குப் போகிறுன்; இவற்றுல் தானும் இன்பம் அடைகிறுன்; நாடகக்காரர், சினிமாக்காரர், நாட்டியக்காரர், இசைவாணர் இவர்கள் பிழைப்புக்கும் உதவி செய்கிறுன். இம்மட்டோ? அவன் ஒரு நாட்டு உயர் நாகரிகத்துக்கு உரிய நாடகம், படக்காட்சி, நடனம், இசை என்னும் சிறந்த கலைகளை இம்முறையில் வளர்க்கின்றுன். அவன் போன்றுர் இல்லையாயின், நாட்டில் நாடகக் கலை வளருமா? படக்காட்சிக் கலை வளருமா? இசைக்கலை தான் வளருமா? இவை நாகரிகத்திற்கு உயிர்நாடி அல்லவா? நமது பண்டைத் தமிழகத்தில் நடனம், நாடகம், இசை இவை வளர்ந்தன—இவைபற்றிய பல நூல்கள் இருந்தன—இவற்றை அரசர் முதல் ஆண்டிஈறுகவுள்ள அனைவரும் ஆதரித்தனர் என்று பழந்தமிழ் நூல்கள் கூறுகின்றனவே! இக் கலைகள் யாவும் செலவாளிகள்

ஆதரவாற்றுனே வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும். அச் செலவாளிகளாற்றுனே எல்லாக் கலைகளும் வளர்கின்றன. இவற்றை வளர்த்து நமது சமூகத்தைப் பெருமைபடுத்தின பழந் தமிழர் அனைவரையும் 'செலவாளிகள்' என்று கண்டிக்கலாமா? அவ் வள்ளல்களால் அல்லவா நாம் இன்று பழம் பெருமை பேசுகின்றோம்.

செலவாளிகளே தம் நாட்டைச் சுற்றிப் பார்ப்பதோடு அயல் நாடுகளையும் பார்வையிட்டுக் களிக்கின்றனர்; இப் பிரயாணங்களால் அவர்கள் உலக மக்களையும் அவரவர் நாகரிகங்களையும் நல்லியல்புகளையும் தீய இயல்புகளையும் கண்டு நிறைந்த அறிவைப் பெறுகின்றனர்; தாம் கண்டவற்றோடு நம் நாட்டில் கண்டவற்றையும் ஒப்பிட்டுப் பார்த்து, 'அயல்நாட்டாருடைய இன்னின்ன இயல்புகளை நாம் பின்பற்றினுல் முன்னேறலாம்' என நல்ல யோசனை கூறுகின்றனர். செலவாளிகள் இங்ஙனம் இயற்கையும் செயற்கையுமான இன்பங்களை ஒருங்கே அடைகின்றனர்; தம் அறிவைப் பெருக்குகின்றனர்; அதனுடன் நில்லாது, தம் அனுபவங்களைப் பத்திரிகைகள் வாயிலாக நமக்கும் அறிவிக்கின்றனர். இத்தகைய அறச் செயல் புரியும் அவர்கள், நாட்டுக்குப் பெரு நன்மை புரியும் பெருமக்கள் அல்லரோ? காசி, மதுரை, மாயை முதலிய புண்ணிய ஸ்தலங்களையும், சாத்திரத் தொடர்பான இடங்களையும், கண்கட்குக் காட்சியளிக்கும் காஷ்மீர், மலையாளம் போன்ற இடங்களையும் காணும் மன எழுச்சி அவர்கட்குத் தானே உண்டாகிறது. இங்ஙனம் தம் அரிய நேரத்தையும் பொருளையும் செலவிட்டுப் பல இடங்களையும் கண்டு அவர்கள் நூல்கள் எழுதுவதாலன்றோ, அந் நூல்களைக் கொண்டோ—கட்டுரைகளைக் கொண்டோ நாம் இருக்கும் இடத்திலேயே அவற்றைப் பற்றிய அறிவைப் பெறுகின்றோம். இங்ஙனம்

பலவற்றையும் ஆராய்கையில், சிக்கனக்காரனைவிடச் செலவாளியே நாட்டுக்கு நன்மை செய்பவன் ஆவான் என்பதே எனது கருத்தாகும்.

அப்துல்லா :—மனிதன் தன்னளவில் சுகம் அனுபவிக்க மட்டும் இவ்வுலகில் படைக்கப்படவில்லை. அவன் தன் மனைவி மக்களையும் பெற்றோரையும் உடன்பிறந்தார் முதலியவரையும் காக்கக் கடமைப்பட்டவன். இதுவே அறமாகும். அவன் தன்னளவில் சுகம் அனுபவித்தலோ—பல இடங்களைச் செலவிட்டுக் காண்டலோ அறமன்று. அவன் இவ்வாறு மனம்போனபடி செலவிட்டுத் திடீரென இறப்பானாயின், அவன் குடும்பத்தார் கதி என்ன? இலக்ஷக் கணக்கில் பணம் வைத்திருந்தவர்கள் யாவரும் இறுதியில் என்ன ஆனார்கள்—என்ன ஆகின்றார்கள் என்பதை நாம் கண்ணால் பார்த்துவருகின்றோம். சம்பாதிப்பவன் இருக்கும்வரை தடபுடல் செலவுகள் செய்யப்படுகின்றன; அவன் இறந்தபின் அவன் குடும்பத்தார் சோற்றுக்கு அலைகின்றனர். இந்தக் கேடான நிலை ஏன் ஏற்படல் வேண்டும்? ஆன முதலில் வரவுக்கேற்ற செலவு செய்து, வருவாயில் ஒரு பகுதியைச் சேர்த்துவைத்திருப்பின்—சிக்கனமாக வாழ்க்கையை நடத்தியிருப்பின், அக் குடும்பம் அல்லலுறுதன்றோ? அச் செலவாளியின் சந்ததியார் அவனை வாயார வாழ்த்துவர் அல்லரோ? மனிதன் மானத்துடன் வாழ வேண்டுமாயின்—அவன் குடும்பம் பிறர் தயவின்றி நடைபெற வேண்டுமாயின்—சமூகத்தில் உயர்வடைய வேண்டுமாயின், சிக்கனத்தையே கைக்கொள்ளக் கடவன். சிக்கனமே சமூகத்தைச் செல்வ நிலையில் நிறுத்துவது. ஆதலின், சிக்கனக்காரனே நாட்டுக்கு நன்மை விளைப்பவன் ஆவன் என்பது எனது தாழ்மையான கருத்தாகும்.

இவ் விருவர் வாதங்களில் எது பொருத்தமானது?

33. பூகோளக் கல்வி

குறிப்புகள் :—1. பூகோளக் கல்வி—யாது ?
2. அதன் விவரங்களும் நன்மையும்
3. முடிவு

கட்டுரை

பூகோளக் கல்வி-யாது ?

1. நாம் வாழும் உலகத்தில் உள்ள நிலம், நீர் இவற்றைப் பற்றிய செய்திகளைக் கூறும் சாத்திரம் பூகோள சாத்திரம் எனப்படும். நிலம் பல கண்டங்களாகப் பிரிக்கப் பட்டிருக்தல், ஒவ்வொரு கண்டத்தில் உள்ள தேசங்கள், அத் தேசங்களில் உள்ள மலைகள், ஏரிகள், ஆறுகள், சமவெளிப் பிரதேசம், மேட்டுப் பிரதேசம், விளைபொருள், கைத்தொழில், ஏற்றுமதி—இறக்குமதி, போக்குவரவு சாதனங்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள், மக்களின் நடையுடை பாவனைகள் இன்ன பிறவும் விளக்கிக் கூறுவதே பூகோள சாத்திரம் ஆகும். இங்ஙனமே சமுத்திரங்கள், கடல்கள், ஜலசந்திகள் முதலியவற்றைப்பற்றிக் கூறுவதும் இச் சாத்திரமே ஆகும்.

அதன் விவரங்களும் நன்மையும்

2. இச் சாத்திரத்தைப் படிப்பதால் நாம், உலக அறிவை மிக விரிந்த அளவில் பெறுவோம். அந்தந்த நாட்டுச் சீதோஷ்ண நிலைகளையும், பருவக் காற்றுகள், மழை பெய்யும் பருவங்கள் இன்ன பிறவும் அறியலாம். இச் சாத்திர அறிவால் - நாம் வாழ்வது இந்தியாவில் என்பதையும், அஃது ஆசியாக் கண்டத்தில் இருக்கிறது என்பதையும், அது மூன்று பக்கங்களிலும் கடலால் சூழப்பட்டுத் தீபகற்ப

மாக இருக்கிறதென்பதையும்; கிழக்கே பர்மாவும், தெற்கே இந்து மஹா சமுத்திரமும், மேற்கே அரபிக் கடலும் பலுசிஸ்தானமும் ஆப்கானிஸ்தானமும், வடக்கே இமயமலையும் எல்லைகள் என்பதையும் அறிகிறோம். நாம் இக் கல்வியாற்றான் நமது நாட்டுக்கு வடக்கே சீனம், ரஷியா முதலிய தேசங்கள் உள்ளன என்பதையும்; கிழக்கே பர்மா, சிங்கப்பூர், ஸயாம், இந்தோ சீனு உள்ளன என்பதையும்; வட மேற்கே ஆப்கானிஸ்தானம் உள்ளது என்பதையும் அறிய முடிகிறது.

நம் நாடு பிற நாடுகளின் படையெடுப்புக்கு ஆளாகாமல் இருக்க, நமக்கு இவ்வறிவு அவசியமானது; பக்கத்து நாடுகளோடு நாம் வாணிப ஒப்பந்தம் முதலியன செய்துகொண்டு சமரசமாக வாழலாம்; இன்றேல், அயல் நாடுகளின் படைபலத்துக் கேற்றாற்போல நம் பலத்தையும் பெருக்கிப் போருக்குத் தயார் ஆகலாம். பிற நாடுகளின் அறிவு இருந்தாற்றான் உலக வியாபாரம் விருத்தியாகும். நம் நாட்டு விளைபொருள்கள் இல்லாத நாடுகளை அறிந்து, அவற்றோடு வியாபாரம் செய்யப் பூகோளக் கல்வியே உயிர் நாடியாகும். கடல் வியாபாரம் சீருடன் நடக்க—கடல் வழிகளை அறிய—அபாயமின்றிப் போய்வர இக் கல்வியே உதவுகிறது. அயல்நாட்டார் நாகரிகம், முன்னேற்றம் இன்ன பிறவற்றை நாம் அறியவும், அறிந்து பின்பற்றவும் நம்மைப்பற்றிப் பிறர் அறியவும், ஒருவரோடு ஒருவர் கலந்து பழகவும் உலக நாகரிகம், உலக வியாபாரம் முதலியன பெருகவும் இக் கல்வியே உதவி செய்கிறது.

ஆப்ரிக்காவில் உள்ள விலங்குகள் பல ஆஸ்ட்ரேலியாவில் இல்லை. ஆஸ்ட்ரேலியாவில் உள்ள மரங்கள் பலவும் விலங்குகள் பலவும் வேறு கண்டங்கள் பலவற்றில்

இல்லை. 'காங்கரு' என்னும் விலங்கு விநோதமானது. புட்டி மரங்கள் நூதனமானவை; தீப் பறவை அற்புதமானது. ஒட்டகம் பாலை வனத்திற்றான் இருப்பது. இவ் விலங்குகளையும் பறவைகளையும் மரங்களையும் நூதனமாகக் காண்கையிலும் இவற்றைப் பற்றிப் படிக்கும் பொழுதும் இவற்றை உண்டாக்கிப் பயன்படச் செய்துள்ள கடவுளின் பேரறிவும் பேராற்றலும் நன்கு விளங்கும். சாதாரண மலைகள், எரிமலைகள், மலைத்தொடர்கள், பெருங்கடலில் சிதறுண்டு கிடக்கும் ஆயிரக்கணக்கான சிறு தீவுகள், அத் தீவில் வாழும் மக்களின் பழக்க வழக்கங்கள், மொழிகள் இன்ன பிறவும் படிக்கப் படிக்க இன்பமும் வியப்பும் தோன்றி வளர்தலை நன்கறியலாம். அவரவர் மொழி இயல்பு, நாகரிகம், மத நிலை, வழிபாட்டுமுறை, கைத்தொழில் இன்ன பிறவும் நம்மவற்றோடு ஒப்பிட்டுப் பார்த்து மகிழ்ச்சியுறவோ-முன்னேற்றம் பெற முனையவோ உறுதுணை ஆகின்றன. உலகத்தில் நடைபெறும் பயங்கரமான போர்களால் நமது நாடு பாதிக்கப்படுமா இல்லையா என்பதை அறியப் பூகோள அறிவு பெரிதும் வேண்டப்படுவதே. நம் நாட்டில் உள்ள மாகாணங்கள், மக்கள், மொழிகள், பழக்க வழக்கங்கள், மதங்கள், ஆறுகள், போக்கு வரவு சாதனங்கள், விளைபொருள்கள், ஆக்கப்படு பொருள்கள் இன்ன பிறவும் அறிந்து உள்நாட்டு அறிவை வளர்த்துக்கொள்ளவும் இப் பூகோள அறிவே துணைசெய்கின்றது.

முடிவு

3. சுருங்கக் கூறின், பூகோளக் கல்வியே மனிதனை அறிவுள்ளவனுக்குகிறது; உலக ஞானத்தை ஊட்டுகிறது. ஆதலின், நாம் பூகோளக் கல்வியைப் போற்றுதல் வேண்டும்.

34. தொழில் அரசர்—டாட்டா

குறிப்புகள் :—1. டாட்டாவின் இளமைப் பருவம்
2. அவரது வியாபாரம்
3. அவரது சேவை
4. முடிவு

3404

கட்டுரை

டாட்டாவின் இளமைப் பருவம்

1. இந்தியாவில் பெரிய பஞ்சாலைகளையும் இரும்புத் தொழிற்சாலைகளையும் முதன்முதல் ஏற்படுத்திப் பெரும்புகழ் பெற்ற பெரியார் ஜாம்ஷட்ஜி நசர்வாஞ்சி டாட்டா என்பவர். அவர் பரோடா சமஸ்தானத்தில் உள்ள 'நவசாரி' என்னும் கிராமத்தில் 1839-ஆம் ஆண்டில் பிறந்தவர். அவர் பாரசீகக் குருமார் வகுப்பைச் சேர்ந்தவர். அவர் தகப்பனார் சீனத்துடன் வியாபாரம் செய்துவந்தார். டாட்டா பம்பாயில் ஆங்கிலக் கல்வி கற்றார்; வயது வந்ததும், தகப்பனாருடன் வியாபாரத் துறையில் இறங்கினார்; வியாபாரத்தைப் பெருக்கச் சீனம் சென்றார்; சிறிது காலம் அங்குத் தங்கியிருந்து வியாபார முறைகளைக் கற்று மீண்டார்.

அவரது வியாபாரம்

2. அப்பொழுது அமெரிக்காவில் உள்நாட்டுக் கலகம் நடந்துகொண் டிருந்தது. அதனால் அமெரிக்காவிலிருந்து ஐரோப்பாவுக்குப் பருத்தி ஏற்றுமதி நடைபெறவில்லை. ஆதலால் இந்தியாவிலிருந்து பருத்தி ஏற்றுமதியை நடத்தலாம் என்று டாட்டா எண்ணினார். இம் முயற்சியில் அவர் பெருந் தனவந்தர் ஆனார். ஆனால் இவ் வியாபாரம் நீண்ட காலம் நடைபெறவில்லை. அமெரிக்காவில் உள்நாட்டுக் கலகம் அடக்கப்பட்டது; வழக்கம் போல வியாபாரம் நடைபெறலா

யிற்று. இவ்வியாபாரம் நின்றவுடன் ஆப்பிரிக்காவில் அபிசீனிய அரசருக்கும் ஆங்கிலேயர்க்கும் போர் தொடங்கிற்று. அப்போரில் சம்பந்தப்பட்ட ஆங்கிலேயர்க்கு டாட்டா, இந்தியாவிலிருந்து உணவுப் பொருள்களைக் கப்பல் கப்பலாக அனுப்பிவந்தனர். இவ்வியாபாரத்தில் டாட்டாவுக்கு மிகுந்த இலாபம் கிடைத்தது.

அவரது சேவை

3. இங்ஙனம் பொருள் திரட்டிய டாட்டா பருத்தித் தொழிலை முன்னுக்குக் கொண்டுவர விரும்பி இங்கிலாந்து சென்றார்; மான்செஸ்டர் என்னும் இடத்தில் சிறிது காலம் தங்கிப் பருத்திக் கைத்தொழிலைப் பற்றிய பல நுட்பங்களைக் கண்டறிந்து தாய்நாடு மீண்டார்; நாகபுரியில் சக்கரவர்த்தினி ஆலை என்ற பெயரோடு பஞ்சாலை ஒன்றை தாபித்தார்; அதனில் வேலை செய்யும் தொழிலாளர்க்குப் பல வசதிகள் அளித்தார். அதனால் தொழிலாளரும் ஊக்கம் காட்டி உழைத்தனர்; தொழில் முன்னேற்றம் பெற்றது. பிறகு டாட்டா, மெல்லிய நேர்த்தியான நூலை நூற்கத் தக்க வேறு ஒரு பஞ்சாலையை ஏற்படுத்தினர். சில ஆண்டுகட்குள் இவ்விரு பஞ்சாலைகளும் இந்தியாவில் புகழ்பெற்ற பஞ்சாலைகள் ஆயின. ஆயிரக் கணக்கான தொழிலாளர் பிழைப்புப் பெற்றனர். டாட்டா மிக்க இலாபம் அடைந்தார். மெல்லிய நூல் நூற்கத்தகும் பருத்தியை நம் நாட்டிலேயே பயிராக்க வேண்டும் என்பது டாட்டாவின் விருப்பம். ஆதலின், அவர் அமெரிக்கப் பருத்தியை நம் நாட்டில் பயிரிடலாம் என்பதை மெய்ப்பித்துக் காட்டினர். அவரது உழைப்பாற்றான் இன்று உயர்தரப் பருத்தி நமது நாட்டில் பயிரிடப்படுகிறது.

டாட்டா, இவ் வேலைகளோடு நின்றுவிடாமல், இரும்புத் தொழிலை உயர்வடையச் செய்ய விரும்பினர்; இந்தியாவில்

இரும்பு கிடைக்கக்கூடிய இடங்களைக் கண்டறிந்தார்; பம்பாய்க் கருகில் இரும்புத் தொழிற்சாலை ஒன்றை ஏற்படுத்தினார்; அதில் உள்ள தொழிலாளர்க்கு வீடுகள் அமைத்துதவினார். அந்த இடம் இன்று ஜாம்ஷட்பூர் என்று வழங்குகிறது. அத் தொழிற்சாலையில் இரும்புப் பொருள்கள் ஏராளமாகச் செய்யப்படுகின்றன. அது மேனாட்டுத் தொழிற்சாலையைப் போலவே பெயர்பெற்று வருகிறது; இப்பொழுது இந்தியாவுக்கு வேண்டும் இரயில்வே தண்டவாளங்களையும் பிற இரும்புச் சாமான்களையும் செய்து குவிக்கின்றது; இத்தகைய இரும்புத் தொழிற்சாலைகள் சிலவேனும் இந்தியாவில் இருக்குமாயின், நாம் நம் நாட்டுக்கு வேண்டும் இரும்புச் சாமான்கட்கு அயல் நாடுகளை எதிர்பார்க்க வேண்டுவதில்லை அன்றோ?

டாட்டா மெய்யாகவே நம் நாட்டுக்குச் சேவை செய்துள்ளார். அவர் இரும்புத் தொழிற்சாலை, பஞ்சாலைகள் இவற்றை ஏற்படுத்தியதோடு நில்லாமல் பெங்களூரில் விஞ்ஞானப் பயிற்சிக் கழகம் ஒன்றை ஏற்படுத்த முயன்றார்; அதற்கொரு நிதி வைத்தார். அப்பண உதவியால் வாலிபர் பலர் மேனாடுகட்குச் சென்று கைத்தொழில் வளர்ச்சிக்குரிய விஞ்ஞான அறிவைப் பெற்று வருகின்றனர். 1910-முதல் டாட்டா ஆராய்ச்சிக் கழகம் பெங்களூரில் இருந்து சிறந்த ஆராய்ச்சி செய்துவருகின்றது.

முடிவு

4. டாட்டா பெருஞ் செல்வர். அவர்தம் செல்வத்தை நாட்டு முன்னேற்றத்துக்குச் செலவழித்தார்; தாய்நாட்டுத் தொழில் திறமையையும் உலகத்துக்கு நிரூபித்து வருகிறார். இப்பெரியாரைப்போல ஏனைய செல்வரும் பாடுபடுவராயின், நமது தாய்நாடு விரைவில் முன்னேறும் அன்றோ?

35. கடிதம்

சென்னையைப் பற்றி விளக்கி, அதனைக்காண வரும்படி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.

100, தங்கசாலை வீதி,
சென்னை, 15—10—'40.

அன்புள்ள கோவிந்தா,

இங்கு யாவரும் நலம். அங்குள்ளவர் நலத்தை அறிவி. நீ வரும் கிறிஸ்துமஸ் விடுமுறையில் சென்னைக்கு வருதல் நலம். உன் கல்விக்குத் துணை செய்வனவும் பொது அறிவை விளக்குவனவும் ஆகிய பல பொருள்களை இங்கே காணலாம். சென்னை, நமது மாகாணத்தின் தலைநகரம் அல்லவா? மாகாணத் தலைவராகிய கவர்னர் இங்கு இருக்கிறார். கடல் ஓரம் பெரிய உத்தியோக நிலையங்கள் இருக்கின்றன. கண்ணைக் கவரும் கட்டிடங்கள் பல இங்கு உண்டு. உயர்நீதி மன்றம், சட்டக் கல்லூரி, வைத்தியக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, கிறித்தவக் கல்லூரி, லயோலாக் கல்லூரி, மேரி ராணியார் கல்லூரி, வில்லிங்டன் சீமாட்டி, கல்லூரிக் கிறித்தவப் பெண்கள் கல்லூரி முதலியன காணத்தக்கவை. சென்னைப் பல்கலைக் கழகம் அவசியம் பார்க்கத்தக்கது. அதில் பல ஆயிரக் கணக்கான நூல்களைக் கொண்ட பெரிய நூல் நிலையம் இருக்கின்றது. இஃதன்றி அரசாங்கத்தார் ஆதரவில் உள்ள 'கன்னிமாரா நூல் நிலையம்' என்பதும் இருக்கின்றது. அதிலும் பல ஆயிரக்கணக்கான நூல்கள் அடுக்கடுக்காக உள்ளன. அந்நூல் நிலையம் பொது மக்களுக்குப் பயன்படுவது. அதனை அடுத்து இறந்த உயிர்களின் பாடஞ் செய்யப்பட்ட உடலங்களையும் உறுப்புகளையும் வேறு பல பொருள்களையும் கொண்ட கண்காட்சிச் சாலை ஒன்று உண்டு.

அதில் பண்டைக்காலக் கருவிகள், சிலைகள், ஓவியம், சிற்பம் இன்னபிறவும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

'மூர் மார்க்கெட்'டை அடுத்த அழகிய பூங்காவில் உயிருள்ள விலங்குகளும் பறவைகளும் வைக்கப்பட்டுள்ள இடம் உண்டு. அதில் ஒட்டகம், யானை, ஒட்டைச்சிவிங்கி, மேனாட்டுப் பறவைகள் பல, விலங்குகள் பல வைக்கப்பட்டுள்ளன. அவை கண்டு மகிழத்தக்கவை. சென்னை நகர சபைக் கட்டிடம் 'ரிப்பன்' பிரபுவின் பெயரால் விளங்குகிறது. கடற்கரை உலகத்தில் இரண்டாவதாகும் என்று கூறப்படுகிறது; வெகு நீளமானது; அழகுடையது; ஒழுங்குடையது. அதன் கரையில் கடல் மீன்களின் காட்சிச் சாலை ஒன்று இருக்கிறது. அதில் பலவகை நூதன மீன்கள் வைக்கப்பட்டுள்ளன. நாம் புத்தகத்தில் படிக்கும் பலவகை மீன்களை அங்குக் கண்ணால் கண்டு களிக்கலாம்.

சென்னையில் உள்ள பல புகை வண்டி நிலையங்களில் சிறந்தவை இரண்டு. ஒன்று எழும்பூர்ப் புகைவண்டி நிலையம்; மற்றது சென்ட்ரல் புகைவண்டி நிலையம். முன்னது தென்னிந்தியா என்னும் கோட்டைக்கு அமைந்த 'வாசல்' எனக் கூறலாம். பின்னது வடநாட்டுக்கு அமைந்த 'வாசல்' என்னலாம். இவ்விரண்டு நிலையங்களிலும் இராப் பகலாகப் பிரயாணிகள் குழுமி இருப்பர். சென்ட்ரல் புகை வண்டி நிலையத்துக்கு எதிரே அரசாங்க வைத்தியசாலை ஒன்று மிகப் பெரிதாக விளங்குகிறது. அது பார்க்கத்தக்கது. அதற்கு எதிரில் இரயில்வே உத்தியோக நிலையம் பிரம்மாண்டமாகக் காட்சி அளிக்கிறது. கண் வைத்தியசாலை, மிருக வைத்திய சாலை, இருமல் வைத்தியசாலை, பித்த வைத்தியசாலை, காலரா வைத்திய சாலை எனப் பல வைத்தியசாலைகள் சென்னையில் உண்டு. சென்னை நகரம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. எல்லாப் பிரிவுகளிலும் இயன்றவரை

மின்சார வண்டி ஓடுகிறது. நீ அதைக் கண்டதில்லையே! 'ரிக்ஷா' வண்டி என்பது மனிதன் இழுப்பது.

'செயின்ட் ஜார்ஜ் கோட்டை' என்பது காணத்தக்கது. அதில் பழைய கிழக்கிந்திய வர்த்தகர் கட்டிய கோட்டை கொத்தளங்கள், கோவில் முதலியன இருக்கின்றன; சென்னை மாகாணச் சட்ட சபையும் அங்குத்தான் இருக்கிறது. கோட்டைக்கு வடக்கே இருப்பது ஜார்ஜ் டவுன் எனப்படும். அதனைச் சுற்றிப் பழைய காலத்தில் ஆங்கில வியாபாரிகள் அமைத்த கோட்டை இடிந்த நிலையில் உள்ளது. அங்கங்கே சாலைகளின் சந்தியில் பல பெருமக்களின் உருவச் சிலைகள் நிறுத்தப்பட்டுள்ளன. படக் காட்சிச் சாலைகள் பல சென்னையில் உண்டு. காணத்தக்க சிற்றுண்டிச் சாலைகள் பல. துறைமுகம் பார்க்கத் தக்கது. வெளிநாட்டுக் கப்பல்கள் பல வருவதும், சாமான்களை இறக்குவதும், ஏற்றிக்கொண்டு போவதும் கண்டு மகிழத்தக்க காட்சிகள். அங்குப் பல தேச மக்களைப் பார்க்கலாம். ஆதலால், நண்பனே, நீ அவசியம் சென்னைக்கு வரத் தவறாதே. உனக்கு எல்லா நலங்களும் உண்டாக இறைவனை வேண்டும்

உனது நண்பன்,
இளங்கோ.

திரு. மு. கோவிந்தன்,
30. கீழை ராஜ வீதி,
தஞ்சாவூர்.

36. நட்பின் சிறப்பு

குறிப்புகள் :—1. நட்பின் இலக்கணம்
2. நட்பின் அவசியம்
3. சான்றுகள்
4. முடிவு

கட்டுரை

நட்பின் இலக்கணம்

1. உலகத்து மக்கள் நண்பர் இன்றி வாழ்தல் இயலாது. கடவுள் படைப்பில் ஒன்றை ஒன்று தழுவியே வாழ வேண்டி இருக்கிறது. உற்றார் உறவினரைவிட நண்பரே நம் இன்பதுன்பங்களில் விசேடப்பங்கு கொள்கின்றனர். ஆடை சோர்ந்த இடத்து உதவும் கை போல நண்பர்க்கு ஆபத்து வந்த இடத்து உதவுபவரே நண்பர். முகத்துக்கெதிரே ஒன்று நயம்படக்கூறி உள்ளத்தில் மாறாகக் கருதுபவர் நண்பர் அல்லர்; உள்ளத் தூய்மையோடு நட்புக் கொள்ளலே சிறந்தது. உண்மை நட்பு உயிரையும் பணயமாக வைக்க வல்லது. 'உன் நண்பர்கள் இன்னவர் என்பதைக் கூறு; உன்னை நான் அறிந்துகொள்வேன்' என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி.

நட்பின் அவசியம்

2. நண்பர் இல்லாதவர் வாழ்வில் சிறப்பு எய்துதல் முடியாது. கல்வியிலும் தொழிலிலும் பிறவற்றிலும் முன்னேற வழியின்றித் தவித்தவர் பலர்; அவ்வவற்றில் மிக மேலான நிலையை அடைந்தமைக்கு அவர்தம் நண்பர்களே காரணமாவர். நம்முள்ளே மறைந்து கிடக்கும் நமது சக்தியை மறந்து, 'நாம் எதற்கும் அருகர் அல்லோம்' என்று எண்ணி மனஞ் சோர்ந்திருக்கும் நம்மைத் தேற்றி,

நம்முள்ளே ஒளிரும் சக்தியை நினைவூட்டி, நம்மைக் கடினமான காரியத்திலும் பிரவேசிக்கச் செய்பவர்கள் நண்பர்களே ஆவார்கள். ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர் முதலிய ஐரோப்பிய நாட்டார் சென்ற மாபெரும் போரில் துன்பப்பட்டு வறுமையில் வாடிய போழ்து, அவர்தம் வாட்டந் துடைக்குப் பொருள் உதவி புரிந்தவர் அமெரிக்கர் ஆவர்.

எத்தொழிலின் வளர்ச்சிக்கும் நண்பர்களின் உதவி தேவையானது. சிறிய கடை வைக்கும் ஒருவனது வளர்ச்சிக்கு அவன் நண்பரே உதவி புரிகின்றனர். அவர்கள் அவன் கடையில் நல்ல பொருள்கள் இருப்பதாக விளம்பரப்படுத்தி, அவற்றை வாங்குமாறு தங்கள் நண்பர்களைத் தூண்டுவார்கள்; இங்ஙனம் அவரவர் நண்பர்கட்குக் கூறக் கடை வியாபாரம் நாளடைவில் பெருகுகின்றது. இங்ஙனமே புதிதாக வைத்தியப் பயிற்சி செய்யும் ஒருவன், நண்பர் பலரைப் பெற்றிருத்தல் வேண்டும். அந்நண்பர் அவனைப் பற்றிப் பலரிடம் வானளாவப் புகழ்ந்து பேசி, அவனிடம் பலரை வைத்தியம் செய்துகொள்ளத் தூண்டுவர். அதனால் வைத்தியன் விரைவில் மேனிலையை அடைவான். இங்ஙனம் ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றம் பெற நண்பர் பலரது உதவி வேண்டியிருக்கிறது. இதனைக் கருதியே, 'நண்பர்களே ஒருவனது தலைவிதியை நிர்ணயிக்கக் கூடியவர்கள். நண்பர்களைச் சேர்க்கச் சக்தியற்றவன் தன் வாழ்க்கையையே பயனற்ற தாக்கிக் கொள்கிறான்,' என்று டாக்டர் ஹின்லிஸ் என்பார் கூறியுள்ளார். 'நண்பர்களைப் பெறு; நீ கைகால்களைப் பெற்றவன் ஆவாய்' என்று பர்லே என்னும் பிரபு கூறியுள்ளது நோக்கத் தக்கது.

"உடன்பிறந்தார் சுற்றத்தார் என்றிருக்க வேண்டா;
உடன்பிறந்தே கொல்லும் வியாதி;—உடன்பிறவா

மாமலையில் உள்ள மருந்தே பிணிதீர்க்கும் ;
அம்மருந்து போல்வாரும் உண்டு."

என்னும் செய்யுளைப் படித்துப் பொருள் உணர்க.

சான்றுகள்

3. துரியோதனனுக்கு உற்ற நண்பன் கன்னன். அவன், போருக்கு முன், தான் குந்திதேவியின் மூத்த மகன் என்பதையும் பாண்டவர்கள் தம்பியர் என்பதையும் அறிந்தான் ; அறிந்தும் என்ன ? தன்னைச் சிறு வயது முதல் நண்பனாகக் கொண்டு தன்னையே முற்றிலும் நம்பிய துரியோதனனுடன் இருந்தே போர் செய்தான் ; தன் உடன் பிறந்த பாண்டவரை எதிர்த்துப் போரிட்டான் ; தம்பியான அர்ச்சுனனால் இறந்தான். அவன் அல்லனோ உண்மை நண்பன்! உண்மையான நட்புக்குக் கண்ணனையும் சான்றாகக் கூறலாம். பாண்டவர் கண்ணனையே தம் உற்ற நண்பனாகக் கொண்டனர். அவனும் அவர்களை உள்ளன்போடு நேசித்தான் ; அவர்களுக்கு உண்டான தீங்குகளைப் போக்கினான் ; போரிலும் அர்ச்சுனனுக்குச் சாரதியாக இருந்து உதவி செய்தான் ; பலமுறை பாண்டவர் இறப்பைத் தவிர்த்தான் ; 'பாண்டவர் சகாயன்' என்னும் புகழ்ப் பெயர் பெற்றான்.

முடிவு

4. ஆதலின், களங்கமற்ற நட்புப் பேரின்பந் தருவது. அத்தகைய நட்பைப் பெற முயல்வதே நமது கடனாகும். 'உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்.'

37. உழைப்பால் உயர்வு

குறிப்புகள் :—1. உழைப்பின் இலக்கணம்
2. உழைப்பால் உயர்வு பெற்றோர்
3. முடிவு

கட்டுரை

உழைப்பின் இலக்கணம்

1. உழைப்பு ஒருவனை உயர்நிலையை அடையச் செய்யும் என்பதில் ஐயம் இல்லை. எடுத்த காரியத்தில் ஊக்கம் தளரவிடாது, அது முற்றுப் பெறுமளவும் விடாது முயன்று வெற்றி காணலே உழைப்பின் உறுபயன் ஆகும். உழைப்பு இல்லாதவன் சோம்பேறி. அவன் நடைப்பிணத்துக்குச் சமம் ஆவன். அவனுக்கு உலகமே வெறுப்புக்கு இடமாகக் காணப்படும். உழைப்பவன் சுறுசுறுப்பு, பொறுமை, அடக்கம், அன்பு முதலிய நற்குணங்கள் உடையவன் ஆவான். அவன் தான் எடுத்த காரியம் முற்றுப் பெறும் அளவும் அதனால் உண்டாகும் பலவிதக் குறைகளைச் சகித்துக் காரியத்திலேயே கண்ணு யிருப்பான்.

"மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்—செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயி னார்."

என்னும் அருமையான செய்யுளுக்கு உதாரண புருஷராக விளங்குபவரே வாழ்க்கையில் வெற்றிபெற்றவர் ஆவர்.

உழைப்பால் உயர்வு பெற்றோர்

2. பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்த லாயிட் ஜார்ஜ் என்பவர் இளமையில் தம் தாய் மாமனிடம் வளர்ந்து

வந்தார். அத் தாய் மாமன் செருப்புத் தைத்துப் பிழைத்து வந்தார். லாயிட் ஜார்ஜ் கிராமப் பள்ளியில் படித்தார்; வக்கீல் குமாஸ்தாவுக்குரிய அறிவைப் பெற்று அவ் வேலை பார்த்தார்; அவ் வேலையில் இருந்தபடியே உழைத்துப் படித்து வக்கீல் தேர்வில் தேறி வக்கீல் ஆனார்; விரைவில் தமது தொழிலில் புகழ் பெற்றார்; பேச்சில் வல்லவர் ஆனார்; அரசியலில் பங்குகொண்டார்; சொற்பொழிவுகள் பண்பட நடத்திப் புகழ்பெற்றார்; பார்லிமெண்ட் தேர்தலில் நின்று வெற்றி பெற்றார்; பார்லிமெண்ட் உறுப்பினர் ஆனார். இவர், பின்னர் நாளடைவில் ஆங்கில மக்களின் அன்புக்குப் பாத்திரர் ஆகிப் பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். சென்ற மஹா யுத்தத்தின் போது இவரே பிரிட்டிஷ் பிரதம மந்திரியாக இருந்தவர். இன்றும் இவர் தமது தள்ளாத வயதில் அரசியல் வாதியாக இருந்து வருகிறார். இவர் உழைப்பால் உயர்வடைந்தவர் அல்லரோ?

தாமஸ் பாட்டா என்பவர் செக்கோஸ்லோவேகியா நாட்டினர்; செருப்புத் தைத்துப் பிழைத்து வந்த பெற்றோர்க்குப் பிறந்தவர். இவர் இளமையில் செருப்புகளை வீடு வீடாகச் சென்று விற்றுவந்தார். நாளடைவில் இவரது தொழில் முற்பட்டது. இவர் தொழிற்சாலை ஒன்றை அமைத்தார். அத் தொழிற்சாலை இவரது இடைவிடா ஊக்கத்தாலும் உழைப்பாலும் முன்னேற்றம் அடைந்தது. இவர் பெரும் பணக்காரர் ஆனார். இவர் கடைகள் உலகில் பல இடங்களில் உள்ளன. அவ்விடங்கட்கு இவர் ஆகாய விமானத்திற்றான் பறந்து செல்வது வழக்கம். இவரிடம் சில வான ஊர்திகள் உண்டு. இவர் செருப்பரசர் என்று மேனாட்டாரால் அழைக்கப்பட்டார். உழைப்பு அளிக்கும் உயர்வைப் பாருங்கள்!

அமெரிக்கக் குடியரசுத் தலைவராக இருந்து நீக்ரோ வரின் அடிமைச் சட்டத்தை ஒழித்த பெரியாராகிய ஏப்ர ஹாம் லிங்கன் என்பவர் எளிய விறகு வெட்டியின் பிள்ளை. அவர் விறகு வெட்டி ஓய்வெடுக்கும் போதும் படித்துக் கொண்டு இருப்பார்; விளக்கு இல்லாதிருந்தும் அடுப்பு வெளிச்சத்தில் தாமாகப் பல நூல்களைக்கற்றார்; கரி தள்ளும் கருவியில் கணக்குப் போட்டார்; ஓடம் ஓட்டினார்; கடையில் கையாளாக இருந்தார்; கிராமத் தபால் அதிகாரியாக இருந் தார்; வக்கீலானார்; மாகாணச் சட்ட சபைக்கு உறுப்பினர் ஆனார்; அமெரிக்கக் காங்கிரஸ் மஹா சபையில் உறுப்பினர் ஆனார்; இறுதியில் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக் கப்பட்டார்; இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டார். என்ன வியப்பு! குடிசையிற் பிறந்த லிங்கன், தமது இடை விடா உழைப்பால் குபேர நாட்டுத் தலைவராக வந்தார். 'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்னும் பட்டி னத்தடிகள் பொன்னுரை சிந்திக்கற்பாலது.

முடிவு

3. இங்ஙனம் உழைப்பால் உயர்வு பெற்றவர் பல ராவர். நமது நாட்டிலும் சர். தி. முத்துசாமி ஐயர், சர். சி. வி. இராமன், வித்யா சாகரர், கார்வே, கோகலே முதலியவர் உழைப்பால் பெயர் பெற்றவர் ஆவர். இப் பெரியார்களின் வரலாறுகளை உதாரணமாகக் கொண்டு, உழைத்து உழைத்து உயர்வடைதலே நமது சிறந்த கடமை யாகும்.

38. கங்கை கொண்ட சோழன்

[நீ படித்துள்ள தமிழரசர் வரலாறுகளுள் உன் உள்ளம் கவர்ந்த ஓர் அரசனின் வரலாற்றைப்பற்றிக் கட்டுரை ஒன்று வரைக.]

குறிப்புகள் :—1. சோழரும் சோணாடும்
2. இராஜேந்திரன் போர்ச் செயல்கள்
3. அரசியல்
4. முடிவு

கட்டுரை

சோழரும் சோணாடும்

1. சோழநாடு என்பது தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களைக்கொண்ட நிலப்பகுதி. இதனை ஆண்டவர் சோழர். சோழர் படைப்புக் காலந் தொட்டு மேம்பட்டு வந்த பழங்குடி மரபினர். இவர் முற்காலச் சோழர், பிற்காலச் சோழர் என இருவகைப்படுவர். முற்காலச் சோழருள் சிறப்புடையவன் கரிகாலன். அவன் இமயம்வரை படை யெடுத்துச் சென்று வடநாட்டரசர்பால் மரியாதை பெற்று மீண்டவன்; இலங்கையை வென்றவன். பிற்காலச் சோழருள் சிறந்தவர் இருவர்; ஒருவன் இராஜராஜன்; மற்றவன் அவன் மகனான இராஜேந்திரன். இவன் காலம் கி. பி. 11-ஆம் நூற்றாண்டு. இராஜராஜன் சோழநாட்டை விரிவாக்கி ஆண்டவன். இராஜேந்திரன் சோணாட்டை மேலும் விரிவாக்கிச் சோழப் பேரரசனாக இருந்து ஆண்டவன்.

இராஜேந்திரன் போர்ச் செயல்கள்

2. இராஜேந்திரன் சேரனையும் பாண்டியனையும் வென்றான். அவர்கள் இவனது பேரரசை ஏற்றுக்கொண்டனர்.

சோழன் இலங்கை மீது படையெடுத்துச் சென்று, வட இலங்கைப் பகுதியைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திக்கொண்டான்; தமிழரசரை வென்றதால் 'மும் முடிச் சோழன்' என்னும் விருது பூண்டான். கங்கைநாடு, வேங்கி நாடு, இடைதுறைநாடு இவற்றை வென்று கைக்கொண்டான்; வடக்கே துங்கபத்திரை வரையுள்ள நாட்டை அடிப்படுத்தினான்; மேலைச் சளுக்கியருடன் போரிட்டு ஜயஸ்தம்பம் நாட்டி மீண்டான். இப் பெரு வேந்தன் வடநாட்டின்மீது படையெடுத்துச் சென்றான்; ஒரிஸ்ஸா, வங்காளம், மத்திய மாகாணம் முதலிய இடங்களில் இருந்த அரசர்களை வென்றான்; அவர்கள் தலைமீது கங்கை நீர் நிறைந்த குடங்களை ஏற்றித் தன் நாடு கொண்டுவந்தான்; அதனால் 'கங்கை கொண்ட சோழன்' என்னும் அழியாப் புகழ் பெற்றான். பின்னர் இவன் கடற்படையைச் செலுத்தி, பர்மாவையும் மலேயா தீபகல்பத்தையும் நிக்கோபர் தீவுகளையும், சுமத்ரா தீவில் உள்ள சில முக்கிய நிலப் பகுதிகளையும் வென்றான். கடற்படையைச் செலுத்திக் கடல் கடந்த நாடுகளை வென்ற புகழுடைய சோழன் இவன் ஒருவனே ஆவன்.

அரசியல்

3. இவன் தான் வென்ற நாடுகளில் தன் பிள்ளைகளையும் பொறுப்புள்ளவரையும் மாகாணத் தலைவர்களாக நியமித்தான்; நாடுகளைப் பிரித்து எல்லைகளில் தரைப்படைகளை வைத்து அமைதியை நிலை நாட்டினான். இவனிடம் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை, கப்பற்படைகள் இருந்தன. இவனது நாடு மண்டலங்களாகவும், மண்டலங்கள் கோட்டங்களாகவும், வளநாடுகளாகவும் பிரிக்கப்பட்டுப் பல அதிகாரிகளின் ஆட்சியில் விடப்பட்டிருந்தது. அரசன் ஆறில் ஒரு கடமையையே குடிகளிடம் பெற்றான். அரசன்

அமைச்சர், சேனைத்தலைவர், புரோகிதர், தூதுவர், சாரணர் என்னும் ஐம்பெருங் குழுவை ஆலோசனை கேட்டான். வரி வசூலிப்பவர், நியாயம் வழங்குபவர், அரசாங்கக் கட்டளைகளை நிறைவேற்றுவோர் முதலிய பல உத்தியோகஸ்தர் இருந்தனர். உத்தியோகஸ்தர் 'ஏனாதி, காவிதி, மூவேந்த வேளான்' என்னும் பட்டம் பெற்றிருந்தார்கள். கிராம சபைகள் தம் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி வந்தன. அக் காலத்தில் நாணயங்கள் பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றால் ஆனவை. எடுத்தல், முகத்தல், நீட்டல் அளவைகள் பல இருந்தன. வைத்திய சாலைகள் நாட்டின் பல பாகங்களில் இருந்தன. கல்விச் சாலைகள் பல அரசனால் ஆதரிக்கப்பட்டன. அரசன் தமிழ் மொழியையும் வடமொழியையும் ஆதரித்தான்; சைவ - வைணவ - பௌத்த கோவில்கட்கு வேண்டிய உதவி செய்தான்; 'கங்கை கொண்ட சோழபுரம்' என்னும் புதியதொரு நகரத்தைத் திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் நிருமித்தான்; அங்கொரு சிவன் கோவிலை வியப்புறத் தக்கவாறு கட்டிப் புகழ் பெற்றான். சோழவேந்தன் மனைவியர் பலரையும் மக்கள் பலரையும் உடையவன். எல்லா மதங்களிடமும் ஒத்த அன்புடையவன் எனினும், அவன் சைவன் ஆவன்.

முடிவு

4. இப் பேரரசன் வீரப் பிரதாபங்களைக் கொண்டு, பண்டைத் தமிழரசர் போர்த்திறமும் ஆட்சி முறையும் பிறவும் நன்கறியலாம் அன்றோ?

39. கங்கை கொண்ட சோழபுரம்

[நீ நேரிற்கண்ட சரித்திர சம்பந்தமான ஓர் இடத்தைப் பற்றிக் கட்டுரை ஒன்று வரைக.]

குறிப்புகள் :—1. இட அமைப்பு
2. கோவில்
3. ஏரி
4. முடிவு

கட்டுரை

இட அமைப்பு

1. கி. பி. 11-ஆம் நூற்றூண்டில் தமிழ்நாட்டின் பெரும் பகுதியை அடிப்படுத்தாண்ட இராஜேந்திர சோழன், தன் கங்கை விஜயத்துக்குப் பிறகு கட்டப்பட்ட நகரம் 'கங்கை கொண்ட சோழபுரம்' என்பது. இது, திருச்சிராப்பள்ளி ஜில்லாவில் உடையார்பாளையம் தாலூகாவில் இப்பொழுது ஒரு சிற்றூராக இருக்கின்றது. ஆயினும், இவ்வூர் ஒரு காலத்தில் பெரும் நகரமாக விளங்கினது என்பதை இதைப் பார்ப்பவர் எவரும் அறிதல் கூடும். அக்காலத்தில் இந் நகரத்தின் பல பாகங்கட்கும் இடப்பட்டிருந்த பெயர்களே இப்பொழுதும் சுற்றுப்புறக் கிராமங்கட்கு வழங்கி வருகின்றன. இவ்வூர் இப்பொழுது காடும் செடியும் வளர்ந்து பாழாய்க் கிடக்கிறது.

கோவில்

2. இன்று இந்நகர எல்லையில் காணப்படுபவை பெரிய சிவன் கோவிலும், பெரிய ஏரியுமே ஆகும். இராஜேந்திரன் கட்டிய கோவில் அவன் தந்தையான இராஜராஜன் தஞ்சாவூரில் கட்டிய பிருஹதீஸ்வரர் பெரிய கோவிலைப் போன்றதே

ஆகும். இதன் பெயர் 'கங்கை கொண்ட சோழீஸ்வரம்' ஆகும். இஃது ஆறு கோபுரங்களைப் பெற்றிருந்தது; சிற்ப வேலைப்பாடு சிறக்க அமைந்துள்ளது. இக்கோவிலின் பெரும் பகுதி இப்பொழுது இடிந்து கிடக்கிறது. இதன் வெளிப் புறத்து மதில் காணப்படவில்லை. கிழக்குக் கோபுரத்தைத் தவிரப் பிற கோபுரங்கள் இடிந்துவிட்டன. இப்பொழுது காட்சி அளிப்பவை கர்ப்பக்கிருஹமும் அதனைச் சுற்றியுள்ள பிராகாரமுமே ஆகும். கோவில் விமானம் தஞ்சைப் பெரிய கோவில் விமானத்தைப் போலவே அமைந்துள்ளது. இது நூறடிச் சதுரமாக அமைந்துள்ளது; ஒன்பது அடுக்குகளை உடையது; முதல் இரண்டு அடுக்குகள் நிமிர்ந்து ஒன்றன் மேல் ஒன்றாக இருக்கின்றன. மற்றவை மேலே போகப் போகச் சிறுத்துச் சரிவாகச் செல்கின்றன. விமானத்தின் நாற்புறங்களிலும் வாசல்களும் மாடங்களும் உள்ளன. விமானத்தில் அழகான வேலைப்பாடு கொண்ட பதுமைகள் அமைந்துள்ளன. உச்சியில் ஒரே கல்லால் ஆன சிகரம் இருக்கின்றது. அதன் கலசம் இப்பொழுது காணப்பட வில்லை. இந்த விமானம் மாத்திரம் 170 அடி உயரம் உள்ளது. கோவிலின் மூல லிங்கம் ஒற்றைக் கல்லால் அமைக்கப் பட்டுப் பெரியதாக இருக்கிறது. அஃது இப்பொழுது உச்சியில் பிளப்புண்டு கிடக்கிறது; இடியால் பிளப்புண்டதென அவ்வூரார் கூறுகின்றனர். தஞ்சைப் பெரிய கோவிலைப் பாடிச் சிறப்பித்த கருவூர்த் தேவர் என்னும் சைவப் பெரியார் இக்கோவிற் பெருமானையும் ஒரு பதிகத்தால் போற்றியுள்ளார். அப்பதிகம் திருவிசைப் பாவில் உள்ளது.

ஏரி

3. இராஜேந்திரன் வெட்டுவித்த ஏரி 'சோழ கங்கம்' என்பது. இஃது இப்பொழுது 'பொன்னேரி' என்று வழங்

கப்படுகிறது. இது நகரத்துக்கருகே இப்பொழுது மணல் கொண்டு கிடக்கிறது. இது தெற்கு வடக்காக 16 மைல் நீளமுள்ளதாக இருந்தது; பலம் பொருந்திய கரையைப் பெற்றிருந்தது. கொள்ளிடத்திலிருந்து இதற்குத் தண்ணீர் வர 60 மைல் நீளமுள்ள கால் வெட்டப்பட்டிருந்தது. வடக்கே வெள்ளாற்றிலிருந்து நீர்வரக் கால்வாய் இருந்தது. இக் கால்வாய்களின் கரைகள் இன்றும் காணப்படுகின்றன. சமதளமான இவ்விடத்தில் இவ்வளவு பெரிய ஏரியை அமைத்துப் பலமான கரைகளைக் கட்டிப் பள்ளத்திலிருந்து மேட்டில் உள்ள இவ்வேரிக்கு நீரைக் கொண்டு வரச் செய்த சோழன் ஆற்றலை எவ்வாறு புகழ்வது? இந்தியாவில் இவ்வேரியே வியக்கத் தக்கதாகும். மிக்க புகழ்பெற்ற போஜபுரத்து ஏரியும் இதற்கு இணையாகாது. தென் ஆற்காடு ஜில்லாவில் உள்ள 'வீராணம்' ஏரியே, இதன் வடிகாலாக இருந்ததெனின், இதன் சிறப்பை என்னென்பது! இஃது அக்காலத்தில் சோழநாட்டுக்கு எத்துணைச் சேவை செய்து வந்ததென்பதை யாரே விளக்க வல்லார்! சோணாட்டை வளமிக்க நாடாகச் செய்து கடல் போல் காட்சி அளித்த இவ்வேரி, இன்று பொட்டலாக இருப்பதைக் காணத் தமிழர் உள்ளம் பதைக்கின்றது அன்றோ?

முடிவு

4. நாட்டில் பக்தி மார்க்கத்தையும் வீரத்தையும் அரசியல் திறமையையும் நகரங்களையும் ஏரிகளையும் ஆக்குந் திறனையும் நிலைபெறச் செய்த இப்பேரரசனைத் தமிழ் மக்கள் மறத்தல் இயலுமோ?

40. அறச்செயல்

குறிப்புகள் :—1. 'அறம்'-யாது ?
2. நம் நாட்டு அறச்செயலாளர்
3. மேனாட்டு அறச்செயலாளர்
4. முடிவு

கட்டுரை

'அறம்'-யாது ?

1. 'அறம்' என்பது 'தருமம்' எனப் பொருள் படும். மனிதன் தன் தேவைக்கு மேற்பட்டதை ஏழை எளியவர்க்கு வழங்குதலே அறமாகும். பலர்க்கும் பயன் படத்தக்க சத்திரங்களைக் கட்டுதல், அன்ன சத்திரங்களை அமைத்தல், பள்ளிக்கூடங்களை வைத்துக் கல்வி பரப்பல், அநாதை விடுதிகளை வைத்தல், வைத்திய சாலைகளை வைத்து நடத்தல் முதலியன அறச்செயல் ஆகும். இத்தொண்டுகள் செய்தவரே உலகம் உள்ளளவும் புகழை நிலை நிறுத்தினோர் ஆவர்.

நம் நாட்டு அறச் செயலாளர்

2. நமது தமிழ்நாட்டில் மணலி சின்னையா முதலியார் என்பவர் பெருஞ் செல்வர். அவர் ஏழை மாணவர்க்கென்று அன்ன சத்திரம் ஒன்றைச் சென்னையில் வைத்துள்ளார். அதில் ஏழை மாணவர் பலர் உணவுண்டு வருகின்றனர். அப் பெரியார் காசி முதல் இராமேஸ்வரம் வரை வழி நெடுகப் பல சத்திரங்கள் கட்டியுள்ளார். அவற்றின் செலவுக்குப் போதிய நிலங்களை மானியமாக விட்டுள்ளார். பச்சையப்ப முதலியார் என்னும் பிரபுவின் பெயரால் சென்னையில் ஒரு கல்லூரியும், உயர்கலாசாலையும், காஞ்சிபுரம்-சிதம்பரம் என்

னும் இடங்களில் உயர்கலாசாலைகளும் நடுத்தரக் கலாசாலைகளும் நடைபெறுகின்றன. அவர் பெயரால் கட்டப்பட்டுள்ள சத்திரங்கள் பலவாகும். அவற்றில் இன்றளவும் அன்ன தானம் நடைபெற்று வருகின்றது. திருநெல்வேலி ஹிந்து கல்லூரிக்குத் திரவியம் பிள்ளை என்னும் பெரியவர் இலட்ச ரூபாய் உதவியுள்ளார். இங்ஙனம் நம்நாட்டிலும் அறச்செயல் செய்து புகழ்பெற்றவர் சிலராவர்.

மேனாட்டு அறச் செயலாளர்

3. ஆனால் மேனாடுகளில் சிறப்பாக அமெரிக்காவில் அறச்செயல் புரியும் பெரு மக்கள் பலராவர். அவர்கள் உலக முழுவதும் தம் அறச் செயல் பரவ ஏற்பாடு செய்துள்ளனர். அவருள் சிறந்தவர் இராக்பெல்லரே ஆவர். இவர் 165 கோடி ரூபாய்க்கு மிகுதியாகவே தருமஞ் செய்துள்ளார்; பொது மக்கள் சுகாதாரம், வைத்திய வசதி, கல்வி வசதி முதலிய வற்றுக்கெனப் பெருந்தொகை ஒதுக்கினர். இவர் விருப்பப் படி இக்காரியங்களை மேற்பார்க்கப் பலர் ஆங்காங்கே நியமிக் கப்பட்டுள்ளார்; அமெரிக்காவில் இவரது அறநிலையம் ஒன் றுண்டு.

165 கோடி ரூபாயிலிருந்து ஆண்டுதோறும் வரும் வட்டியைக் கொண்டே இந்நிலையத்தார் மேற்சொன்ன அறங்களைக் கவனிக்கின்றனர்; அவையன்றி மலேரியா, கொக்கிப் புழுநோய் முதலிய கொடிய நோய்களை நீக்க லட்சக்கணக்காகப் பணம் செலவு செய்கின்றனர். இவ்வற நிலையத்துப் பணவுதவியால் உலகத்துப் பிற நாடுகளில் பல சர்வகலாசாலைகளும் உயர்தர வைத்தியசாலைகளும் சுகாதாரச் சொற்பொழிவுகளும் நடைபெறுகின்றன.

கார்னகி என்னும் அமெரிக்கர் 105 கோடி ரூபாய் தருமம் செய்துள்ளார். இவர் உலகத்துப் பல நாடுகளில் மூவா

யிரம் நூல் நிலையங்களை ஏற்படுத்தியுள்ளார்; கிறித்தவக் கோவில்களில் பயன்படத்தக்க எண்ணாயிரம் இசைக்கருவி களை உதவியுள்ளார். இவர் தமது சொத்தைக் கண்காணித்து, அதன் வட்டியைக் கொண்டு இவ்வறச் செயல்கள் நடத்திவர அறநிலையம் ஒன்றை அமைத்துள்ளார். அது 'கார்னகி-கார்ப் பொரேஷன்' எனப் பெயர் பெறும்.

மில்டன் எஸ் ஹர்ஷே என்னும் பிரபு ஒருவர் 'ஹர்ஷே' என்னும் இடத்தில் கைத்தொழிற்சாலை ஒன்றும், மாணவர் சாப்பாட்டு விடுதி ஒன்றும் அமைத்து இவை நடந்துவரப் பன்னிரண்டு கோடி ரூபாய் உதவியுள்ளார். அமெரிக்காவில் 'ஏல்' என்னும் இடத்தில் ஒரு சர்வகலாசாலை இருக்கிறது. ஹார்க்னேஸ் என்னும் பிரபு அச்சர்வகலாசாலைக்கு முப்பது லக்ஷம் ரூபாய் உதவியுள்ளார். அவரே 'ஹார்வார்ட்' சர்வ கலாசாலை மாணவர் விடுதிக்காக மூன்று கோடி அறுபது லட் சம் ரூபாய் அளித்துள்ளார்; வேறு பல நற்காரியங்கட்கும் அவர் ஏராளமாகப் பொருள் உதவி செய்துள்ளார். ஓர் அமெரிக்கப் பெண்மணியார் குருடர் படிப்புக்காகப் பதி னேழு லக்ஷம் ரூபாய் உதவியுள்ளார். வேறோர் அம்மையார் உடற்பயிற்சி அபிவிருத்திக்காகத் தொண்ணூறு லக்ஷம் ரூபாய் அளித்துள்ளார். இங்ஙனம் அமெரிக்கர் பலர் பற்பல துறைகளில் ஏராளமாகப் பொருள் உதவி செய்திருக்கின் றனர்; இன்றும் செய்து வருகின்றனர்.

முடிவு

4. இப்பெரியார்களைப் பின்பற்றி, நாட்டுக் கனவான் கள் தொழிற்சாலைகள், அநாதை விடுதிகள், தாழ்த்தப்பட் டார்க்குக் கல்வி, நகர அமைப்பு, பள்ளிகள், உணவுச் சாலை கள் முதலியன ஏற்படுத்துவராயின், இந்தியர் சமூகம் விரை வில் முன்னேற்றம் பெறும் அன்றோ?

41. அற்பம் அற்பம் அன்று

குறிப்புகள் :—1. அற்பம்-எது ?
2. சான்றுகள்
3. முடிவு

கட்டுரை

அற்பம் எது ?

1. நாம் நமது வாழ்க்கையில் பல சம்பவங்களைச் சிறியவை என்றும் சாதாரணமானவை என்றும் அலக்ஷியப் படுத்துகின்றோம். ஆராய்ந்து பார்ப்பின், அவை புறக்கணிக்கத் தக்கவை அல்ல, அற்பமானவை அல்ல என்பதை உணரலாம். எந்தச் சிறு செயலும் அற்பமானதன்று; எந்தச் சிறிய பொருளும் அசட்டை செய்யத் தக்கதன்று. காலில் குத்தும் சிறிய முள்ளை அலக்ஷியம் செய்துவிடின், அஃது எவ்வளவு துன்பத்துக்குக் காரணமாகிறது என்பதை அறியாதார் யார்? சிறிய பல் வலிக்கிறது என்று அசட்டையாக இருப்பதால், அதன்பின் விளைவு யாதாகிறது? காதுவலி முடிவில் எவ்வளவு துன்பத்தை உண்டாக்கி விடுகிறது? கேவலம் ஈ என்று மதித்து அதனை உணவின்மீது உட்கார விடுவதால் மனிதர்க்கு உண்டாகும் நோய்கள் எத்தனை? அவற்றைப் போக்க மனிதன் படும் கஷ்டம் எவ்வளவினது! இவற்றை எல்லாம் யோசித்தால்தான் 'அற்பம் அற்பம் அன்று' என்பதை நன்கறியலாம்.

சான்றுகள்

2. 'ஜிப்சிமாத்' என்பவை ஒருவகைப் புழுக்கள். அவற்றைக் கொண்டு பட்டு உற்பத்தி செய்ய விரும்பிய அமெரிக்கர் ஒருவர் அவற்றைப் பிரான்சு தேசத்திலிருந்து கொண்டு சென்றார்; தம் மேஜைமீது அவற்றை வைத்துச் சோதித்

துக் கொண்டு இருந்தார். அருகில் சன்னல் திறந்திருந்தது. அப்பொழுது அவர், யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டு எழுந்து சென்றார்; திரும்பி வந்து பார்த்தார். புழுக்கள் காணப்படவில்லை. அவை எங்கோ காற்றால் கொண்டு செல்லப்பட்டன. பாவம்! அவர் மனம் வருந்தி வாளா இருந்து விட்டார். இரண்டு ஆண்டுகள் கழிந்தன. அவரது இல்லத்தைச் சுற்றியிருந்த பூஞ்சோலையிலும் காட்டிலும் இருந்த இலைகள் பட்டுவிட்டன; மரங்கள் இலைகள் இல்லாது, பட்ட மரங்களைப்போல நின்றன. அமெரிக்கர் பரிசோதித்துப் பார்த்தார்; இரண்டு ஆண்டுகட்குமுன் காணமற்போன புழுக்களாற்றான் இலைகள் பட்டுப் போயின என்பதை உணர்ந்தார். அப்புழுக்களை அழித்து அச்சோலையையும் காட்டையும் தூய்மையாக்க ஆயிரக்கணக்கான டாலர்கள் செலவாயின. அற்ப உயிர்களாகிய புழுக்களால் உண்டான நஷ்டத்தைப் பாருங்கள்! அவர் ஜன்னலை மூடிச் சென்றிருந்தால், இவ்வளவு நஷ்டம் உண்டாகி இராதன்றோ?

அமெரிக்காவில் ஒரு பெண்மணி பன்றியை வளர்த்தாள். அப்பன்றியை ஓர் ஆடவர் கவர்ந்து கொண்டார்; தாம் வளர்த்துவந்த பன்றியைக் கொன்று தின்றார். அவர் கொன்று தின்ற பன்றி தன்னுடையதென்று அப்பெண் வழக்குத் தொடர்ந்தாள். இவ்வழக்கு ஒவ்வொரு நீதி மன்றமாகச் சென்று, இறுதியில் அமெரிக்கக் காங்கிரஸ் சபைக்குச் சென்றதாம். அங்கு இது பற்றிய விவாதம் ஏழு நாட்கள் நடந்ததாம். இரு கட்சிகள் உண்டாயின. ஒன்று பெண்ணின் பக்கமும் மற்றொன்று ஆடவர் பக்கமும் பரிந்து வாதித்தன. இவ்வாதம் ஓராண்டு நீடித்ததாம். என்ன வேடிக்கை! கேவலம் ஒரு பன்றியால் காங்கிரஸில் இரண்டு கட்சிகள்.

இன்று உலகில் அற்பமாகக் கருதப்படுவன ஒரு காலத்தில் பெருமையாகக் கருதப்பட்டவையேயாகும். காகிதப்

பென்ஸிலினது முனையில் இரப்பர் வைத்தவனது அறிவைப் பாராட்டி இரண்டு லக்ஷ ரூபாய் பரிசளிக்கப்பட்டது. குதிரைக் குளம்பின் அடிச்சுவடு பூமியில் பதிந்திருந்ததைக் கண்ட பின்னரே ஜான் கூடன்பேர்க் என்பார் அச்செழுத்துகளைக் கண்டு பிடித்தாராம். அஃது அற்பம் என விட்டிருந்தார் ஆயின், அவருக்கு அச்செழுத்தைப்பற்றிய எண்ணம் உண்டாகியிராதன்றோ? இன்று அச்செழுத்துகள் உலகிற்குச் செய்யும் சேவையை அளவிட்டு உரைக்கக் கூடுமோ? கேவலம் குதிரைக் குளம்பின் சுவடுகளால் உண்டான பெரிய வேலைப்பாட்டைப் பாருங்கள்! 'அற்பம் அற்பம் அன்று' என்பதற்கு இதைவிடச் சான்று வேறு வேண்டுமோ?

மரத்திலிருந்து கீழ்நோக்கி விழுந்த ஆப்பிள் பழத்தைக் கண்ட பிறகன்றோ சர். ஐஸக் நியூட்டன் 'பூமிக்கு இழுக்கும் சக்தி உண்டு' என்பதைக் கண்டறிந்து புகழ்பெற்றார்! கேவலம் சிலந்தி ஒன்று ஆறுமுறை முயன்று குறிப்பிட்ட இடத்திற்குத் தாண்டியதைக் கண்ட பிறகு தானே இராபர்ட் ப்ரூஸுக்குத் தைரியம் உண்டாயிற்று. அவர் ஏழாம் முறை வெற்றி பெற்றார்! அவர், சிலந்தி கற்பித்த பாடத்தால் அன்றோ வெற்றியுற்றார்! இராமன் விளையாட்டாக உண்டைவில் அடித்தது வினையாக முடியவில்லையா? கூனி அந்தப் பகைமையை மனத்திற் கொண்டு கைகேயியைத் தூண்டி, இராமனைக் காட்டிற்கு விரட்டிவிட்டாள் அல்லவா?

முடிவு

3. ஆதலின், எதனையும் அற்பம் என்றோ, எவரையும் அற்பமானவர் என்றோ நாம் அலக்ஷியம் செய்தல் ஆகாது. 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்பதை நாம் நினைவிற்கோடல் வேண்டும்.

42. நமது தாய்மொழி

குறிப்புகள் :—1. தமிழ் மொழி
2. தமிழ்ச் சங்கங்கள்
3. தமிழ் நூல்கள்
4. நமது கடமை

கட்டுரை

தமிழ் மொழி

1. உலகத்தில் பல திறப்பட்ட மக்கள் வசிக்கின்றனர். அவர்கள் பல திறப்பட்ட மொழிகளைப் பேசுகின்றனர். இந்தியாவில் இருநூற்றுக்கு மேற்பட்ட மொழிகள் உண்டு. அஃதாவது, இருநூறு வகைப்பட்ட பழக்க வழக்கமுடைய மக்கள் இருக்கின்றனர். நமது தாய் மொழி தமிழ். எனவே, நாம் தமிழர் எனப்படுவோம். இந்தியாவில் பழைய மொழிகள் இரண்டு: ஒன்று வட மொழி எனப்படும் சமஸ்கிருதம்; இரண்டாவது தென் மொழி எனப்படும் தமிழ். வட மொழியிலிருந்து கிளைத்த மொழிகள் பல; அவை போலத் தமிழிலிருந்து கிளைத்த மொழிகள் பல.

தமிழ்ச் சங்கங்கள்

2. இத் தமிழைப் பழங்காலத் தமிழரசர் போற்றி வளர்த்தார்கள்; சேர சோழ பாண்டிய அரசர்கள் பல புலவர்களை ஆதரித்தார்கள்; புலவர்கள் கூடித் தமிழ் நூல்கள் ஆராய்ந்த இடங்கள் 'கழகங்கள்' என்றும் 'சங்கங்கள்' என்றும் கூறப்பட்டன. மூவேந்தரும் கழகங்களை அமைத்துத் தமிழை வளர்த்தனர். ஆனால், பாண்டியரே அரும்பாடு பட்டுத் தமிழை விருத்தி செய்தனர். அவர்கள் மூன்று சங்கங்களைக் கூட்டினார்கள்: முதற் சங்கம் இருந்த

தென் மதுரை கன்னியா குமரிக்கும் தெற்கே இருந்த நிலப் பரப்பில் இருந்ததாம். அம் முதற் சங்கத்தில் அகத்தியர் என்பவரே பெரும்புலவராக இருந்தனர். அவர் 'அகத்தியம்' என்னும் தமிழ் இலக்கண நூலைச் செய்தனர். அப் பழந்தமிழ்ப் பாண்டி நாடு அழிந்த பின், இரண்டாம் தமிழ்ச் சங்கம் கிழக்குக் கடற்கரையில் அலைவாய் என்னும் இடத்தில்—பாண்டியன் தலைநகரில் கூடியதாம். அப்போது தொல்காப்பியர் என்பவர் பெரும் புலவராம். அவர் 'தொல்காப்பியம்' என்னும் இலக்கண நூலைச் செய்தார்; வேறு புலவர் பலர் பல்வேறு நூல்களைச் செய்தனராம். அலைவாய் கடல் கொண்டபோது, தொல்காப்பியம் ஒழிந்த இரண்டாம் தமிழ்ச் சங்க நூல்கள் அழிந்து விட்டனவாம். பின்னர்ப் பாண்டியர் இப்போதைய மதுரையைத் தலை நகரமாகக் கொண்டனர். அங்குத்தான் கடைச் சங்கம் கூடியது. அச் சங்கத்தில் நக்கீரர் என்பவரே பெரும்புலவர். வேறு புலவர் பலரும் இருந்து பல பாடல்கள் பாடியுள்ளனர். இக் கடைச் சங்கத்தின் கடைசிக் காலம் கி. பி. 3-ஆம் நூற்றாண்டு எனக் கூறலாம். முதல் இரண்டு சங்கங்களில் செய்யப்பட்ட தமிழ் நூல்கள் இப்போது கிடைக்கவில்லை. தொல்காப்பியம் ஒன்றும் கடைச் சங்க நூல்களுட் சிலவுமே இன்றுள்ளவை.

தமிழ் நூல்கள்

3. தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள், செய்யுள், அலங்காரம் என்னும் ஐவகை இலக்கணப் பகுதிகளைக் கூறும் நூல். 'பொருள்' என்னும் பகுதியில் அறம்-பொருள்-இன்பம்-வீடு என்னும் நால்வகைப் புருஷார்த்தங்களும் கூறப்பட்டுள்ளன. இப் பகுதியால் பண்டைத் தமிழர் மதம், கலை, அறிவு, போர், அரசியல், நாகரிகம், வாழ்க்கை முறை முதலியன அறியலாம். இந் நூலுக்குப்

பிற்பட்ட காலத் தமிழர் செய்திகளைக் கடைச் சங்க நூல்கள் எனப்படும் அக நானூறு, புற நானூறு, நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறு நூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல், கலித் தொகை என்னும் எட்டுத் தொகை நூல்களைக்கொண்டு நன் கறியலாம். திருக்குறள் என்பது தமிழர் கைக்கொண் டிருந்த நீதிகளைப் புகல்வது. அஃது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றையும் பற்றிப் பேசுவது. இன்றும் தமிழர் அதனைத் தம் வேதம் எனப் போற்றுகின்றனர். அதனைச் செய்தவர் திருவள்ளுவர். இஃதன்றிப் பதினேழு சிறு நூல்கள் வேறு உள்ளன. அவற்றுள் பல உலக நீதி களைப் புகட்டுவன; சில இல் வாழ்க்கையைப் பற்றிப் பேசு வன. இவை அல்லாமல் தேவாரம், திருவாசகம், பெரிய புராணம், திருமுறைப் பிரபந்தங்கள், சைவ சாத்திரங்கள் எனப்படும் சைவ நூல்களும்; நாலாயிரப் பிரபந்தம், அஷ் டப் பிரபந்தம் முதலிய வைணவ நூல்களும்; சித்தர்கள் பாடியருளிய வைத்திய வாதயோக ஞான சாத்திர நூல்களும்; கம்ப இராமாயணம், வில்லி பாரதம், கந்த புராணம், திரு விளையாடற் புராணம் போன்ற வரலாற்று நூல்களும்; வேறு நூற்றுக் கணக்கான சிறு பிரபந்தங்களும் தமிழில் உள்ளன. ஆங்கில ஆட்சிக்குப் பின்னர் உண்டான வசன நூல்கள் பல தமிழில் உண்டு.

நமது கடமை

4. எனவே, நாம் தமிழில் பல நூல்களைப் பெற்றிருக் கிறோம். நாம் அவற்றைப் படித்து, மொழிப் பற்றும் நாட் டுப் பற்றும் சிறக்கப் பெறுதல் வேண்டும்; உயிர் போவதா யினும் தாய் மொழிக்கு ஊறு நேரவிடலாகாது; அதனைப் போற்றி வளர்த்தல் அதன் பிள்ளைகளாகிய நமது கடமை அன்றோ?

43. விடுமுறையிற் செய்த வேலைகள்

குறிப்புகள் :—1. எனது பிரயாணம்
2. யான் கண்டவை
3. முடிவு

கட்டுரை

எனது பிரயாணம்

1. நான் தசரா விடுமுறையில் சென்னை சென்றேன். அங்கு என் மாமா இரயில்வே உத்தியோக நிலையத்தில் வேலை பார்க்கிறார். நான் எழும்பூரை அடையும்வரையில் இரயில் பிரயாணத்தில் கண்ட காட்சிகள் பல. தஞ்சை முதல் சென்னைவரை இடையில் உள்ள ஊர்கள் பல; நகரங்கள் பல; கோயில்கள் பல; ஆறுகள் பல; அற்புதக் காட்சிகள் பல. அழகிய கிராமங்கள் பல இருக்கின்றன. வழி நெடுகப் பச்சைக் கம்பளம் பரப்பினாற் போல அமைந்துள்ள பசிய வயல்கள் பல; வானுறவோங்கி மேக மண்டலத்தைத் தொடுவன போல நிமிர்ந்துள்ள கோயிற் கோபுரங்கள் பல. கும்பகோணம், மாயூரம், சீர்காழி, சிதம்பரம், விழுப்புரம், செங்கற்பட்டு முதலிய நகரங்கள்; அழகொழுகும் அண்ணாமலைப் பல்கலைக் கழகக் கட்டிடங்கள், சென்னைக்கு அடுத்தேயுள்ள தாமிரம் புகைவண்டி நிலையத்துக்கு எதிரே உள்ள கிறித்தவக் கல்லூரிக் கட்டிடங்கள், கோடம்பாக்கம் ஸ்டேஷனை அடுத்துள்ள லயோலாக் கல்லூரிக் கட்டிடங்கள், அவற்றை அடுத்துள்ள பச்சையப்பன் கல்லூரிக் கட்டிடங்கள் இன்ன பிறவும் உள்ளக் கிளர்ச்சியை ஊட்டின. காவிரி, கொள்ளிடம், தென் பெண்ணை முதலிய பெயர்பெற்ற நதிகள் வெள்ளப் பெருக்குடன் காட்சி அளித்தன. இக் காட்சிகள் அனைத்தும்

நமது தமிழ்நாட்டில் உள்ளன என்பதை நினைக்கையில் நான் மிக்க மகிழ்ச்சி அடைந்தேன்; என் உள்ளம் பூரித்தது.

யான் கண்டவை

2. நான் உள்ளக் கிளர்ச்சியோடு சென்னையை அடைந்தேன்; அன்று மாலை என் மாமாவுடன் சென்னை நகரத்தின் முக்கிய இடங்களைக் காணச் சென்றேன். சென்னைத் துறைமுகம் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அங்குப் பல கப்பல்கள் நின்றிருந்தன. நான் ஜப்பானியரை அங்குக் கண்டேன்; அமெரிக்கரைக் கண்டேன்; சீனரைக் கண்டேன். அவர்களின் நிறம், உடல் அமைப்பு முதலியன என் கண்களைக் கவர்ந்தன. வேலைக்காரர் கப்பல்களில் சாமான்களை ஏற்றுவதும் இறக்குவதுமாக இருந்தனர். நாங்கள் ஒரு கப்பலில் ஏறிப் பார்த்தோம்; ஆ! அதன் சிறப்பை என் என்பேன்! அஃது ஒரு பெரிய மாளிகையாகவே அமைந்துள்ளது; மூன்று அடுக்குகளை உடையது; எல்லா வசதிகளையும் உடையது. பிறகு நாங்கள் நீலத் திரைக்கடல் ஓரத்தில் நின்று கடலைப் பார்த்தோம். அப்போது தூரத்தில் ஒரு கப்பல் போவது தெரிந்தது. அதனை உற்றுப் பார்த்தோம். அது போகப் போக அதன் அடிப்பாகம் மறைந்துகொண்டே போனது. என் மாமா, 'கோபாலா, ஏன் கப்பலின் அடிப்பாகம் தெரியவில்லை?" என்று கேட்டார். நான் 'பூமி உருண்டை அல்லவா?" என்றேன். மாமா, 'பேஷ்! நீ கெட்டிக்காரன்' என்று என் முதுகில் தட்டினர்.

மறுநாள் மாலை நான் உயர்நீதி மன்றம், கலங்கரை விளக்கம், சட்டக் கல்லூரி, பச்சையப்பன் மண்டபம், சுங்கச் சாவடி, பிரபல பாங்குகள், மாலைக் கடைவீதி, இரயில்வே உத்தியோக நிலையம், ஜெனரல் வைத்தியசாலை, சென்ட்ரல் ஸ்டேஷன், நகரப் பேரவை, மூர் மார்க்கெட், இராமசாமி

முதலியார் சத்திரம் இவற்றைப் பார்வையிட்டு மகிழ்ந்தேன். நான் அடுத்த நாள் மௌன்ட் ரோட்டில் உள்ள கவர்னர் மாளிகை, ஹிந்து—மெயில் பத்திரிகை நிலையங்கள்,வெள்ளை வியாபாரிகள் நடத்தும் பலவகைக் கடைகள் இவற்றைக் கண்டேன். நான் படிக்கும் ஆங்கில நூலை வெளியிட்ட மாக்மில்லன் கம்பெனியையும் பார்த்து மகிழ்ந்தேன்; வெள்ளையர் குடியுள்ள செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்குள் நுழைந்தேன்; சட்டசபை முதலிய காரியாலயங்களையும் பெரிய மாதாகோவிலையும் கண்டு களித்தேன்; கோட்டைக்குள் வெள்ளை வீரர்கள் இருக்கக் கண்டேன். அவர்கள் துப்பாக்கி சுடப் பயிற்சி பெற்றுக்கொண் டிருந்தார்கள்.

நான் அடுத்த நாள் எழும்பூரில் உள்ள அரசாங்க நூல் நிலையம், இறந்த உயிர்களின் உடல்கள், பல்வேறு பொருள்கள் முதலியவற்றைக்கொண்ட பொருட் காட்சிச் சாலை இவற்றைக் கண்டேன்; என் பாடங்களின் நினைவுகள் எல்லாம் அங்குத் தோன்றின; நான் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தேன். பின்னர் நான் உயிர்க் காட்சிச் சாலையைப் பார்வையிட்டேன்; நான் பாடங்களில் படித்துப் படங்களில் பார்த்த விநோத உயிர்களை எல்லாம் நேரிற் கண்டு களித்தேன்; மன்றோ, எட்வர்ட், ஐந்தாம் ஜார்ஜ், லார்ட் வெல்லிங்டன் முதலியோர் சிலைகளைக் கண்டேன். நான் படித்த சரித்திரம், சுகாதாரம், பிராணி சாஸ்திரம், இயற்கைப் பாடம்—ஏன்? எல்லாம் அச் சென்னையில் என் அகக்கண் முன் காட்சி அளித்தன. சென்னை நகரம் இன்ப நகரம் என்பது எனது கருத்து.

முடிவு

3. நான் இங்ஙனம் ஒவ்வொரு விடுமுறையிலும் சிறப்புடைய இடங்கட்குச் சென்று, அறிவைப் பெற விரும்புகிறேன்.

44. சிலப்பதிகாரம்

[நீ அறிந்த தமிழ் நூற் கதை ஒன்றைக் கட்டுரையாக எழுது.]

குறிப்புகள் :—1. சிலப்பதிகாரம்—யாது?
2. புகார்க் காண்டம்
3. மதுரைக் காண்டம்
4. வஞ்சிக் காண்டம்
5. முடிவு

கட்டுரை

சிலப்பதிகாரம்—யாது ?

1. சிலப்பதிகாரம் என்பது தமிழில் உள்ள பெருங் காவியங்கள் ஐந்தனுள் ஒன்று. அது கோவலன்-கண்ணகி வரலாற்றைக் கூறும் செய்யுள் நூல். அதனைப் பாடியவர் சேரநாட்டுச் சிற்றரசரான இளங்கோ அடிகள். அந் நூல் மூன்று பிரிவுகளை உடையது: கோவலன் மணம் முதல் அவன் மதுரைக்குப் போகும்வரை உள்ள பகுதி 'புகார்க் காண்டம்' எனப்படும்; பாண்டிநாட்டு எல்லையை மிதித்தது முதல் கண்ணகி மதுரையை விட்டது வரை உள்ள பகுதி 'மதுரைக் காண்டம்' எனப்படும்; கண்ணகி சேரநாடு அடைந்தது முதல் அவள் தெய்வமானது முடியவுள்ள பகுதி 'வஞ்சிக் காண்டம்' எனப்படும். இம் மூன்று வரலாற்றுப் பிரிவுகளும் முறையே சோழர் தலைநகரான புகாரிலும், பாண்டியர் கோநகரான மதுரையிலும், சேரர் தலைமைப் பட்டணமான வஞ்சியிலும் நடந்தமையால், அவை கூறும் பகுதிகள் இப் பெயர்களைப் பெற்றன. இவ் வரலாறு (கண்ணகியின் கால்) சிலம்புபற்றி எழுந்தது. ஆதலால், இது 'சிலப்பதிகாரம்' எனப் பெயர் பெற்றது.

புகார்க் காண்டம்

2. கோவலன் சோழர் கோநகரான காவிரிப்பூம்பட்டினம் எனப்படும் புகாரில் வாழ்ந்த பெருங்குடி வணிகன். அவன் மனைவியான கண்ணகியும் செல்வக் குடும்பத்திற் பிறந்தவள். மணமக்கள் இருவரும் மணமான பின் மலரும் மணமும் போலவும் நகமும் சதையும் போலவும் உடலும் உயிரும் போலவும் வாழ்ந்து வந்தனர். ஒருநாள் கோவலன் அந் நகரத்து நாடகக் கணிகையருட் சிறந்த மாதவி என்பவள் செய்த ஆடலும் பாடலும் கண்டு, அவள்மீது அன்பு கொண்டான்; அன்று முதல் அவள் மனையிலேயே தங்கி விட்டான். அவ் விருவர்க்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்குக் கோவலன் 'மணிமேகலை' எனப் பெயர் இட்டான். அந் நகரில் நடந்த இந்திர விழாவின் கடைநாளில் காதலர் இருவரும் கடற் கரையை அடைந்தனர்; நீராடி இன்பமாக இருக்கையில் கோவலன் சில பாடல்களைப் பாடினான். அவை, அவன் வேறொரு பெண்ணிடம் விருப்பம் கொண்டவன் என்பதை உணர்த்தின. மாதவி மனங் கோதித்துச் சில பாக்கள் பாடினாள். அவை, அவள் வேறொருவன்பால் விருப்புடையவள் என்பதைக் குறிப்பித்தன. உடனே கோவலன் வெகுண்டு எழுந்தான். அவளைச் சினந்து பேசி அவ்விடம் விட்டு அகன்றான்; தன் மனைவியைச் சென்று கண்டு, தான் செய்த தவற்றுக்கு நாணி நின்றான். கற்புடை மங்கையான கண்ணகி கணவனைத் தேற்றினாள். கோவலன், அவள் சிலம்பை மதுரையில் விற்று வியாபாரம் செய்ய விரும்பியதை அறிவித்தான். அவளும் உடனே இசைந்தாள். அன்றிரவே இருவரும் எவர்க்கும் தெரியாமல், நடு இரவில் புகாரை விட்டுப் புறப்பட்டு மதுரையை நோக்கி நடந்தனர்; வழியில் கவுந்தி அடிகள் என்னும்

சமணப் பெண் முனிவரைக் கண்டு அடிபணிந்தனர். அவரும் அவர்களோடு மதுரைக்குப் புறப்பட்டனர்; வழியில் பல துன்பங்களைச் சகித்துக்கொண்டு மூவரும் வழி நடந்தனர்.

மதுரைக் காண்டம்

3. இறுதியில் மூவரும் மதுரையை அடைந்தனர். கண்ணகி மாதரி என்னும் இடைச்சியின் வீட்டில் விடப்பட்டாள். கோவலன் அவளது சிலம்பு ஒன்றைக் கொண்டு கடை வீதி சென்றான்; அங்குப் பாண்டியனது அரண்மனைத் தட்டானைக் கண்டு சிலம்பைக் காட்டினான். அவனோ, இராச மாதேவியின் சிலம்பொன்றைக் கவர்ந்துகொண்டவன்; அதற்குப் பதிலாக வேறொன்றைத் தேடிக்கொண் டிருந்தவன். ஆதலால், அவன் இச் சிலம்பைக் கண்டதும் உள்ளம் பூரித்தான்; கோவலனை ஓரிடத்தில் இருத்தி, ஓடோடியும் அரசனிடம் சென்று, 'கள்வன் அகப்பட்டான்' என்றான். அரசன் ஆலோசியாமல், 'அவனைக் கொன்று சிலம்பைக் கொணர்க' என ஏவலர்க்குக் கட்டளையிட்டான். அந்தோ! குற்றமற்ற கோவலன் கொல்லப்பட்டான். இக் கொடுவினையை அறிந்த கண்ணகி வீராவேசம் கொண்டாள்; வெட்டுண்ட கணவன் உடலைத் தழுவினாள்; பாண்டியனை நேரிற் கண்டு பழி தூற்றித் தன் சிலம்பை உடைத்து உள்ளே இருந்த மாணிக்கப் பரலைக் காட்டினாள். இராச மாதேவியின் சிலம்பு முத்துப் பரலை உடையது. ஆதலால், அரசன் உண்மை உணர்ந்தான்; நடுநடுங்கினான்; அத் திகிலில் ஆவி நீத்தான். கண்ணகி சீற்றம் தணியாதவளாய் மதுரையைத் தன் கற்புத் திறனால் எரித்து மதுரையை விட்டு அகன்றாள்.

வஞ்சிக் காண்டம்

4. அகன்றவள், சேரநாடு சென்றாள்; நெடுவேள் குன்றம் அடி வைத்தேறினாள்; பதினான்காம் நாள் கோவ

லன் தேவர்களோடு விமானத்தில் வர, அவனோடு விண்ணோடு சென்றாள். இச் செய்தியை வேடுவரால் அறிந்த சேரன்— செங்குட்டுவன், தன் நாடடைந்த பத்தினியை வழிபட விரும்பி, இமயம் சென்று கல்லைக் கொணர்ந்தான்; அதில் கண்ணகி உருவத்தைப் பொறித்தான்; கோவில் எடுப்பித்தான்; சிலையைத் தாபித்துப் பெருவிழாச் செய்தான். அவ் விழாவிற்கு இலங்கை அரசன் முதல் அரசர் பலர் வந்திருந்தனர். கண்ணகி விண்ணிற் றோன்றிக் காட்சி அளித்துச் சேரனை வாழ்த்தினாள். வந்திருந்த அரசரும் தத்தம் நாட்டில் பத்தினிக் கோவில் எடுப்பித்து வழிபட்டனர்.

முடிவு

5. இவ் வரலாறு தமிழ்நாட்டிற்கே உரியது; மூன்று அரசரோடும் தொடர்புடையது; மூன்று தலைநகரத் தொடர்பும் பெற்றது; வேறு எம்மொழியிலிருந்தும் மொழி பெயர்க்கப்படாதது. ஆதலின், இதனைத் தமிழர் தங்கள் பெருஞ் செல்வமாகப் போற்றி வருகின்றனர்.

45. அழைப்பு இதழ்கள்

குறிப்புகள் :—1. திருமண அழைப்பு இதழ்
2. பொதுக்கூட்ட அழைப்பு இதழ்
3. ஆண்டு விழா அழைப்பு இதழ்

I

திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்,

இறைவன் திருவருளை முன்னிட்டு நிகழும் விக்ரம ஆண்டு ஐப்பசித் திங்கள் 29-ஆந் தேதி காலை 5-மணிக்கு மேல் 7-30 மணிக்குள்ளாகச் சிங்க லக்கினத்தில்,

எனது மூத்த மகன்	திருவாரூர், தியாகராச பிள்ளை இளைய மகன்
திருநிறை செல்வன்	திருநிறை செல்வி
இளங்கோவுக்கும்	பவழக்கொடிக்கும்

திருமணம் நடத்தப் பெரியோர்களால் உறுதி செய்யப்பட்டிருத்தலால், ஷை திருமணம் சிதம்பரம் கல்யாண மண்டபத்தில் நடைபெறும். அப்பொழுது தாங்கள் தங்கள் உற்றார் உறவினருடன் வந்திருந்து மணவினையைச் சிறப்பித்து, மண மக்கட்கு வாழ்த்துக் கூற வேண்டுகிறேன்.

இங்ஙனம் :
தங்கள் அன்புக்குரிய
பு. முருகேச பிள்ளை.

சிதம்பரம்,
10—10—'40.

II

பொதுக்கூட்ட அழைப்பிதழ்

பொதுக் கூட்டம்

135, அண்ணாபிள்ளை தெரு, சென்னை.

அன்புடையீர்,

நிகழும் 1940-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆந் தேதி மாலை 6 மணிக்குச் சென்னை, ஜார்ஜ்டவுன், அண்ணா பிள்ளை தெரு, 135-ஆம் எண்ணுள்ள பிரம்ம சமாஜக் கட்டிடத்தில் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெறும். அவ்வமயம் சென்னை மாஜி மந்திரி திரு. S. முத்தையா முதலியார், B. A., B. L., K. C. I. E. தலைமை வகிப்பார். வித்வான், மா. இராமச் சந்திர ஐயர் அவர்கள் 'சங்க நூல்கள்' என்னும் பொருள் பற்றிப் பேசுவார். அன்பர் அனைவரும் வருக.

இங்ஙனம்:

தமிழர் கழகம், சென்னை. } பி. நா. குருசாமி. செயலாளன்.

III

ஆண்டு விழா அழைப்பிதழ்

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை.

28-ஆம் ஆண்டு விழா.

ஐயன்மீர்,

நிகழும் பிரமாதி ஆண்டு, ஆவணித் திங்கள் நாள் 3, 4 (19,20—8—1939) சனி, ஞாயிறுகளில் ஷை விழாக் கொண்டாடப்பெறும். அதுபோது,

தலைவர் :

யாழ்ப்பாணத்துப் பரமேஸ்வரக் கல்லூரித் தலைவர்
பெருமை மிக்க திரு. அ. நடேச பிள்ளை, B. A., B. L., M. L. C.,
அவர்கள்

முதல் நாள்

பேச்சாளர் :	பொருள் :
1. வித்வான் மா. இராசமாணிக்கம், B. O. L. அவர்கள்	" சங்க நூல்களும் தொல்காப்பியமும் "
2. கரந்தைக் கவியரசு, R. வேங்கடாசலம் பிள்ளை அவர்கள்	" கலித்தொகை "
3. பண்டித மணி மு. கதிரேசச் செட்டியார் அவர்கள்	" சிவஞான சுவாமிகள் "

இரண்டாம் நாள்

1. ச. க. கோவிந்தசாமி பிள்ளை M. A., அவர்கள்	" பண்டைத் தமிழர் நாகரிகம் "
2. வித்வான் சு. துரைசாமி பிள்ளை அவர்கள்	" தேவார மாண்பு "
3. பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள்	" குமர குருபரர் "
4. சுவாமி விபுலானந்தா, B. Sc. (Lond) அவர்கள்	" கைலாயக் காட்சி "

46. படக் காட்சி

குறிப்புகள் :—1. படக் காட்சி—யாது ?
2. இன்றுள்ள படக் காட்சிகள்
3. அவற்றின் நன்மை தீமைகள்
4. முடிவு

கட்டுரை

படக் காட்சி—யாது ?

1. 'சினிமா' என்னும் இயங்கு படக்காட்சி ஏற்பட்டுச் சில ஆண்டுகளே ஆகின்றன. முதலில் அசைவுப் படங்களே காட்டப்பட்டன; பின்னர்க் கிராமபோனுடன் பேச்சை இணைத்துப் பேசும் படக் காட்சிகள் மேடைக்கு வந்துவிட்டன. இம் முயற்சியில் பேருதவி செய்தவர் அமெரிக்க விஞ்ஞானியான தாமஸ் ஆல்வா எடிசன் என்பவரே ஆவர். அவரது உழைப்பு இருந்திராவிடில், நாம் இன்றைய பேசும் படக் காட்சிகளைச் செவ்விய முறையில் காணுதல் இயலாது.

இன்றுள்ள படக் காட்சிகள்

2. இன்று இப் பேசும் படக் காட்சிகள் தமிழ் நாட்டில் ஏராளமாகக் குவிந்தவண்ணம் இருக்கின்றன. தமிழ்ப் படங்களும், தெலுங்குப் படங்களும், மலையாளப் படங்களும், ஹிந்திப் படங்களும், ஆங்கிலப் படங்களும் எனப் பலவகைப் படங்கள் சினிமாக் கொட்டகைகளில் இன்று காட்டப்படுகின்றன. ஆங்கிலப் படங்கள் அறிவு, ஆராய்ச்சி, சரித்திரம், பூகோளம், விஞ்ஞானம், போர் முதலிய பல திறப்பட்ட கலைகளைப் போதிப்பனவாக அமைந்துள்ளன. ஆனால், ஏனைய மொழிப் படங்கள் இந்த அளவுக்கு உயரவில்லை.

காரணம், மேனுட்டார் செல்வப் பெருக்கும் கலைப் பெருக்குமே ஆகும். நம்மவர் இத் துறையில் ஆரம்ப நிலையினரே ஆதலின் முழு வெற்றி பெற்றவராக இல்லை. தெலுங்கு, மலையாளம், ஹிந்தி, தமிழ்ப் படங்களில் பக்தி, காதல், சீர்திருத்தம் என்னும் பகுதிகளே அடிப்படையாக இருக்கின்றன. இவற்றுள் முதல் மூன்று மொழிகளில் வரும் படங்கள் ஓரளவு சீர்திருந்தி உள்ளன. எல்லாவற்றிலும் இழிநிலையில் உள்ளவை தமிழ்ப் படங்களே ஆகும். நடிப்பு, பாட்டு என்னும் இரண்டும் உயரவில்லை. படக் கம்பெனியார் ஒருமைக் குணம் இன்றி ஒரே கதையைப் பலரும் எடுக்கின்றனர்; ஒருவர் எடுத்த படத்தையே பலரும் எடுக்கின்றனர். ஒருவர் ‘இராமதாஸ்’ என்னும் பெயரால் எடுப்பின், மற்றவர் ‘பக்த ராமதாஸ்’ என்னும் வேறொரு பெயரால் எடுக்கின்றனர். இவ்வாறு கோமாளித்தனமாகத் தமிழ்ப் படம் எடுப்பவர் நடப்பதால், தமிழ்ப் பட உலகம் முன்னேற வழியின்றித் தவிக்கிறது. நம்பத் தகாத கதைகளும், அறிவுக்குப் பொருத்தமற்ற கதைகளும் எடுத்து, மக்கட்கு முன்னரே உள்ள அறியாமையைப் பலப்படுத்த இப் பட முதலாளிகள் முனைகின்றனர். அதனல், எல்லாத் துறைகளிலும் பிற்பட்டுள்ள தமிழ் நாடு, இத் துறையிலும் பிற்பட்டே இருக்கின்றது. பண்டைத் தமிழ் இலக்கியங்கள், வீரர் வரலாறுகள், புதிய கதைகள், போர் முறைகள் இன்ன பிறவும் உள்ளத்தைக் கவரத்தக்க முறையில் வெளிவரல் வேண்டும்.

அவற்றின் நன்மை தீமைகள்

3. பல்வகைப்பட்ட - பல்வேறு மொழிகளில் வரும் படங்களால் மக்கள் அறிவு பெறுகின்றனர். போர் முறை, வாழ்க்கை முறை, சீர்திருத்தம், மதாசாரம், பக்தி, விஞ்ஞானக் கலை இன்னபிறவும் ஓரளவு இப் படங்களால் மக்கள்

அறிய இடம் ஏற்படுகிறது. நாம் நம் ஆயுளில் காணக் கூடாத அயல் நாடுகளையும், நகரங்களையும், மக்களையும், அவர்தம் பழக்க வழக்கங்களையும், பிறவற்றையும் இப் படங்கள் வாயிலாக அறிந்து இன்புறுகிறோம். மக்களது பொது அறிவை வளர்க்க—உலக ஞானத்தைப் பெருக்க இத்தகைய நல்ல படங்கள் அவசியமாகும். ஆனால் ஒழுக்கத் திற்குக் கேடு பயக்கும் படங்கள் சிலவும், காதல் சம்பந்த மான தவறான காட்சிகளும், விகார விநோதக் காட்சிகளும் சிற்சில சமயங்களில் காட்டப்படுகின்றன. அவற்றால் இளைஞர் கெட வழி உண்டாகிறது. இத்தகைய சீர்கேடான காட்சிகள் எடுக்கப்படாதிருத்தல் வேண்டும். இவை, நீதி யைப் புகட்டப் புறப்பட்டுத் தீமையையே மறைமுகமாகப் புகட்டிச் செல்கின்றன.

முடிவு

4. சுருங்கக் கூறின், படக் காட்சிகள் நன்முறையில் அமையப்பெறுதல் வேண்டும்; அவை மக்களது பொது அறிவை வளர்க்கக் கூடியனவாக அமைதல் வேண்டும். இங்ஙனமாயின், அவற்றால் மக்கட்குப் பெரும்பயன் விளை வது திண்ணம்.

47. அறிவும் ஆராய்ச்சியும்

குறிப்புகள் :—1. அறிவு - ஆராய்ச்சி
2. சான்றுகள்
3. முடிவு.

கட்டுரை

அறிவு - ஆராய்ச்சி

1. அறிவு, ஆராய்ச்சி இல்லாவிடில் வளர்ச்சி அடையாது; கிணற்றுத் தவளைபோல் மந்தமாக இருக்கும். ஒரு மாணவன் தான் படித்ததைச், சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளை போலச் சொல்வதிற் பயன் இல்லை. தான் படித்ததை ஆராய்ந்து, அதன் உண்மை அல்லது இன்மை, அதன் நன்மை அல்லது தீமைகளை ஆராய்ந்தறிதலே 'ஆராய்ச்சி' என்பது. எதனையும் அறிவைக் கொண்டு ஆராய்பவனே செந்நெறியில் வாழ முடியும். அவனே அறிவாளியாக விளக்கமுறுவான். படித்ததை ஆராயாமல் நெட்டுருப் போட்டுப் பரீக்ஷையில் தேறிவிடுபவன் வாழ்க்கையிலும் மந்தமாகவே இருப்பான். அவனை உலகத்தார் அறிய வழியில்லை. அவன் தன்னளவிலும் அறிவு வளர்ச்சி பெற்றவன் ஆகான். ஆதலின், ஒவ்வொருவரும் எதனைச் செய்ய விரும்பினும், அதனை அறிவைக் கொண்டு ஆராய்ந்து செய்தலே நல்லது. அறிவும் ஆராய்ச்சியும் நிரம்பப் பெறாதவன் மனிதத்தன்மை எய்தியவன் ஆகான்.

சான்றுகள்

2. ஜான் கூடன்பேர்க் என்பவர் ஒரு நாள் பாதையிற் பதிந்திருந்த குதிரையின் குளம்புச் சுவடுகளைக் கண்டார்; தம் அறிவைக் கொண்டு ஆராய்ந்தார்; பலகையில் எழுதி

அவ்வெழுத்துகளைக் களிமண்ணில் ஒற்றினர்; எழுத்துக்கள் பதிந்திருத்தலைக் கண்டார்; பின்னர் ஆராய்ச்சி நடத்தி அச்செழுத்துகளைக் கண்டறிந்தார். அவரது ஆராய்ச்சியால் இன்றைய உலகம் அச்செழுத்துகளின் பயனை அனுபவித்து வருகின்றது. மரத்திலிருந்து கீழ்நோக்கி விழுந்த ஆப்பிள் பழத்தைக் கண்ட ஐஸக் நியூட்டன் என்னும் கணிதப் பேராசிரியர் ஆராய்ச்சி செய்யலானார்; ஆழ்ந்து சிந்தித்தார்; முடிவில், 'பூமிக்கு இழுக்கும் சக்தி உண்டு' என்பதைக் கண்டறிந்தார். அவர் ஆராய்ச்சி செய்திராவிடில், அவர் பெயர் நாம் அறிந்திருக்க முடியுமா? உலகம் பூமியின் ஆகர்ஷண சக்தியைப் பற்றித்தான் அறிந்திருக்க இயலுமோ? கூறுங்கள். ஆராய்ச்சியால் வெளிப்படும் அற்புதங்கள் மிகப் பலவாகும். ஒரு சிறுவன் கடிகாரத்தைப் பழுதுபார்க்கப் பழகிவந்தான். அவன் ஒருநாள் அதற்குரிய 'லென்ஸ்' ஒன்றைக் கையிற் பிடித்து உற்றுப் பார்த்தபோது, சேய்மையில் நின்றிருந்த கோபுரம் ஒன்று அண்மையில் நிற்கக் கண்டான்; வியப்புக்கொண்டான். அவன் அதைப்பற்றி மேலும் ஆராய்ச்சிகள் செய்து, தூரதிருஷ்டிக் கண்ணாடியைக் கண்டுபிடித்தான். அச் சிறுவன் ஆரம்பத்தில் சோம்பேறியாக இருந்திருப்பானாயின், இந் நூதன - மிக்க உபயோகமான கருவி கண்டுபிடிக்கப்பட்டிருக்குமா?

ஒருநாள், அமெரிக்கரான பெஞ்சமின் பிராங்க்ளின் என்பவர் காற்றாடி விட்டுக்கொண்டு இருந்தார். அப்போது இடி, மின்னல், மழை ஆகிய மூன்றும் கலந்தடித்தன: அவர் அப்போது 'மின்சார சக்தி' ஒன்று இருப்பதாகக் கண்டறிந்தார். அவரது ஆராய்ச்சியே இன்றை மின்சார முன்னேற்றத்திற்கு எல்லாம் அடிப்படையாகும். கேவலம் உலை நீர் கொதித்து, ஆவி வெளிப்பட முயன்று, பாத்திரத்தின் மூடியைத் தள்ளிவிட்டதைக் கண்ட ஜேம்ஸ் வாட் என்னும்

இளைஞர் அச் சக்தியை நன்கு ஆராய்ந்தார்; நீராவியின் சக்தியைக் கொண்டு பல அற்புதங்களை நிகழ்த்தலாம் என்பதைத் தம் ஆராய்ச்சியால் கண்டார். அவரது ஆராய்ச்சிக்குப் பின்னரே இன்று நீராவியால் கப்பல்கள் கடல்களில் பிரயாணம் செய்கின்றன; இரயில் வண்டிகள் தரையில் பிரயாணம் செய்கின்றன. என்ன அற்புதம்! ஜேம்ஸ் வாட்டிற்கு இவ்வுலகமே நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளதன்றோ? புகை வண்டியால் உள்நாட்டு வாணிபமும் கப்பல்களால் கடல் (வெளிநாட்டு) வாணிபமும் சிறந்து வருகின்றன. இவ் வியாபாரப் பெருக்கத்துக்கு மூலகாரணம் நீராவியின் சக்தி. அச் சக்தியைக் கண்டறிந்து உலகத்திற்கு உணர்த்திய ஜேம்ஸ் வாட் பாராட்டத்தக்கவர் அல்லரோ? கூறுங்கள்.

குரூக்ஸ் குழாயில் திடீரெனத் தோன்றிய சிறிய வெளிச்சம் யாதென டாக்டர் ராண்ட்ஜன் என்பவர் ஆராயத் தலைப்பட்டார்; பலவாறு முயன்றார்; இறுதியில் அவ்வொளி உடலுக்குள்ளும் ஊடுருவிப் பாய்ந்து உட்பொருள்களையும் காட்ட வல்லது என்பதைத் தம் ஆராய்ச்சியாற் கண்டறிந்தார். அவ்வொளியே 'பெயர் தெரியாத (எக்ஸ்—ரே) ஒளி' எனப்படுவது. அதன் பயனை இன்று உலகமே வியக்கத் தக்கவாறு அனுபவித்து வருகின்றது.

முடிவு

3. இங்ஙனம் மனிதர் தம் அறிவுகொண்டு ஆராய்வதால், மிகச் சிறிய பொருள்களைக் கொண்டும் மிகப் பெரிய பலனை உலகத்துக்கு உதவுகின்றனர். ஆதலால், ஆராய்ச்சியின் சிறப்புணர்ந்து, ஒவ்வொருவரும் தம் அறிவை ஆராய்ச்சியிற் செலுத்தி உலகத்துக்கும் தமக்கும் நன்மை செய்வாராக!

48. கடிதங்கள்

அறிமுகக் கடிதம்

1. உன் நண்பனுக்கு ஒருவனை அறிமுகப்படுத்தக் கடிதம் ஒன்றை எழுது.

முத்தியாலுப்பேட்டை உயர்கலாசாலை,
சென்னை, 20—10—'40.

அன்புள்ள முருகா,

நலம். இக் கடிதம் கொண்டு வருபவர் என் நண்பர் திரு. கண்ணபிரான். இவர் எங்கள் பள்ளியில் 7-ஆம் வகுப்பு மாணவர்; 'சாரணர் இயக்கம்' பற்றிய சில விவரங்களை உன்னிடம் கேட்டு அறிய அவாவுகிறார். நீ அவற்றை விளக்கமாகக் கூறும்படி வேண்டுகிறேன். இந் நண்பர் நற்குண நல்லொழுக்கம் உடையவர்; நமது கூட்டத்திற்கு ஏற்றவரே. சிரமத்திற்கு மன்னிக்கவும்.

இங்ஙனம்:
உன் ஆருயிர் நண்பன்,
ச. வடிவேலன்.

திருவாளர்

ச. முருகன் அவர்கள்,
மாணவர், 8-ஆம் வகுப்பு 'ஆ' பிரிவு,
கிறித்தவக் கலாசாலை, சென்னை.

சிபாரிசுக் கடிதம்

2. உன் நண்பனைப் பற்றிச் சிபாரிசு செய்து ஒரு வேலை தரும்படி உன் மாமாவுக்கு ஒரு கடிதம் எழுது.

120, லிங்க செட்டி தெரு,
சென்னை, 20—12—'40.

அன்புள்ள மாமா அவர்கட்கு வணக்கம்.

இக் கடிதம் கொண்டு வரும் நண்பர் சோமசுந்தரம் என் சிறந்த நண்பர். இவர் இவ் வருடம் பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்; மிகவும் நல்லவர்; ஊக்கமும் உழைப்பும் உண்மையும் உடையவர். இவரைத் தங்கள் கம்பெனியில் ஒரு குமாஸ்தாவாக வைத்துக்கொள்ள வேண்டுகிறேன். இவர் நமது நம்பிக்கைக்குப் பெரிதும் பாத்திரமானவர். இவருக்கு இவ்வுதவி செய்யுமாறு உங்களை வேண்டுகிறேன். சிரமத்திற்கு மன்னிக்கவும்.

இங்ஙனம் :
உங்கள் அன்புக்குரியன்,
மா. விஸ்வநாதன்.

திருவாளர்
க. முனிசாமி ஐயர் அவர்கள்,
புத்தக வியாபாரி,
மலைக்கோட்டை, திருச்சிராப்பள்ளி.

பரிசு வழங்கல்

3. உன் நண்பன் திருமணத்தன்று பரிசளிக்கும் முறையில் கடிதம் ஒன்றை எழுது.

110, பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, சென்னை.

அன்புள்ள சுந்தர,

நலம். உன் திருமண அழைப்பிதழ் வந்தது. நான் மிக்க மகிழ்ச்சி உற்றேன். வெளியூரில் நடைபெறுவதால்

நான் உன் திருமணத்திற்கு வரக்கூடவில்லை. உன் மண வாழ்வு சிறப்பதாக! உன் திருமணத்தன்று யான் அனுப்பும் இப் பரிசிலை மனமுவந்து ஏற்பாயாக. மனிதர்க்கு வேண்டற்பாலது ஒழுக்கம். அதனை அறிவுறுத்தும் நமது தெய்வத் தமிழ் மறை ஆகிய திருக்குறளை உனக்குப் பரிசிலாக அனுப்புகின்றேன். ஏற்றருள்க. உனது நல் வாழ்வை அகத்தூய்மையோடு விரும்பும்,

உன் நண்பன்,
மா. பார்த்தசாரதி.

திருவாளர்
ஆ. சுந்தரன் அவர்கள்,
10, மேல் அலங்கம் தெரு,
தஞ்சாவூர்.

வாழ்த்துக் கூறல்

4. புத்தாண்டன்று உன் நண்பனை வாழ்த்திக் கடிதம் ஒன்று எழுது.

20, பச்சையப்பன் தெரு,
சிதம்பரம்.

என் அன்புக்குரிய கிருஷ்ணமாச்சாரி,

நலம். பொங்கற் புது நாள் அன்று இக் கடிதம் உன்னைச் சேரும். எனது பொங்கல் வாழ்த்தை ஏற்றருள். தமிழர்க்குரிய பெரு நாட்கள் சிலவே. அவற்றுள் இப் பொங்கல் புது நாள் சிறந்ததாகும். மழைக்காலம் தொலைந்து சூரிய உஷ்ணம் தொடங்கப் பெறும் மாதமே தை மாதம். மக்கள் பழையன நீக்கிப் புதியன கொண்டு, அறுவடையான

தானியங்களை வைத்துக்கொண்டு இன்ப வாழ்வு வாழ விழையும் முதல் நாளே பொங்கற் புது நாள். இந் நன்னாள் தமிழகத்தில் யாவராலும் கொண்டாடப்படுவது; கன்று காலிகள் களிப்படையும் நாள்; ஏழைகள், தொழிலாளர், கூலியாட்கள் இன்புறும் நாள்; குடியானவர் குதூகலிக்கும் நாள். நீ இப் பழந் தமிழ்ப் பெருநாளைச் சிறப்புறக் கொண்டாடுவாய் அல்லவா? உனக்கு எனது உளமார்ந்த 'வாழ்த்து' உரியதாகுக. தமிழன்னை உன்னை ஆசீர்வதிப்பாளாக!

இங்ஙனம்:
உன் அன்புக்குரிய நண்பன்,
மு. வரதராஜன்.

திருவாளர்
சு. கிருஷ்ணமாச்சாரியார்,
15, பெரிய கடை வீதி,
சேலம்.

பயிற்சி

1. அறிமுகக் கடிதம் இரண்டு எழுது.
2. அழைப்புக் கடிதம் இரண்டு எழுது.
3. சிபாரிசுக் கடிதம் இரண்டு எழுது.
4. வாழ்த்துக் கடிதம் இரண்டு எழுது.

49. கடவுள்

குறிப்புகள் :—1. கடவுள் உண்டா !
2. கடவுள் இலக்கணம் என்ன !
3. நமது கடமை
4. முடிவு

கட்டுரை

கடவுள் உண்டா?

1. உலகத்தையும் இதிலுள்ள உயர்திணை அஃறிணைப் பொருள்களையும் உற்று நோக்குகையில், இவை அனைத்தையும் ஓர் ஒப்பற்ற பொருள் உண்டாக்கி இருத்தல் வேண்டும் என்று கருத இடமுண்டாகிறது. பொம்மை ஆடுகின்றது எனின், அஃது ஆட்டுவோனால் ஆட்டப்பட்டு ஆடுகின்றது. அதுபோல அண்ட சராசரங்களும் ஒரு பெரும் சக்தியால் இயக்கப்படுகின்றன என்பது தெள்ளிதிற் புலனாகின்றது. ஆதலால், நம்மையும் உலகத்தையும் படைத்த பெருஞ் சக்தி ஒன்று உண்டென்பதில் ஐயம் இல்லை.

கடவுள் இலக்கணம் என்ன?

2. 'அச் சக்தியின் இலக்கணம் என்ன? அஃது ஆணா? பெண்ணா? இரண்டும் அற்றதா? அஃது எங்கே உள்ளது? அஃது எது?' என்பன போன்ற கடாக்கட்கு விடை காணுதல் இன்றி அமையாததாகும். கடவுள். உலகத்தைப் படைத்தவர் ஆதலால் 'தாய்' என்றும், உலகத்தைக் காப்பவர் ஆதலால் 'தந்தை' என்றும் பலரால் கூறப்படுகின்றார். 'அன்பே கடவுள்' என்று கிறிஸ்து மதம் கூறுகின்றது. அதனையே இஸ்லாமும் செப்புகின்றது. 'அன்பே சிவம்' என்பது சைவம். 'அன்பே விஷ்ணு' என்று

வைணவம் உரைக்கின்றது. 'அழகே கடவுள் - வாழ்வே கடவுள்' என்பர் இரவீந்திரநாத தாகூர். 'இயற்கையே கடவுள்' என்பர் வேறு சிலர். 'இன்னதென்று வகுத்துரைக்க மாட்டாத விந்தை வாய்ந்ததாய், எல்லாவற்றிலும் வியாபித்திருக்கின்ற சக்தி ஒன்று உண்டு. நாம் அதனையே கடவுள் என்கிறோம்' என்று காந்தியடிகள் கூறுகின்றனர். மதாச்சாரியர்களும் 'அம்மை நீ, அப்பன் நீ,......எப்பொருளும் நீ' என்று பாடிப் போந்தனர். இராமலிங்க அடிகள் கடவுளை,

"கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த
குளிர்தருவே! தருநிழலே! நிழல்கனிந்த கனியே!
ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே!
உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே!
மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே!
மென்காற்றில் விளைசுகமே! சுகத்திலுறும் பயனே!"

என்றெல்லாம் கூறியிருத்தல் அறியத் தகுவது. தாயுமான அடிகள்,

"அரும்பொனே! மணியே!என் அன்பே! என் அன்பான
அறிவே!என் அறிவிலூறும் ஆனந்த வெள்ளமே!'......

என்று கடவுளை அழைத்துள்ளார்.

இங்ஙனமே மாணிக்க வாசகரும்,

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய் இன்மையுமாய்க்
கோனாகி யானெனதென் றவரவரைக் கூத்தாட்டு
வானாகி நின்றாயை என்சொல்லி வாழ்த்துவனே!"

என்று திருவாசகத்துள் பாடியுள்ளார்.

இதுகாறும் கூறப்பெற்ற சான்றுகளால், உலகத்தை இயக்கும் ஒப்பற்ற சக்திக்கு அறிஞர், அவரவர் விருப்பப்படி இலக்கணம் கூறிச் சென்றனர் என்பதும், இவ் விலக்கணங்களால், 'உலகில் உள்ள ஒப்பற்ற சக்தியே கடவுள் எனப்படுகிறது' என்பதும் அறியக் கிடக்கின்றன.

நமது கடமை

3. இனி நமது கடமை என்ன? 'கடவுள் எங்கும் உள்ளவர் (சக்தியை அவர் என்றே இங்குக் கூறுவோம்); அரசன் முதல் ஆண்டி ஈறாகவும், எறும்பு முதல் யானை ஈறாகவும் உள்ள இருதிணைப் பொருள்களிலும் அவர் விளங்குகிறார். அவரே நம்மை இயக்குகின்றார்; நமது மனச் சாட்சியாக இருக்கின்றார். நாம் நமது உள்ளுணர்ச்சி உறுத்துக் கூறும் அறவுரைப்படி நடத்தலே கடவுளை வழிபடுவதாகும்; அவர் ஆணைப்படி நடப்பதாகும். அதுவே அறநெறி. அவரை இன்ன இடத்திற்றான் வழிபட வேண்டும் என்பதில்லை. எங்கும் உள்ள அவரை என்றும் எப்பொழுதும் எங்கும் மனத் தூய்மையோடு வழிபடலாம். அவரது படைப்புப் பொருள்களில் அரசனும் ஆண்டியும் ஒன்றே; எறும்பும் நம் உடன்பிறப்பே; அன்பே கடவுள். உயிர்களிடம் அன்பு காட்டலே கடவுள் வழிபாடு' என்னும் சிறந்த உண்மையை நாம் கடைப்பிடித்து நடத்தல் வேண்டும்.

முடிவு

4. இந்நெறியே எல்லாவகை அறியாமையையும் சண்டையையும் குழப்பத்தையும் நீக்கி, நம்மை நன்னெறியிற் செலுத்துவதாகும். இதுவே 'சமரச சன்மார்க்கம்' ஆகும்.

50. இந்தியாவும் கைத்தொழிலும்

குறிப்புகள் :—1. கைத்தொழில் எது ?
2. மூவகைத் கைத்தொழில்கள்
3. கைத்தொழில் முன்னேற்றம்
4. முடிவு

கட்டுரை

3404

கைத்தொழில் எது ?

1. பொன், வெள்ளி முதலிய உலோகங்களைக் கொண்டும்; பஞ்சு, பட்டு, சணல், நார், தோல், முதலியன கொண்டும்; மரம் தந்தம் மண் முதலியன கொண்டும் நம் வாழ்க்கைக்குத் தேவையான நகைகள், பாத்திரங்கள், ஆடைகள், இயந்திரங்கள் முதலிய பல திறப்பட்ட பொருள்களைத் தயாரிக்கும் தொழிலே கைத்தொழில் எனப் பெயர் பெறும்.

மூவகைக் கைத்தொழில்கள்

2. சர். எம். விஸ்வேஸ்வரையா என்னும் நம் நாட்டுப் பேரறிஞர் தமது பிரசங்கம் ஒன்றில் கூறியதாவது : " ஒரு நாட்டுக் கைத்தொழிலைப் பெரும்பாலும் மூவகையாகப் பிரிக்கலாம். அவை : பெரிய கைத்தொழில், நடுத்தரக் கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் என்பன. (1) பருத்தி, சணல் இவற்றை உண்டாக்குதல், இயந்திரங்களைச் செய்தல், நிலக்கரி எடுத்தல், இரும்பு, எஃகு முதலியவற்றால் பெருஞ் சாமான்களைச் செய்தல், மின்சார உற்பத்தி, கப்பல் தொழில் முதலியன பெருவாரியான கைத்தொழில்கள் ஆகும். (2) சர்க்கரை உண்டாக்கல், காகிதம் செய்தல், எண்ணெய் ஆட்டல், தோல் பதனிடல், கண்ணாடி செய்தல், பட்டு, கம்பளி, அலுமினியம், மருந்து சாமான்கள் முதலியன செய்தல் நடுத்தரக்

கைத்தொழில்கள் ஆகும். (3) நூல் நூற்றல், நெசவு நெய்தல், உலோகச் சாமான்கள் செய்தல், தோற்சாமான்கள் செய்தல், நீக்குச்சி செய்தல், சோப்பு முதலியன செய்தல், மரச் சாமான்கள் செய்தல் முதலியன குடிசைக் கைத்தொழில்கள் ஆகும்.

கைத்தொழில் முன்னேற்றம்

3. இவற்றுள் முதல் இருவகைக் கைத்தொழில்களும் செல்வர் கவனிக்கத்தக்கவை. மூன்றாம் தரக் கைத்தொழில்களே ஏழைக் குடியானவரையும் எளிய கிராம வாசிகளையும் காக்கும் சஞ்சீவி ஆகும். ஓர் ஆண்டில் ஆறுமாதம் பயிர் வேலை செய்து, எஞ்சிய ஆறு திங்களை வீணே கழித்து வறுமையில் உழலும் மக்கள் இக் குடிசைக் கைத்தொழில்களைச் செய்வாராயின், செல்வப் பெருக்குடன் வாழ இடம் உண்டாகும். கைத்தொழிலால் உண்டாக்கப்படும் பொருள்கள் நம் வாழ்க்கைக்கு அவசியமானவை. ஆதலால், நாம் அவற்றை வாங்கியே ஆதல்வேண்டும். இங்ஙனம் கிராமத்தார் தயாரிக்கும் பொருள்களை மற்றவர் வாங்க வாங்க, அவர்களிடம் பணம் பெருகிக்கொண்டே வரும் அன்றோ? அவர்கள் வறுமையின்றி வாழலாம். அவர்கள் வாழ்வு உயர்வடைவதால் கிராமங்கள் சீர்படும். கிராமங்களே நாட்டின் உயிர் நாடி. ஆதலின், செல்வப் பெருக்குடன் கிராமங்கள் விளங்குமாயின், நாட்டுப் பொருளாதார நிலை உயரும் அன்றோ? நாமும் மானம் இழந்து, வெளிநாட்டார் பொருள்களை எதிர் பார்த்திருத்தல் அவசியம் இல்லை அன்றோ? கேவலம் ஒரு குண்டூசிக்கும் நாம் வெளிநாட்டாரை எதிர்நோக்கும் இழிநிலையில் இருக்கின்றோம் எனின், நம் இந்திய நாட்டின் கேவல நிலைமையை—கைத்தொழில் வறுமையை—என்னென்பது? வெளிநாட்டுப் பொருள்களை நாம் வாங்குதலால் நமது பணம்

வெளியே போய்விடுகின்றது; நாட்டுக் கைத்தொழில்கள் நசித்துவிடுகின்றன. நாம் நம் நாட்டுப் பொருள்களையே வாங்குவோமாயின், நாட்டுக் கைத்தொழில்கள் பெருகும். பொருள்கட்குத் தேவை அதிகப்பட அதிகப்படத் தொழில் விருத்தியாகும். தொழில் பெருக்கம் ஏற்படவே, நாட்டுச் செல்வநிலை உயரும்; பணம் நம் நாட்டிலேயே நம் மக்களிடமே நடமாடிக்கொண் டிருக்கும். நாடு வறுமை அடையாது. பருத்தி, சணல், இரும்பு முதலியவற்றைப் பொருள்களாகச் செய்யும் இயந்திர சாலைகள் பல இந்தியாவில் இருப்பின், இப் பொருள்கள் வெளிநாடுகட்குப் போக வேண்டும் என்னும் அவசியம் உண்டாகாதன்றோ?

முடிவு

4. ஆகவே, கைத்தொழிற் கலாசாலைகள் நம் நாட்டில் பெருக வேண்டும்; கிராமக் கைத்தொழில்கள் உரம் பெறல் வேண்டும். நாம், நம் நாட்டுப் பொருள்களையே வாங்கும் விரதத்தைக் கடைப்பிடித்தல் வேண்டும். மேனாட்டார் முறைகளைப் பின்பற்றிக் கைத்தொழில் முன்னேற்றத்தை அடைய முற்படல் வேண்டும். அந் நிலையிற்றான் இந்தியாவில் உள்ள இலட்சக்கணக்கான கிராமங்கள் பொருட் பொலிவும் தொழிற் சிறப்பும் பெறும்; கிராமத்தார் அறிவும் அனுபவமும் நல்ல வாழ்வும் அடைவர்; நாடும் சிறக்கும்; நாமும் சிறப்போம்.

51. சொல் தவறேல்

குறிப்புகள்:—1. முகவுரை
2. மேற்கோள்
3. முடிவுரை

கட்டுரை

முகவுரை

1. சொன்ன சொற்படி நடத்தலே மனித அறம் ஆகும். சொன்ன சொற்படி நடப்பவர் மக்களால் பாராட்டப்படுவர். அவர்களிடம் பொது மக்கட்கு நம்பிக்கை ஏற்படும்; மதிப்பும் உண்டாகும். 'தருகிறேன்' என்று சொன்னவன் தராதொழிவனுயின், அதனினும் இழிசெயல் பிறிதில்லை.

மேற்கோள்

2. கன்னன் தன் உயிர் நண்பனுன துரியோதனனுக்குப் போரில் உதவி செய்வதாக உறுதி கூறினன். அதன் பின்னர் அவன் தாயான குந்திதேவி அவனைத் தன் வழித் திருப்பிப் பாண்டவருடன் சேருமாறு தூண்டினள். அப்பொழுது கன்னன், "நான் சொன்ன சொல் தவறேன். நான் துரியோதனனுக்கு உதவி செய்வதாக முன்பே வாக்களித்துவிட்டேன்; இப்பொழுது அதை மாற்றேன். அங்ஙனம் மாற்றின், நான் சொல் தவறிய பாவியாவேன்" என்று உறுதியாகக் கூறிவிட்டான். அக் கன்னன் அரவக் கணையை அர்ச்சுனன்மீது இரண்டாந்தரம் விடுவதில்லை எனக் குந்திக்கு வாக்களித்தான். அவன் விட்ட அரவக்கணை முதல்முறை குறி தவறிவிட்டது. அப்போது அவன் தேரைச் செலுத்திய சல்லியன், "அரவக் கணையை இரண்

டாம் முறை விடு. அர்ச்சுனன் தப்பாது இறப்பான்" என்று வற்புறுத்தினன். அப்பொழுது கன்னன், "நான் அதனை மறுமுறை விடுவதில்லை என்று வாக்குறுதி கூறி விட்டேன். நான் இப்பொழுது அவ் வார்த்தையினின்றும் தவறுதல் இயலாது," என்று உறுதியாக உரைத்திட்டான்.

அக் கன்னனே பண்டொருநாள் பிராமண வேடத்தில் வந்த இந்திரனை நோக்கி, "நீ எது கேட்பினும் தருவேன், கேள்" என்றான். இந்திரன், "நின் கவச குண்டலங்களைக் கொடு" என்றான். அப்பொழுது கன்னனது தந்தையாகிய சூரியன், "கன்னு, வந்திருப்பவன் இந்திரன். நீ அவற்றைத் தருவதால் உன் பலம் ஒடுங்கும். ஏமாறாதே" என்று எச்சரிக்கை செய்தான். ஆயினும், கன்னன், "நான் வாக்குறுதி வழங்கிவிட்டேன். அவன் எது கேட்பினும் நான் கொடுக்கக் கடமைப்பட்டவனே; சொன்ன சொல் தவறேன்" என்று கூறித் தன் கவச குண்டலங்களைக் கழற்றி மாதவனிடம் தந்து களித்தான். அவன் உயர்ந்த உத்தமன் அல்லனோ?

கன்னன், பதினேழாம் நாள் போரில் அர்ச்சுனன் கணைகட்கு இரையாகி மெய்தளர்ந்து இரதத்தின்மேல் சோர்ந்து கிடந்தான். அர்ச்சுனன் அவன்மீது சரமாரி விட்டான். அப்பொழுது கன்னன் செய்த அறமெல்லாம் ஒரு தேவதையாக உருக்கொண்டு கன்னன் தேர் முன் நின்று, அர்ச்சுனன் விட்ட அம்புகளை விலக்கின. அது கண்ட கண்ணன் தவசிபோல வேடங்கொண்டு கன்னனைக் குறுகி, "அப்பா, நீ பெரு வள்ளல் என்று கேள்வியுற்று உன்பால் வந்தேன். உன்னால் இயன்றது தருக" என்றிரந்தான். கன்னன், "பெரியவரே, என் உயிர் ஊசலாடுகின்றது. நான் செயலற்ற நிலையில் இருக்கிறேன். நான் வள்ளலாக இருந்து வாரிக் கொடுத்த போது நீர் வந்திலீர்; ஆயினும் குற்றம் இல்லை. வேண்டியது கேட்டருள்க" என்றான். மாதவன், "ஐயனே,

உன் அறச்செயலின் பலனை எனக்குத் தருமஞ் செய்" என்றான். உடனே கன்னன் மகிழ்ந்தான்; அங்ஙனம் தரும தேவதையைத் தருமஞ் செய்வதால், அர்ச்சுனனது அம்புபட்டுத் தான் இறப்பது நிச்சயம் என்பது கன்னனுக்கு நன்கு தெரியும். அப்படித் தெரிந்திருந்தும் அவன், 'வேண்டியது கேட்டருள்க' என்று முன்பே சொல்லிவிட்டதால், பிறகு வாக்குத் தவறி நடத்தல் தகாதென் றெண்ணினன்; நீரைக் கொண்டு தாரை வார்க்க வேண்டியதை, நீர் கிடைக்காமையால், தன் இரத்தத்தால் தாரைவார்த்து அறப்பயனைத் தத்தம் செய்தான். ஆ! கன்னனைப் போலச் சொன்ன சொற்படி நடந்தவர்—நடப்பவர் மிகச் சிலரே ஆவர்.

'நாட்டை வேண்டினும் கொடுப்பேன்; ஆனால் பொய் சொல்ல மாட்டேன்' என்று சொன்னதைக்கொண்டு கோசிக முனிவன், 'நாட்டைக் கொடுப்பதாகக் கூறினையே, உனது நாட்டை எனக்குக் கொடு' என்று வற்புறுத்த, அரிச்சந்திரன், தான் சொன்ன சொற்படியே நாட்டை முனிவனிடம் ஒப்புவித்து, மனைவியுடனும் அரும்புதல்வனுடனும் வெளிச் சென்றான் என்பதை நீங்கள் படித்ததில்லையா?

முடிவுரை

3. இங்ஙனம் சொன்ன சொல்லைக் காப்பாற்றக் கஷ்டப்பட்டவர் பலர் ஆவர். அக் கஷ்டங்கள் பட்டமையாற்றான் அவர்கள் பெயர்கள் மக்கள் மனத்தில் பதிந்திருக்கின்றன. அம் மஹான்கள் இன்றும் மக்களால் பூசிக்கப்படுகின்றனர். ஆதலின், 'சொல் தவறாது நடத்தல்' என்னும் அருங்குணம் ஒவ்வொருவரிடத்தும் இருக்கத்தகும் மேன்மைக் குணமாகும் என்பது புலனாகிறதன்றோ?

52. மதுரைத் தமிழ்ச் சங்கம்

குறிப்புகள் :—1. பழைய தமிழ்ச் சங்கங்கள்
2. பாண்டித்துரைத் தேவர்
3. நான்காம் தமிழ்ச் சங்கம்
4. முடிவு

கட்டுரை

பழைய தமிழ்ச் சங்கங்கள்

1. தமிழகத்துள் தமிழைப் போற்றி வளர்த்தவர் சேர-சோழ-பாண்டியர் ஆயினும், தமிழைப் பெரிதும் கவலையோடு வளர்த்தவர் பாண்டியரே ஆவர். இன்றுள்ள கன்னியா குமரி முனைக்கும் தெற்கே நாடு இருந்தபொழுது 'தென் மதுரை' என்பது பாண்டியர் தலைநகரமாக இருந்தது. அதனில் முதல் தமிழ்ச் சங்கம் கூட்டப்பட்டது. பல நூல்கள் இயற்றப்பட்டன. அந்நாடும் நகரமும் கடல் கொண்ட பின், கிழக்குக் கரை ஓரமாய் இருந்த கபாடபுரம் (அலைவாய்) என்பது பாண்டியர் தலைநகரம் ஆனது. அங்கு இரண்டாம் தமிழ்ச் சங்கம் கூட்டப்பட்டது. பல நூல்கள் இயற்றப்பட்டன. அந்நிலப் பகுதியும் நகரமும் கடல்கோளில் அழிந்தன. பின்னரே இன்றுள்ள மதுரை பாண்டியர் தலைநகரம் ஆக்கப்பட்டது. அங்கு மூன்றும் தமிழ்ச் சங்கம் கூடியது. அதனில் பல நூல்கள் செய்யப்பட்டன. அச்சங்கம் கி. பி. 3-ஆம் நூற்றுண்டோடு அழிந்தது. அதன் பின்னர்ப் பாண்டிய நாடு களப்பிரர், பல்லவர், சோழர் முதலிய வேற்றரசர் ஆட்சிக்குட்பட்டுப் பல நூற்றுண்டுகள் அல்லற்பட்டது. அதனுல் பாண்டிய மன்னர் நிலையாக இருந்து சங்கம் கூட்டித் தமிழ் வளர்க்க வழியில்லாது போயிற்று. மேற்கூறப்பெற்ற சங்கங்களில் இயற்றப்பெற்ற நூல்களில் அழிந்-

தன போக எஞ்சியவையே இன்றுள்ள 'சங்க நூல்கள்' என்பன. நிற்க.

பாண்டித்துரைத் தேவர்

2. இச்சங்கங்கட்குப் பிற்பட்ட காலத்தில் புலவர் பலர் தோன்றிப் பல நூல்களைப் பாடியுள்ளனர்; பழைய சங்க நூல்களும் ஏடுகளில் எழுதப்பெற்றுக் கட்டப்பட்டுக் கிடந்தன. இவற்றைத் தேடித் தொகுப்பவர் இல்லை. நூல்கள் சிதறிக்கிடந்தன. இவற்றைத் தொகுத்து ஓர் இடத்தில் சேர்த்து, நாட்டில் இருந்த புலவர்களைக் கூட்டித் 'தமிழ்ச் சங்கம்' ஒன்றை அமைத்து தமிழ்த் தேர்வுகளை வைத்து நடத்தப் பாண்டித்துரைத் தேவர் என்பவர் விரும்பினர். அவர் கி. பி. 1864-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ந் தேதி பொன்னுச்சாமி தேவர் என்னும் ஜமீன்தார் புத்திரராகப் பிறந்தார். அவர் முத்துசாமி ஐயங்கார் என்பவரிடம் தமிழ்க் கல்விகற்றுப் புலவர் ஆனர்.

அவர் 1901-ஆம் ஆண்டு மே மாதம் 24-ஆந் தேதி மதுரையில் இன்றுள்ள நான்காம் தமிழ்ச் சங்கத்தைத் தாபித்தார். இச்சங்கம் என்றென்றும் நிலைபெற்றிருக்கத் தாமும் தம் நண்பர்களைக் கொண்டும் மூலதனம் திரட்டினர்; முற்காலத்துச் சங்கங்களைப் போலவே இச்சங்கத்திலும் புலவர் பலரைச் சேர்த்தார்; தமிழ்ச் சங்க அச்சுச்சாலை ஒன்றை ஏற்படுத்தினர்; தமிழ்ச் சங்க மாத வெளியீடாகச் 'செந்தமிழ்' என்னும் பத்திரிகை வெளிவர ஏற்பாடு செய்தார்; செந்தமிழ்க் கலாசாலை ஒன்றையும் உண்டாக்கினர்; பழந்தமிழ் நூல்களை நவீன ஆராய்ச்சியுடன் சுத்தமாக அச்சிட்டு வெளிப்படுத்த ஏற்பாடு செய்தார்; தமிழ் நூல் நிலையம் ஒன்றையும் ஸ்தாபித்தார்; செந்தமிழ்ப் பத்திரிகையில் தமிழ் மக்கள் மதநிலை, பழக்க வழக்கங்கள், ஒழுக்கம், கலைகள்

இன்ன பிறவும் தக்க புலவரைக் கொண்டு எழுதச் செய்தார்; சங்கக் கலாசாலையில் பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்னும் மூன்று பிரிவுகளை உண்டாக்கித் தமிழ் மாணவர்க்குத் தமிழ்க் கல்வி ஊட்டிவர ஏற்பாடு செய்தார். இத்தேர்வுகள் இன்னும் ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. பண்டிதத் தேர்வில் முதன்மையுறத் தேறுபவர் தங்கத் தோடாப் பெறுதல் உண்டு. அத்தோடாவை முதன் முதல் பெற்றவர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் என்னும் பெரியார் ஆவர்.

நான்காம் தமிழ்ச் சங்கம்

3. இந்நான்காம் தமிழ்ச் சங்கம் இன்று தமிழ் அகத்தில் இருப்பது பெருமைப்படத்தக்கதாகும். இதனைப் பேருக்கத்துடன் நடத்தி வருபவர் T. C. பார்த்தசாரதி ஐயங்கார் என்னும் மதுரை வழக்கறிஞர் ஆவர். அப் பெரியார் தமது பொருளையும் செலவிட்டு இச்சங்கத்தை உயர்நிலையில் நடத்தி வருகின்றனர். 'செந்தமிழ்' இதழின் ஆசிரியராக இருப்பவர் தமிழிலும் வடமொழியிலும் திப்பிய புலமை சான்ற பெரியார் திரு. நாராயணையங்கார் என்பவர். இவரே தமிழ்க் கலாசாலையிலும் பேராசிரியராக இருப்பவர். இச்சங்கம் நன்முறையில் நடைபெற இறைவன் திருவருள் புரிவானாக.

முடிவு

4. இத்தகைய தமிழ்ச் சங்கங்கள் பல நம்நாட்டில் தோன்றுதல் வேண்டும்; ஜில்லாவுக்கொரு தமிழ்ச் சங்கம் இருப்பது நலம்; தமிழ்க் கலாசாலைகள் ஏற்படல் வேண்டும்; தமிழ்க் கல்வி தமிழ் நாடெங்கும் பெருகுதல் வேண்டும். தமிழ் மக்கள் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் உடையவராக வாழ்தல் வேண்டும்.

53. இளைஞரும் சமூகத் தொண்டும்

குறிப்புகள் :—1. சமூகத்தொண்டு யாது ?
2. வேல்ஸ் இளவரசர் பேச்சு
3. முடிவு

கட்டுரை

சமூகத்தொண்டு யாது ?

1. சமூகம் என்பது மக்களும் வாழ்க்கையும் கலந்த ஒன்றாகும். அச் சமூகத்தில் நாம் செய்யத்தக்க தொண்டுகள் பல. அவை கல்வி இல்லாதவர்க்குக் கல்வி போதித்தல், வேலையற்றோர்க்கு வேலை வாங்கித் தருதல், ஆபத்துக் காலங்களில் பிறர்க்கு உதவுதல், தீயோரை அடக்குதல், நல்லோரைப் போற்றுதல், தன்னலமற்ற சேவை செய்தல் முதலியனவாகும். இச் சேவைகளால் ஒரு சமூகம் மெய்யாகவே உயர்வைப் பெறும். உயர்வு பெற்ற சமூகத்தால் நாடும் உயர்வைப் பெறும். இத் தன்னலமற்ற சேவை முதியவரால் செய்ய முடியாது. இதனைச் செய்யத்தக்கவர் உணர்ச்சி மிக்கவரும் வாழ்க்கையில் நுழையாதவரும் ஆகிய இளைஞரே ஆவர்.

வேல்ஸ் இளவரசர் பேச்சு

2. எட்டாம் எட்வர்ட் மன்னர் வேல்ஸ் இளவரசராக இருந்தபோது, 1932-ஆம் ஆண்டில் இங்கிலாந்தில் இருந்த இளைஞர்களைப் பார்த்துக் கீழ்வருமாறு அறிவு புகட்டினர். அவ் வறிவுரையே நம் இளைஞர்க்கும் ஏற்றதாகும். அவர் கூறியன வருமாறு :

“ என் தாய்நாட்டு இளைஞர்களே, தம் வாழ்க்கை சிறப்படைய ஒவ்வொருவரும் பிறருடன் கலந்தே உழைத்தல்

வேண்டும். 'அங்ஙனம் உழைத்தலே நமது கடமை' என்பதை நீங்கள் உணர்தல் வேண்டும். 'நமது எதிர்கால வாழ்க்கை நமது முயற்சியையே பொறுத்துள்ளது' என்பதை நீங்கள் அறிந்து நடத்தல் வேண்டும். இவ் வறிவு வாய்க்கப்பெறின், நீங்கள் ஆவேசத்தோடு வேலையில் முனைவீர்கள்; உங்கள் வேலை வெற்றிபெறப் பல இன்னல்கள் குறுக்கிடினும், அவற்றை வென்று மேற்செல்வீர்கள்; இறுதியில் வெற்றி பெறுவீர்கள். பிறர்க்கு உதவிபுரிதல் என்பது நமது பிறப்புரிமை ஆகும். இவ் வுணர்ச்சி உங்கள் உள்ளத்தில் ஊன்றுமாயின், நீங்கள் ஒரு பலனையும் எதிர்பாராமல் பிறர்க்கு ஊழியம் செய்வீர்கள். நமது சமூகத்துக்குத் தியாக உணர்ச்சியோடு செய்யப்படும் ஊழியமே தேவை. இதனால் நாம் உண்மையுள்ள குடிமக்கள் ஆவோம். நமது சமூகம் உணர்ச்சி பெற்று எழும். ஊழியம், உதவி, தியாகம் என்பவை இல்லாமல் ஒருவரது வாழ்வு சிறப்புறாது. நீங்கள் எங்கு இருப்பினும் இம் மூன்றையும் கைசோரவிட லாகாது. நீங்கள் ஒவ்வொருவரும் சமூகத் தொண்டாற்ற முன் வந்தாற்றான் சமூகமும் நாடும் முன்னேற்றம் அடையும். மந்திரத்தால் மாங்காய் விழாதன்றோ! உழைப்புக்கே பலன் கிடைக்கும். நாளை இந் நாட்டின் நன்மை தீமைகளில் பங்கு கொள்பவர் நீங்களே. நீங்கள்தாம் இந் நாட்டை ஆளப் போகின்றவர்கள். உங்கட்கு வேண்டுவது செல்வம் மட்டு மன்று; சுக வாழ்வும் இன்ப வாழ்வும் வேண்டுபவையே அல்லவா? ஆதலால், நீங்கள் உடல் உரம் பெறுதற்குரிய பயிற்சிகளைச் செய்யுங்கள். நமது நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். நீங்கள் வேலையில்லாதவரை உங்கள் வீட்டவர் எனக் கொண்டு, உதவி புரிய வேண்டுகிறேன். அவர்கள் எல்லோரும் வேலையின்றிச் சோம்பித் திரிகின்றனர். நீங்கள் அவர்களை நல்வழிப்படுத்

தல் வேண்டும்; அவர்கட்கு வேலை தேடித் தருதல் வேண்டும். அஃது உங்கள் சமூகத் தொண்டுகளில் ஒன்றாகும். அவர்களுக்காகப் பல சங்கங்களைக் கூட்டிப் பல வேலைகளைக் கொடுங்கள்; வேறு வேலைகளை—நாட்டுக்கு நன்மை பயக்கும் வேலைகளைத்—தந்து காப்பாற்றுங்கள். இரண்டிரண்டு பேரைக் கிராமங்கட்கு அனுப்பி, கிராமச் சீர்திருத்தம் செய்யத் தூண்டுங்கள். இவ்வாறு வேலையைப் பல பகுதிகளாகப் பிரித்துப் பொது நன்மைக்குரிய வேலைகளைச் செய்தால், வேலையற்றோர் துன்பம் பெரிதும் குறையுமன்றோ? இக் கடமையான வேலையைச் செய்வதில் சில கஷ்டங்கள் ஏற்படும்; பல தவறுகள் உண்டாகும். ஆயினும், நீங்கள் எதற்கும் அஞ்சலாகாது; நாட்டு நலத்தையே பெரிதெனக் கொண்டு, சமூகத் தொண்டு செய்துகொண்டே போதல் வேண்டும். ஆதலின், நீங்கள் உறுதிபெற்ற மனத்துடனும் உள்ளக் களிப்புடனும் சமூகத் தொண்டில் ஈடுபடுங்கள். தன்னலமற்ற சேவையே கடவுளுக்குப் பிரியமானது. மக்கட்குத் தொண்டு செய்பவனே கடவுளுக்கும் பிரியமானவன். அவனே கடவுள் அருளுக்குப் பாத்திரன் ஆவான். நீங்கள் உழைப்பும் ஊக்கமும் கொண்டு விளங்கும் நாளே நமது நாடு உயர்வு எய்தற்குரிய நன்னாள் ஆகும். நம் தாய்நாட்டுச் சிறப்பு என்றும் உங்களுடையதாகுக!"

முடிவு

3. இப் பேருரையை நம் நாட்டு இளைஞரும் உளங்கொண்டு நம் சமூகத் தொண்டு செய்ய முனைவராயின், நம் சமூகமும் தாய்நாடும் உயர்வடையும் அல்லவா?

54. பொறுமை

குறிப்புகள்: —1. பொறுமைக் குணம்
2. சான்றுகள்
3. முடிவு

கட்டுரை

பொறுமைக் குணம்

1. ஒருவனது வாழ்க்கையில் உண்டாகும் துன்பங்களைப்பொறுத்தலே 'பொறுமை' எனப்படும். அறிவற்ற ஒருவன் பல வசை மொழிகளைக் கூறினும் - பிறர் பல துன்பங்களை இழைப்பினும் - அவற்றுக்குத் தீமை செய்யாது, சகிப்புத் தன்மையோடு இருத்தல் 'பொறுமை' எனப்படும். 'பொறுமை கடலிற் பெரிது' என்பது பெரியோர் அமுத மொழி. 'பொறுத்தார் பூமி ஆள்வார், பொங்கினர் காடாள்வார்' என்னும் பழமொழியும் கவனிக்கத் தக்கது.

"ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் ; பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்"

என்னும் திருக்குறளும் பொறுமையின் பெருமையை விளக்குதல் காண்க. 'ஒருவன் உனது வலது கன்னத்தில் அறைந்தால் அவனுக்கு உனது இடது கன்னத்தையும் காட்டு' என்னும் இயேசுநாதர் பொன்னுரை கருதத் தக்கது.

சான்றுகள்

2. பாண்டவர்களுள் மூத்தவனாகிய தருமன் பொறுமைக்கு நிலைக்களமானவன். துரியோதனன் பாண்டவர்க்குச் செய்த தீமைகட்குக் கணக்கில்லை. அவர்களை விஷம் வைத்துக் கொல்லச் சதி செய்தான் ; வீட்டுக்கு நெருப்பு வைத்தான் ; நீரைக் கழுவில் விழச் செய்தான் ; அச்சமோ அருளோ

இன்றிப் பொய்ச்சூது ஆடினுன்; நாடு நகரங்களைக் கவர்ந்தான்; அவர் தம் பத்தினியாகிய பாஞ்சாலியைச் சபையில் நிறுத்தித் துகில் உரியச் செய்தான். இத்துன்பங்களை விட ஒருவரைத் துன்புறுத்தத் தக்கன வேறு உண்டோ? மானம் போயிற்று; நாடு போயிற்று; போக பாக்கியங்கள் போயின; எல்லா நலன்களும் ஒழிந்தன. அக்கேவல நிலையினும் தருமன், சினங்கொண்ட தன் தம்பியரை அமைதியாக இருக்கச் செய்து, பொறுமையைப் பூஷணமாகக் கொண்டான். ஆ! அச்சிறப்புடைக் குணத்தாற்றான் அவனது திருப்பெயர் இன்னும் நம் உள்ளத்தில் வேரூன்றி இருக்கின்றது. உலகம் உள்ளளவும் அவன் பெருமை நிலைத்திருக்கும். திண்ணைகள் தோறும் அவன் பேசப்படுகிறுன்.

காட்டில் இருக்கையில் துரியோதனன் பலரை ஏவிப் பாண்டவர்க்குத் துன்பம் இழைத்தான். தருமன் அப்பொழுதும் பொறுமையாகவே இருந்தான். அவன் அப்பொழுதும் துரியோதனனை இருதய பூர்வமாக நேசித்தான்; அவ்வப்போது அவன் செய்த தவறுகளை உடனுக்குடனே மறந்தான். பாண்டவர் விராட நகரத்தில் இருந்தபோது திரௌபதி மேல் 'கீசகன்' என்னும் விராட அரசனது மைத்துனன் காதல் கொண்டு அவளைத் தொடர்ந்தான். அவள் அலங்கோலமாக ஓடிவந்து இராஜ சபையில் வீழ்ந்தாள். அப்பொழுது தருமன் விராடனது சபையில் யோசனையாளனுக அமர்ந்திருந்தான். வீமன் சமையற்காரனுக இருந்தான். அவன் அப்போது இராஜ சபைக்கு முன் இருந்த பெரிய மரத்தை வேரோடு பறித்துக் கீசகனைக் கொல்லவும், விசாரியாது மௌனமாக இருந்த விராடனைக் கொல்லவும் நினைந்தான்; மரத்தைப் பற்றினுன். அவனது குறிப்பை உணர்ந்த தருமன், "அப்பா, நீ இந்தப் பெரிய மரத்தைப் பறிப்பதால் நன்மை இல்லை. இது பல ஆண்டுகளாக இங்கு

இருந்து நிழலைத் தருகிறது. உன் வேலைக்கு வேண்டிய மரங்கள் காட்டில் உள்ளன", என்றான். தன் மனைவியை வேறொருவன் தொடர்ந்து துன்புறுத்தும்போதும் தருமன் காட்டிய பொறுமையைப் பாருங்கள்! என்ன ஆச்சரியம்! இப்படியும் ஒரு மனிதன் இருப்பனோ? என்று நாம் ஐயப்படுகிறோம். தருமன் பொறுமைக்கு நிலைக்களமானவன் என்பதில் ஐயம் உண்டோ?

அரிச்சந்திரன் ஒரு பொய் சொல்வதற்கு அஞ்சித் தன் நாடு நகரங்களைத் துறந்தான். அப்பொழுதேனும் கோசிகன் அவனை வாளா விட்டனனோ? இல்லையே! அவனுக்குப் பல்வேறு துன்பங்களை உண்டாக்கினான்; அவன் மனைவியையும் பிள்ளையையும் ஒருவற்கு அடிமைகள் ஆகச்செய்தான்; மகனைப் பாம்பு தீண்டி இறக்கச் செய்தான்; சுடுகாடு நண்ணிய சந்திரமதி 'காசியரசன் மகனைக் கொன்றவள்' என்னும் பழிச்சொல்லை உண்டாக்கினான்; அவளை அரிச்சந்திரனைக் கொண்டே வெட்டவும் ஏற்பாடு செய்தான். ஆ! என்ன கடுமையான சோதனைகள்! இத்தனைக்கும் அரிச்சந்திரன் பொறுமை காட்டினான். ஆனால், அவன் அப்பொழுதும் பொய் சொல்லவில்லை. அப்பொறுமையின் பயனைத்தான் உலகப் புகழ் பெற்றான்; தன் பெயரை உலகில் நிலை நாட்டினான்.

முடிவு

3. ஆதலின், 'பொறுமை' என்னும் பெருங்குணத்தை மக்களாகப் பிறந்தவர் கைக்கொள்ளல் மேலானதாகும்.

55. சகோதர அன்பு

குறிப்புகள் :—1. சகோதர அன்பு
2. சான்றுகள்
3. முடிவு

கட்டுரை

சகோதர அன்பு

1. ஒரு தாய் வயிற்றிற் பிறந்த மக்களுக்குள்-ஒரே தந்தைக்குப் பிறந்த மக்களுக்குள்-எவ்வித வேறுபாடும் இன்றி அனைவரும் ஒரு மனப்பட்டு இருத்தல் 'சகோதர அன்பு' எனப்படும். அத்தகைய அன்புடைய சகோதரர் குடும்பம் உயர்வடையும்; மற்றக் குடும்பங்கட்கு முன்மாதிரி யாக விளங்கும். அத்தகைய சகோதர அன்புடைய பெரு மக்கள் இன்றும் பலர் உளர். அவர்கள் தங்கள் ஒற்றுமை யால் அரிய பெரிய காரியங்களை எல்லாம் சாதிக்கின்றனர்; வாழ்வை வெற்றிபெற நடத்துகின்றனர். சகோதரர் தமக் குள் ஒற்றுமையின்றிச் சிதறுவதால் ஒரே குடும்பம் பல குடும்பங்களாகப் பிரிந்து, செலவு அதிகமாகி, ஒற்றுமை இழந்து, எதிரிகளும் இகழும்படியான நிலைமை ஏற்பட்டு விடுகிறது. அந்நிலைமை மிகவும் இழிந்ததாகும். ஒற்றுமை யும் அன்பும் போற்றும் சகோதரர் வாழ்வே போற்றத் தக்க தாகும். சகோதரர், ஒருவருடைய இன்ப துன்பங்களைத் தம்மவையாக எண்ணும் போதுதான் சகோதர அன்பு பரி மளிக்கின்றது. அப்பொழுதுதான் அவர்களது ஒற்றுமை புலப்படுகின்றது. அச்சகோதர அன்பே பெறத்தக்க பேறு களில் சிறப்புடையதாகும்.

சான்றுகள்

2. தசரதனுக்கு மனைவியர் மூவர். அவர்கள் முறையே கௌசலை, சுமித்திரை, கைகேயி என்பவர்கள். அம்மூவர்க்கும் முறையே இராமன், இலக்குவன், சத்ருக்கனன், பரதன் என்பவர் பிறந்தனர். தந்தை ஒருவன்; தாய்மார் மூவர். இப்படி வேறு வேறு தாயார்க்குப் பிறந்தவராக இருந்தும், நால்வரும் ஒரு மனப்பட்டவராய் வாழ்ந்தனர். ஏனைய மூவரும் இராமனிடம் மிகுந்த சகோதர அன்புடன் வாழ்ந்தனர்; இராமன் சொற்படி நடந்தனர். பரதன் ஊரில் இல்லாத சமயம் கைகேயி இராமனைப் பதினான்கு ஆண்டுகள் காட்டுக்கு அனுப்ப வேண்டும் என்றும், அக்காலத்தில் தன் மகன் பரதனே நாட்டை ஆள வேண்டும் என்றும் தசரதனிடம் வரங்களைப் பெற்றாள். இளவரசனாக முடிசூட வேண்டிய இராமன் மரவுரி அணிந்து காடு சென்றான். அவனை விட்டுப் பிரிய மனமற்ற சீதையும் உடன்சென்றாள். இலக்குவன் சகோதர அன்பிற் சிறந்தவன். அவன், முறைதவறிய செயலைச் செய்த கைகேயியைத் தாக்கப் புறப்பட்டான். அப்போது இராமன் அவனை அமைதிப்படுத்தினான். சுமித்திரை, தன் மகனான இலக்குவனைப் பார்த்து, "மகனே, இராமன் இருக்கப்போகும் காடே உனக்கு அயோத்தி. இராமனே உன் அரசன்; சீதையே உன் தாய்; அவனுக்கு ஏதேனும் ஏதம் வருமாயின் அவனுக்கு முன் நீ இற. நீ தம்பி என்னும் முறையில் இராதே. அடியாரைப் போல நடந்து கொள்; செல்" என உபதேசித்து அனுப்பினாள். இத்தகைய தாய்மாரை இன்று காணுதல் இயலுமோ? சகோதர அன்பை விளக்கி, 'அவனுக்குப் பணிவிடை செய்' என்று மாற்றாந் தாயர் கூறுவரோ? என்ன வியப்பு! அவளது பொன்னுரைப்படியே இலக்குவன் நடந்துவந்தான்.

காட்டில் இராமனும் சீதையும் உறங்கும் இடத்தைச் சுற்றி இலக்குவன், வில்லேந்திய கையினனாய், விழிநீர் வார விடியும் அளவும் நின்றனன். இங்ஙனம் அவன் நின்ற நாட்கள் பல; இராமனது துன்ப நிலைமையை நினைந்து அழுத நாட்கள் பல; அவன் கவலையால் தூங்காத நாட்கள் பல. இராமன் சென்ற இடமெல்லாம் பர்ணசாலைகள் அமைப்பதும் அவற்றைச் சுற்றிக் காவல் இருப்பதுமே இலக்குவன் வேலைகள்.

பரதனோ, ஊர் வந்ததும், தன் தாயின் செயலை அறிந்தான்; தன் உயிரினும் இனிய தமையன் காடு சென்றதைக் கேள்வியுற்றான்; உடனே கடுங்கோபமும் வருத்தமும் கொண்டான்; தனக்கு நன்மை செய்த தாயைப் பேய் என்றான்; கண்டபடி ஏசினான்; தனக்கு நாடு வேண்டாவெனக் கூறி, இராமனை நாட்டிற்கு அழைத்துவரப் புறப்பட்டான்; எல்லோரும் அவனுடன் சென்றனர்.

பரதன் இராமனை நகரத்திற்கு வரும்படி வேண்டினான்; அவன் வர மறுத்ததும், அவன் பாதுகைகளைத் தன் தலைமேற்கொண்டு, அவற்றை அரியாசனத்தில் வைத்துப் பதினான்கு ஆண்டுகள் பூசித்து வந்தான்; குறித்த நேரத்தில் இராமன் வரச்சிறிது தாமதம் உண்டானதால் தீக்குளிக்கத் துணிந்தான். ஆ! அம்மம்ம! பரதனது சகோதர அன்பை யாரே விரித்து விளக்க வல்லார்!

முடிவு

3. அப்பெரியோனைப் போன்ற சகோதரரே உண்மைச் சகோதர அன்புடையர் ஆவர். நாம் இலக்குவனையும் பரதனையுமே முன்மாதிரியாகக் கோடல் வேண்டும்.

56. சீவகாருண்யம்

குறிப்புகள் :—1. சீவகாருண்யம்—பொருள் யாது ?
2. சான்றுகள்
3. முடிவு

கட்டுரை

சீவகாருண்யம்—பொருள் யாது ?

1. எல்லா உயிர்களிடத்தும் காட்டும் இரக்கமே சீவ காருண்யம் எனப்படும். சீவன்களிடத்தில் காருண்யமாக நடந்துகொள்ளலே சீவகாருண்யம் ஆகும்.

"எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவுநின்
தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே !"

எனவும்,

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே !"

எனவும் தாயுமான அடிகள் கூறியுள்ளது காண்க. சீவ காருண்யமுள்ள பெருமக்கள், உயிர்கள் படுந் துன்பங்கட்கு இரங்கி வருந்தியிருத்தலைப் படிக்கப் படிக்கச் சீவகாருண்யத்தின் அவசியத்தை நாம் நன்குணரலாம் :

"மண்ணுல கதிலே உயிர்கள்தாம் வருந்தும்
வருத்தத்தை ஒருசிறி தெனினும்
கண்ணுறப் பார்த்தும் செவியுறக் கேட்டும்
கணமும்நான் சகித்திட மாட்டேன்"

என்று இராமலிங்க அடிகள் பாடியுள்ள உருக்கமான அடிகளைக் காண்க.

சான்றுகள்

2. பசி என்னும் நெருப்புப் பற்றி எரிகின்றபோது அன்னத்தை இட்டு அப் பசியை அவிப்பதுதான் சீவகாருண்யம். புத்தர் பெருமான் இளவரசராக இருந்தபோது வயது சென்ற கிழவனைக் கண்டார்; அவனுடைய கன்னங்கள் சுருங்கிக் கண்கள் குழிந்து, தோல் திரங்கி வாடி வதங்கியிருத்தலைக் கண்டார்; அவன் நடக்கத் தடுமாறியதைக் கண்டார்; இரக்கங் கொண்டார்; பறவை ஒன்று வேடனால் துரத்தப்பட்டு ஓடிவந்து விழுந்ததைக் கண்டு, எடுத்து உபசரித்து அன்பு காட்டினர். அவர் சீவகாருண்யத்தாலேயே தம் போக பாக்கியங்களையும், அரச பதவியையும் துறந்து காடு சென்றார்; உயிர்களின் துன்பத்தைப் போக்கத் தவம் கிடந்தார்; ஞானம் பெற்றார்; வெளிப் போந்து அன்பு மதப் பிரசாரம் செய்தார். ஆ! அவரது புத்த மதம் சீவகாருண்யத்தையே அடிப்படையாகக் கொண்டது. "எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்துங்கள்; அன்பே ஆண்டவன்" என்று புத்தர் பெருமான் உபதேசித்தார்.

புத்தர் பிரான் காட்டு வழியே செல்கையில் பல ஆடுகள் போதலைக் கண்டார்; அவற்றுள் குட்டி ஒன்று நடக்க முடியாமல் நொண்டி நொண்டிப் போதலைக் கண்டார்; மனம் இரங்கினர்; அவ் வாட்டுக் குட்டியை எடுத்து மார்போடு அணைத்துக் கொண்டு இடையர்களோடு சென்றார் எனின், அப் பெரியாரது செயல் சீவகாருண்யத்தை அடிப்படையாகக் கொண்டதன்றோ? பிம்பிசாரன் யாகத்துக்குச் சென்ற அவ் வாடுகளைப் பின் தொடர்ந்து சென்று, அவனுக்குச் சிவகாருண்யத்தைப் பிரசங்கித்து ஆட்டுப் பலியை நிறுத்தினது சீவகாருண்யம். அவரது மதத்தைக் கடைப்பிடித்த அசோகப் பெருமான் அரசர்க்குரிய வேட்டை

ஆடலைத் தவிர்ந்தான் என்பது சீவகாருண்யம்; அவன் தனக்காக நாளும் அடிக்கப்பட்டு வந்த மயில் முதலிய பறவைகளைக் கொல்ல வேண்டா வென்று தடுத்தது சீவகாருண்யம்.

சிபிச் சக்கரவர்த்தி தன் முன் விழுந்த புறவுக்காகத் தன் உடற் சதையை அறுத்துப் புறவின் எடைக்குச் சமமாக நிறுத்த முயன்று, இறுதியில் எடையைச் சரிப்படுத்தத் தாமே தராசில் ஏறி நின்று, தம்மைப் பருந்திற்குப் பலியாக்கியது சீவகாருண்யம் அன்றோ? ஆ! எவ்வளவு பெரிய தியாகம்! அவன், அப் புறவைக் காக்கவன்றோ தன்னைத் தியாகம் செய்தான்! சீவகாருண்யத்தால் அன்றோ அப் பேரரசன் தன் உடலை அரிந்து அரிந்து பலியிட்டான்! ஆபத்தில் சிக்கியவரை அவ்வாபத்திலிருந்து மீட்பது சீவகாருண்யம். வேலையற்றோர்க்கு வேலை வாங்கித் தருதல் சீவகாருண்யம். கோவில்களில் நடக்கும் ஆட்டுப் பலி, மாட்டுப் பலி, கோழிப் பலி இவற்றை நிறுத்துதல் சீவகாருண்யம். எல்லா உயிர்களிடத்தும் ஒத்த அன்பு கொண்டு ஒழுகுதல் சீவகாருண்யம். மக்களிடத்தே உயர்வு தாழ்வுகளைக் கவனியாமை சீவகாருண்யம். அவர்களைச் சமமாக நடத்துதல் சீவகாருண்யம். கல்லாதவர்க்குக் கல்வி கற்பித்தல் சீவகாருண்யம். பொருள் இலார்க்குப் பொருள் உதவி செய்தல் சீவகாருண்யம். இவை அனைத்தும் பதில் உதவி எதிர்பாராமல் செய்யும்பொழுதுதான் சீவகாருண்யம் எனப்படும்.

முடிவு

3. இச் சீவகாருண்ய உணர்ச்சி இல்லாதவர் மனிதர் ஆகார். அரிய பிறப்பெடுத்த மனிதன் தன்போன்ற மனிதரிடத்தும் தன்னினும் இழி பிறவியினவான பிற உயிர்களிடத்தும் சீவகாருண்யம் காட்டக் கடமைப்பட்டவன் ஆவான்.

57. நகரங்கள் எப்படி உண்டாகின்றன?

குறிப்புகள் :—1. ஆற்றருகில் நகரங்கள்
2. துறைமுக நகரங்கள்
3. குன்றுகள் மீது நகரங்கள்
4. கோவில் நகரங்கள்
5. வண்டித் தொடர்களும் நகரங்களும்
6. கோடைக்கால நகரங்கள்
7. படைக்குரிய நகரங்கள்
8. தொழில் நகரங்கள்
9. முடிவு

கட்டுரை

ஆற்றருகில் நகரங்கள்

1. ஆறுகளின் பள்ளத்தாக்குகளில் நகரங்கள் உண்டாதல் இயல்பு. கங்கை, சிந்து, பிரமபுத்திரா, காவிரி, நைல், யாங்டிசிகியாங், ஐராவதி முதலிய யாறுகளின் பள்ளத்தாக்குகளில் ஆயிரம் ஆண்டுகட்கு முன்னரே செல்வச் சிறப்புடன் பல நகரங்கள் உண்டாயின. ஏனெனில் அப் பள்ளத் தாக்குகளில் விளையும் நெல், கரும்பு, பருத்தி, கோதுமை, சணல் முதலியவற்றை வெளிநாடுகட்கு ஏற்றுமதி செய்ய அந்நகரங்கள் வசதியான இடங்களில் அமைந்துள்ளன. இரண்டு ஆறுகள் ஒன்று கூடும் இடங்களிலும் நகரங்கள் உண்டாகின்றன. கங்கையும் யமுனையும் கூடும் இடத்தில் அல்லஹபாத் என்னும் நகரமும், சோனையாறும் கங்கையும் கூடும் இடத்தில் பாட்னா நகரமும் இங்ஙனம் அமைந்தனவே ஆகும். இவை புண்ணிய ஸ்தலங்களாகக் கருதப்படுவதால் நாளடைவில் பெரிய நகரங்களாக மாறிவிட்டன. ஆற்றங்கரை யோரம் பல நகரங்கள் உண்டாகி இருக்கின்றன. அவற்றைச் சுற்றி

யுள்ள கிராமப் பொருள்களை ஆற்றின் மூலம் வெளி ஊர் கட்கு அனுப்பவும் அவ்வூர்களிலிருந்து அதே ஆற்றின் வழி யாகப் பல பொருள்களை வரவழைக்கவும் அந்நகரங்கள் பயன்படுகின்றன. ஆறுகளின் முகத்துவாரங்களிலும் நகரங் கள் உண்டாகின்றன.

துறைமுக நகரங்கள்

2. பம்பாய், சென்னை, கொச்சி, நாகப்பட்டினம், புதுச் சேரி, கடலூர், விசாகப்பட்டினம் இவை துறைமுக நகரங் கள் ஆகும். இவை கடல் வாணிபத்தை முன்னிட்டு ஏற் பட்ட துறைமுக நகரங்கள் ஆகும். ஏற்றுமதி இறக்குமதிக் குரிய துறைமுகம் அமைந்துள்ள இந்நகரங்களில் இலக்ஷக் கணக்கான மக்கள் பிழைக்கின்றனர். இத்துறைமுகங்கட் குப் பல இடங்களிலுமிருந்து சாமான்களைக் கொண்டுவரும் புகை வண்டிகள் வந்த வண்ணம் இருக்கின்றன. இவற்றால் இந்நகரங்களில் ஜனத்தொகை அதிகம்.

குன்றுகள் மீது நகரங்கள்

3. மலைகள் மீதும் குன்றுகள் மீதும் பழங்காலத்தரசர் கோட்டைகள் கட்டி வசித்தனர். குடிமக்கள் அவற்றின் அடிவாரங்களில் வீடுகள் கட்டி வாழ்ந்தனர். இவ்வாறு அமைந்த நகரங்களே செஞ்சி, திருச்சிராப்பள்ளி முதலியன. வட இந்தியாவில் சுதேச சமஸ்தானங்களில் பல நகரங்கள் இம்முறையில் அமைந்தவை.

கோவில் நகரங்கள்

4. கோவில்கள் உள்ள இடங்களில் பல நகரங்கள் உண்டாகி இருக்கின்றன. பக்தர்கள் வருதலும் போதலு மாக இருப்பதால் கடைகள் ஏற்படுகின்றன; புகைவண்டி

நிலையம், தபால் நிலையம், போலீஸ் நிலையம், சத்திரங்கள் முதலியன ஏற்படுகின்றன. பலர் அத்தூய இடங்களில் தங்கள் இறுதிக் காலத்தைக் கழிக்கக் குடியேறுகின்றனர். இங்ஙனம் அமைந்த நகரங்களே காசி, அமிர்தசரஸ், ஜகந்நாதம், பண்டரிபுரம், திருப்பதி, மதுரை, சிதம்பரம், மக்கா, ஜெருசலேம், கயா முதலியன.

வண்டித் தொடர்களும் நகரங்களும்

5. வண்டித் தொடர்கள் ஒன்று கூடும் இடங்களில் பல நகரங்கள் உண்டாகி வருகின்றன. அங்கு இரயில்வே தொழிற்சாலைகளும் உண்டாகின்றன; தொழிலாளர் வீடுகள் அமைகின்றன; இரயில் உத்தியோகஸ்தர் இல்லங்கள் உண்டாகின்றன; நாளடைவில் கடைகள் ஏற்படுகின்றன. இங்ஙனம் உண்டானவையே எழும்பூர், பிரம்பூர், பொன்மலை முதலியன.

கோடைக்கால நகரங்கள்

6. கோடைக்கால வசதிக்காகச் சில மலைகள் மீது நகரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உயர்ந்த உத்யோகஸ்தர் பலர் அந்நகரங்களில் சென்று வசிக்கின்றனர். கவர்னர் தம் பரிவாரங்களோடு அங்குச் சென்று தங்குகின்றார். இங்ஙனம் அமைந்த நகரங்கள் கோடைக்கானல், நீலகிரி, நந்திமலை, டார்ஜிலிங், நைனிட்டால் முதலியன.

படைக்குரிய நகரங்கள்

7. சேனைகள் வைக்கப்பட்டுள்ள இடங்களில் நகரங்கள் உண்டாகின்றன. இராணுவ வீரர்கள், அதிகாரிகள், வேலையாட்கள் வசிக்கும் வீடுகள் ஆயிரக் கணக்காக அமைகின்றன. கடைகள் அமைகின்றன. வியாபாரிகள் சேர்

கின்றனர். இம் முறையில் அமைந்த நகரங்கள் குவெட்டா, சிக்கந்தராபாத், பெங்களூர் முதலியனவாகும்.

தொழில் நகரங்கள்

8. பெரிய தொழிற் சாலைகள் அமைக்கப்பட்டுள்ள இடங்களிலும் சுரங்க வேலை நடைபெறும் இடங்களிலும் நகரங்கள் உண்டாதல் இயல்பே. தொழிலாளர், உத்தியோகஸ்தர் வசதிக்கமைந்த வாச ஸ்தலங்கள் நாளடைவில் நகரங்களாக மாறுகின்றன. அவற்றுக்குக் காட்டாக நெல்லிக் குப்பம், சூளை, பிரம்பூர், பொன்மலை, கோலார், ஜாம்ஷெட் பூர் முதலியவற்றைக் கூறலாம்.

முடிவு

9. அறிவும் ஆராய்ச்சியும் தொழிலும் பெருகப் பெருக, மேலும் பல நகரங்கள் உண்டாதல் இயல்பு அன்றோ?

58. பெண் கல்வி

குறிப்புகள் :—1. பெண் கல்வியின் அவசியம்
2. பண்டைப் பெண்மணிகள்
3. பெண்கட்குரிய கல்வி
4. மேனாட்டுப் பெண்கள் நிலைமை
5. முடிவு

கட்டுரை

பெண் கல்வியின் அவசியம்

1. ஆண்-பெண் என்னும் இரண்டால் ஆபது உலகம். இருவரும் பிறவியிலேயே வேறுபட்டவர். எனவே, இவர் உயர்ந்தவர்-இவர் தாழ்ந்தவர் என்பது கூறல் இயலாது. இருவரும் ஒரு நிலையினரே. "வேறு வேறு பழங்களைக் காட்டி, உயர்ந்தது எது? எனக் கேட்டால், ஒவ்வொரு வகையும் உயர்ந்ததென்று கூறலே ஏற்ற விடை. அது போல, பிறவியே வேறுபட்டுள்ள ஆடவர்-பெண்டிருள் இன்னவர் உயர்வானவர் எனக் கூறல் இயலாது; இருவரும் ஒரு படித்தானவரே என்று கூறுதலே ஏற்புடையது" என்று ஜான் ரஸ்கின் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது.

உலக எண்ணிக்கையில் ஆடவரும் பெண்டிரும் சம எண்ணிக்கை உடையவராகவே இருப்பர். ஒரு வீட்டில் பாதி வீடு சுத்தமாக இருப்ப, பாதி அசுத்தமாக இருப்பின், அவ் வீடு சுத்தமுள்ள வீடு என்று கூறுதல் இயலாதன்றோ? அது போலச் சமூகத்தில் பாதித் தொகையினரான ஆடவர் எல்லா நலன்களையும் பெற்றிருப்ப, மறு பாதித் தொகையினரான பெண்கள் உரிமையற்று இருத்தல் அறமன்று; முறையும் அன்று; சமூகத்துக்கு நலந்தருவதும் அன்று. குறிப்பாக நமது இந்தியச் சமூகத்தில் இக் கேவல நிலைமை குடிகொண்

டுள்ளது. 'பெண்கள் சமையல் வேலை செய்யவும், குழந்தை களைப்பெறவும், வீடுகளைக் கவனிக்கவுமே பிறந்தவர்கள். அவர்கட்குக் கல்வி வேண்டுவதில்லை' என்னும் எண்ணம் நம் ஆடவரிடம் குடி கொண்டுள்ளது. அம்மாதர் உலகத் தாய்மார் என்பதையும் அவர்தம் இயல்புகளே குழந்தைகளைச் சார்வன என்பதையும் அவ்வாடவர் மறந்து விடுகின்றனர். தாய் படித்தவளாயின், பிள்ளை நல்லறிவு பெற்று விளங்க இடமுண்டு. சிவாஜி வீரத்திலும் பக்தியிலும் சிறந்து விளங்கக் காரணம் அவர் தாயாரே ஆவர். அவ்வம்மையார் கல்வி கற்றவர். அவருடைய நல்லுபதேசமே சிவாஜியின் உயர்வுக்குக் காரணம். மங்கம்மாளது தெளிந்த அறிவே மதுரை அரசியல் செவ்வையாக நடக்கக் காரணமாயிற்று. படித்த பெண்களால் வளர்க்கப்படும் பிள்ளைகளையும் வீட்டையும் கவனியுங்கள். படியாத பெண்களின் பிள்ளைகளையும் வீட்டையும் கவனியுங்கள். மிகுந்த வேறுபாட்டைக் காணலாம். அப்பொழுதுதான் பெண்கட்குக் கல்வி அவசியமானதே என்பது இனிது விளங்கும்.

பண்டைப் பெண்மணிகள்

2. பண்டைத் தமிழ் நாட்டில் தமிழ் இலக்கண நூல்களைச் செய்த பெண் புலவர்கள், பாடல்களைப் பாடி அரசர் போற்ற வாழ்ந்த பெண்கள், அரசர்க்கு இடையே தூது போன பெண் மணிகள், அரசனிடம் வழக்குரைத்த பெண்கள், அரசர்க்கு நல்லுபதேசம் செய்த பெண்கள், போர் முகத்தில் கணவனுடன் மாண்ட வீரப் பெண்கள் எனப் பல வகைப்பட்ட மாதர் இருந்தனர் என்பது பழைய சங்கத் தமிழ் நூல்களால் அறியக்கிடக்கிறது. இதனுல், அக் காலத்தில் பெண் கல்வி தமிழகத்தில் எந்த அளவு போற்றப்பட்டிருத்தல் வேண்டும் என்பதை நீங்களே எண்ணிப் பாருங்கள்.

அத்தகைய தமிழ் நாட்டுப் பெண்கள் வழி வழி வந்த பெண்கள் இன்று நடைப் பிணங்களாக இருக்கின்றனர் என்பது இரங்கத்தக்க செய்தியே அன்றோ ?

பெண்கட்குரிய கல்வி

3. மேல் நாட்டுப் பெண்கள், பண்டைத் தமிழ் நாட்டுப் பெண்களைப் போலச் சம உரிமை பெற்று விளங்குகின்றனர்; ஆடவரோடு உத்தியோக நிலையங்களில் வேலை செய்கின்றனர்; நாட்டுப் பாதுகாப்பு நிலையங்களில் வேலை செய்கின்றனர்; சைக்கிள், மோட்டார் ஓட்டுகின்றனர்; வான ஊர்தியை ஓட்டுகின்றனர்; பள்ளிக் கூடங்களில் ஆசிரியராக அமர்ந்துள்ளனர். ஆடவர் பெண்களுக்கு முதல் மரியாதை செலுத்துகின்றனர். பெண்கள் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்குகின்றனர். அப் பெண்கள் வாழ்க்கையின் விளக்குகளாகவும், அறிவுள்ள குழந்தைகளைப் பெறும் தாய்மாராகவும் காட்சி அளிக்கின்றனர்.

மேனாட்டுப் பெண்கள் நிலைமை

4. அந் நிலைமை இந் நாட்டில் ஏற்படல் வேண்டும்; பெண்கட்கு வீட்டு வேலைகட்கு உரிய செம்மையான கல்வி அளிக்கப்படல் வேண்டும்; குழந்தைகளை வளர்த்தல், வீட்டுக் கைத்தொழில்கள், சுகாதாரம், நாட்டு அறிவு இவை புகட்டும் கல்வியே அவர்கட்குத் தேவையானது. இக் கல்வியாற்றான் நம் மாதர் மேனிலையை அடைதல் கூடும். அந் நிலையிற்றான் நமது வீடு, மெய்யான வீடாக (மோக்ஷமாக) மாறும். நாடும் நன்னிலையை அடையும். பெண்கள் முன்னேற்றம் பெறாத எந்த நாடும் உயர் நிலை எய்தாது. இது சரித்திரம் கண்ட உண்மை.

முடிவு

5. ஆதலால், நம் நாட்டில் மாதர் நலத்துக்கெனப் பல பள்ளிக்கூடங்கள் வேண்டும்; பல்கலைக் கழகங்கள் வேண்டும்; மாதர் சங்கங்கள் வேண்டும். அவர்கள் தேவைக்கேற்ற எல்லாம் அமைதல் வேண்டும். அவர்களே நாட்டு உயர்வில் மேலான நிலையைப் பெறவேண்டுபவர்கள். நம்மாடவர் இதனை உணர்ந்து நடக்கும் நாளே நம் நாடு மேனிலையை அடையும் நாளாகும்.

59. பெண்களுக்கு உழைத்த பெரியார்

குறிப்புகள் :—1. ஈஸ்வர சந்திரர் இளமைப் பருவம்
2. உத்தியோக பருவம்
3. இவரது சேவை
4. முடிவு

கட்டுரை

ஈஸ்வர சந்திரர் இளமைப் பருவம்

1. பெண்களுக்காகப் பாடுபட்ட பெரியார்களுள் தலை சிறந்தவர் இராஜா ராம்மோஹன ராய் ஆவர். அவர் உடன் கட்டை ஏறும் வழக்கத்தைச் சட்டமூலம் நீக்கினர். அவருக்குப் பின் தோன்றிய பெரியார் ஈஸ்வர சந்திர வித்தியாசாகரர். இவர் விதவைகள் மறுமணம் செய்துகொள்ளலாம் என்று சட்டம் செய்து புகழ்பெற்ருர். இப் பெரியாரது வரலாறு வீரமும் சேவையும் செறிந்ததாகும். இவர் வங்க மாகாணத்தில் கல்கத்தாவுக்கு அருகில் உள்ள வீரசிங்கம் என்னும் கிராமத்திற் பிறந்தவர்; பிராமண மரபினர்; ஏழைப் பெற்ருேர்க்குப் பிறந்தவர். இவர் இளமையில் திண்ணைப் பள்ளியிலும் பின்னர் ஆங்கிலப் பள்ளியிலும் கல்வி கற்ருர்; பின்னர் வடமொழிக் கல்லூரியிற் சேர்ந்து படித்து மஹா வித்வான் ஆனர்; வித்தியாசாகரர் (கல்விக்கடல்) என்னும் பட்டம் பெற்ருர். இவர் விரிந்த நோக்கமும் பரந்த சிந்தையும் உடையவர்; உயர்ந்த ஆடையாபரணங்களில் விருப்பம் இல்லாதவர்; தொண்டு செய்வதில் பெரு விருப்பங் கொண்டவர்.

உத்தியோக பருவம்

2. இவர் பள்ளிக்கூட மேற்பார்வையாளராக நியமிக்கப்பட்டார். பெண்கள் முன்னேற்றத்தில் பேரூக்கம்

கொண்ட இப் பெரியார், பெண்கள் படிக்கக்கூடாது என்றிருந்த அக் காலத்தில் தமது அதிகாரத்துக்கு உட்பட்டிருந்த ஹூக்ளி, நத்தியால், பர்த்வான் என்னும் ஜில்லாக்களில் பல பெண்பாடசாலைகளை ஏற்படுத்தினர்; பல பெண் பள்ளிக்கூடங்களை அரசாங்கத்தார் அனுமதியை எதிர் பாராமலே திறந்துவிட்டார்; தாம் சென்ற இடங்களில் எல்லாம் பெண் கல்வியின் அவசியத்தை வற்புறுத்திப் பேசினர். பல பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதினர். இவர் கட்டுரைகள் நாடெங்கும் பரவின; அறிவுடைய மக்கள் இவர் கொள்கையை ஆதரித்தார்கள்; தம் பெண்களைக் கல்வி பயில விட்டார்கள்.

இவரது சேவை

3. இவர் 'இளவிதவையர் மறுமணம் செய்துகொள்ளல் சாத்திரத்துக்குச் சம்மதமானதே' என்பதைப் பல ஆதாரங்களுடன் பல இடங்களிற் பேசினர்; பல கட்டுரைகள் எழுதினர். உடனே நாட்டில் பெருங் கிளர்ச்சி உண்டாயிற்று. இவர் கொள்கையை வைதிகர் வன்மையாகக் கண்டித்தனர்; எதிர்ப் பிரசாரம் செய்தனர்; இவரைப் பல வழிகளில் அச்சுறுத்தினர். ஈஸ்வர சந்திரர் அவர்கட்குச் சிறிதும் அஞ்சினர் இல்லை. இவர் தம் கொள்கையை எங்கும் வற்புறுத்திப் பேசிவந்தார்; பல நியாயங்களை எடுத்துக் காட்டி மறுமணம் நியாயமானதே என்பதை நிலைநாட்டினர். இவர் கூறிய நியாயங்களை உணர்ந்து பாராட்டிய பெண்கள் பலர் இவரை ஆதரித்தனர்; கற்றறிந்த பெரியோர் பலர் இவரைப் பாராட்டினர். இங்ஙனம் இவரது கொள்கைக்கு ஆதரவு பலப்பட்டதும் இவர், அரசாங்கத்தாரைக் கொண்டு 1856-ல் 'விதவா விவாஹம் செய்துகொண்டவர்க்கு முன்னேர் பொருள் உரிமை நீங்காது' என்னும் சட்டம் ஒன்

றைச் செய்து முடித்தார். இப் பெரிய தொண்டைக் கேள்வி யுற்ற பெருமக்கள் பலர் இவரை வாழ்த்திப் போற்றினர். இப் பெரியார் அதனுடன் நிற்கவில்லை; தம் மகனுக்கு ஒரு விதவையை மணம் செய்வித்தார். அச் செயலைக் கண்ட பொது மக்கள் இவரைப் பாராட்டிப் பின்பற்றத் துணிவு கொண்டனர்; ஆடவர் பலர் விதவையரை மறுமணம் செய்துகொண்டனர். இவர் இயக்கம் வலுப்பதைக் கண்ட இவர் மரபினர் இவரை ஜாதிப்ரஷ்டம் செய்தனர். ஈஸ்வர சந்திரர் அதற்கும் அஞ்சவில்லை; அவர்களது அறியாமையை எண்ணிப் புன்னகை கொண்டார்; மேலும் பல மறுமணங்களை நடத்தி வைத்தார்; பெண்கள் ஆடவரைப்போலச் சம உரிமைகளைப் பெற்று வாழ உரிமை உடையவரே என்பதைப்பற்றிப் பிரசங்கம் செய்யலானார்; அதுபற்றிக் கட்டுரைகள் பல எழுதினார்; இளமை மணத்தை வன்மை யாகக் கண்டித்துப் பேசினார். சுருங்கக்கூறின், ‘பெண்களின் இரக்ஷகர்’ என்று இவரைக் கூறல் தகும். இவர் தம் கிராமத்தில் ஏழைகட்குப் பள்ளி ஒன்றை அமைத்து நடத்தி வந்தார்; அதில் படிக்கும் பிள்ளைகட்குத் தம் செலவில் ஆடைகள், புத்தகங்கள், உண்டி முதலியன வழங்கிவந்தார்; இவரது தன்னலமற்ற சேவையைப் பாராட்டிய அரசாங்கத்தார் 1890-ல் இவருக்கு C. I. E. என்னும் பட்டத்தை அளித்து மகிழ்ந்தனர்.

முடிவு

4. இவரது சேவையின் பயனாகவே இன்று கைம்மை மணம் நாட்டில் ஆயிரக்கணக்கில் நடக்கின்றது. இவரது தொண்டிற்குப் பின்னரே பெண் பள்ளிகள் நூற்றுக்கணக்கிலேனும் இந் நாட்டில் ஏற்பட்டுள்ளன. சில பெண்களேனும் படித்து உயர் பதவிகளில் இருந்துவருகின்றனர். இவரது திருப்பெயர் இந்தியர் இதயத்தில் இருப்பதாக!

60. பாண்டியன்—நெடுஞ் செழியன்

[நீ அறிந்த தமிழ் அரசருள் ஒருவனது வரலாற்றைக் கட்டுரையாக வரைக.]

குறிப்புகள் :—1. தமிழகமும் மூவேந்தரும்
2. நெடுஞ்செழியன் பெருமை
3. போர்ச் செயல்கள்
4. முடிவு

கட்டுரை

தமிழகமும் மூவேந்தரும்

1. வடவேங்கடம் தென்குமரிக்கு இடைப்பட்ட நிலப் பரப்புப் பண்டைக் காலத்தில் தமிழகமாக இருந்தது. அத் தமிழகத்தில் சோழநாடு, பாண்டியநாடு, சேரநாடு என்னும் மூன்று நாடுகள் இருந்தன. அவற்றை முறையே சோழர், பாண்டியர், சேரர் என்பவர் ஆண்டு வந்தனர். மூன்று நாடு கட்கும் முறையே காவிரிப்பூம்பட்டினம், மதுரை, வஞ்சிமா நகரம் என்பன தலைநகரங்களாக இருந்தன. சோணாடு என்பது தஞ்சை, திருச்சி ஜில்லாக்களைக் கொண்டது. பாண்டிய நாடு மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களைக் கொண்டது. சேரநாடு கொச்சி, திருவாங்கூர்ச் சமஸ்தானங் களையும் சேலம், கோயமுத்தூர், நீலகிரி, மலையாளம் ஜில் லாக்களையும் உடையது. இம் மன்னர் மூவரும் முடியுடைய மூவேந்தர் எனப்பட்டனர். இவர்கள் அல்லாமல் குறுநில மன்னர் பலர் இருந்தனர். அவர்கள் இக்கால ஜமீந்தார்களைப் போன்றவர்கள். நெடுநில மன்னனுக்கு உட்பட்ட குறுநில மன்னர் பலர் உண்டு. நெடுநில மன்னர்க்கும் குறுநில மன் னர்க்கும் போர் நிகழ்தலும் பெரு மன்னர்க்குள் போர் நடத் தலும் உண்டு.

நெடுஞ்செழியன் பெருமை

2. கி. பி. இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் பாண்டிய நாட்டு அரசு கட்டிலில் ஓர் இளைஞன் ஏறினான். அவன் பெயரே நெடுஞ் செழியன் என்பது. செழியன் என்பது பாண்டியனைக் குறிக்கும் சொல். 'நெடுமை' என்பது அரச பதவியைக் குறிக்கும் சொல். எனவே 'அரசனான பாண்டியன்' என்பது பொருள். அவனது இயற்பெயர் தெரியவில்லை. அவன் கல்வி கேள்விகளில் சிறந்தவன்; பா இயற்றும் வல்லமை வாய்ந்தவன்; புலவரையும் தமிழ்மொழியையும் பொன்னே போலப் போற்றியவன்; இரவலர்க்கு ஈந்து உவக்கும் பெருங்குண வள்ளல்; சிறந்த ஒழுக்கமும் பக்தியும் உடையவன். அப்பெரு மகன் புகழ் பாண்டி நாட்டில் மட்டுமன்றித் தமிழகம் முழுவதும் பரவியது.

போர்ச் செயல்கள்

3. அவன் காலத்தில் சேரநாட்டுச் சிற்றரசன் யானைக் கட்சேய் மாந்தரஞ் சேரல் இரும்பொறை என்பவன்; பேரரசன் பெயர் தெரியவில்லை; சோழனது பெயர் இராயசூயம் செய்த பெருநற்கிள்ளி என்பது. சேரநாட்டுச் சிற்றரசன் பாண்டியன் புகழைக் கேட்கப் பொறாது, பாண்டிய நாட்டின் மீது வலிந்து போர் தொடுத்தான். பாண்டியன் அவன் அறியாமைக்கு இரங்கி, அவனைப் போரில் கொல்லாது சிறைப் பிடித்தான்; அவனுக்கு நல்லுரைகள் கூறி விடுதலை செய்தான். இச்செயலால் பாண்டியன் பேரரசனைப் போற்றப் பட்டான். புலவர்கள் இவன் புகழையே யாண்டும் பாடலாயினர். தமிழ்நாட்டு மக்கள் பாண்டியனையே பாராட்டிப் பேசினர். இவற்றைக் கண்ட பெருவேந்தர் இருவரும் பொறார் ஆயினர். பொறாமையின் முடிபென்ன? போரே அன்றோ? சேரன், சோழன் என்ற இருவரும் தம் உள்

ளடங்கிய சிற்றரசர் ஐவரோடும் சேர்ந்து, பெரிய படையைத் திரட்டிப் பாண்டியனை எதிர்க்கச் சென்றனர். அஃதறிந்த பாண்டியன் சீற்றமும் நகைப்பும் கொண்டு, "பொருமை காரணமாக வரும் இவர்களை யான் வெல்லேனாயின், என் குடிகள் நிற்க நிழல் காணாது, 'எம்மரசன் கொடுங்கோலன்' என்று என்னை இகழ்வார்களாக" என்று வஞ்சினம் கூறிப் போருக்குப் புறப்பட்டான். இரு திறத்தார்க்கும் போர் கடுமையாக நடந்தது. புலிக் கூட்டத்துள் சிங்கம் பாய்வதை ஒப்பப் பாண்டியன் பகைவர் சேனையாகிய கடலுள் புகுந்தான்; கடும்போர் செய்தான்; பகைவர் சேனை சின்னபின்னப்பட்டுச் சிதறியது; பகைவர் பாண்டிய நாட்டினின்றும் புறங்காட்டி ஓடலாயினர். பாண்டியன் அவர்களை விடவில்லை; துரத்திச் சென்று சோழநாட்டில் திருவாரூர்க்கு எட்டுமைல் தூரத்தில் உள்ள 'தலையாலங்கானம்' என்னும் இடத்தில் அவர்களை முற்றிலும் முறியடித்தான். பகைவர் இருந்த இடம் தெரியாது மறைந்தனர். இளைஞனான பாண்டியன் வாகை சூடித் திரும்பினான். அவன் அவ்வெற்றிக்குப்பின் 'தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன்' எனப் புகழப்பட்டான்.

முடிவு

4. இப்பெரு வேந்தனைப் போலப் பெரும் புகழோடு வாழ்ந்த பாண்டி மன்னர் அப்பழங் காலத்தில் சிலரே யாவர். இவன் பாடிய பாடல் 'புறநானூறு' என்னுந் தமிழ் நூலில் இருக்கின்றது. இப்படிப்பட்ட பேரரசர் வரலாறுகள் கூறும் சங்கத் தமிழ் நூல்களை மாணவர் தம் வாணாளில் கற்றுத் தம் முன்னோர் பெருமையை உணர்ந்து மகிழ்வாராக!

61. மதுரை மாநகரம்

[நீவிர் அறிந்த பழந்தமிழர் தலை நகரங்களுள் ஒன்றைப்பற்றிக் கட்டுரை ஒன்று வரைக.]

குறிப்புகள் :—1. பாண்டியர் தலைநகரங்கள்
2. மதுரையின் பழைய சிறப்பு
3. புராணகால மதுரை
4. இன்றைய மதுரை
5. முடிவு

கட்டுரை

பாண்டியர் தலைநகரங்கள்

1. பாண்டிய நாடு ஒரு காலத்தில் கன்னியாகுமரிக்கும் தெற்கே பரந்து இருந்தது. அப்போது அதன் தலைநகரம் 'தென் மதுரை' என்பது. அது கடல் கொள்ளப் பட்ட பின், பாண்டியர் தலைநகரம் கீழ்க் கடற்கரையில் 'கபாடபுரம்' (அலைவாய்) ஆக மாறியது. அதுவும் கடல் கோளுக்கு இலக்கான பின், இன்றைய மதுரை தலைநகரமானது. பாண்டியர் சில வேளைகளில் கடற்கரைப் பட்டினமான கொற்கை என்பதனையும் கோநகராகக் கொண்டிருந்தனர்.

மதுரையின் பழைய சிறப்பு

2. மதுரை சரித்திர காலத்துக்கு முன்னரே சிறப்புற்றதாகும். இராமாயண காலமாகிய கி. மு. 1000க்குப் பிறகு முதல் இன்றளவும் மதுரை எல்லா நூல்களிலும் புகழப்பட்டுள்ளது. அது சங்க காலத்தில் பெருஞ் சிறப்புடன் விளங்கியது. நகரத்தைச் சூழ ஆழ்ந்த அகழி ஒன்று இருந்தது. அதில் முதலைகள் விடப்பட்டிருந்தன. அக

ழிக்கு அப்பால் பெரிய காவற்காடு ஒன்று இருந்தது. காவற் காட்டில் சோலைகள் பல உண்டு. அவற்றில் தெங்கும் வாழையும் செறிந்திருந்தன; சமணப் பள்ளிகளும் பௌத்தப் பள்ளிகளும் இருந்தன. அகழியை இழுவைப் பாலத்தின் மூலம் தாண்டினால் நகரத்தை மறைத்த வானளாவிய மதிலைக் காணலாம். அம் மதிலில் பகைவரைத் தாக்கும் பலவகை யந்திரங்கள் வைக்கப்பட்டிருந்தன. வானளாவிய கோட்டை வாசல் யவனரால் காக்கப்பட்டது. கோட்டைக்குள் பொதுமகளிர் வாழும் தெருக்கள் இருந்தன. அவற்றுக்கப் பால் ஆடல் மகளிர், பாடல் மகளிர் தெருக்கள் இருந்தன. அப்பால் 1008 கழஞ்சு பொன் ஆடலிலும் பாடலிலும் பரிசு பெற்ற மாதவி போன்ற பெருமங்கையர் வாழும் தெருக்கள் இருந்தன. அவற்றுக்கு அப்பால் தேர்கள், தேர் வட்டைகள், தேர் மொட்டுகள், மெய் புகு கவசங்கள் முதலியன நிறைந்து அரசர்களும் கண்டு ஆச்சரியப்படத்தக்க கடைத் தெரு இருந்தது. அத் தெருவினை அடுத்து வைரங்களும் மரகத மணிகளும் மாணிக்கங்களும் புஷ்பராக வகைகளும் வைடூரிய வகைகளும் கோமேதக வகைகளும், நீலமணிகளும் முத்து வகைகளும் கொழுவிதாக வளர்ந்த கொடிப் பவழ வகைகளும் ஆகிய நவமணிகள் நிறையப் பெற்று இரத்தின வியாபாரிகளைக் கொண்ட இரத்தினக் கடைத்தெரு இருந்தது. அத் தெருவிற்கு அப்பால் பொன்னை விற்பனை செய்யும் பொன் வாணிகத் தெரு பொலிவுடன் விளங்கினது. அதற்கப்பால் கூல வீதி காணப்பட்டது. அங்கு மிளகுப் பொதிகளும் பாக்கு மூட்டைகளும் பல்வகைப் பண்டப் பொதிகளும், எண்வகைத் தானியக் குவியல்களும் நிறைந்து கிடந்தன. அவ் வீதிக்கு அப்பால் அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்போர் வாழும் தெருக்கள் இருந்தன; முச்சந்திகள், நாற்சந்திகள், கோயிற் கடைகள், பலியைப்

பெரும் மன்றங்கள், நேர் வீதிகள் முதலியன திகழ்ந்தன. அரசனது அரண்மனை நகரத்தில் நடுநாயகமாக விளங்கியது. பிறவா யாக்கைப் பெரியோனாகிய சிவபெருமான் கோவில் முதல் சதுக்க பூதத்தின் கோயில் ஈறாகப் பலவகைக் கோயில்கள் இருந்தன. மதுரை மீனாக்ஷியம்மன் கோவில் உலகப் புகழ் பெற்றதன்றோ? புலவர்கள் கூடித் தமிழ் ஆராய்ந்த தமிழ்ச் சங்க மண்டபம், புலவர்கள் வாதாடும் பட்டிமண்டபம் போன்ற பலவகை மண்டபங்களும் இருந்தன.

புராணகால மதுரை

3. இப் புகழ் பெற்ற மதுரையிற்றான் சிவபிரான் அறுபத்து நான்கு திருவிளையாடல்களைச் செய்ததாகப் புராணங்கள் கூறும். மதுரை 'கடம்ப வனம்' என்றும் 'நான்மாடக் கூடல்' என்றும், 'ஆலவாய்' என்றும், முக்தி தரும் நகரங்கள் ஏழனுள் ஒன்று என்றும் புராண காலத்தில் சிறப்புப் பெற்று விளங்கியது.

இன்றைய மதுரை

4. பின்னர் நாயக்கர் காலத்திலும் மதுரை கோநகராகவே காட்சி அளித்தது. திருமலை நாயக்கரே இன்றுள்ள மதுரையைச் சீர்ப்படுத்தியவர். அவர் பெயரால் ஒரு மஹாலும் விளங்குகின்றது. அவர் உருவச் சிலையை மீனாக்ஷி அம்மன் கோவிலில் கண்டு களிக்கலாம்.

முடிவு

5. தமிழர்க்கு மட்டுமன்றி இந்தியர்க்கே மதுரை, பக்தி சம்பந்தமாகவும் சரித்திர சம்பந்தமாகவும் சிறந்துள்ள நகரமாகும். அது நமது மாகாணத்திலேயே ஜனத்தொகையில் இரண்டாவதென்பது குறிப்பிடத்தக்கது.

62. உரையாடல் - போட்டி

'எது உயர்ந்தது - படை வீரர் வாளா? பத்திரிகாசிரியர் பேனாவா?' என்பது பற்றிப் போட்டி உரையாடல் நடப்பதாகக் கருதி எழுதுக.

ஜோஸப்—படை வீரர் வாளே உயர்ந்தது.

குலாம்—பத்திரிகாசிரியர் பேனாவே உயர்ந்தது.

ஜோஸப்—படை வீரரே நாட்டைப் பகைவரிடத்தினின்றும் உள் நாட்டுக் கலகத்தினின்றும் காப்பவர். படை வீரர் இல்லா நாடு நாயகன் இல்லாத நாயகி போலவும், கண்ணில்லா முகம் போலவும், பெயர் இல்லா மனிதன் போலவும் பயனற்றதாகும்; வன்மையுடைய பிற நாடுகட்கு அடிமைப்பட வேண்டி வரும். படைவீரர் இருப்பின் உள் நாட்டில் உள்ள கலகக்காரரும் அடங்கி இருப்பர். அரசன் நாட்டை அமைதியாக ஆளலாம்; அயல் நாடுகளையும் கைப்பற்றலாம். தமிழகத்தில் இராஜராஜன் பெற்ற வெற்றிகட்கெல்லாம் அவனது படையே காரணம் அன்றோ? அலெக்ஸாண்டர் கிரீஸ் நாட்டிலிருந்து இந்தியா வந்தது படைவலிமையால் அன்றோ? நெப்போலியன் ஐரோப்பாவையே நடுங்க வைத்தமை படைத்திறனால் அன்றோ? அந் நெப்போலியனையே பிரிட்டிஷார் சிறைப் பிடித்ததும் படை பலத்தால் அன்றோ? இராஜேந்திர சோழன் 'கங்கை கொண்ட சோழன், கடாரம் வென்ற சோழன்' என்றெல்லாம் பாராட்டப் பெற்றமை சேனைப் பலத்தால் அன்றோ?

இன்று பிரிட்டிஷார் உலகில் மூன்றில் ஒரு பாகத்தைக் கட்டியாள்வது படை பலத்தாற்றானே! இன்று ஹிட்லர் ஆஸ்ட்ரியா, செக்கோஸ்லோவேகியா, நார்வே, டென்மார்க், போலண்ட், ஹாலண்ட், பெல்ஜியம் இவற்றைப் பிடித்தமை

படை பலத்தால் அல்லவா? வல்லமை பொருந்திய பிரான்ஸ் வலி இழந்து பொலிவிழந்து அடிமைப்பட்டிருப்பது ஹிட்லரது படை வலிமையாலன்றோ? ருமேனியா தன் உரிமைகளைப் பறி கொடுத்து ஹிட்லர் காலால் இடுவதைத் தலையால் செய்யக் காத்திருப்பது எதனால்? ஹிட்லரது படை பலமே காரணம் அன்றோ? வாஷிங்டன் அமெரிக்காவின் சுதந்தரத்தை எங்ஙனம் பெற்றார்? படை பலத்தால் தானே! அந் நாடு இன்று செல்வம் கொழிக்கும் சிறந்த குபேர நாடாக இருப்பதைக் கண்டு அதைத் தம் வயப்படுத்த விரும்பும் நாடுகள் தம் விருப்பம் கை கூடாமல் தவிப்பதற்குக் காரணம் என்ன? அமெரிக்காவின் படை பலமே காரணம் ஆகும்.

ஐம்பது ஆண்டுகட்கு முன் இருந்த இடம் தெரியாதிருந்த ஜப்பான் உலக வல்லரசுகளுள் ஒன்றாகவும், அமெரிக்கா போன்ற பேரரசுகளையும் அச்சுறுத்தும் அகங்காரம் பெற்றிருக்கவும் காரணம் யாது? அது கொண்டுள்ள படை பலமே யாகும். 1912-ல் தான் தோற்கடித்த ரஷியாவுடன் இன்று ஜப்பான் சமரஸம் பேசக் காரணம் யாது? ரஷியாவின் அளவற்ற படை பலமே ஜப்பானை அஞ்சச் செய்கிறது. சீனாவையோ இந்தியாவையோ பிறர் எள்ளி நகையாடக் காரணம் என்ன? இவை தம்மைக் காத்துக் கொள்ளத் தக்க படை பலம் இன்மையே ஆகும். பத்திரிகாசிரியர் பேனா ஒரு நாட்டை அந்நியர் படை யெடுப்பிலிருந்து காக்குந் திறனுடையதோ? அப்பேனாவைவிடப் படை வீரர் வாளே மேலானதென்பதை உலக சரித்திரமே உறுதிப் படுத்துதல் காண்க.

குலாம்:—படை பலத்தை விடப் பத்திரிகாசிரியர் பேனா வன்மை உடையதாகும் என்பது எனது கருத்து. ஆக்குந் திறனும் அழிக்குந் திறனும் பத்திரிகைகட்கு உண்டு.

ஆசிரியர் அப் படை வீரரையே தம் பத்திரிகையில் எழுதும் கட்டுரைகளால் ஒற்றுமை உடையவராகவும் செய்யலாம்; குழப்பம் செய்து நாட்டைக் கலகலக்கச் செய்து விடவும் செய்யலாம். நாட்டுப்பற்றை ஊட்டலாம்; நாட்டில் உள்ள ஆட்சியின்மீது வெறுப்பையும் உண்டாக்கலாம். நாட்டாட்சியில் வெறுப்பை உண்டாக்கிவிடின், அப் படை வீரர் நாட்டின் நலனைக் காக்க அவ் வரசாட்சியை ஒழிக்க உள் நாட்டுக் கலகம் செய்வர். அங்ஙனம் உள்நாட்டுக் கலகங்களால் சீர் கெட்ட நாடுகள் பல ஆகும். இதற்கும் உலக சரித்திரமே சான்று பகரும். சுராஜுத் தௌலாவின் சேனைத் தலைவரான மீர் ஜாபர் செய்த துரோகத்தால் கல்கத்தா வெள்ளையர் வசமாயிற்று அன்றோ? ஒரு பெரும்போரில் இட்டாலியர் ஓர் இடத்தில் தோற்றுவிட்டனர். ஆனால், தோற்ற படையின் தலைவர் வெற்றி பெற்றதாகப் பத்திரிகைக்குச் செய்தி அனுப்பினர். அதைக் கண்ட இட்டாலி மக்கள் மூன்று நாட்கள் வெற்றி விழாக் கொண்டாடினர். இங்ஙனம் நாட்டு மக்களையும் வீரரையும் நல்வழிப் படுத்தவோ-நாட்டுக்கே விரோதமாகக் கிளப்பவோ பத்திரிகைகட்கு வன்மை உண்டு. பத்திரிகைகள் ஊட்டும் 'நாட்டுப் பற்று' என்னும் பாலன்றோ 'சுதந்தர உணர்ச்சி' என்னும் குழந்தையை ஊட்டி வளர்க்கின்றது. இந்தியரிடம் படை வீரர் இல்லை; வாளில்லை. அங்ஙனம் இருந்தும் தேசீய இயக்கமும் தேசீயப் போரும் ஐம்பது ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றனவே! எங்ஙனம்! பத்திரிகாசிரியர் பேனாவால் அன்றோ? ஆக்க வேலைக்கு-உலக ஞானத்துக்கு-மனிதனை மேன்மைப் படுத்தற்குப் பத்திரிகாசிரியர் பேனாவே ஏற்றது; படை வீரர் வாள் ஏற்றதன்று.

இவ் விருவர் வாதங்களில் 'எது தக்கது?' நீங்களே விடை கூறுங்கள்.

63. முன்னேற்றம்

குறிப்புகள் :—1. முன்னேற்றம் - பொருள் யாது?
2. சான்று
3. முடிவு

கட்டுரை

முன்னேற்றம் - பொருள் யாது?

1. மக்கள் கல்வி, ஒழுக்கம், நாட்டுப் பாதுகாப்பு முதலிய துறைகளில் முற்போக்குப் பெறுதலே 'பரிபூரண முன்னேற்றம்' எனப்படும். முன்னேற்றம் இல்லாமல் எந்த நாடும் உலகத்தில் தனித்திருக்க முடியாது. மனித சமூகத்தால் நாடு முன்னேற்றம் பெறுகிறது.

சான்று

2. இங்ஙனம் பிற்போக்கான நிலைமையில் இருந்து முற்போக்கான நிலைமையை அடைந்த நாடுகளுள் தலை சிறந்தது ஜப்பான் தேசம் ஆகும். ஒரு நூற்றாண்டிற்கு முன் அதன் நிலைமை மிகவும் கேவலமாக இருந்தது. ஆனால் இன்று அஃது எல்லாத் துறைகளிலும் முற்போக்கு அடைந்துள்ளது. அதனைக் கண்டு ஐரோப்பிய வல்லரசுகளும் அச்சங்கொள்கின்றன எனின், அதன் கைத்தொழிற் சிறப்பு, படை பலச் சிறப்பு, செல்வாக்கு இவற்றை என்னென்பது!

ஜப்பான் தீவுகள் பதினெட்டாம் நூற்றாண்டில் போர்ச்சுகீஸியரால் கண்டு பிடிக்கப்பட்டன. நாளடைவில் மேனாட்டார் அங்குச் சென்று வியாபாரம் செய்யலாயினர்; பின்னர் வரவர ஜப்பானியரைக் கொடுமைப் படுத்தலாயினர்; கொடுமை சகிக்கமாட்டாத ஜப்பானியர் ஒன்றுபட்டு

மேனாட்டு வர்த்தகரை எதிர்த்தனர். உடனே அவர்கள் சமாதானம் செய்துகொண்டு தங்கள் வியாபாரத்தைக் கவனித்து வந்தனர். கிறிஸ்தவப் பாதிரிமார் ஜப்பானில் கிறிஸ்தவ மதத்தைப் பரப்பலாயினர். 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் அமெரிக்க வியாபாரிகள் சில கப்பல்களோடு வந்து ஜப்பானியரைத் தங்களோடு வியாபாரம் செய்யுமாறு தூண்டினர்; இன்றேல், ஜப்பானை அழித்துவிடுவதாகப் பயமுறுத்தினர். ஜப்பானியர் உடனே உடன்பட்டனர் எனினும், தங்கள் இழிந்த நிலைமையை எண்ணி அவமானங் கொண்டனர்; அன்றுமுதல் புதிய உணர்ச்சி பெற்றனர்; தங்களுக்குள் ஒற்றுமை யில்லாமற் செய்துவந்த பாழான சாதிகளைக் கைவிட்டனர்; வேற்றுமைகளை ஒழித்து ஒற்றுமைக்குரிய சமத்துவம், சகோதரத்துவம் முதலியவற்றைப் பெறலாயினர்; ஊக்கமும் உழைப்பும் கொண்டனர்; வாணிகத்தையும் விவசாயத்தையும் பெருக்க முற்பட்டனர்; ஒவ்வொரு துறையிலும் மேனாட்டாரைப் பின்பற்றத் தொடங்கினர். பெருஞ் செல்வர்கள் சாதாரண மக்களுடன் கலந்து உறவாடினர்; தங்கள் உரிமைகளைச் சக்கரவர்த்தியிடம் ஒப்படைத்து நாட்டு முன்னேற்றத்தில் நாட்டங் கொண்டனர்; போர் வீரர்கள் சக்கரவர்த்தியின் கட்டளைப்படி நடக்கலாயினர்; வாலிபர்கள் நாட்டு முன்னேற்றத்திற்கு உழைக்கலாயினர்; மேனாட்டுப் போர்வீரர்களைப் போலப் பண்பட்ட போர்ப் பயிற்சி பெற்றனர்; பல கப்பல்களைக் கட்டலாயினர்; போர்க் கருவிகளைத் திரட்டலாயினர்.

கல்விச் சங்கங்கள், முன்னேற்றக் கழகங்கள், வியாபார சங்கங்கள் இன்னபிற தோன்றி நாட்டில் முன்னேற்றத்துறைகளைப் பலப்படுத்தின; பெண்களும் ஆடவரைப்போலப் பல துறைகளில் வேலை செய்யலாயினர்; ஜப்பானியர் தங்கள் முன்னேற்றத்துக்கெனப் பல பத்திரிகைகளை நடத்தினர்.

சுமார் ஐம்பது ஆண்டுகட்குள் ஜப்பான் முற்றிலும் மாறிவிட்டது. அதனிடம் பல போர்க்கப்பல்கள் சேர்ந்து விட்டன; தொழில்கள் வலுத்துவிட்டன; கல்வி எங்கும் பரவிவிட்டது; நிலக்கரி, இரும்பு, பஞ்சு, கம்பளம், தேக்கு முதலிய பொருள்களை வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரும் கப்பல்கள் பெருகிவிட்டன. துணி வகைகள், நெருப்புப் பெட்டிகள், பீங்கான் சாமான்கள், கண்ணுடிப் பாத்திரங்கள் என்பன வெளிநாடுகட்கு ஏராளமாக ஏற்றுமதி ஆகின்றன. ஜப்பான் சாமான்கள் விற்பனை ஆகாத நாடே உலகில் இல்லை என்னலாம். இப்பொருள்கள் செல்லும் வழியையும் இறக்குமதிப் பொருள்கள் வரும் வழியையும் ஜப்பான் இராணுவக் கப்பல்கள் காத்து வருகின்றன.

ஜப்பான் தன் கைத் தொழில்களாலும், வர்த்தகத்தாலும், இராணுவ பலத்தாலும் வரவர மிக்க உயர்நிலையை அடைந்து விட்டது. அது 1895-ல் சீனவைப் போரில் தோற்கடித்தது; 1905-ல் ரஷியாவை முறியடித்தது; கொரியாவைத் தன் ஆட்சிக்கு உட்படுத்திக் கொண்டது; 1919-ல் நடந்த பாரிஸ் சமாதான மகாநாட்டில் உலக வல்லரசுகளுள் ஒன்று என்னும் உயர் நிலையைப் பெற்றது. பின்னர் மஞ்சூரியாவை அடிப்படுத்திக்கொண்டது; பிறகு வடசீனவைத் தன் ஆதிக்கத்திற்கு உட்படுத்தி விட்டது; பசிபிக் மஹா சமுத்திரத்தில் உள்ள நூற்றுக் கணக்கான தீவுகளில் இராணுவக் கோட்டைகளைக் கட்டித் தன் பேராசைக் காத்து வருகின்றது.

முடிவு

3. எல்லாத் துறைகளிலும் இழிநிலையில் இருந்து வரும் 37 கோடி மக்களைப் பெற்றுள்ள நம் தாய்நாடு—இந்தியா—ஜப்பானைப் போல இடைவிடாது உழைத்தாற்றான் உயரமுடியும் என்பதில் ஐயமுண்டோ?

64. நமது உணவு

குறிப்புகள் :—1. உணவின் தன்மை
2. உணவு வகைகள்
3. உணவு கொள்ளும் முறை
4. முடிவு

கட்டுரை

உணவின் தன்மை

1. உஷ்ணப் பிரதேசத்தில் உள்ளவர் உணவு ஒரு வகையாகவும் குளிர்ப் பிரதேசத்தவர் உணவு மற்றொரு வகையாகவும் மிக்க குளிரான பிரதேசத்தவர் உணவு வேறொரு வகையாகவும் இருக்கின்றன. இவையன்றி நாட்டுக்கு நாடு—தீவுக்குத் தீவு உணவு வகைகள் வேறுபடுகின்றன. இவற்றுக்குக் காரணம் என்ன? அந்தந்தப் பகுதியில் இயல்பாகக் கிடைக்கும் உணவு வகைகளே அந்தந்தப் பகுதி மக்கட்கு உணவாகப் பண்டு தொட்டே அமைந்துள்ளன. இதுதான் இயற்கை. போக்குவரவு சாதனங்கள் மிகுந்த இக்காலத்தில் குளிர்ப்பிரதேசக் காய்கறிகளும் உஷ்ணப் பிரதேசத்தில் மித சீதோஷ்ணம் உள்ள இடங்களில் பயிராக்கப் படுகின்றன. இவை யாவற்றையும் உளங்கொண்டு இன்று நமக்குக் கிடைக்கும் உணவு வகைகளில் சத்துள்ளவற்றையே நாம் உட்கொள்ள வேண்டும். நமது உடல் நமது உணவின் தன்மையைப் பொறுத்துள்ளது.

உணவு வகைகள்

2. நாம் உட்கொள்ளும் பலவகை உணவுப் பொருள்களில் மிகச் சிறந்தவை பாலும் கீரையும் பழங்களுமே ஆகும். பிற உணவுப் பொருள்களின் குணபேதங்களைச் சமப்

படுத்தும் திறமை இவற்றுக்கு இயல்பாகவே அமைந்துள்ளன. ஆதலால், இப்பொருள்களை நாம் மிகுதியாக உட்கொள்ள முயலல் வேண்டும். ஆயின், இவை தூயவையாகக் கிடைத்தல் வேண்டும். பாலைப்பற்றி நாம் விசேஷ கவனம் செலுத்த வேண்டும். பால் கலப்பற்றதாகவும் பால் தரும் பசு நோயற்றதாகவும் இருத்தல் வேண்டும். கலப்புள்ள பாலும் நோயுள்ள பசுவின்பாலும் பலவகை நோய்கட்குக் காரணமாகும். சாக்கடையில் உள்ள கிருமிகளைவிடக் கெட்ட பாலில் தீய கிருமிகள் இருப்பதாக வைத்திய நிபுணர் கூறுகின்றனர். பாலிற்கு உள்ள குணங்கள் அனைத்தும் தயிருக்கும் உண்டு. மோர் தயிரைவிடச் சிறந்ததாகும். மெக்னிகாப் என்னும் இரஷிய மருத்துவ நிபுணர், 'இந்தியர் மோரைத் தமது உணவில் சேர்த்துக்கொள்வதால் அவர்கள் நோயின்றியும் நீண்டநாள் உயிரோடு இருக்கிறார்கள்' என்று கூறியுள்ளார். வயிற்றில் அழுகும் பொருள்களை மோர் அழித்துவிடும் சக்தி பெற்றது. வெண்ணெய் உடம்பிற்குக் குளிர்ச்சியையும் வன்மையையும் தருவது. நெய்யும் அப்படியே. சுருங்கக் கூறின், பசுவின் பால், தயிர், மோர், வெண்ணெய், நெய் இவை அனைத்துமே உடம்பிற்கு நன்மை செய்வன. இவற்றைத் தினமும் சேர்த்துக் கொள்பவர் பல நோய்களிலிருந்து விலக வழியுண்டு. கீரை வகைகள் எல்லாம் உடம்பிற்கு நல்லவையே. ஆனால், அவற்றுள்ளும் அரைக்கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை என்பன மிகவும் உயர்ந்தவை. தினமும் ஏதேனும் ஒரு கீரையை உண்ணுதல் நல்லது. ஜீரணச் சக்தியை எளிதாக்கக் கீரை பெரிதும் உதவி செய்யும். பழ வகைகளில் தக்காளிப்பழம் உடம்பிற்குக் குளிர்ச்சியை உண்டாக்கும்; வன்மையையும் தரும்; ஆரஞ்சுப் பழச்சாறு உடம்பிற்குச் செய்யும் நன்மை வேறெப் பழமும் செய்யாது. வாழைப் பழம், ஆப்பிள் பழம் முதலியவை உடம்பிற்கு நல்லவை. மலச்சிக்கலைப் போக்கும் வன்மை

யுடையது பேயம்பழம். சுருங்கக்கூறின், தினமும் ஏதேனும் ஒரு பழத்தை உட்கொள்ளுதல் நல்லதாகும்.

கோதுமை சத்துள்ள உணவு. அரிசிச்சோறு கஞ்சியோடு உண்ணலே உடம்பிற்குப் பலத்தைத் தரும். அதனை உண்பதைவிடப் பட்டினி கிடத்தல் நல்லது. பருப்பு வகைகள் எல்லாம் உடம்பிற்கு நலத்தையே தருவன. கிழங்கு வகைகளில் மூன்றுந்தர உணவுச்சத்துகள் இருக்கின்றன. நிலக்கடலையில் மாச்சத்து, புரோட்டின், கொழுப்பு முதலியன மிகுதியாகச் சம்பந்தப்பட்டுள்ளன. உணவுப் பொருள்களைச் சமைக்காமல் உண்பது உடம்பிற்கு நல்லதென்று வைத்திய நிபுணர்கள் கூறுகின்றார்கள். ஆயினும், நாம் அதிகமாகக் கொதிக்க வையாமல் அளவோடு சமைத்து இறக்குதல் நல்லது. காய்கனி கிழங்கு வகைகளைப் பச்சையாக உண்டதாற்றான், பண்டைக்காலத் தவசிகள் உடல் உரம்பெற்று நீண்டநாள் உயிரோடு இருந்தனர் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

உணவு கொள்ளும் முறை

3. நாம் நமது உணவை நன்றாக மென்று சாப்பிடல் வேண்டும். சாப்பிடும் போது அவசரம், கூச்சல், கோபம் இல்லாமல் உண்ணல் வேண்டும். உண்ட பிறகே தண்ணீரைக் குடிப்பது நல்லது. உணவுண்டவுடன் சிறிது நேரம் ஓய்வெடுத்தல் நலம். அளவுக்கு மேல் பொருள் இனிமை கருதி உண்ணலாகாது.

முடிவு

4. இதுகாறும் கூறியவற்றைக் கவனித்து நடப்பவர் நோய்க்கு ஆளாகாது, நல்லுடல் பெற்று வாழலாம்.

65. நான் கண்ட பொருட் காட்சி

குறிப்புகள் :—1. பொருட்காட்சி-யாது?
2. அகில இந்தியப் பொருட் காட்சிச் சாலை
3. நான் அங்குக் கண்டவை
4. முடிவு

கட்டுரை

பொருட்காட்சி-யாது ?

1. இந்தியாவில் செய்யப்படும் பலவகைப் பொருள்களை வரிசை வரிசையாக அலங்கரித்து வைக்கப்பட்டிருக்கும் இடம் 'சுதேசிப் பொருட் காட்சிச் சாலை' எனப்படும். இஃது ஆண்டுக்கு ஒருமுறை சென்னையில் டிசம்பர் மாதத்தில் கூட்டப்படுவது வழக்கம். இதைக் காண்பதால் நாம், நம் நாட்டுக் கைத்தொழில்கள் இன்னவை என்பதையும், மேனாட்டார் கைத்தொழில் பொருள்களுக்கும் இவற்றுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகள் இன்னவை என்பதையும் நன்கறியலாம்.

அகில இந்தியப் பொருட் காட்சிச் சாலை

2. சென்ற ஆண்டில் சென்னையில் நடந்த பொருட் காட்சிச் சாலையைப் பார்க்க இன்பகரமாயிருந்தது. தினமும் அதைப்பார்க்க ஆயிரக்கணக்கான மக்கள் வந்துகொண்டிருந்தனர். காட்சிச்சாலையின் எதிரில் சாலை ஓரம் மோட்டார் வண்டிகள், குதிரைவண்டிகள், கோச்சு வண்டிகள், ரிக்ஷா வண்டிகள் முதலிய வாகனங்கள் எப்பொழுதும் காத்துக் கொண்டே இருந்தன.

நான் அங்குக் கண்டவை

3. நான் நுழைவுச் சீட்டுப் பெற்று உள்ளே சென்றேன்; வரிசை வரிசையாக இருந்த கடைகளைக் கண்டேன்.

கதர்த் துணிக் கடைகள் ஒரு வரிசை; மரச் சாமான் கடைகள் ஒரு வரிசை; பெப்பர்மின்ட், ரொட்டி, பிஸ்கட் முதலிய தின்பண்டக் கடைகள் ஒருபால்; அப்பளம், வடகம், பெருங்காயம், ஊறுகாய் வகைகள் இவற்றைக் கொண்ட பல கடைகள் மற்றொருபால்; பலவகை உலோகங்களால் ஆன பாத்திரக் கடைகள்; மணி மாலைகள், சோப்புகள், பவுண்டன் பேனா முதலிய சில்லறைப் பொருள்களைக் கொண்ட கடைகள்; பாய், ஜமக்காளம், பட்டாடைகள் முதலியவை கொண்ட கடைகள்; கண்ணாடி வளையல்கள் செய்யும் கடைகள், இந்தியாவில் செய்யப்படும் மருந்து வகைகளைக் கொண்ட கடைகள் என்று இவ்வாறு நான் பலவகைப்பட்ட கடைகளைக் கண்குளிரக் கண்டேன்.

கடற் பொருளாகிய முத்துச் சிப்பி, சங்கு மணிகள் இவற்றால் ஆய மாலைகள் கண்ணைக் கவர்ந்தன. ஊதுவர்த்தி செய்யும் கடையிலிருந்து எழுந்த நறுநாற்றம் என் மூக்கில் நுழைந்து இன்பத்தை உண்டாக்கியது. நான் ஒவ்வொரு கடையாகப் பார்த்து வருகையில், இரண்டு விதவைப் பெண்கள் இராட்டினத்தில் நூல் நூற்பதைக் கண்டேன்; அவர்களோடு சிறிது நேரம் பேசினேன். அவர்கள், "தம்பீ; இந்நூல் நூற்பதால் தினம் எங்கட்கு இரண்டணா கிடைக்கிறது. இவ்வேலை எங்களைப் போன்ற ஏழைப் பெண்கட்கே ஏற்பட்டது. பழைய தமிழ்நாட்டில் எம் போன்ற விதவைப் பெண்களே இத்தொழிலைச் செய்து வந்தனர் என்று தமிழ் நூல்கள் கூறுகின்றதை நீ அறியாயோ?" என்றனர். நான் அவர்கள் தமிழ் அறிவை நினைந்து வியப்பும், அவர்களது ஏழ்மையை எண்ணி இரக்கமும் கொண்டேன்.

சென்னை மாகாண விவசாய இலாகா உத்யோகஸ்தரும் அங்குச் சில கண்காட்சிக் கடைகள் வைத்திருந்தனர். நான் அவற்றைக் கவனித்தேன்: பலவகை நெற்கதிர்கள், சோளம் முதலிய தானிய வகை இவற்றைத் தனித்தனிக் கண்ணாடிப்

பாத்திரங்களில் வைத்திருத்தல் கண்டேன். தேங்காய் முத லிய காய்கறிகள் நான் பார்த்த அளவைவிடப் பெரியனவாக இருந்தன. நான் அவற்றைக் கண்டு பிரமித்தேன்; அங்கு இருந்தவரை விசாரித்தேன். நல்ல எரு, நல்ல கண்காணிப்பு இவையே அவற்றின் பருமனுக்குக் காரணம் என்பதை அவர் கூறினர்.

காட்சிச் சாலையின் ஒரு பக்கம், 'கள்ளைக் குடியாதே! அஃது உனக்கு மட்டும் யமன் அன்று; உன் மனைவி மக்கட்கும் யமன்' என்ற வாக்கியங்கள் எழுதப்பட்ட அட்டைகள் தொங்கவிடப்பட்டு இருந்தன. நான் குடிகாரனல் விளையும் தீமைகளை எண்ணமிட்டுக்கொண்டே நிற்கையில், ரேடியோ மூலம் தமிழ்ப் பாட்டுப் பாடப்பட்டது. ஆ! என்ன இனிய குரல்! பாடியவர், 'ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற உத்தமர்தம் உறவு வேண்டும்' என்னும் இராமலிங்க அடிகளது அருட்பாடலை மிகவும் இனிமையாகப் பாடினர். யான் என்னை மறந்து பாட்டில் ஈடுபட்டேன். பாட்டும் நின்றது. நான் அப்பொழுதுதான் இரவு மணி எட்டு என்பதை உணர்ந்தேன்.

முடிவு

4. 'அகில இந்தியப் பொருட் காட்சிச் சாலையைப் போல ஜில்லா தோறும் காட்சிச் சாலைகளை வைத்தல் நலம். அது குடியானவரையும் தொழிலாளரையும் அறிவாளிகள் ஆக்கும்; பொது மக்கட்கு நாட்டுப் பொருள்கள்மீது நாட்டத்தை உண்டாக்கும்; நாட்டுப்பற்றை வளரச் செய்யும்' என்று எண்ணமிட்டுக் கொண்டே வீடு சென்றேன்.

66. கடற் செலவு

குறிப்புகள் :—1. பண்டை முயற்சிகள்
2. கப்பலின் தோற்றம்
3. நன்மை
4. முடிவு

3404

கட்டுரை

பண்டை முயற்சிகள்

1. மனிதன் 'இலேசான பொருள்கள் நீரில் மிதக்கும்' என்பதை அறிந்தது முதல், மரக் கட்டைகளை நீரில் இட்டு அவற்றின்மேல் இருந்து சிறிது தூரம் சென்றான்; மரக்கட்டைகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி அதன்மீது தன் பொருள்களை . வைத்துக்கொண்டு சிறிய ஆறுகள் வழியே சென்று வியாபாரம் செய்தான். முதலில் குளத்திலும் ஏரியிலும் பின்னர் ஆறுகளிலும் இச் சோதனைகளை நிகழ்த்திய மனிதன், கட்டுமரம் கட்டி வெற்றி பெற்றான். இன்னும் அதைக் கொண்டே செம்படவர் மீன் பிடிக்கின்றனர்; சுமார் 10 மைல் அளவும் கடலிற் போய் மீள்கின்றனர். இக் கட்டு மரத்திற்குப் பின், உட்குழிவுள்ள பொருள்கள் நீரில் மிதப்பதைக் கண்ட பிற்கால மனிதன் பெரிய மரங்களை உட்குழிவுடையனவாகச் செதுக்கிப் படகுகளை அமைத்துக்கொண்டான். கட்டு மரத்தில் ஏறிச் சென்றபோது கைகளின் உதவியால் நீரை விலக்கிச் சென்ற அவன், படகைக் கண்டு பிடித்ததும், கையின் உருவுடைய துடுப்புகளைத் தோற்றுவித்துப் பயன்படுத்தினான்; அதன் பிறகு பெரிய தோணிகளையும் படகுகளையும் உற்பத்தி செய்தான். பின்னர்க் காற்றின் வேகத்தால் படகுகள் துன்புறுதலைக் கண்ட மனிதன், அக் காற்றின் உதவியாலேயே படகைச் செலுத்த முனைந்தான்; கப்பல்களில் உறுதியான கித்தான்களைக் கட்டிக் கடலில் விட்டான்; காற்றுக் கித்தான்களில் மோதக்

காற்றடிக்கும் திசையில் படகு எளிதாகப் போகலாயிற்று. இதுவே பாய்மரக் கப்பல் என்பது. இதன் உதவியாற்றான் கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தார். பிற ஆராய்ச்சியாளர் ஏனைய கண்டங்களையும் தேசங்களையும் தீவுகளையும் கண்டுபிடித்தார்கள்.

கப்பலின் தோற்றம்

2. கி. பி. 18-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நீராவியின் சக்தி கண்டறியப்பட்டது. அதன் பின்னரே, நீராவியின் உதவியால் கப்பல்களைச் செலுத்த ஆராய்ச்சி நடத்தப்பட்டது. நீரைத் தள்ளும் துடுப்புக்கு மாறாகக் கப்பலின் இரு புறங்களிலும் இரண்டு சக்கரங்களை அமைத்து நீராவியின் சக்தியால் அவற்றைச் சுழலச் செய்து, கப்பலைச் செலுத்தலாம் என்பதைக் கி. பி. 1807-ஆம் ஆண்டில் இராபர்ட் பல்டன் என்பவர் கண்டுபிடித்தார். இப்படிச் செய்யப்பட்ட நீராவிக் கப்பல் முதன் முதல் அமெரிக்காவில் ஹட்சன் நதியில் வெள்ளோட்டம் விடப்பட்டது. இந் நிகழ்ச்சிக்குப் பின் இத்தகைய நீராவிக் கப்பல் ஒன்று அட்லாண்டிக் மஹா சமுத்திரத்தைக் கடந்து இங்கிலாந்து வந்து சேர்ந்தது. அதன் பின் இங்கிலாந்திலிருந்து ஒரு கப்பல் புறப்பட்டு இருபது நாட்களில் அமெரிக்காவை அடைந்தது; மீண்டும் பதினைந்து நாட்களில் இங்கிலாந்து வந்து சேர்ந்தது. இதன் பின் வரவரக் கப்பல் போக்குவரத்துச் சுருங்கிய காலத்தில் ஏற்படலாயிற்று. நாளடைவில் கப்பல்களின் அமைப்பு மாறுதல் அடைந்துகொண்டே வந்தது. அம் மாறுதல்களின் பயனாய் இன்றுள்ள நீராவிக் கப்பல்கள் தோன்றின.

நன்மை

3. கப்பல்களில் பலவகை உண்டு: அவற்றுள், வியாபாரக் கப்பல்களே மிகச் சிறந்தவை. அவை உலகம் முழு

வதும் உள்ள துறைமுகங்கட்குச் சென்று மீள்கின்றன. அமெரிக்காவில் கிடைக்கும் இரும்பு, மண்ணெண்ணெய், பொன், செய்யப்படும் பல்வேறு பொருள்கள் முதலியவற்றை ஆசிய நாடுகட்கும் ஐரோப்பிய நாடுகட்கும் ஏற்றிச் செல்லும் கப்பல்களும், ஐரோப்பா, ஆசியாக் கண்டங்களின் விலை பொருள்கள், செய்பொருள்கள் இவற்றை அமெரிக்காவுக்கு ஏற்றிச் செல்லும் கப்பல்களும் இராப் பகலாகக் கடல்களைக் கடந்தவண்ணம் இருக்கின்றன. இவ்வர்த்தகக் கப்பல்கள் இல்லை எனின், உலக வியாபாரமே ஸ்தம்பித்துவிடும். பிரயாணக் கப்பல்களில் பல அடுக்குகள் உண்டு. முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றும் வகுப்பு என்று பிரயாணிகள் தகுதிக்கு ஏற்ற வசதிகள் அளிக்கப்பட்டுள்ளன. சினிமா மேடை, நடன மேடை, நூல் நிலையம், பந்தாடும் இடம் இவை அமைந்துள்ள கப்பல்களும் உண்டு. அவை அட்லாண்டிக் சமுத்திரத்தில் பிரயாணமாகும் பெரிய கப்பல்கள் ஆகும். இக் கப்பல்கள் அல்லாமல் போர்க் கப்பல்கள், நாசகாரிக் கப்பல்கள், பீரங்கிப் படகுகள், நீர் மூழ்கிக் கப்பல்கள் எனப் பல திறப்பட்ட கப்பல்கள் கடல் வியாபாரத்தைக் காக்கவும் நாட்டை காக்கவும் ஒவ்வோர் அரசாங்கத்தாரிடமும் அமைந்துள்ளன.

முடிவு

4. உலகத்தில் அறிவும் ஆராய்ச்சியும் பெருகப் பெருக இன்னும் என்னென்ன மாற்றங்கள் கப்பல்களில் உண்டாகுமோ, யார் அறிவார்? கடக்க முடியாத பெருங்கடல்களைக் கடக்கச் சாதனங்களைக் கண்டறிந்து, அவற்றைப் பயன்படுத்தி நன்மை பெறும் மனிதனது சக்தி பாராட்டத் தக்கதே.

67. மாணவரும் பத்திரிகைப் படிப்பும்

குறிப்புகள் :—1. தமிழ் நாட்டுப் பத்திரிகைகள்
2. பத்திரிகைச் செய்திகள்
3. மாணவர் கடமை
4. முடிவு

கட்டுரை

தமிழ் நாட்டுப் பத்திரிகைகள்

1. பத்திரிகைகள் மிகுதியாக வாசிக்கப்படும் நாடே நாகரிக நாடு—அறிவு மிகுந்த நாடு—என்று சொல்லப்படும். அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, இட்டாலி, ரஷியா, ஜப்பான் முதலிய நாடுகளில் நூற்றுக் கணக்கான பத்திரிகைகள் வெளியாகின்றன. அவற்றைப் படிக்க அன்றாடம் லக்ஷக் கணக்கான மக்கள் ஆவலோடு காத்துள்ளனர். நமது நாட்டிலும் ஓரளவு பத்திரிகைகள் விருத்தியாகி வருகின்றன. நமது தமிழ் நாட்டில் தமிழில் வெளியாகும் பத்திரிகைகள் இன்னவை என்பதை நாம் அறிந்திருத்தல் வேண்டும்: (1) சுதேசமித்திரன், தினமணி, விடுதலை, பாரததேவி, தாருல் இஸ்லாம் என்பனவே தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் ஆகும். (2) சைபுல் இஸ்லாம், திரு இருதய தூதன், சுதேசமித்திரன், தமிழ் மணி, ஹனுமான், ஹிந்துஸ்தான், குமரன், நகர தூதன், குடி அரசு, சினிமா உலகம் முதலியன வாரப் பத்திரிகைகள் ஆகும். (3) சாதிச் சம்பந்தமான கருணீக மித்திரன், யாதவ மித்திரன், தனவைசிய மித்திரன், செங்குந்த மித்திரன் முதலியனவும்; பொதுப் பத்திரிகைகளான ஆனந்தபோதினி, திருவிளக்கு, கலைமகள், என்பனவும்; இலக்கியப் பத்திரிகைகளான செந்தமிழ், செந்தமிழ்ச் செல்வி, சித்தாந்தம், தமிழ்ப்

பொழில் முதலியனவும் மாதப் பத்திரிகைகள் ஆகும். இவையன்றி வியாபார சம்பந்தமானவையும் விகட சம்பந்தமானவையுமான 'ஆனந்த விகடன்' முதலியனவும் தமிழில் வெளிவரும் பத்திரிகைகளாம்.

பத்திரிகைச் செய்திகள்

2. நாட் பத்திரிகைகள் உலக நடப்புகளை அன்றாடம் வெளியிடுவன ஆகும். அவற்றில் அரசியல், சமூகம், கைத்தொழில், வியாபாரம், விஞ்ஞானம், இலக்கணம், இலக்கியம், கதைகள், புனை கதைகள், வருணனை, விகடம், சிற்பம், ஓவியம், ஆராய்ச்சி முதலிய பல பொருள்கள் சம்பந்தமான செய்திகள் வெளியாகின்றன. முன்னேற்ற நாடுகளில் நடைபெறும் பல அரிய செய்திகளைப் பத்திரிகை வாயிலாகக் காணும் பிற நாட்டார், தாமும் அவ்வத் துறையில் பயின்று முன்னேறுதற்குப் பத்திரிகைகள் பேருதவி புரிகின்றன. நாம் நம் ஆயுட் காலத்தில் காண இயலாத தூர தேசங்களில் உள்ள மக்களைப் பற்றியும், அவர் தம் நடைமுறைகளைப் பற்றியும் அறிந்துகொள்ள அருந்துணை புரிவன பத்திரிகைகளே. ஆயிரக் கணக்கான மைல்கட்கு அப்பால் நடைபெறும் கொடிய போர்ச் செயல்களை அன்றாடம் நமக்கு அறிவிப்பனவும் பத்திரிகைகளே ஆகும்.

அன்றாடம் பொன், வெள்ளி முதலிய உலோக விலைவிவரங்களும், கோதுமை, பருத்தி, சணல் முதலியவற்றின் விலை விவரங்களும் பிறவற்றின் விலை விவரங்களும் அன்றாடம் பத்திரிகைகளில் வருகின்றன. அமெரிக்கா முதலிய மேனாட்டு விலைவாசிகளை அன்றாடம் உணர்ந்தே நம் நாட்டு வியாபாரிகள் விலைவாசிகளை நிர்ணயிக்கிறார்கள். வியாபாரத்திற்கு உயிர் நாடியாக இருப்பன பத்திரிகைகளே ஆகும். நூல் நிலையம், விஞ்ஞான சாத்திரம், உடற் பயிற்சி, கூட்டுறவு இயக்கம், விவசாயம், கைத்தொழில், கிராம முன்

னேற்றம் முதலிய பல பொருள் பற்றிய சொற்பொழிவு களும் கட்டுரைகளும் பத்திரிகைகளில் வெளிவரும். மாண வர்க்குரிய சிறு கதைகள், சரித்திர சம்பந்தமான இடங் களைப் பற்றிய குறிப்புகள் முதலியனவும் பத்திரிகைகளில் வெளிவரும். சுருங்கக் கூறின், 'உலக ஞானத்தைப் பெறப் பத்திரிகைகளை விடச் சிறந்த சாதனம் வேறொன்றும் இல்லை' என்று வன்மையாகக் கூறலாம்.

மாணவர் கடமை

3. இங்ஙனம் மனிதனை அறிஞனாகச் செய்யும் வன்மை வாய்ந்துள்ள பத்திரிகைகளை மாணவர் நாள்தோறும் படித்தல் நன்று; குறிப்புப் புத்தகம் ஒன்றை வைத்துக் கொண்டு தேதியிட்டுப் பயன் தரும் செய்திகளைப் பத்திரி கைகளிலிருந்து பொறுக்கிக் குறித்துக்கொள்ளல் நல்லது. அவற்றைக் கட்டுரை வரையும்போதும் சொற்பொழிவு ஆற்றும்போதும் பயன்படுத்தல் மிக்க நன்மையைத் தரும். ஆதலின், மாணவர் எக்காரியம் எக்கேடு கெடினும் சரி, பத்திரிகை வாசித்தல் என்பதை உணவுக்கு அடுத்தபடி முக்கியமானதாகக் (அறிவுக்கு உணவாதலால்) கருதி, நாளும் பத்திரிகை வாசித்துப் பயன்பெறல் வேண்டும்.

முடிவு

7. பத்திரிகைகளை வாங்கிப் படிக்க வசதியற்றவர் நகராண்மைக் கழகத்தார் ஆதரவில் நடைபெறும் வாசக சாலைகட்குச் சென்றாவது படித்துப் பயன் பெறுதல் வேண் டும். அங்குப் பலவகைப் பத்திரிகைகள் வரும். மாணவர் அவற்றைப் பயன்படுத்தி மேனிலையை அடைய முற்படு தலே அறிவுடைமையாகும்.

68. பொங்கல் விழா

குறிப்புகள் :—1. வரலாறு
2. பொங்கல் விழா
3. மாட்டுப் பொங்கல்
4. முடிவு

கட்டுரை

வரலாறு

1. பொங்கல் விழா என்பது தைமாதப் பிறப்பன்று கொண்டாடப்படும் பெரிய திருவிழா ஆகும். அது நான்கு நாள் திருவிழா ஆகும். முதல் நாள் போகிப் பண்டிகை எனவும், இரண்டாம் நாள் பெரும் பொங்கள் எனவும், மூன்றும் நாள் மாட்டுப் பொங்கல் எனவும், நான்காம் நாள் காணும் பொங்கல் எனவும், இவ்விழா நான்கு நாட்கள் கொண்டாடப்பெறும். இதுவே தமிழர்க்கு மிகச் சிறந்த திருவிழா ஆகும். தமிழ் நாட்டில் பயிர் அறுவடையாகி மக்கள் முதன் முதலில் புது நெல்லைக் குற்றிப் பொங்கலிடும் நாளே பொங்கல் விழா. விளைச்சலுக்குக் காரணம் மழை. மழை மேகத்தால் உண்டாவது. மேகங்கட்குத் தலைவன் இந்திரன். இந்திரன் தயவால் மழை பெய்கிறது என்பது நம்மவர் கொள்கை. ஆதலால், முதல் நாள் இந்திரனை (போகியை)ப் பூசிக்கின்றனர். மழைக்கு அடுத்தபடி, பயிருக்கு அவஸ்யமானது வெளிச்சம். வெளிச்சத்தைத் தருவது சூரியன். ஆதலின், சூரியனுக்கு எதிரே திறந்த வெளியில், வீட்டு முற்றத்தில் பாலிட்டுப் பொங்கலிட்டுப் படைத்துச் சூரியனை வழிபடலே பெரும் பொங்கல் ஆகும். விளைச்சலுக்கு மழையும் வெயிலும் வேண்டினாற் போல வயலை உழுது பக்குவப் படுத்தி நெல் முளைக்க மண்ணை இளகச்செய்த மாடுகட்கு நன்றி செலுத்தல் மக்கள் கடமை அன்றோ? அதனாற்றான்

மூன்றும் நாள் மாடுகளைத் தூய்மை செய்து அலங்கரித்துப் பூசையிட்டுப் பொங்கலிடுதல் மரபு. எனவே, அது மாட்டுப் பொங்கல் எனப் பெயர் பெறும். வயல் விளைந்து, நெல் வீடு வந்து சேர்ந்து விழாக் கொண்டாடும் நேரங்களில் தொழிலாளர் எசமானரைக் கண்டு பரிசு பெறல் யாண்டும் இயல்பே. அங்ஙனம் தொழிலாளர் முதலாளிகளை—நிலக்கிழவரைக் கண்டு மரியாதை பெறுதல் காணும் பொங்கல் எனப் பெயர் பெற்றது. இங்ஙனம் இப்பொங்கல் விழா விளைச்சலை அடிப்படையாகக் கொண்ட—யாவர்க்கும் சம்மதமான—மகிழ்ச்சியைத் தரத்தக்க—தூய்மையான திருவிழா ஆகும். ஆதலின், எவ்விழாவைக் கைவிடினும், தமிழ் மக்கள் இதனைக் கொண்டாடக் கடமைப்பட்டுள்ளனர்.

பொங்கல் விழா

2. போகியன்று வீட்டில் உள்ள பழைய பொருள்களான கிழிந்த பாய், ஓட்டைக் கூடை, முறம் முதலியவற்றைத் தீக்கிரையாக்கி, வீட்டுக்கு வெள்ளை அடித்து இந்திரனை வழிபடுவார்கள். மார்கழி மாதம் ‘ பீடை மாதம் ’ என்பர். கடும்பனி மறைந்து பீடைமாதம் ஒழிந்து, சூரியனும் உஷ்ண மண்டலத்தை நாடிவரும் நாளே தைமாத முதல் நாள் ஆகும். குளிரிலிருந்து வாடிய மக்கள் உஷ்ண நாளை எதிர்கொண்டு வரவேற்றல்—அதன் வருகையை எண்ணிக் கொண்டாடல் இயல்புதானே! இந்திர விழா முடிந்த மறுநாள் பெரும் பொங்கல். குடியானவர் பச்சை நெல்லைக் குற்றிப் பாலிட்டுப் பொங்கல் வைப்பர்; வீட்டு முற்றத்தில் பெரிய அடுப்புகளை வைத்துப் பெரிய பாத்திரங்களில் பொங்கல் இடுவர். வீட்டுக்குரிய புதிய மணமக்கள் அன்று வரவழைக்கப்படுவர். அனைவரும் புத்தாடைகளில் திகழ்வர். வீட்டுவாயிலில் மாவிலைத் தோரணத்துடன் நெற்கதிர்களும் கட்டப்பட்டிருக்கும். நீண்ட பெரிய வாழை இலைகளில் பொங்கல், வடை,

பாயாசம் இவை வைத்துச் சூரியனுக்குப் படைப்பர்; ‘பொங்கலோ—பொங்கல்’ என்று மும்முறை கூவி மகிழ்வர்; பின்னர் உற்றார் உறவினர் புடைசூழ அமுதுண்டு மகிழ்வர்; ஏழை எளியவர்க்கு மனமுவந்து ஈத்து உண்பர்.

மாட்டுப் பொங்கல்

3. அடுத்த நாள் மாடுகள் குளிப்பாட்டப் பெறும்; மஞ்சள் குங்குமம் நெற்றியில் வைக்கப்பெறும்; கொம்புகள் அழகாகச் சீவப்பெறும்; கொம்பு நுனியில் பித்தளைக் குமிழ்கள் இடப்பெறும்; கழுத்தில் பூமாலைகள் தொங்கவிடப் படும். அவற்றை வரிசையாகக் கட்டிவைத்து, அவற்றுக்கு எதிரே பொங்கலிடுவர். உழவர் வயலில் ஏர் உழுகையில் பாடும் பாடல்களைப் பாடுவர்; பின்னர் அவற்றை அவிழ்த்து விடுவர். அவை மகிழ்ச்சியால் வாலைத் தூக்கிக்கொண்டு ஓடும். உழவர் அவற்றை விரட்டிப் பிடிப்பார்கள். இது ‘மாடு பிடி விளையாட்டு’ எனப்படும். கொம்புகளைச் சீவி எண்ணெய் பூசிச் சில மாடுகளை விடுவர்; அவற்றின் கழுத்தில் புத்தாடை, பண முடிப்பு இவற்றைக் கட்டி விடுவர். அவற்றை அடக்குவோர் அப்பண முடிப்பையும் ஆடையையும் எடுத்துக் கொள்வர். இவ்விளையாட்டு இன்றும் தமிழ் நாட்டில் நடந்து வருகின்றது. நான்காம் நாள் தொழிலாளர் நிலக்கிழவரைக் கண்டு பரிசு பெறுவர். சிறு பெண்கள் கூடிக் கும்மி அடித்துப் பரிசு பெறலும் உண்டு.

முடிவு

4. இது வேளாளர்க்கே உரியது எனினும், வேளாண்மையின் பயனை—விளைச்சற் பயனை நுகரும் ஒவ்வொருவரும் இதனைத் தமதாகக் கொண்டாடக் கடமைப்பட்டுள்ளனர்.

---

69. கடிதங்கள்

பாராட்டுக் கடிதம்

1. உன் நண்பன் மேல்வகுப்புக்கு மாறியதைப் பாராட்டி ஒரு கடிதம் எழுது.

24, செம்புதாஸ் தெரு,
ஜார்ஜ டவுன், சென்னை,
20—10—'40.

அன்புள்ள கமலநாதா,

நலம். நீ எட்டாம் வகுப்புக்கு மாற்றப்பட்டதைக் கேட்டு மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். உன் வெற்றி உன் பெற்றோரை மகிழச் செய்யும். அவர்கள் இக் கஷ்டகாலத்தில் உனக்குச் செய்யும் உதவியை உணர்ந்து, நீ ஊக்கங் கொண்டு படிப்பதைக் காண அவர்கள் உள்ளம் குளிரும் என்பதில் ஐயமில்லை. கல்வியே கருந்தனம். பணம் இருந்தாலும் நெடுநாள் நிலைத்திராது. கற்றோர்க்குச் சென்ற இடம் எல்லாம் சிறப்பு. நீ இதனை நன்குணர்ந்து படித்து வருவதைக் காண நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். உனக்கு என் மனமார்ந்த 'வாழ்த்து' உரியதாகுக! நீ மேலும் நன்றாகப் படித்து ஆண்டுதோறும் மேல்வகுப்பு மாறி நலம்பெற எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவானாக.

இங்ஙனம்:
உன் அன்புள்ள நண்பன்,
க. வேலன்.

திருவாளர்
த. கமலநாதன் அவர்கள்,
மாணவர், 8-ஆம் வகுப்பு,
செயிண்ட் பீடர்ஸ் உயர்கலாசாலை, தஞ்சாவூர்.

ஆறுதல் கடிதம்

2. உன் நண்பன் வீட்டில் நடந்த துக்கச் செய்திக்கு ஆறுதல் கடிதம் ஒன்றை எழுது.

15, ஒப்பனைக்காரத் தெரு,
கோயமுத்தூர்,
25—10—'40.

அன்புள்ள குலசேகரா,

உன் அருமைத் தாயார் ஆவி நீத்தது கேட்டு அளவிலா வருத்தம் கொண்டேன். அவ் வம்மையாரைப் பிரிந்த துயரம் உன்னை எந்த அளவில் வாட்டும் என்பதை நான் நன்கு அறிவேன். என் செய்வது! நம்மால் அவரை உயிர்ப்பிக்க முடியுமா? அவருடைய அருங் குணங்களை எண்ண எண்ண மகிழ்ச்சியும், அவர் பிரிந்ததை எண்ணத் துன்பமும் உண்டாகின்றன. நாம் என் செய்வது! எல்லாம் ஈசன் செயல். நம்மால் ஆவது ஒன்றும் இல்லை. 'ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வாரார்' என்பதை நீ நன்கறிவாய். உனக்கு நான் அறிவுறுத்த வேண்டுவதில்லை. 'தாயோடு அறுசுவை போம்' என்பது உண்மை. என் செய்வது! நீ வருத்தப்படாதே. மனக் கவலை ஆளை ஒடுக்கி விடும். 'எல்லாம் இறைவன் செயற்படி நடக்கின்றன' என்றெண்ணி, உன் வேலையைச் செய்துகொண்டு செல். பிறந்தவர் இறப்பதும், இறப்பவர் பிறப்பதும் உலக இயற்கை. இதை நம்மால் தடுத்தல் இயலாது. உனது நல்வாழ்வை விரும்பும்

உன் அரிய நண்பன்,
சோ. இராஜராஜன்.

திருவாளர்

மு. குலசேகரன் அவர்கள்,
மாணவர், 8-ஆம் வகுப்பு,
கலியாண சுந்தரர் உயர்கலாசாலை,
தஞ்சாவூர்.

மறுக் கடிதம்

3. பள்ளிக்கூட உபகாரச் சம்பளத்தை வேண்டித் தலைமை ஆசிரியர்க்கு மறுப்போடுக.

10, பவளக்காரத் தெரு,
சென்னை.
10—6—'40.

தலைமை ஆசிரியர் அவர்கட்கு,
முத்யாலுப்பேட்டை உயர்கலாசாலை,
சென்னை.

ஐயன்மீர்,

வணக்கம். நான் உங்கள் பள்ளியில் எட்டாம் வகுப்பு 'ஆ' பிரிவில் வாசிப்பவன். நான் அகமுடையார் வகுப்பைச் சேர்ந்தவன். என் தந்தையார் திடீரென மாரடைப்பு நோயால் 10 நாட்களுக்கு முன்னர்க் காலமானார். வருவாய் உடைய அவர் காலமாகிவிட்டதால், நான் சம்பளம் கொடுக்க வழியில்லாதவனாக இருக்கிறேன். எனக்குப் படிக்கும் விருப்பம் அதிகமாகிறது. நான் சென்ற ஆண்டிலும் ஏழாம் வகுப்பில் பல பரிசுகள் பெற்றுள்ளேன்; எல்லாப் பாடங்களிலும் 100-க்கு 50-க்கு மேல் வாங்கியுள்ளேன். எளியோர்பால் இரக்கமுள்ள தாங்கள் என் தகுதியையும்,

வறுமையையும், ஏழ்மையையும் கவனித்துச் சம்பளம் இன்றிப் படிக்கவிடுமாறு பணிவுடன் வேண்டுகிறேன்.

இங்ஙனம்:
தங்கள் கீழ்ப்படிதல் உள்ள மாணவன்,
சு. நக்கீரன்.

வேலைக்கு மநுப்போடல்

10, தையப்ப முதலி தெரு,
ஜார்ஜ் டவுன், சென்னை.

கே. பழநியாண்டிப் பிள்ளை கம்பெனி
மானேஜர் அவர்கட்கு,
மவுன்ட் ரோட், சென்னை.

ஐயன்மீர்,

உங்கள் புத்தகக் கம்பெனியில் குமாஸ்தா ஒருவர் வேலை காலியாக இருக்கிறதென்று கேள்வியுற்று இம் மநுப் போடலானேன். நான் எட்டாம் வகுப்பில் வாசித்துத் தேறியவன். என் தந்தையார் திடீரெனத் தவறிவிட்டதால் நான் மேற்படிப்புக்கு வழி இன்றி, வேலைப்பார்க்கும் நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி இருக்கிறேன். நான் சம்பாதித்து என் தாயாரையும், தம்பியையும், என்னையும் காக்கவேண்டும். ஆதலின், தருமகுணமுடைய தாங்கள், என்னைத் தங்கள் கம்பெனியில் அமர்த்திக்கொண்டு என் கவலையைக் களைய வேண்டுகிறேன். நான் தங்கள் விருப்பப்படி வேலை செய்து தங்கட்கு மகிழ்ச்சியுண்டாக்கப் பாடுபடுவேன்.

இங்ஙனம்:
தங்கள் கீழ்ப்படிதல் உள்ள,
க. சோமசுந்தரன்.

கட்டுரைப் பயிற்சி

குறிப்பு :—கீழ் வருவனவற்றைப் பற்றிக் கட்டுரைகள் எழுதிப் பயிற்சி பெறுக ; நீங்களே குறிப்புகளைத் தயாரித்துக்கொள்க.

I. 1. குதிரை 2. கழுதை 3. ஆடு 4. எருது 5. நாய் 6. யானை 7. ஒட்டகம் 8. எருமை 9. சிங்கம் 10. புலி 11. வீட்டு விலங்குகள் 12. காட்டு விலங்குகள்.

II. 1. கிளி 2. மயில் 3. கோழி 4. வாத்து 5. கழுகு 6. குருவிகள் 7. காகம் 8. நீர்ப்பறவை 6. பறவாப் பறவைகள் 10. பறவைகளும் அவற்றின் பயன்களும்.

III. 1. ஆல மரம் 2. அரச மரம் 3. வாழை மரம் 4. தென்னை மரம் 5. பனை மரம் 6. மாமரம் 7. பலா மரம் 8. தேக்க மரம் 9. வீட்டு மரங்கள் 10. காட்டு மரங்கள் 11. மரங்களும் அவற்றின் பயன்களும்.

IV. 1. மீன்கள் 2. சங்குகள் 3. முத்து 4. பட்டுப்பூச்சி 5 உப்பு எடுத்தல் 6. கடல் 7. கப்பல் 8. கடலும் அதன் பயன்களும் 9. ஆறும் அதன் பயன்களும் 10. ஏரி 11. குளம் 12. நீர் நிலைகள் 13. மழையும் அதன் பயனும் 14. மலைகளும் அவற்றின் பயன்களும் 15. உழவு 16. வாணிபம் 17. நன்செயும் புன்செயும் 18. நெற்பயிர் 19. பிற பயிர்கள் 20. பருத்திப் பயிர்:

V. 1. சூரியன் 2. சந்திரன் 3. விண்மீன்கள் 4. கிரஹணங்கள் 5. பருவ காலங்கள் 6. மழைக்கால வருணனை 7. கோடைக்கால வருணனை 8. மழைக்கால விழாக்கள் 9. கோடைக்கால விழாக்கள் 10. உலகமும் தட்பவெப்ப நிலைகளும் 11. பருவக் காற்றுகள் 12. பூகோள சாத்திரம்.

VI. சரித்திரக் கல்வி 2. இந்திய சரித்திரமும் பயனும் 3. மத சம்பந்தமான இந்தியப் பெரியார்கள் 4. அரசியல் சம்பந்தமான பண்டை இந்தியப் பெருமக்கள் 5. பண்டை இந்திய வீரப் பெண்மணிகள் 6. இராமாயணம் 7. பாரதம் 8. இந்தியாவில் தோன்றிய மதங்களும் அவற்றின் சேவையும் 9. நீ விரும்பும் பண்டை இந்தியச் சக்கரவர்த்தி, 10. ஆங்கில ஆட்சியில் உண்டான நன்மைகள் 11. சுதேச சமஸ்தானங்கள் 12. இந்திய அரசியல் அமைப்பு.

VII. 1. தமிழ் 2. ஒரு தமிழ்ப் புலவர் 3. ஒரு தமிழ் நூல் 4. பழைய தமிழ்நாடு 5. பண்டைத் தமிழ் அரசர் 6. சிலப்பதிகாரம் 7. மணிமேகலை 8. சைவ சமய ஆசாரியர் 9. வைணவ ஆசாரியர் 10. பல்லவர்கள் 11. நாயக்க மன்னர்கள் 12. தமிழ்நாட்டை ஆண்ட மஹாராஷ்டிர மன்னர்கள்.

VIII. 1. சென்னை நகர வரலாறு 2. பண்டைத் தலைநகரம் ஒன்று 3. ஏதேனும் ஒரு க்ஷேத்திரம் 4. கோட்டையுள்ள நகரம் 5. கண்காட்சிக்கு உரிய நகரம் 6. சரித்திரத் தொடர்புள்ள இடம் 7. நகர அமைப்பு 8. நகர சுகாதாரம் 9. கிராம முன்னேற்றம் 10. நாடகம் 11. படக் காட்சி 12. கண் காட்சிச் சாலைகள்.

IX. 1. மஹாபலிபுரம் 2. செஞ்சிக்கோட்டை 3. திருச்சிராப் பள்ளி 4. தஞ்சாவூர் 5. வேலூர் 6. திருப்பதி 7. திருத் தணிகை 8. திருவாரூர் 9. மதுரை 10. இராமேஸ் வரம் 11. மேட்டூர் 12. மைசூர் 13. புதுக்கோட்டை 14. திருவிதாங்கூர் 15. கன்னியாகுமரி.

X. 1. சீர்திருத்தம் 2. மதச் சீர்திருத்த—பெரியார்கள் 3. சமூகச் சீர்திருத்த—பெரியார்கள் 4. மதமும் சமூகமும் 5. மாகாண அரசியல் 6. ஜில்லா போர்டு 7. நகரசபை ஆட்சி 8. தேர்தல் 9. அரசியல் கட்சிகள் 10. கட்சித் தலைவர்கள்.

XI. 1. இயேசுநாதர் 2. முஹம்மத் நபி நாயகம் 3. புத்த மஹான் 4. மஹா வீரர் 5. சங்கரர் 6. இராமாநுஜர் 7. மாத்வர் 8. விவேகானந்தர் 9. இராமகிருஷ்ணர் 10. இராமலிங்க அடிகள் 11. தாயுமானவர் 12. நானக்.

XII. 1. பிரயாண சாதனங்கள் 2. தரைச் செலவு 3. நீர்ச் செலவு 4. ஆகாயச் செலவு 5. உள்நாட்டு வாணிபம் 6. அயல் நாட்டு வாணிபம் 7. ஏற்றுமதி—இறக்குமதி 8. இந்தியக் கைத்தொழில்கள் 9. கைத்தொழில் முன் னேற்றம் 10. இரேடியோ 11. வைத்தியசாலைகள் 12. புகைவண்டி நிலையம் 13. துறைமுகம் 14. விமான நிலையம்.

XIII. 1. உடற் பயிற்சி 2. பள்ளிக்கூட விளையாட்டுகள் 3. பந் தய விளையாட்டுகள் 4. வெள்ளக் கொடுமை 5. நகரத்தில்

தீப்பிடித்தல் 6. சாலையில் நடந்த நிகழ்ச்சி 7. புகை வண்டி கவிழ்தல் 8. திருவிழாக்கள் 9. நீ கண்ட திரு விழா 10. நோன்புகள 11. ஏகாதசி நோன்பு 12. பொங்கல் விழா 13. வருடப் பிறப்பு 14. தீபாவலி 15. கார்த்திகை விழா 16. ரம்ஸான் 17. கிறிஸ்துமஸ் விழா 18. நீ பார்த்த பாட்டுக் கச்சேரி 19. நீ பார்த்த காலக்ஷேபம் 20. உனது இரயில் பிரயாண அநுபவம் 21. உனது பஸ் பிரயாண அநுபவம் 22. உனது கட்டை வண்டிப் பிரயாண அநுபவம் 23. நீ கண்ட தெப்ப உற்சவம் 24. நீ கண்ட தேரோட்டம் 25. திருவிழாக்களும் சுகாதாரமும் 26. ஹிந்துமதக் கோவில்கள் 27. பள்ளி வாசல்கள் 28. கிறிஸ்தவர் கோவில்கள் 29. இந்து—முஸ்லிம்—கிறிஸ்தவக் கோவில்கள் 30. இந்தியாவில் கண்ணைக் கவரும் கட்டிடங்கள்.

XIV. 1. உண்மையுடைமை 2. செய்நன்றி அறிதல் 3. சகோதர அன்பு 4. நெறி தவறாமை 5. ஒழுக்கம் உடைமை 6. நட்பு நலன் 7. உதவி புரிதல் 8. கடவுள் வழிபாடு 9. பிரார்த்தனை 10. பெரியோர் பொன்மொழிகள் 11. பகுத்தறிவு 12. மாணவர் கடமை 13. கல்வி கற்றல் 14. கல்வியும் பகுத்தறிவும் 15. கற்றாய்ந்து ஒழுகல் 16. சிக்கனம் 17. கல்வியும் செல்வமும் 18. செல்வர் கடமை 19. அறச்செயல் 20. இன்ப நிலை.

XV. போட்டிக் கட்டுரை எழுதுக:—1. நகரவாசமும் கிராம வாசமும் 2. ஆற்று நீரும் குளத்து நீரும் 3. உத்தியோக வாழ்வும் சுய முயற்சியும் 4. கல்வியும் செல்வமும் 5. செலவாளியும் சிக்கனக்காரனும் 6. நம் நாட்டுப் பொருள்கள் வேண்டுமா? பிறநாட்டுப் பொருள்கள் வேண்டுமா? 7. சுயேச்சையால் நன்மையா? தீமையா? 8. பெண் கல்வி நலந்தருமா? தீமை தருமா? 9. கடவுள் உண்டா? இல்லையா? 10. நாட்டுக்கு நன்மை விளைப்பவன் அறிவாளியா? போர் வீரனா?

XVI. எழுதுக:—1. பொதுக்கூட்ட அழைப்பிதழ் 2. புதிய வீட்டு நுழைவு 3. தமிழ்ச் சங்க ஆண்டு விழா அழைப்பு 4. திருமண அழைப்பிதழ் 5. தகப்பனாருக்குச் சென்னை விளக்கணைப்பைப் பற்றிக் கடிதம் 6. விருந்துக்கு அழைப்பிதழ் 7. விடுமுறைக்கு வருமாறு நண்பனுக்குக் கடிதம்.

3404 ஒ